Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வங்கத் தமிழ்



பாரதி தமிழ்ச் சங்கம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
कृपया पुस्तक के ऊपर कोई निशान आदि
न लगायें।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

पुस्तकालय

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

हरिद्वार

वर्ग संख्या ——— आगत संख्या ———

पुस्तक - वितरण की तिथि नीचे अंकित है इस तिथि सहित 30वें दिन तक यह पुस्तक पुस्तकालय में वापिस आ जानी चाहिए। अन्यथा 10 पैसे प्रतिदिन के हिसाब से विलम्ब - दण्ड लगेगा।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வங்கத் தமிழ்

Forwarded With Compliments From
THE DEPARTMENT OF CULTURE
GOVERNMENT OF INDIA.

வங்கத் தமிழ் எழுத்தாளர்களின்
படைப்புகள்

பாரதி தமிழ்ச் சங்கம்
(பதிவானது)
93-ஏ, ராஷ் விஹாரி அவென்யு
கல்கத்தா-26.
1970

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

வெளியீடு—11 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியர் :
தலைவர், பாரதி தமிழ்ச் சங்கம்

முதல் பதிப்பு டிஸம்பர் 1970...1000 பிரதிகள்

★

விலை : ரூ. 5-00

அச்சிட்டோர் :
தீபம் அச்சகம், சென்னை-2.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னுரை

கல்கத்தா பாரதி தமிழ்ச்சங்கம் நாட்டுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் பயன்படவல்ல பல நல்ல நூல்களையும், சிறப்பு மலர்களையும் வெளியிட்டிருக்கிறது. அந்த வெளியீடுகளுக்கு எல்லாம் சிகரம் வைத்ததுபோல் இப்போது இந்தத் தொகுப்பு நூல் வெளிவருகிறது. சங்கத்தமிழ் பற்றியும், பிற்காலத்து மறுமலர்ச்சித் தமிழ் பற்றியும் தொகுத்து வழங்கும் இந்நூலுக்கு 'வங்கத்தமிழ்' என்று அழகாகப் பெயரிட்டிருக்கிறார்கள். தலைப்பு தமிழையும், வங்கத்தையும், இணைக்கிறது கங்கையையும் காவிரியையும் இணைக்கிறது. வையைக் கரைச் சிந்தனைகளையும், கங்கைக்கரைச் சிந்தனைகளையும் ஒன்று சேர்க்கிறது தற்காலத் தமிழ் இலக்கியத்துக்குப் பிரதிநிதித்துவமாக அமையும் கவிதைகளும், கட்டுரைகளும், சிறுகதைகளும், நாடகங்களும், இலக்கிய அம்சங்களும் இத் தொகுப்பில் உள்ளன. 'கண்மணியே மன்னிப்பாய்'— என்னும் முழுமையான நவீன உள்ளடக்கமும் உருவமும் உடைய கவிதையிலிருந்து—முருகன் இரட்டை மணிமாலை' என்ற பழைய முறைக் கவிதைவரை இத் தொகுப்பில் உள்ளன. புதுமையும், பழமையும். நவீனமும், புராதனமும், இணைந்துள்ள தமிழ் இலக்கியத் தொகுப்புக்கு இது ஓர் அடையாள நூல் என்பதற்கு இவையே சான்றாகும்.

'தற்காலத் தமிழ் இலக்கியம்' என்ற (Contemporary Tamil Literature) வகையின் பெரும்பான்மையான ஒளிக்கதிர்களும், சாயைகளும் அமைந்துவர இதைத் தொகுத்து வெளியிட்டிருக்கும் பாரதி தமிழ்ச் சங்கத்திற்கும் அதன் செயல் வீரர் திரு மு ஸ்ரீநிவாஸன் அவர்களுக்கும் தமிழ் இலக்கிய உலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

விழாக்கள் நடத்துவது, சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்வதுடன் அமைந்து விடாமல் கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தினர் 'வங்கத் தமிழ்' போன்ற தொகுப்பு நூல்களை வெளியிடுவதன் மூலம் ஏனைய இலக்கிய அமைப்புக்களினின்றும் ஒருபடி உயர்ந்து விட்டனர் என்றே சொல்ல வேண்டும். இப் பணி நிலைத்து நிற்க வல்லது. நீடித்துப் பயன்பட வல்லது. என்றும் எண்ணி எண்ணி மகிழத்தக்கது. ஏறக்குறையச் சில நூறு பக்கங்களுக்கு வருமாறு இலக்கியத் தொகுப்பு நூல் ஒன்றை வெளியிடுவதில் பல சிரமங்கள் உள்ளன. எல்லாச் சிரமங்களையும் தாங்கிக்கொண்டு இந்நூல் வெளிவருகிறது. தமிழுலகும் வங்கத் தமிழ் உலகும் இதனை மகிழ்ந்து ஏற்கும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

'தீபம்'
சென்னை—2.

நா. பார்த்தசாரதி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

பாரதி தமிழ்ச் சங்கம்

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1966-ல்வெள்ளி விழாக் கொண்டாடிய பாரதி தமிழ்ச் சங்கம் விக்ரம ஆண்டு தை மாதம் ஸ்ரீபஞ்சமியன்று பிரபல விஞ்ஞான மேதையும், இலக்கிய ரசிகருமான காலஞ்சென்ற டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் தலைமையில் ஏழு தமிழ் இளைஞர்களால் வங்க நகரில் துவக்கப்பட்டது.

சங்கத்தின் நிரந்தரப் பணிகளில் சில:—இலவச வாசக சாலை, நூல் நிலையம் நடத்துவது, வாரந்தோறும் இலக்கியக் கூட்டங்கள் கூட்டுவது, தமிழ் இலக்கிய மேதைகளின் பிறந்த நாட்களைக் கொண்டாடுவது முதலியன.

சிறப்புப் பணிகளில் சில ;—

1. (அ) கல்கத்தா பல்கலைக்கழகத்தில் தமிழைத் துணைப் பாடமாகக் கொண்டு பி. யு ஸி., பீ. ஏ., பி காம். வகுப்புக் களில் படிக்கும் மாணவமாணவியர்களுக்குத் தமிழ் வகுப்புகள் நடத்துதல். (ஆ) தமிழரல்லாதார்க்குத் தமிழ் போதித்தல். (இ) தமிழ்ச் சிறுவர், சிறுமியர், வயது வந்தவர்களுக்காக வங்க மொழி வகுப்புகள் நடத்துதல். (ஈ) கான்வென்டில் பயிலும் சிறுவர்களுக்காக தமிழ் ஆரம்ப வகுப்புகள் நடத்துதல். (உ) தமிழிசை வகுப்புகள் நடத்துதல். (ஊ) தமிழிலக்கியத்தை யும், சிறப்பாக பாரதி இலக்கியத்தையும், பிறமொழி மாநிலங் களில் பரப்புதல். அதற்காக பாரதி ஜெயந்தியை ஆண்டு தோறும் பெரிய அளவில் நடத்துவதோடு மட்டுமின்றி, பாரதி மொழிபெயர்ப்புகளும், பாரதி பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை களும் தாங்கும் பாரதி ஜெயந்திமலரை ஆண்டுதோறும் வெளி யிடுதல்.

(2) அதே நோக்கத்தோடு பல நூல்கள் வெளியிடுதல்.

இதுவரை சங்கம் வெளியிட்டுள்ள நூல்கள் :

Voice of A Poet (பாரதி கவிதை மொழிபெயர்ப்பு) Bharathi in English (பாரதி வசன மொழிபெயர்ப்பு) Essays on Bharathi (மூன்று தொகுப்புகள்) The Sangham Age (சங்க காலம் பற்றியன), காளிகா தேவி மாலை, கவிதைக் கலை (இரண்டு பாகங்கள்), நூபுர் காதா (ஹிந்தியில் சிலப்பதிகாரச் சுருக்கம்), தமிழின் கதை (ஹிந்தியில்).

3. கல்கத்தா பள்ளிகளில் பயிலும் ஏழைச் சிறுவர்களின் கல்வி உதவிக்காக பாரதி. டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் நினைவுகளில் ரூ. 20000 வரை இரண்டு அறநிதிகளை நடத்துவது.

4. தலைவர் ராஜாஜி முதல் நாட்டின் பல்துறை மேதை கள் பலர் சங்கத்தின் கௌரவ உறுப்பினர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாசகர்களுக்கு

எங்களது சங்கத்தின் பன்னிரண்டாவது வெளியீடாக வருகிறது 'வங்கத் தமிழ்'.

இந் நூல் அல்லது இது போன்ற பல நூல்கள் முன்னமேயே வந்திருக்க வேண்டும். ஏனெனில் குறைந்தபட்சம் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தமிழர்கள் வங்க மண்ணில் குடியேறிவிட்டார்கள். பாரதியே இங்கே படித்ததாகவும் சொல்லப்படுகிறது. எப்படியும் 1906-ம் ஆண்டு பாரதி காசியிலிருந்து திரும்புகையில் கல்கத்தாவில் சகோதரி நிவேதிதா தேவியைக் கண்டு பெண்விடுதலை பற்றிய உபதேசம் பெற்றது நன்கு அறிந்ததே. கல்கத்தாவிலும், சாந்தி நிகேதனத்திலும் பல தமிழ் எழுத்தாளர்கள் இருந்து வந்திருக்கிறார்கள், தமிழ் நாட்டின் தலைசிறந்த பத்திரிகைகளிலெல்லாம் வங்கத தமிழர்களது எழுத்துக்கள் வெளிவந்துள்ளன,

வங்கத்தில் நாட்டுக் கோட்டைச் செட்டியார் சமூகத்தினர் குடியேறி, நகரத்தார் விடுதி. சிவாலயம், காளிகாட் சத்திரம் என்ற பலவற்றையும் எழுப்பியுள்ளார்கள். தனது இளம் வயதில் ஸ்ட்ராண்ட் வீதியிலிருந்து காளிகாட் பகுதிக்குத் திருவாசக இசையோடு இறைவன் ஊர் வலம் வந்ததைக் கண்டு திருவாசகத்தில் தன் மனம் லயித்ததாக பன்மொழிப் புலவர் டாக்டர் சுநீதி குமார் சாட்டர்ஜி எழுதியுள்ளார். பின்னாளில் தேசிய உயர்நிலைப் பள்ளி என்ற கல்விக் கூடம் பெரும்பான்மையும் தமிழர்களால் துவக்கப்பட்டு, இன்று பெரிய அளவில் இயங்கி வருகிறது.

தமிழ் மொழித் துறையில் இயங்க வேண்டி, 1941-ல் பாரதி தமிழ்ச் சங்கம் தோன்றியது. சங்கத்தின் ஒரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

பிரிவாகத் துவங்கிய மாணவர் பகுதி பின்னுளில் தமிழ் மாணவர் மன்றமாகி, இன்று தமிழ் மன்றமாக மாறியிருக்கிறது அப்படியே சங்கத்தின் எழுத்தாளர் பகுதி கல்கத்தாத் தமிழ் எழுத்தாளர் சங்கமாகி 1948லிருந்து 1952 வரை தனித்து இயங்கியது. பின்னுல் 1957-ல் துவக்கப்பட்ட தமிழ் எழுத்தாளர் சங்கம் இன்றும் பணியாற்றி வருகிறது.

எழுத்துத் துறையில் நல்ல பல பத்திரிகைகளை நடத்திய பெருமையும் கல்கத்தாவுக்கு உண்டு. 1946-ல் பிறந்து 1952 வரை நடந்தது 'ஜோதி' என்ற மாதப் பத்திரிகை. வங்கத் தமிழர்கள் பலரும் ஆதரித்த 'ஜோதி'யில் சிறுகதை, தொடர் கதை, கட்டுரை, கவிதை, நாடகம் எல்லாம் இடம் பெற்றன. பின்னுளில் வந்த இரு பத்திரிகைகள் 'வங்கச் செய்தியும்' 'கற்பனை'யுமாகும். இவையிரண்டுமே ஓரிரண்டு ஆண்டுகளுக்கு மேல் நடத்த முடியாமல் நின்றுவிட்டன.

இன்று வங்கத் தமிழ் எழுத்தாளர்கள் தமிழகத்தின் பல பத்திரிகைகளிலும் எழுதி வருகிருர்கள். அவர்களது படைப்புகளிலிருந்து சிலவற்றைத் தொகுத்து இந்நூலாக வெளியிடுகிருேம்.

இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டு உதவிய 'தீபம்' அச்சகத்தாருக்கும், முன்னுரை வழங்கிய எழுத்தாள நண்பர் ஆசிரியர் திரு நா. பார்த்தசாரதி அவர்களுக்கும் சங்கத்தின் நன்றி உரித்தாகிறது.

தங்களது எழுத்துக்களை வெளியிட இசைவு தந்த வங்கத் தமிழ் எழுத்தாளர்களுக்கும், ஓவியங்கள் வரைந்தளித்த சாந்தி நிகேதன் ஓவியர் திரு வ. பெருமாள் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

பாரதி ஜெயந்தி
டிசம்சர் 25, 1970

பாரதி தமிழ்ச் சங்கம்

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளடக்கம்

கவிதை	பக்க எண்
நடனம்—சிவ. ஜம்புநாதன்	3
கவிதை அன்னை—என். ஜி. சுந்தரம்	4
வருக பொங்கல்—இராம. லெ.	5
காதல் நலம்—அரங்க. சீனிவாசன்	6
கண்மணியே மன்னிப்பாய்—சீராளன்	10
புத்த விஜயம்—பொருநை	12
பெண்ணினமே பிச்சையிடு—எஸ். சேஷாத்ரி	15
எங்குமில்லை—சாஸ்திரி	18
இயற்கையின் ஆற்றுமை—அரங்கன்	20
கவிதைத் தலைவி—வெ. பத்மநாபன்	21
உழல்வதல்லால் புகலேது—ரஜனு	23
அவள்—சீராளன்	24
வேதாந்தப் பொருள் விரிக்கும் நாதாந்தத் துறை —நா. கோபாலசுந்தரம்	25
நதி—ரவீந்திரர்	29
முருகன் இரட்டை மணிமாலை—பி சிங்காரம்	41
சேரன் தம்பி சிலம்பிசைத்ததுவும்— கோ. சு. மணியம்	45

சிறு கதைகள்	
கல்யாணம் பண்ணிக்க வயசு வேணுமா ? ஆ. நா. ஜெயராமன்	51
வெறும் மனிதன்—எஸ். கிருஷ்ணமூர்த்தி	66

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

சிறுகதைகள் Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri பக்க எண்

பனி மலரான்—வேங்கடலட்சுமி 85
பகி வந்திட—வாஸந்தி 98
ஜோடி—ஜம்பு 111
கண்ணற்றவர்—அசுவதி 119
மலரான்—எஸ். கே. 138
எப்படிப் புரியும்?—எம். எஸ். ராஜகோபாலன் 147
மீனுட்கி ராணியின் வளையல்—ஆர். வி. 169
ஆத்ம தரிசனம்—வாஸந்தி 181

நாடகம்

மெய்யை நாடி—வங்கத் தமிழன் 191

கட்டுரைகள் :

மங்கையர்க்கரசியார்—ந. சிங்காரம் 205
கம்பனின் சுந்தரகாண்டம்—
டி. வி. சித்தலிங்கய்யா 222
காவிய நாயகன்—ப. ந. தியாகராசன் 239
மயக்குறு மக்கள்—செ லீலா 248
கதிரவன் கோயில்—ரசிகன் 255
பெரிதினும் பெரிது கேள்—வெ. பத்மனபன் 264
பூமியின் கதை—மு ராமசுவாமி 267
நாலாண்டில் தமிழ் நூல்கள்—
பி. ந. வெங்கடாச்சாரி 280
ஆஷ் கொலை வழக்கு—மு. ஸ்ரீனிவாசன் 305

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

கவிதை

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடனம்

சிவ. ஜம்புநாதன்

கோபம் :

ஆலத்தை அள்ளியே உண்டவன்—அன்று
ஆத்திரம் கொண்டிட்டு ஆடிட—அவன்
காலடி பட்டுத் தெறித்தது—இன்று
காண்கின்ற நிலமென்று ஆனது.
சினம் பொங்கச் செவ்வண்ணன் ஆடினன்—அவன்
செங்கையில் ஏந்திய தீயுடன்—அந்த
அனலொன்று பூமியில் வீழவும்—அஃது
அகிலத்தில் தீயென ஆனது.

நெருப்பென்று மூச்சினைக் கக்கியே—அந்த
நீலத்துக் கண்டத்தன் ஆடினன்—கொடும்
பெருமூச்சுக் காற்றென ஆகியே—என்றும்
பூமியில் எங்கெங்கும் வீசுது.

கண்ணீர் :

அன்னையோ நெஞ்சம் நடுங்கினள்—ஆடும்
ஐயனின் கோபத்தைக் காணவும்—எழிற்
கன்னத்தில் வழிந்திடும் நீரது—இன்று
கடலெனும் பிறப்பினைக் கொண்டது.

சாந்தம் :

அன்னையின் கண்ணீரைக் கண்டனன்—அந்த
ஐயனின் சிந்தை கனிந்தது—மிக்க
அன்புடன் மென்கையைப் பற்றினன்—இங்கு
ஆதி மனிதனும் தோன்றினன்.

(ஆனந்த விகடன்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிதை அன்னை

என். ஜி. சுந்தரம்

உள்ளமாம் வானத்துள் உருவற்று விரிந்துள்ள
உணர்வென்னும் பெருவெளியில்—வேக
வெள்ளலை களைவீசி வருந்திமிக ஓய்ந்தலையும்
வெறுமெண்ண வேலைதனில்—தோன்றும்
தெள்ளியநற் செவ்வொளியில் செறிந்த இருட்சிந்தையுமே
செம்மையுடன் பொலிந்திருக்க—நெஞ்சை
அள்ளுங்கவிக் கிரணமுடன், அகன்றவெளிக் கற்றையுடன்
அன்னை வந்தாள் ஆதவனாய்!

அந்தியுமே மயங்கிடவும். அகமதனில் மருளென்னும்
அடரிருளும் படர்ந்திடவே—வெம்மைச்
செந்திரளாந் தினகரனும் சாகரத்தைச் சேர்ந்திடவும்
சிறுவொளியாம் அறிவகல—வானஞ்
சிந்தையுமே தடுமாறி வனப்பிழந்து திருநீங்க,
அகவிருளைத் தகர்த்தெறிந்து—மேலாம்
சந்ததங்களாந் தாரகைகள் தாஞ்சூழக் கவிதையன்னை
வந்தனளே சந்திரனாய்!

இருள்நிறைந்த இதயத்தை இகலவைத் தொளிசேர்க்க
இனிதமைந்த இன்விளக்காய்— இன்னும்
மருள்நிறைந்த மதியதற்த மென்மேலு மறிவூட்டும்
மங்காத மின்னொளியாய்—மேலும்
தெருள்ஞானம் தனைத்தந்து. சிந்தைதனின் சிற்றொளியை
பேரொளியாய்ப் படரவைத்து—அங்கே
அருள்சேர்ந்த இருசுடராய் அமைந்தகவி அன்னையவள்
அருப்புகழை அறிவர்தே!

(சுடர், தில்லி)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருக பொங்கல்

இராம. லெ.

பொங்கலெனும் புத்துணர்வே
    புகழ்வளரப் புவிமிசையே
மங்கலமாம் வாழ்த்தொலிகள்
    மலர்ந்தருள வந்திடுவாய்.

எழில்மஞ்சள் மணம்வீச
    எங்குமின்ப இசைபேசி
தழைத்தசெந்நெல் கரும்போடு
    தரணிமிசை வந்திடுவாய்.

புதுநலமாம் பெண்ணணங்கே
    புதியதமிழ்ச் சுடரொளியே
மதியமுதம் கரத்தேந்தி
    மகிழ்தரவே வந்திடுவாய்.

தைபிறந்தால் வழிபிறக்கும்
    தாரணியில் அருள்சுரக்கும்
வையகத்தில் வானகத்தின்
    வாழ்வினிதாய்த் தான்மலரும்.

பாடுபடும் உழைப்பாளர்
    பணிபோற்றிப் பார்புகழ
ஈடுதரும் இனியவிழா
    இன்றெங்கள் பொங்கல்விழா

முகில்மொழியப் பயிர்வளர
    முத்துநிகர் செந்நெல்தர
அகிலமெனும் ஆருயிரே
    அருள்சுரந்து வாழியவே.

(பொங்கல் கவியரங்கம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காதல் நலம்

அரங்க. சீனிவாசன்

கண்வயலில் வளர்கரும்பு தண்டவாளம்
கருத்தாக அதில் ஓடும் இரயில் வண்டி.
பண்இயைந்த தமிழின்பம். ஊடல்—கூடல்
பக்கம்இரண் டாய் அமைந்த பசும்பொன் காசு.
எண்ணம்எனும் மனைவிளக்கு. சுடாத செந்தீ.
இருதலையின் குயில்கூவல். காலைதோன்றி,
நண்பகலிற் போதாகி. மாலை பூக்கும்
நல்லமலர் காதலொன்று நவில லாமே.

காதலெனும் குழந்தைக்குப் பெற்ற தாய்தான்
கண்ணாகும். வளர்ப்புத்தாய் உள்ளமாகும்.
மோதுகின்ற நினைவுகளே தாய்ப்பால் ஆகும்.
மூண்டபிரி வுத்துயரே மூச்சுக் காற்று.
சாதலெனும் நெடுஞ்சிகரம் தொட்டிலாகும்.
தாலாட்டு யாழொலியும் குழலுமாகும்.
பூதலத்தோர் பழிச்சொல்லே ஆடையாகும்.
பொன்னுடலின் மஞ்சனநீர் கண்ணீராமே.

தீச்சுடரைக் காதலித்து மேனிதேயும்
திரிதான்இங் கொளிஎன்னும் மகவைநல்கும்.
பாச்சுவையைக் காதலிக்கும் நெஞ்சகந்தான்
பலாச்சுளைஇன் பப்பேற்றில் பதிந்துநிற்கும்.
பூச்சுனையைக் காதலிக்கும் வண்டு தான்ஓர்
போதையிலே பாட்டிசைக்கும் புலவனாகும்.
நாச்சுவையைக் காதலிக்கும் மனிதர் வாழ்வு
கறுங்காதும் [illegible] ராகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அம்புலியின் மேல்நடந்த போதும் காலின்ஸ்
ஆதியர்கள் காதலினை மறந்தார் இல்லை.
கம்பியில்லாச் செய்திபரி மாறிக் கொண்டார்.
காதலெனும் தெய்வத்தின் கடைக்கண்பட்டால்
உம்பர் மிசை இராக்கெட்டில் ஏறி விண்ணை
உடைப்பதுவும் எளிதாகும். காதலின்றேல்
ஒன்பதடி நடப்பதற்கும் கால்தள்ளாடும்.
ஒருகோடி கோவிலிலே உரத்துச் சொல்வேன்.

எழுத்துக்குள் உயிரும்மெய்யும் வேறென்றாலும்
இணைந்துயிர்மெய் ஆயின்,அள வொன்றே யாகும்.
உழக்குத்தண் ணீரினுடன் கலந்துவிட்டால்.
உப்புக்குத் தனிஅளவே இல்லை என்பார்.
முழத்துக்குட் சாண் அடங்கும். வாழ்க்கைஎன்ற
முகத்துக்குக் காதலொன்றே முழுக்கண் ஆகும்.
பழத்துக்குச் சுவையிருந்து பெருமை கூட்டும்.
பண்புக்குத் துணையிருந்து காதல் காக்கும்.

மண்பேசும் மொழிகள்பல வாகும். எல்லா
மாந்தர்க்கும் புரியும்மொழி எதுவும் இல்லை.
பண்பேசும் இசைகூடக் கேட்டபேர்க்குப்
பரவசத்தைத் தருவதன்றிப் பொருள் தராது.
கண்பேசும் மொழியொன்றே அனைவருக்கும்
கருத்துணர்த்தும் பொதுமொழியாம் காதல் கொண்ட
பெண்பேச வாய்திறக்க வேண்டா; கண்ணின்.
பேச்சொன்றே அத்தனையும் விளக்கப்போதும்.

பருவத்து நன்செய்நிலத் தன்றிக் காதற்
பயிர்வளர்வ தில்லை. பயிர் வளர்ந்தபின்னே
உருவத்தில் முதுமையின்முத் திரைபட்டாலும்
ஒழியாத பயன்விளையும். செல்வம் என்னும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எருவைத்தே ஆசையெனும் நீர்விட்டாலும்
ஏற்றத்தாழ் வினைக்காதல் ஏற்பதில்லை.
சரியொத்த காதலிமென் றோள்துயிற்கண்
சார்ந்தசுகம் வீட்டுலகந் தனிலும் உண்டோ!

பின்னலிடும் குழற்காட்டின் நிழலின்கீழே,
பெரியதனக் காரர்விருந் தாகி,மின்னும்
கன்னமெனும் பளிங்குநிலத் தேவழுக்கிக்,
கமழ்சாந்தின் வண்டலிலே கால்தள்ளாடி,
மென்முறுவல் எனும்விளக்கு வெளிச்சந்தன்னில்
மெல்லிய பூ இதழ்சுரக்கும் மதுவைஉண்டே
உன்மத்தம் பிடிக்கின்ற பேறுபெற்றாய்,
ஒன்றிரண்டா பலகவிகள் உதித்திடாவோ?

புதுவைக்குப் போனால்தான், பாட்டிற்பாட்டுப்
போட்டியிட்டுப் பிறக்குமெனப் புலவர் சொல்வார்.
மதுவைத்த கிண்ணந்தான் பாட்டின் ஊற்று?
வள்ளுவனெக் கிண்ணத்தை வாயில் வைத்தான்?
எதுகைக்கு மோனையென இணைந்தகாதல்
ஏந்திழையாள் அருகினிலே இருந்தாள் என்றாள்.
சதிவைத்து நடமாடித் தமிழின்பாட்டு
சரசமிடடுக் கொஞ்சிநமைத் தழுவிடாதோ?

பெண்மை பொருளாலே, மென்மையாகப்
பேணிஅதை நெஞ்சினிலே பூணல்வேண்டும்.
கண்மயங்கிப் பெண்மையெனும் மாலைதன்னைக்
கடுவன்கை மாலையெனக் கசக்கிப்போட்டு,
'வண்ணமில்லை; மணமில்லை' என்றுகூறும்
மாடுகட்கு வாழ்வினிலே வளமைஇல்லை.
பண்ணெழுப்பும் யாழன்றோ காதல்? அஃது
பயன்கொள்ள அறிந்தார்க்கே இன்பமாகும்.
CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காதலிதன் அருகிருந்த போது இராமன்
கடுஞ்செயல்செய் காக்கைக்கும் கருணைவைத்தான்.
சீதைஅரு கில்லாத போதிலே, அன்னான்
தீங்கற்ற வாலிக்கும் தீங்குசெய்தான்.
காதலிக்கத் தெரிந்தவரே உயிர்கள்மீது
கருணைவைக்கத் தெரிந்தவராம். காதல்இன்றிப்
பூதலத்தில் அறநெறிகள் வாழ்ந்ததிலை.
புராணஇதி காசங்கள் இதைத்தான் சொல்லும்.

காதலொரு கலைக்கூடம். தேர்வில்தோற்றால்,
கற்றமறு படிதேற வாய்ப்புண்டங்கே.
காதலிலே ஒருமுறைதான் தோற்றுவிட்டால்,
சாதலொன்றே வழியென்பார் அறிவிலாதார்.
பாதியிலே காதல்வழி நின்றுபோனால்
பயப்படுதற் கொன்றுமில்லை. மீண்டும்மீண்டும்
காதலிலே முயல்பவர்க்கு வெற்றியுண்டு.
கருத்தினிலே தூய்மையொன்று கலந்தாற்போதும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்மணியே மன்னிப்பாய்!

சீராளன்

கண்மணியே மன்னிப்பாய்
என்னிலையை எண்ணிப்பார்
கருவாகிக் காத்திருந்தாய்
உருவாகி வெளிவரவே
உருவாகி வருவதற்கோ
உறவுன்னை விடவில்லை.
என்றோ நான் பிழைசெய்தேன்
ஒன்றேதான் பிழைத்திடுமாம்
ஒன்றேதான் பிழைக்குமெனில்
கொன்றுவிடல் எதையென்றார்
"சின்ன உயிர்" என்றார்கள்
"என்னபதில்" என்றார்கள்
சொன்னபதில் என்னெதிரே.
உயிர்தனிலே பெரிதுண்டோ
உயர்வில்லாச் சிறிதென்பார்
உளந்தானே சிறிதாகும்.
என்னலமே எண்ணியதால்
அன்னையவள் மீண்டுவிட்டாள்
அன்னையவள் மீண்டுவர
சின்னவன் நீ மாண்டுவிட்டாய்.
கரத்தினிலே கறையில்லை
கருத்தினிலே கறையுண்டு
கருத்தினிலே பட்டகறை
வருத்துதடா, உறுத்துதடா!
[illegible]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சத்தியந்தான் விட்டிடுமோ?
சத்தியத்தின் சன்னதியில்
சாட்டையடி எந்தனுக்கு
விழிநிறையும் எழிலதனை
விழிநிறையப் பருகாமல்
விழிநிறைய விழிநீரில்
குழிநிறைய இடுவேனோ
மண்ணுறங்க வைத்துவிட்டேன்
கண்ணுறங்க வைத்துவிட்டேன்
கண்ணுறங்க வைத்தவனின்
கண்ணுறங்க வில்லையடா!
மூக்கோடு முழியோடு
பூக்காடு எனவந்தாய்
பூக்காடு எரிந்ததடா!
சாக்காட்டில் கரிந்ததடா!
மன்னிப்பாய் என்மகனே
மன்னிப்பாய் சின்னவனே.

(கற்பனை)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புத்த விஜயம்

பொருநை

பொங்குமின்பப் பொலிவினிலே
        புத்திளமைக் குழவினிலே
தங்கநிகர் மேனியிலே
        தங்குமிதழ் நகையினிலே
மங்கையிவள் போலிந்த
        மாநிலத்தில் இல்லையென
எங்கெங்கும் எல்லோரும்
        ஏற்றுகின்ற எழிலரசி.

களிக்கின்ற காமத்தின்
        கனிரசமாம் கட்டழகி
அளிக்கின்ற இன்பத்தை
        ஆருரைக்க வல்லாரே!
புளிக்கின்ற தன்மையிலாப்
        பொருளெனவே அக்கடலில்
குளிக்கின்றார்; அவள் காலில்
        குவிக்கின்றார் பொருளெல்லாம்.

கண்டவர் மயங்குகின்ற
        கட்டழகி நினைத்திட்டாள்:
'மண்டலத்தை ஆளுகின்ற
        மன்னரெலாம் என்னடிமை
விண்டுரைக்க முடியாத
        விந்தையென எனைப்புகழ்வர்;
விண்ணவர்தாம் நிகர்ப்பாரோ
        வேல்விழியாள் என்றிறைப்பை!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு நாள்—

தீராத துன்பத்தைத்
தீர்த்திடவே மெய்கண்டு
பாரெல்லாம் உயிரளிக்கப்
பாடுபடும் புத்தர்பிரான்
ஊர்நாடி வருகின்ற
உண்மையினைக் கேட்டறிந்தாள்.
ஆரணங்கு பார்க்கின்றாள்
ஆவலுடன் அத்திசையில்.

மோனத்தில் தவமிருந்து
முற்றுணர்ந்த ஐயனவன்,
ஞானத்தின் திருவுருவாய்
நாற்சந்தில் வருகின்றான்;
வானத்து தேவரெலாம்
வணங்கிடும் வடிவுடனே
தேனொத்த தண்மொழியால்
தீதழிக்க வருகின்றான்.

கண்ணிழந்த காமத்தின்
கதியினை என்னென்பேன்.
பெண்ணவள் தான் கொண்டிட்ட
பேதைமையை என்னென்பேன்!
எண்ணத்தில் காமத்தை
எந்நாளோ எரித்திட்ட
புண்ணியன்பால் இச்சைகொண்டாள்
பொய்ந்நெறியில் வழிகண்டாள்

மேவுமெழில் மேனியினை
மென்மேலும் மெருகிட்டு
பூவிதழ்க் கடையினிலே
புன்முறுவல் தான்காட்டி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காவியுடை புத்தனிடம்
கைகுவித்துக் கேட்டிடுவாள் :
"பூவுலகம் போற்றுமைய
புகுவீரோ என்னில்லம்?"

கரியவிழிக் காமியவள்
கூறியதைக் கேட்டிடவும்
துரியநிலை எய்திவிட்ட
தூயோனும் மொழிந்திடுவான் :
"வருவதின்நாள் இல்லையம்மா
வருந்திடவே வேண்டாம்
உரியநாளும் உண்டந்நாள்
உனைநாடி வந்திடுவேன்."

பின்னொரு நாள்—

வருவோரும் போவோரும்
வட்டமிட்ட பொற்கொடியாள்
உருமாறி உடலழுகி
ஊர்புறத்தே கிடக்கின்றாள் ;
கருமத்தை எண்ணியெண்ணிக்
கண்ணீர் வடிக்கின்றாள் ;
கருணையினால் கனிவுடனே
கண்ணெடுத்தும் பார்க்கிலரே.

ஆழ்ந்திருந்த துன்பத்திற்கு
ஆறுதல்போல் அங்கொடியில்
சூழ்ந்திருந்த இருளிடையே
சுடர்விளக்காம் ஒருசோதி
வாழ்விழந்த தனைநோக்கி
வருவதையே கண்டிட்டாள்
வீழ்ந்திருந்த தனக்குற்ற
விடுதலையும் உணர்ந்திட்டாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்புடனே இருகரங்கள்
அணைக்கின்ற அவளுடலை
துன்பத்தின் சுமையெல்லாம்
தொலைகின்ற தன்னிலையில்
இன்பந்தான் உளமெல்லாம்
ஈடற்றுப் பரவிடவும்
'என்பாவம் தீர்த்தென்னை
ஏற்றிட்ட தா'ரென்பாள்

அன்னையினும் தயவுடனே
அகிலமெலாம் காத்திடுவோன்
புன்னகையால் உள்ளத்தின்
பொய்யெல்லாம் தீர்த்திடுவோன்
'முன்னொருநாள் அழைத்தாய்
மோகத்தால் புத்தனையே
இந்நாளில் வந்தேன் நான்
இதுஉரிய நாள்' என்றான்.

(சுடர், தில்லி)



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்ணினமே பிச்சையிடு!

எஸ். சேஷாத்ரி

மையெழுதி வருகின்ற மாதவள்தன் உள்ளமதில்
பொய்யெழுதி வருகின்ருள் புதிராக வருகின்ருள்;
புருவத்தை எழுதியவள் புரிகின்ற வகையதிலே
சருவத்தை எழுதிவரக் காண்கின்றேன்; சொல்லினிலே
தேன்குழைத்துத் தருகின்ருள் தேனோடு நஞ்சினையும்
தான்குழைத்துத் தருகின்ருள்-தழுவுகிற பட்டுடைபோல்
ஒட்டிஉறவாடி உள்ளத்தைச் சூறையிட்டு
விட்டுநழுவுகிருள் வேளைவந்த போதினிலே.

எனக்கேதான் உரிமையென எண்ணிபிறு மாந்திருந்தால்
உனக்கேதான் உடைமையென உரைக்கின்ருள்
ஒருவர்க்கோ!
சூதறியாச் சிறுவரையும் சுழல்கின்ற வழிகாட்டிக்
காதலென்ற பொய்ச்சிறையில் கட்டுவதைஎன்
சொல்வேன்!
ஒப்பனையில் தப்பில்லை; உள்ளதையே சீர்படுத்த
ஒப்புகிற வழியொன்று உண்டென்று நப்புகிறேன்!
தீண்டி அறியாத திருமகளைப் போலிங்கு
ஆண்டு அனுபவித்த அவளுக்கும் ஒப்பனையா?

அம்மாவைப் போலெண்ணி அன்புவிழி காணவந்தால்
சும்மா விடுவதில்லை சொல்வதற்கும் வழியில்லை.
கோயிலிலே தெய்வமது கொலுவிருக்கும் எனவந்தால்
கோயிலிலே தெய்வமில்லை குடியிருக்கும் சாத்தானே!
நெல்லுக்குப் பெருமையதன் உள்ளிருக்கும் அரிசியினால்
சொல்லுக்குப் பெருமையதன் சுடர்கின்ற சத்தியத்தால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்ணுக்குப் பெருமையவள் பெண்மையெனும்
பண்பதனால்
பெண்ணினத்தார் கோடியிலே பெண்மையினைத்
தேடுகின்றேன்!
பெண்ணினமே உன்னிடத்தில் பிச்சை இரக்கின்றேன்—
மண்ணினிலே எங்களையே மானமுடன் வாழவிடு!
இன்னமும் பற்பலவும் எழுதத் துடித்தாலும்
அன்னையவள் பெண்ணதனால் அவ்வளவில் நிற்கின்றேன்!

(தீபம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எங்குமில்லை

சாஸ்திரி

எங்குமில்லை! எங்குமில்லை! எங்குமில்லை உலகிலே!
எங்கள்மகான் காந்திக்கிணை எவரும் எங்குமில்லையே!

நாடுவோர்க்கு நன்மைசெய்யும்
நல்ல தந்தையாகவும்
தேடுவோர்க்குத் தேவையான
தெம்பளிப்ப ராகவும்
ஏங்குவோர்க்கு இதயங்கள்செய்யும்
ஏற்ற நண்பராகவும்
துலங்குமெங்கள் காந்தியைப்போல்
எங்குமில்லை புவியிலே! (எங்கு)

அரிசனங்கள் அவதிநீக்கும்
அன்புத் தந்தையாவராம்
சரிசமத்தோ டெவரும்வாழச்
சாதிபேதம் நீக்கிட
கரிசனத்தோ டுழைக்குமெங்கள்
காந்தியைப்போல் யாருளார்
தரிசனத்தைக் காணவேண்டி
தரணியுள்ளோர் விழைகிறார். (எங்கு)

புத்துணர்ச்சி புதியவீரம்
புரியவைக்கும் புனிதராம்
எத்துணைதான் இடர்கள்வந்தும்
ஏற்குமுள்ளப் பண்பினன்
புத்தனைப்போல் மாந்தருள்ளே
புனிதஅன்பை நட்டவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அத்தனையும் ஆக்கவல்ல
ஆத்துமீக வித்தகன். (எங்கு)

புண்ணியனைப் பார்க்கையிலே
புதியகாந்தம் இழுக்குது!
பொக்கைவாய்ச் சிரிப்பிலேயோர்
பொற்கவிதை பிறக்குது!
காந்தியத்தைத் கரித்தொதுக்கும்
கசடருக்குச் சொல்லுவேன்
சாந்திமார்க்கம் இதுவேயென்று
சத்தியம்நான் செய்புவேன். (எங்கு)

(காவேரி)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயற்கையின் ஆற்றாமை

அரங்கண்

வானமுகிற் கண்திறந்து, வாரிதிபோல் நீர்பெருக்கி
ஏனழுதாய்? எங்கள் இயற்கைப் பெருந்திருவே!
ஆனபயன் வீணர் அபகரிக்க, அம்புவியில்
மேனி வருந்துபவர் வேதனையைக் கண்டாயோ?

வெடிபடப்பே ரண்டமெலாம். மின்னலெனும் பல்இலகக்
கடகடென நீசிரித்த காரணத்தைக் கூறுயோ?
அடிவயிறு காயவிட்டே, அவருழைப்பை அபகரிக்கும்
கொடியவரைக் கண்டதனுல் கோபமிகக் கொண்டாயோ?

வெடிக்கின்ற சிரிப்படங்கி, மின்எயிறு நெறுநெறெனக்
கடிக்கின்ற காரணம்என்? காசினிக்குப் பாரமெனத்
தடிக்கின்ற தொந்தியின்னும் தடிப்பதற்கே,
தாம்அவர்கள்
எடுக்கின்ற முயற்சியினை எதிர்கண்டு பொங்கினையோ?

அருகிலுள பொருளெல்லாம் அழிவடையப் புகைகதுவ
எரிமலைமூக் கினிலனலை ஏனோநீ உயிர்க்கின்றாய்?
பொருபசியால் பாட்டாளி பூச்சியெனச் சாம்போது,
துருஅடையப் பணம்குவிப்பார் சூழ்ச்சிகண்டு
வெதும்பினையோ?

கடுங்கசிலம் மரங்கள்விழ. நல்லுயிர்கள் பதைபதைக்கக்
கடும்புயலே உருவாகக் கடலாடை குலுங்கியதேன்?
குடும்பமெனும் நாடிதனைக் குலைத்துப்பல் பிரிவாக்கும்
கொடுங்கயவர் தமைஒழிக்கக் கொதித்தெழுந்த
வேகமோ?

(சுடர், தில்லி)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிதைத் தலைவி

வெ. பத்மனுபன்

1. கவியில் கம்பன் அமுதாக
காவிய உலகின் கனியாக
புவியில் புதுமைப் பிழம்பாக
பூத்துக் குலுங்கிட நீவருவாய்!

2. அன்னைத் தமிழாய் நீவருவாய்!
ஆடும் கொடிபோல் நீவருவாய்!
என்னைத் தமிழின் தூதாக்கி
ஏற்றம் தரவே நீவருவாய்!

3. கவிதை எழுதநான் நினைந்து
காகிதம் தனையே எடுக்கின்றேன்
புனிதப் பொருளாய் நீவந்து
பூவிதழ் மலரச் சிரிக்கின்ருய்!

4. உள்ளம் தெளிவில் வீற்றிருக்க
ஊக்கம் பிறக்கும் வேளையிலே
கள்ளமில்லா முகத்துடனே
காட்சிப் பொருளாய்த்
தெரிகின்ருய்!

5. எழுதும் ஆவல் ஓங்கிநிற்க
ஏடும் அருகில் ஏங்கிநிற்க
விழுமிய ஞான விழியுடனே
வீடு முழுதும் தெரிகின்ருய்!

6. உன்னை மறக்க நான்நினைத்து
உள்ளம் தனையே அடைக்கின்
றேன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னைக் கவர நினைத்து
ஏடு கொண்டு தருகின்றாய்

7. வண்ணத் தமிழின் சாரமெல்லாம்
வரிசைப் படுத்தித் தருகின்றாய்!
எண்ணம் இலக்கியம் இவை
யெல்லாம்
ஏட்டில் வடித்துத் தருகின்றாய்!

8. பண்ணின் வாய்மொழிப்
பேச்சாலே
பாட்டின் இலக்கணம் நீகூற
கண்ணின் வேல்விழி உனை எண்ணி
கவிதை இலக்கணம் மறக்கின்
றேன்!

9. எழுத்தில் வடிக்க நினைக்கின்றேன்
ஏடாய் நாடாய் விரிகின்றாய்!
எண்ணில் எழுத முற்படுமுன்
ஏனோ எங்கோ மறைந்துவிட்டாய்!

(அருள்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உழல்வதல்லால் புகலேது?

ரஜனு

புகலேது நெஞ்சுக் கிகலேது மண்ணில்
புழுவென உயிரிங்குழல்வ தலால்?

வீணை நரம்பை விரல்கொடு வருடி
மீட்டி லயிக்க நினைத்திட்டால்
கானம் தருமுயிர் தந்தியறுந்தே
கலைந்து சிதைந்து கிடந்திட்டால்...? (புகலேது)

தேடி யெடுத்தொரு தெய்வக் கற்பனை
தீங்கவி யாக்க நினைத்திட்டால்
நாடிய சொற்களும் ஓடி யொளிந்திட
நைந்தொரு ஏடும் கிடந்திட்டால்...? (புகலேது)

இயற்கை வண்ணச் சோபிதம் கண்டு
என்னை மறந்திட நினைத்திட்டால்
துயருறு நெஞ்சில் உருகிய கண்ணீர்த்
துளிகள் விழியைத் திரையிட்டால்...?
(புகலேது)

புன்மை யழித்திடும் புன்னகை கண்டிட
புண்ணியச் சந்நிதி விரைந்திட்டால்
முன்னுறு கதவம் இடைவழி நடுவே
மூடியிருந்தே மறைந்திட்டால்...? (புகலேது)

(சுதேசமித்திரன்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவள்

சிராளன்

உழுதல் எனக்குள்ள நினைவாகின்—அவள்
பழுதில் அதற்குற்ற நிலமாகும்
தொழுதல் எனக்குற்ற விழைவாயின்—அவள்
எழிலில் அதற்குற்ற சிலையாகும்.
அழுதல் எனக்குற்ற நோயாயின்—அவள்
தழுவும் எனைப்பெற்ற தாயாகும்.
விழுதல் எனக்குற்ற விதியாகின்—அதை
முழுதும் எதிர்க்கின்ற மதியாகும்.
துடிக்கின்ற கவியுள்ளம் எனதாகின்—அவள்
வடிக்கின்ற எழிலுற்ற மடலாகும்.
படிக்கின்ற திருவுள்ளம் எனதாகின்—அவள்
விரிக்கின்ற தொருநல்ல இதழாகும்.
தொடுக்கின்ற இசையுள்ளம் எனதாகின்—அவள்
எடுக்கின்ற எழில்வீணை அவளாகும்.
நடிக்கின்ற தொருவுள்ளம் எனதாகின்—அது
நடக்கின்ற அணிமேடை அவளாகும்.
நடுங்கும் கிழத்தனம் நானாகில்—எனை
நடத்தும் கழித்தரம் தானாகும்.
முடங்கும் உளத்தவன் நானாகில்—உயிர்
விளங்கும் படிக்கவள் தேனாகும்.
ஒடுங்கும் திறத்தவன் நானாகில்—ஒளி
துலங்கும் நிறத்துவிண் மீனாகும்.
அடங்கும் உயிர்ப்பது நானாகில்—அவள்
அடங்கல் பயிற்றிடும் நானாகும்.

(தீபம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"வேதாந்தப் பொருள்விரிக்கும் நாதாந்தத் துறை"

நா. கோபாலசுந்தரம்

உலகுதன்னைப் படைத்தளித்து உள்ஒடுக்கி எயிற்றடக்கி உமிழ்ந்துமீண்டும்
உலகுதன்னுள் பிறந்தருளி உம்பருடன் இம்பருமேயேத்தி வேண்டும்
சிலைகுலவு திண்டோளன் சீராளன் திருக்கதையைச் செய்தகம்பன்
இலகுபுகழ் என்றென்றும் இவ்வுலகில் தமிழ்நிலவத் தான்நிலவும்

அடக்கரிய அரும்புலன்கள் ஐந்தடக்கி ஆசையுடன் வெகுளியுமே
தொடற்கரிய சூழலிடை தூய்மையெனும் தீயினிலே தவம்புரிந்த
சுடர்ப்பொருளைச் சிறைமீட்ட சிலைராமன் கதைகூறும் கம்பனது
கடற்பெரிய காவியத்தின் கருப்பொருளைக் காதலினால் பாடலுற்றேன்.

வேதங்கள் அறைகின்ற வுலகெங்கும் விரிந்திட்ட ஆதிராமன்
பாதங்கள் தமைப்பற்றிப் படிவங்கள் நெஞ்சத்தே பதியவைத்தால்
பூதங்கள் ஐந்துள்ளும் பொருந்திட்டும் பிரிந்திட்டும் புணருகின்ற
வேதாந்தப் பொருள்கூறும் நாதாந்தத் துறைநம்முன் மேவிநிற்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

—வேறு—

ஆதியில் ஒன்றே யாகி ஆயிடைப் பலவா றாகி
அந்தத்தில் கடலைச் சேரும் ஆற்றினில்,
சரயுதன்னில்
வேதநூல் பலவும் கூறும் விரிபொருள் மறைக ளாலே
வேறெனத் தோன்றினாலும் மேவுமோர் மெய்யைக்
கண்டோம்.

காதலும் அறமும் கொண்டு காமமும் சினமும் நீத்து
கருணையும் அருளும் ஞானச் சீலமும் சேர்ந்த
சான்றோர்
மாதவம் புரிய மாலும் மணிநகர் அயோத்தி தன்னில்
மானிட வடிவம் கொண்டான்; மறைபொருள்
தெரியக் கண்டோம்.

—வேறு—

அருமறைக்கும் உணர்வரிய ஐயன் முனிவனது
தருவனத்துத் தவவேள்விக் கூறும் விருதர்தமை
வெருவரச்சென் றுயிர்போக்கி வேள்வி தனைக்காத்தான்;
செருமுகத்துட் பகைகொன்று சிந்தைத் தவம்காத்தான்!

உணர்வறியா கல்லுருவில் உறங்கும் அகலிகையை
துணையடியின் துகழ்கதுவ, தொன்மை கல்லுருவம்
தனையடைந்து நின்றவளின் தன்மை கண்டறிந்தால்
இணையடியில் இம்மையுடன் மறுமை இரண்டுமறும்.

மருங்கில்லா மங்கையளும் மாசில் இராகவனும்
ஒருங்கிசைந்த விழிகளினால் ஊன்றி நோக்கிட்டார்;
கருங்கடலின் அரவணையிற் காதல் மிதிலையினில்
வருங்காட்சி காவியத்தின் வேதத் தெளிமாட்சி!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோள்கண்ட தோகையர் தோளே காண்பதுவும்,
தாள்கண்ட தையலர்க்குத் தாளே தெரிவதுவும்,
நீள்கெண்டை விழிமாதர் முடிவாய்க் கண்டறியார்;
ஊழ்கண்ட உருவொத்தான் உருவை உணர்ந்திட்டால்

வெளியற்ற இருளற்ற மேலும் கீழுமற்ற
வளியற்ற எரியற்ற மண்ணும் நீருமற்ற
அழிவற்ற அசைவற்ற ஆதி அந்தமிலான்!
விழிபெற்ற மனிதர்எவர் வடிவைக் கண்டறிந்தார்?

மன்றல்மிசை பணத்தவிசில் வந்து மீதேறி
வென்றிபுகழ் நெடுந்தகையான் வீர ராகவனும்
இன்றுணையாம் அன்னமவள் இணைந்த சானகியும்
ஒன்றியநல் போகயோகம் ஒத்து வீற்றிருந்தார்.

—வேறு—

போகமாய் யோகமாய் அண்ணலும் அன்னையும்
முத்தியும் தவமுமாய் முடிவுடன் வினையுமாய்
வேதமும் பொருளுமாய் நாதமும் சுரமுமாய்
சோதியும் சுடருமாய் சீதமும் நீருமாய்

சொல்லுடன் ஒலியுமாய் சூட்டுடன் தீயுமாய்
அல்லுடன் இருளுமாய் வானுடன் வெளியுமாய்
எல்லையில் இன்பமாய் உயிருடன் உணர்வுமாய்
நல்வினைப் பயனுடன் நற்றவ அறமுமாய்

—வேறு—

நாடிய பொருளனைத்தும் ஞானமும் புகழனைத்தும்
நன்மையுஞ் செல்வம்யாவும் புகழுடன் போகமெல்லாம்
வீடியல் வழியிராமன் வடிவிலே வீற்றிருக்கும்;
மெய்த்தவ உருவாய்ச் சிக மௌனமாய் மறைபொருளாய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குணங்களும் இணங்கியுய்யும் கோலமாய் யோகமாகி
அணங்கவள் சீதைதன்னின் அழகிய வடிவில் நிற்கும்

—வேறு—

சித்தமென்னும் காட்டினிலே சாந்தியுறச் சென்றசீவன்
தத்துவத்தை உணர்தற்குத் தடையெனவே சூழ்ந்திட்ட
நித்தபகை காமமுடன் நேர்ப்படவே அறுபகைகள்
எத்திறத்தும் சீவனது சாந்தியினைக் கவர்ந்திடற்கு

தக்கதொரு தருணத்தில் தனிவழியே சீவன்மிசை
மிக்கபெரு மாயையினை மேவவிட்டு சூழ்ச்சியினால்
சாந்தியினைப் பறித்ததனைச் சஞ்சலத்தில் சிறைவைக்க
சாந்திதனைப் பிரிந்தசீவன் சோகத்தே தடுமாற

தவம்புரிந்து சாந்தியது தன்னைத்தான் காத்துநிற்க,
பவம்கடந்து சீவனது பகைவென்று சமரிட்டு
சாந்திதனைச் சேர்ந்துய்ந்து தத்துவத்தை உணர்ந்தென்ப
நாதாந்தத் துறையினிலே நவையில்லா கவிபாடி

வேதாந்தப் பொருள்விரித்து விளக்குமொரு காவியத்தில்
மறைப்பொருளை கம்பநாடன் வைத்திட்டான்; மற்றதனை
உரைசெய்தற் கொண்ணாதாம்; உணர்ந்துணர்ந்
துய்வோம்நாம்!

(கம்பன் கவியரங்கம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

நதி

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரவீந்திரர்

குழந்தாய்! இதைநீ கூற இயலுமா?
நீரினில் அலைகள் நேருற எழுவதேன்?
அல்லும் பகலும் அலைகள் ஆடும்
நடனம் எவரிடம் நன்கு பயின்றன?
சற்றே கேட்கச் சடசட மடமட
என்றே பாடி ஏகும் தண்ணீர்
அலைக்கரம் தூக்கி அழைப்பன யாரையே?
யார்மடி யிருந்தவை இனிதி றுடுமே?
நகைப்புடன் விழுந்து நடந்து மறைவது
எங்கே எனநீ இசைத்தல் கூடுமோ
யாவர் மனத்துளும் இன்பப் பெருக்கும்
அமைதியும் விளைப்பன அவையே யன்றோ!

நினைத்தேன் ஒருபால் நிலத்தே அமர்ந்தே
யாங்கிருந் திந்நதி இறங்கிய தெனவே
எந்த மலையினின் றிறங்கிய திந்நதி
யாவ ரேனும் இதனை அறிவரோ.
அதனரு கில்யார் அடைய வல்லார்
ஆங்கு மனிதர் அடைந்தது முண்டோ
உளரோ மனிதர் உளவோ புல்பூண்டு
மரமும் இல்லை மற்றவையும் இல்லை
ஆங்கண் ஒலியும் அமைவ தில்லையே.
மாமுனி யெனவே மலையமர்ந் துளது
அதன்தலை மேல்விழும் அளவிலா வெண்பனி!
காலை யொளியில் கண்ணைக் கூசும்.
மேக மெல்லாம் மிகமிகக் கூடி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருசிறு வீட்டில் உள்ள பிள்ளைகள்
போலவே அங்கு பொலிவுற் றிலங்கும்.
குளிர்நாள் வீழும் குளிர்பனி போன்ற
கூதிர்க் காற்று குறைவற வீசும்;
விண்மீன் இனமதை விழித்து நோக்கும்:
வைகறை தோன்றும் வளரொளிக் கதிர்கள்
புன்னகை யுடனதன் பொன்முடி யாகும்.
நீல நிறத்தினந் நிறைவின் கீழே
ஆங்கு மென் முகி லவற்றி னுடலில்
கனவு கண்டு களிபே ரின்பம்
தாங்கிய நதிதான் தூங்கும் அங்கே.

அதன்முகம் வெய்யிலை யறித லானதும்
அதன்விளை யாட்டினை அறியும் அதுவே.
ஆங்கது தனியே அல்லும் பகலும்
இருந்தது தோழிய ரெவரும் இல்லையே.
எவர்மனக் கண்ணும் இல்லை பேச்சே
ஆங்குப் பாடுவோர் யாரும் இல்லை.
ஆதலின் சரசர அமைந்த சுறுசுறு
ஒலியுடன் நதியாய் ஓட லெழுந்தது.
உலகம் யாவையும் ஒருங்கு நோக்க
உள்ளங் கொண்டது துள்ள லாயது.

மலையின் மார்பை வளைந்து வளர்ந்த
மரங்கள் முதுமை மலிந்த பேரினம்
அவற்றின் வயதினை அறிந்தவர் இல்லை.
அவற்றின் கிளையிடை யமைந்த சந்துகள்
பொந்துகள் இடுக்குகள் புகுந்த பறவைகள்
குச்சிக ளாலே கூடுகள் கட்டுமே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மரங்கள் கார்படி வாதுகள் தூக்கி
கதிரவ னொளியைக் கடுகி மறைக்கும்
சடைபோற் பாசிக் கொடிகள் கிளைகளில்
அசைவன வாகும் அவைகள் தாமே.
தோளொடு தோள்கள் தொடர்புற வளைந்தே
இருளைப் பிடிக்க எழுந்த கண்ணிபோல்
பரவி நிற்கும்; பரவிய அதன்கீழ்
தன்னந் தனியே தன்னொளி காட்டி
கலகல வெனுநகை காட்டிக் கொண்டே
அருவி மெல்ல ஆங்கிருந் தோடும்.
வழியில் தடுக்க வல்லார் எவரே?
அதுவே நெளிந்து ஆனந்த மயமாய்
பரபரப் புடனே பாய்ந்துசெல் வதுவாய்
கண்ணை மூச்சி காட்டு வதுவே.
அதனடி யருகே ஆங்காங் குள்ள
கூழாங் கற்கள் கொடுக்குமெல் லொலியே
வழியிலே கற்கள் மலிந்து கிடக்கும்
அவற்றையும் தள்ளி அப்பால் ஓடும்
மலையே வழியை மறித்த தாயினும்
நெளிந்து நகைத்து நேர்செலு நதியே.
ஆங்கே நிமிர்வுற் றமையும் கொம்பும்
தாடியும் கொண்ட ஆடுகள் உண்டே
சடைமான் எத்தனை பிடிபடா தவையே.
ஆங்குள மனிதரும் அமைவார் புதுமை
அவர்தம் உடம்பு நன்பெறுங் கற்போல்
உருண்டு திரண்டுள உள்ள விழிகள்
இரண்டும் வளைவே இருண்டவர் பேசும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
மொழிகள் நமக்கு முற்றிலும் விளங்கா.
மலைவாழ் மக்களே மற்றவ ராதலின்,
பாடிப் பாடியே பணிகளைப் புரிவர்;
இரவும் பகலும் இயைந்தவர் உழைத்தே
விறகுச் சுமையை வெட்டி வருவர்;
மலையின் கொடுமுடி மதியா தேறி
காட்டு மானினம் வேட்டை யாடுவர்
நதிதான் முன்னே நடந்து செல்ல
கூட்டங் கூட்டமாய் கூடுவர் தோழியர்
வீடடை விட்டே வெளியில் நடக்கும்
வழியில் வந்த மங்கையர் அவர்தம்
காலில் சிலம்பும் காப்பும் போன்றே
கூழாங் கற்கள் குழுமின வொலிக்கும்
முத்து மாலைகள் மொய்ப்பதைப் போன்றே
அலைகளா லெழுந்த அலகிலா ஒளிதான்
பளபள வென்று படர்ந்து மின்னுமே.
முகத்தில் எத்தனையோ மொழிகள் ததும்பும்
இத்துணை பேச்சும் எங்கிருந் துறுமோ.
தோழியர் தோழியர் தோழமை மிகவே
நகைத்தும் சாய்ந்தும் நாட்டியம் ஆடியும்
அசைந்தும் தழுவியும் ஆர்த்தும் செல்வரே.
இங்ஙனம் இணங்கிய இணக்கந் தன்னில்
மடமட வென்றே வந்திடுந் தண்ணீர்.
கிடுகிடு வெனவே நடுங்குந் தரையே
விரைந்து சடசட என்றொலி பரவ
ஒவ்வோ ரிடத்தில் ஓடிப் பாயும்
பாறையும் புனலால் படபடத் தாடும்
CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கற்கள் துண்டாய்ச் சிதறும் கதறியே
வழியினை யாக்கி வருவதிவ் வண்ணமே.
நதியின் கரைகளில் நாளெலாம் வளரும்
மரங்களோ மிகவும் பெரியவை; மற்றவை
நேருற நிமிர்வன நிலையறச் சாய்வன
பற்பல காட்சி சிற்பம் தெரிப்பன
எத்தனைப் பாறைகள் எழுந்து சரிந்து
பொத்துப் பொத்தெனப் புனலில் விழுமே.
ஆங்கே வண்டல் அமைந்த நீரினில்
நுரையின் கூட்டம் நுரைத்து மிதக்குமே
சுழிகளும் வட்டமாய்த் தோன்றும் பலவே
பித்தனைப் போல தத்துமால் நதியே
கடைசியில் மலைகளைக் கடந்து வந்து
நாட்டு வெளியினை நணுகும் அதுவே.

யாங்கு நோக்கினும் இங்கதன் கண்ணில்
யாவும் புதுமை இயைந்தே தோன்றும்
நான்கு பாலும் தோன்றும் வெளியே
செல்லும் வெளியெலாம் நல்ல சமநிலம்
உழவர் பயிர்த்தொழில் ஓரிடம் உளதே
மற்றோ ரிடத்தில் மாடுமேய் பசும்புல்
பெரியதோர் அரச மர மதில் ஒருபால்
பறவைகள் ஆடிப் பாடிக் குதிக்கும்
இடையச் சிறுவர் இணைந்தே ஒருபால்
மரத்தி னடியே வந்துகூத் தாடுவர்.
அருகே சிற்றூர்; அதன்கண் மனிதர்
பலப்பல வேலையும் பயின்று திரிவர்
எங்கும் [illegible] [illegible] வழியிலே
CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விரும்பிய வாறே மேற்செலும் நதியே
வழியில் கொட்டும் மழையின் தண்ணீர்
அவையும் கூடி அதன்கண் புகுமே.
நதியும் புனலால் நலத்தில் பெருகுமே
இப்போ ததனை யாரே அடக்குவர்?
புல்லின் வகைகள் மெல்ல எழுமே
கொக்குகள் கூடிக் கூடுகள் கட்டுமே
எருமையின் கூட்டம் இங்கு மங்கும்
ஆற்றில் அவைகள் சேற்றில் புரளுமே.
காட்டுப் பன்றிகள் கோட்டால் குத்தி
மண்ணைக் கிளறி வழியில் வீழுமே.
மறைவாய் நரிசில வாழும் ஆங்கே
உவாஉவா எனஅவை ஊளை யிடுமே.
நடந்து நடந்து இந்நதி எத்தனை
நாடுகள் காடுகள் நன்கு பார்க்குமே
அதன்செயல் யாரே அளவிட வல்லார்?

வெறுமே மேவும் மணலே ஒருபால்
பலநிற மண்வகை பாவும் ஒருபால்
நாணற் புதர்கள் நண்ணும் ஒருபால்
கோதுமை வயல்கள் கூடும் ஒருபால்
சின்னஞ் சிறிய சிற்றூர் ஒருபால்
தலைமை மலிந்த தலைநகர் ஒருபால்
அங்கே நவாபின் அரணும் உள்ளது
அதன்கண் கற்றூண் அளவால் பெரியது.
ஆங்குள கரையில் அந்நதி யகத்தே
எத்தனை படிகள் இறங்கும் நீரிலே
படிக்கல் கல்லின் பாலமும் ஒருபால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆற்றின் இருபுறம் அணைவுற இணைக்கும்
இருப்புப் பாதையும் ஏகும் ஒருபால்
அதன்மேல் புகையுடன் அதிர்ந்து முழங்கியே
புகையின் வண்டியும் போகுவ துளதே.

இங்ஙனம் நதிதான் இறுதி யாக
மென்மை மலிந்த நன்மை பொலிந்த
மண்ணுள நாடாம் மருதம் வந்தது.
ஈங்கே இருப்பது எங்கள் வீடே
வீட்டின் வாயில் மேவிய தாறே.
வாய்க்கால் கால்வாய் மறுகால் குளமாய்
வலைபோல் நாட்டை வளைந்து சுழன்றதே
துறையிடைக் குளிக்கும் தோகையர் பலரே
நீந்தி யாடிப் பாய்ந்து குதிக்கும்
சிறுவரும் பலரே சிறிய பெரிய
மீன்களைப் பிடிக்க வீசும் வலைஞர்
எத்துணை யோபேர் ஈங்கே இருப்பர்.
பாயை விரித்த படகுகள் எத்தனை
ஏலோ ஏலோ எனவே பாடி
ஓடம் ஓட்டும் உண்மை உழைப்பினில்
பாட்டினைக் கலக்கும் பணியுளார் பலரே.
இக்கரைக் கக்கரை ஏறியும் இறங்கியும்
செல்லும் தோணிகள் சொல்லுக் கடங்குமோ?
ஆங்கொரு கரையின் பாங்கே நிமிர்ந்து
பண்டைப் பழமைப் பரமன் கோயில்
வருவோர் தம்மை வருகவென் றழைக்கும்
காலை வேளையும் மாலை வேளையும்
[illegible] மணியும் [illegible] [illegible]குமே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சடைமுடி தாங்கி சாம்பரைப் பூசி
துறையிடைச் சிற்சிலர் நிறைவரு தவத்தின்
சித்திரம் சிற்பம் தெரிவுற இருப்பர்.
கரையிடை ஆங்கொரு கரையரு சந்தை
நிறையக் கூடுமே நிறைவா மனிதர்
வயலில் விளைந்து வருவன வாங்கிய
உழுந்து கடுகுநெல் உள்ளவை பிறவெல்லாம்
படகுகள் சுமந்து படைக்கும் கரையிலே.
கரும்பு நிறைந்ததோர் பெருப்புன வயலில்
நாகண வாய்ப்புள் நண்ணி மேயுமே.
கண்ணைக் கூசும் மண்ணின் பரப்பில்
நீர்வாழ்க் கோழியின் நிறைவுறு கூடே
மணலுக் குள்ளே மறையும் ஆமையே
முட்டையை ஆங்கே இட்டதும் வெளிவரும்
குளிரால் மிகுந்த கூதிர் நாளில்
கூட்டங் கூட்டமாய்க் காட்டு வாத்துகள்
ஆங்கே வாழும் அன்றிலும் ஆங்கே
மாறி மாறி வாய்திறந் தரற்றும்
நெல்வய லோரம் நிறைந்தொரு பாங்கர்
வாழையின் தோட்டம் வளரும் மலிந்தே.
மூங்கிற் புதரும் முறையே தோன்றும்.
மாவும் பலாவும் வளருந் தோப்பின்
இடையிலே அழகுற எழுமொரு சிற்றூர்
நெல்லால் நிறைந்த நிலைபல ஆங்கே
வைக்கோற் போரும் மலைமலை யாயுள.
கன்றும் பசுவும் கட்டுண் டிருக்கும்
எத்துணை நிறத்தன இன்னன பசுக்களே.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆங்கொரு புறத்தே அமைந்ததோர் செக்கு
வல்லொலி யெழுப்பி மெல்லச் சுழலும்.
பலவகைச் சரக்கும் பகரும் கடையில்
இருந்த வண்ணமே இராமன் கதையை
ஓதுவார் ஒருவர். ஒருவர் கேட்பார்.
திண்ணைப் பள்ளியில் சிறுவர் குழுமி
கலகல வொலியொடு பலபல படிப்பர்
மடியிலோர் பிரம்பை வைத்துக் கொண்டே
உறங்கி விழுவார் உபாத்தி யாயரே.
நெளிந்தும் உடைந்தும் வளைந்தும் தேய்ந்தும்
ஊர்ச்சிறு வழியிங்கு ஊர்க்குட் செல்லுமே
பார மேற்றிய வண்டிகள் பலபல
சக்கரம் கிச்சொலி தரவே நடக்கும்.
பசியால் மெலிந்த பலதெரு நாய்கள்
குரைத்துக் குரைத்துக் கூடிப் பாயுமே.
பூரணை இரவிலே பூரண நிலவு
விண்ணில் விளங்கி வெண்ணகை புரியுமே
காட்டின் இடையில் காரிருள் மறையுமே
நிலவொளி நீரினில் நிறைந்து விளங்குமே
மணலின் பரப்பிலும் வளர்வுற் றொளிருமே.
எவரும் குடிசையில் இனிது தூங்குவர்
தோணிகள் எல்லாம் தூங்கிக் கிடக்கும்
மரங்களின் இலைகளும் மடங்கித் தூங்கும்
நீரினில் அலையும் நேருற எழாது
காலையில் தூக்கம் கலைந்து விழித்த
குயில்குக் கூவென கூவிப் பாடுமே
அக்கரைத் திட்டையில் அடங்கிய பறவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
இரவில் கனாக்கண் டெழுவது முண்டே.

வலப்புறம் இடப்புறம் வாவும் நதியே
ஓய்ந்து நிற்பது பாய்ந்தகற் கில்லை.
இருண்ட வனத்தின் மருண்ட கரையில்
உயிருள ஒன்றும் ஒலியுடன் எழும்பா.
முதலை யொன்றே நதியின் பாங்கர்
கரையின் வெய்யிலில் காய்ந்து கிடக்குமே.
புதரொடு புதராய்ப் புலிகள் அலையுமே
பாய்ந்தொரு பாய்ச்சலில் பற்றும் பிடரியை
சிறுத்தைப் புலியும் திரியும் ஆங்கே
வட்டத் தழும்புகள் வளரும் அதற்கே
இரவிடைப் பதுங்கி எழும்நீர்த் துறைக்கே
நக்கி நக்கி நன்னீர் குடிக்குமே.
கடலொடு கலக்கும் காட்டக மாதலால்
பொங்கிப் பொங்கிப் புனலும் பெருகும்
இருகரை யெல்லையும் எழுந்து போகும்
மிதந்த மலர்கனி மென்மேல் நகரும்
சிரித்துப் பொங்கிச் சிற்றலை எழுமே
தோணி யிடையிடைத் தடிக்கும் சரியும்
மலையின் பாம்புபோல் வருமிரு கரையையும்
விழுங்கப் பார்க்குமே வெள்ளப் பேராறு.
அதுவே பின்னர் அடங்கும் வடியும்
ஒதுங்கி யொதுங்கி உட்செலும் தண்ணீர்
ஆறும் வற்றி அடங்குதும் உண்டே
இருகரைப் புறமெழும் சிறுசெஞ் சேறே
துறைகளி லுள்ள நிறைவுரு படிகள்
புறத்தின் எலும்புபோல் புலப்படும் மெல்லவே
CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலும் நதிதான் மிகுந்து செல்லவே
பெருகிய நீரும் பிளவற் றேடுமே
கண்ணுக் கெட்டாக் கரையாங் கிறுதியில்
எல்லை யறியா திருக்கும் நிலையால்
திசையும் திகைத்திட செல்லும் வெள்ளமும்
நீல நிறத்தால் நிரம்பித் தோன்றும்
எடுத்துச் சுவைத்தால் கடுக்கும் உவர்க்கும்
ஆழங் காணல் ஆகா தையா
வானமும் நீரும் மயங்கும் ஒன்றாய்,
தரையோ எங்கும் தலைகா ட்டாதே
எங்கு நோக்கினும் எழுந்த புனலே
ஈதென் பேரொலி எங்கும் எழுந்தது
ஈதென் நீலநீர் எங்கும் பரந்தது
ஆங்கே காணும் கடல் அது தானே
அதன்கரை இரண்டையும் அறிவார் யாரே
எண்ணிலா அலைகள் எழுவன அதன்கணே
மோதி மோதி முழங்குவ காணீர்
பள்ளி விடுதலை படைத்த மாணவன்
துள்ளி யோடிச் சுழல்வது போன்றே
காற்றும் விழுந்து கணக்கிலா அலைகளை
மோதி யடித்து முழங்குற வீசுமே
கண்ணால் காணும் காட்சி உளவரை
எவ்வகைப் பொருளும் ஈங்கே இல்லை
வானமும் காற்றும் வளர் தண்ணீரும்
கலகல வென்றே கண்ட முழக்கமே
நுரையே அலையே கரை காணாத
நீரே யன்றி நிலைப்பது யாதே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஈங்கே நதிதான் எய்தும் முடிவே
நதியின் யாத்திரை நன்கு முற்றியது
எந்த நாளிலும் எந்த வேளையும்
அதன்வினை யாட்டமுங் கடந்தவ தில்லை
நாளெல்லாம் விளங்கும் நடன சங்கீதம்
என்றும் முற்று திங்கு விளங்குமே
கடலோ அதைத்தன் தடமார் பணைத்து
நீலப் பள்ளியில் நிறைவுற அமர்த்தி
அதனுடற் சேற்றை அழகுறக் கழுவுமே
அதனை நுரையெனும் ஆடையாற் போர்த்து
அலையாம் ஊசலில் அழகுற அமர்த்தி
செவியினிப் புறவே செப்பும் இன்னிசை
ஆற்றின் களைப்பையும் அகற்றும் கடலே.
அன்ன நிலையினில் ஆறெனும் பெண்ணும்
கரையே தாணுக் காதலில் கலந்து
கடலெனும் கொழுநனைத் திடமுறத் தழுவுமே.

வங்க மூலத்திலிருந்து தமிழாக்கியவர்:
அ. பெருமாள், விஸ்வபாரதி

உதவியவர்:
கவிராஜ பண்டித நா. கனகராஜய்யர்



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

முருகன் இரட்டை மணிமாலை

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ந. சிங்காரம்

காப்பு

திருப்புகழ் மந்திரம்வாழ் செவ்வேள்சீர் போற்றும்
இரட்டைமணி மாலை இணைக்கப்—பொருளோடு
சொல்லும் உவந்தளித்துச் சோபிக்கச் செய்தருள்வான்
செல்வ விநாயகச் சேய்.

முருகன் துதி

சொல்லுக்கப் பால்நின்ற சோதிவடி வேலநின்னைச்
சொல்லினால் சுட்டல் துரிசேயாம்—சொல்லினால்
சொல்லாக்கால் கன்மம் தொலையா தெனவஞ்சி
சொல்வேன் நினைச்சொல்லும் சொல்.

நூல்

முருகா! நினதுபுகழ் முத்தமிழால் ஓதி
இருமை வினைகடந்த எந்தை—அருணகிரி
வள்ளல் அருளாலே வாழ்த்தும் எமையாள
வள்ளியுடன் நீவிரைந்து வா.

வார்சடை யண்ணல் தனதடி வாழ்த்திய வானவர்தம்
சீர்குலைத் திட்ட வவுணர் தலைவன் செயலழிய
ஏர்தரு மைந்த னெனவோங் கிடவே இசைந்தளித்த
கார்மயி லேறி நடாத்து குமரனென் கண்மணியே.

கடம்ப மலரணியும் கந்தனிரு தாளைத்
திடம்படவுள் உள்ளித் திளைக்கும்—மடந்தை
இடந்தனை நாடி இருங்கானம் தன்னில்
நடந்தமலர்ப் பாதத்தை நாடு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாதா நமவென் றரனார் நினையே நயந்து மிக
ஓதா யெனவோ தியவப் பொருள் தான் உவந்தெமக்கும்
நீதா! அடியார் தமக்கருள் நல்க நினைவிலையோ?
தாதா வரைமக ளீந்த குமாரா சரவணனே.

சரவணப் பொய்கை தனில்வளர்ந்தோன் என்றும்
சுரர்தமக் குற்ற துணைவன்—சிரமாறும்
கொண்டருள் செய்யும் குமரன் திருவடியைக்
கண்டுணரா உள்ளமிடர்க் காடு.

காதணி குண்டலம் மெல்ல அசைந்தொளி கண்கவர
வேத முழங்குறு கிண்கிணி நாதமும் மேவிடவே
மாதொரு பங்கினன் வாவென ஓடி வருமுருகா
நீதனு காதெமைக் காத்தருள் வாய்சிவ தேசிகனே.

தேவர் மனங்களிக்கத் தெய்வப் பிடிமணந்த
காவலன் பாதம் கருதுநர்பால்—மேவவரும்
மால்நிலா வண்ணம் மயில்வா கனனேந்தும்
வேல்நின்று காக்கும் விரைந்து.

விரைமலர் தூவி விழைந்தடி போற்றும் விரதமுடன்
உரையது நாவில் தழுதழுத் தோதி உளமுருகிக்
கரையுமெய் யன்பர்க் கினிதருள் செய்வான் கருணைபொழி
வரைமகள் தந்த வரோதய னுய்சீர் மயிலவனே.

மயில்மிசை வந்தேன் மனங்கவர்ந்து சென்ற
அயில்வேலன் தன்னை அணைந்து—மயல்தீரும்
நாளும் வருமோசொல்? நங்கையே நீசெவிடோ!
வாளா திருப்பதேன் மற்று.

மரவடி வாகி அலைகடல் மேவி வளரவுணன்
உரமிரு கூறுறத் தன்னயில் வேலால் உறுத்தவவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரமரு ளென்ன வழுத்திடச் சேவல் மயிலுருவில்
கருணையி னேற்ருய்! எமக்கருள் வாய்நின் கழலிணையே.

இணையிலா தோங்கும் எழில்வேலா நின்னை
அணைதல் எவர்க்கும் அரிதே—துணையாக
நின்கருணை தானுக நேர்படின் பின்னையவர்க்
கின்பம் பெறுதல் எளிது.

எளியவர்க் கென்றும் இரங்கிடும் மேன்மை
இயல்பினனும்
ஒளிர்தரு வேலன் உலகினில் சீவர் உறுவினையின்
விளைவினுக் கேற்பப் புசிப்பினை யூட்டி விருப்பகலும்
அளவினில் தானே குருபர னுய்வந் தருளுவனே.

அருள்நாதங் கூட்டி அகந்தெளிய வைக்கும்
குருநாதன் உள்ளக் குகையில்—இருந் தருள
மாமலம் நீங்கியிரு வல்வினை தாயநீங்கி
ஆமா றிலதாகும் அன்று.

அவியுண வுண்ணும் அமரரும் காணு அயிலவனே
பவவினை ஓயக் குறக்குல மாது பரிந்தியற்றும்
தவமதைக் காணப் பலபல வேடம் தரித்துவந்த
சிவகும ராநின் திருவிளை யாட்டினைச் செப்பரிதே.

அரியநின் பூசை அகற்றினன்கொல் என்னில்
பிரிவின்றி நின்ற பிரானே—குருபரனே
வாயுண்டு வாழ்த்த மலரிடக் கையுண்டு
தோயமன முண்டெனவே சொல்.

சொற்பொரு ளாகித் துலங்கு சடாக்கரத்
துள்ளொளியாய்
நிற்பதாய் நீர்வளி தீநிலம் வான்கதிர் நீள்நிலவாய்த்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தற்பர மாகிநின் றேபல வண்டந் தனைப்புரக்கும்
வெற்றிவே லையா நினதடியார்க்கு விழைந்தருளே.

விழையேன் நினைக்காண விம்மிவிம்மி உள்ளம்
குழையேன் நினைநாளும் கூவி—அழையேன்
கொடியேனும் நின்னருள் குறித்துய்யும் வண்ணம்
வடிவேலா நீயிரங்கு வாய்.

வாய்ந்திடு மன்பினில் தீந்தமிழ்ப் பாடலால்
வாழ்த்திடவே
ஆய்ந்த தமிழ்ப்புலம் சார்ந்தெனைக் கூடிட ஆதரிப்பாய்
ஏய்ந்த திருப்புகழ் பாடிநின் பொன்னடி ஏத்துநர்க்கே
தோய்ந்தநின் இன்னருள் ஈந்திடு வாய்வேற் சுடர்க்
கொழுந்தே.

சுடர்வேலா நின்னைத் தொழுதன்பு செய்யும்
அடியார் தமைமறத்த லாமோ—திடமாகப்
புள்ளிமயி லேறிப் புரந்தெம்மை யாட்கொள்ள
வள்ளிதெய் வானையுடன் வா.

வாகை அணிந்திடு வேல்முரு காநின் மலரடிக்கே
ஆக முருக்கிநின் வார்புக ழோதும் அடியவர்க்கு
வேக முறுந்தனி மாமயி லூர்ந்தே விரைந்தருள்வாய்
மூக மதாயிருந் தேற்கருள் செய்த முழுமுதலே.

(ஜோதி, கல்கத்தா)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேரன் தம்பி சிலம்பிசைத்ததுவும்

கோ. சு. மணியம்

சிறப்பு

இனியதொரு ஒலிநயமும் இணையிலாக் கற்பனையும்
கனிவுதரு சொல்நயமும் கவரும் கருத்தழகும்
மனிதஉளப் பான்மையெலாம் மாண்புறவே
விளக்குவதாய்
தனித்தஎழிற் காவியமாய் அமைந்ததுவே
சிலம்பென்பேன்.

முத்தமிழும் முந்நாடும் முற்றுமுணர் நற்றறிஞர்
முப்பிரிவால் வீழ்ந்ததமிழ் நிலப்பரப்பை ஒருநாடாய்
ஒத்ததொரு ஒளிநிலமாய் ஒருகனவு கண்டதனால்
முப்பாகம் இழைத்திட்டு முந்நகரின் பெயரிட்டு
தப்பாது தமிழனை தானடியிற் சேர்ந்தபலன்
எந்நான்றும் போற்றுமோர் எழிலணியாய் ஆகியதே!

— வேறு —

பலருக்கும் மகிழ்வூட்டும் சிலப்பதிகாரம்
பாங்குடனே சாற்றுவது மூன்றும் கொள்கை;
நலமிக்க அரசியலில் நிறைவு காணல்
நசிக்குமதை தகைசான்ற அறத்தின் ஆற்றல்;
உரைசான்ற கற்புடைய பெண்ணின் பெருமை
உயர்ந்தோரும் ஏத்துவதாய் ஓங்கி நிற்கும்;
கரைகாணா ஊழ்வினைகள் படைகொள் விரைந்து
கலக்குவதை எவராலும் வெல்வது கடினம்

திருப்பம்

நீதிபல இவ்வாறு நிறைவாக வைத்தாலும்
நீதிக்கதை சொல்வதுபோல் நீண்டநேரம் நீட்டாமல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆதிபகவன் முதற்கொண்டு அந்தத்தின் அழிவுவரை
ஆரஅமர உட்கார்ந்து உபதேசம் ஊட்டாமல்

கற்பனையின் தேனூற்றிற் காவியத்தின் சுவைசொட்ட,
கற்றகல்வி மேன்மையினால் இனியதமிழ் மலராக,
வெற்றியுடன் அள்ளவள்ள வித்தகத்தின் விரிவாக
விளங்கியதாற் காவியமே போற்றுவதற்
குரியதாகும்.

(அதுமட்டுமா-காவியந்தான் எப்படிப்பட்ட காவியம்!)

கற்பரசி கண்ணகியின் தனிமைத் துன்பம்;
கோவலனைப் பிரிந்ததாலே கணிகை துயரம்;
பொற்கொல்லன் போதனையால் கோவலன் கொலைதான்!
போதாதோ பெண்ணுக்குக் கொள்ளவே கோபம்!
உற்றதிங்கு இச்செங்கோல் வளைந்த காலை
உயிர்விட்டான் மன்னவரும் ஆங்கே சோகம்!
மற்றுண்டு; பரவியதாம் மதுரைத் தீயே!...
மட்டற்ற சோகத்தால் வடித்த காதை.

சோகத்தால் காதைக்குச் சிறப்பென்று சொன்னாலும்
ஊகத்தால் யோசித்தால் நாம்கண்டோம் ஒருண்மை
ஆறாததுக்கத்தை ஆற்றுவதே நோக்காகச்
சிறுக ஆங்காங்கே செப்பியதோர் அறவுரைகள்,
உலகுய்ய ஊட்டியதோர் பலவுண்மை ஆறுதல்கள்
நிலவுமோர் நேரான காதைக்கு நற்பெருமை

முப்பிரிவால் விரிந்திட்ட முத்தமிழன் காவியத்தை
முக்காண்டம் முதலான பூம்புகாரும், மாமதுரை
வெல்வஞ்சி ஆகியவை விரிவாக உரைக்காது—
பூம்புகார்க் காண்டத்தில் புனைந்ததோர் காதையினை
உம்முன்னே குறுகியதோர் காலத்தில் உரைக்கின்றேன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாமதுரைக் காண்டத்தில் வாய்த்ததோர் சரிதையினை
நாமறியச் சிறுநேரம் வாயார வரைந்திடுவேன்
வெல்வஞ்சிக் காண்டத்தில் விரிந்தநீள் கதையெல்லாம்
நல்வழியில், நாழிகையில் நிறுத்திடுவேன், கேளுங்கள்!

பூம்புகார்

முரசியம்ப முருடதிர முறையெழுந்த திருமணமும்
தரமான கணிகையினால் தறிகெட்ட வாழ்வினையும்,
கற்பரசி நாயகியின் நிகரற்ற துன்பியலும்.
கானல்வரி தான்பாடக் காரிகையைக் கைவிட்டு,
நாயகனும் நாயகியின் மாசற்ற அன்பினாலே,
தாயகத்தைத் துறந்தேகித் தங்நகரம் தனைவிட்டு,
மனைவிதன் துணைகொண்டு மாமதுரை தானடைந்த
பகுதியினைப் பாங்காகப் பகர்வதுவே முதற்காண்டம்.

மதுரைக் காண்டம்

ஆச்சியர்தம் அகத்தினிலே அறுசுவைகள் அருந்தியபின்
இச்சையுடன் ஒருகையில் ஒருசிலம்பேந் தியவாறு
விற்பதிலே நோக்காக வீதிவழிச் செல்லுகையில்,
பொற்கொல்லன் புனைந்ததொரு போதனையின்
மயக்கத்தால்
கொற்றவனும் ஏவியபின் காதலனும் கொலைப்பட்டான்...

கற்பரசி உற்பாதம் பற்பலவாம் கண்டதனால்
அறிந்திட்டாள் தீதேதோ அவனுக்குக் கிட்டியதாய்...
பழிச்சொல்லோ கேட்டளவில் பத்தினிதான்
கொதித்திடவும்
வழக்குரைய மன்னவனின் அரசவையி னெதிர்வந்தாள்.
தீதறிந்தான் வேந்தனுமே னொந்தழிந்தான்; வேறென்ன?
நீள்மதுரைத் தீயிடையில் இரையாகி எரிந்ததெல்லாம்
மழையாகக் கொட்டிடுமே மாமதுரைக் காண்டத்தே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வஞ்சிக் காண்டம்

மலைவளமே காணுகையில், சேரமகா நாடதனில்
தலையான சிற்றரசன் செங்குட்டு வனைநோக்கிக்
குறவர்கள் தாம்கண்ட குறியதனைக் கூறிட்டார்.
அறவாழி மன்னவனும் அன்னவளின் உயர்வெண்ணி
மன்னுபனி இமயத்திற் கல்பெற்று, விரித்தசடை
நற்குடியாள் கங்கையினில் நீராட்டித் தென்னகத்தே
வஞ்சியினில் கல்நாட்டி வழிபட்ட வரலாற்றை
வஞ்சியெனும் காண்டத்து வளமாகக் கண்டிடலாம்.

பின்னுரை

சேரமன்னன் செங்குட்டுவன் கற்கோயில் வைத்தான்;
திறம்கொள் இளங்கோவோ நற்கலைக்கோயில்
செய்தான்.

சாதிசமயப் பூசலையும்; சாத்திரத்தின் பிரிவினையும்
காவியத்திற் கதையுரைக்கக் கருத்ததுவாய் உரைக்காது
செந்நெறியை உரமாக்கிச் சிலப்புருக்கித் தந்தார்.

அறம்நாடும் உளம்கொண்ட அருள்பெற்ற அடிகள்தாம்
சீலமிகு செந்தமிழின் கலைஞரெனச் சொல்லுவதோ?
ஞாலமுயர் நற்றவத்தின் முனிவரென உரைப்பதுவோ?
அழியாத பெருமைகொள் அற்புதக் கவியெனவோ?
செம்மைசால் மனப்பான்மை செப்புவதால் முடிந்திடுமோ?
யாதென்று புகழ்சொல்வோம்? எதையென்று
வாழ்த்திடுவோம்?

காதாலே கேட்டதுவும், வாயாலே உரைத்ததுவும்,
மனதாலே உணர்ந்ததுவும் அறிவாலே உயர்ந்ததுவும்
விண்ணடைக்கப் போதாத வித்தகத்தின் நற்சுவையை
மண்ணிடையே பகர்ந்திடுவோம் மானிடரே வாரீரோ!

(சிலப்பதிகார விழாக் கவியரங்கம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறுகதை-நாடகம்

Forwarded With Compliments From
THE DEPARTMENT OF CULTURE
GOVERNMENT OF INDIA.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்யாணம் பண்ணிக்க வயசு வேணுமா?

ஆ. நா. ஐயராமன்

பஞ்சுவுக்கு கல்யாணமாகி இரண்டு நாட்களாகிறது. உத்தமர் கோவிலில் கல்யாணம் நடந்தது. மணிக்கட்டை மஞ்சக்கயிறு இறுக்கியது; பட்டுக்கரை வேஷ்டியை தொங்கவிட்டுக் கட்டிக்கொண்டால் நடக்கும்பொழுது கால் முழியை கரையோரம் அறுத்தது. புது வேஷ்டி இடுப்பில் நிற்காமல் அவிழ்ந்து அவிழ்ந்து விழுந்தது.

நாற்பத்தெட்டு வயதில் செய்துகொண்ட கல்யாணம் இது!

இந்த இரண்டு நாட்களில், நெடுநாளைய பிரும்மச்சரிய வாழ்வின் பழக்கங்களை திரும்பத் திரும்ப மனதில் தோன்றுவதும், தனக்குக் கல்யாணமாகி விட்டது என்பது கண்ணைக்கட்டி காட்டில் விட்டதுபோல், ஒன்றுமே புரியாமலிருந்தது.

சில நேரங்களில் பிரமை பிடித்துப்போய் அப்படியே உட்கார்ந்து விடுவான்.

வாழ்வின் பெரும்பகுதி தனியாளாகவே கழித்து விட்டதால், கல்யாணமான இரண்டு நாட்களில் தன்னுடன் ஒரு பெண் ஜோடி சேர்ந்திருக்கிறுள் என்ற நினைவே இல்லாமலிருந்தது. கண்ணில் அவள் படும்பொழுதெல்லாம் 'ஆமாம், கல்யாணம் ஆகிவிட்டது' என்ற உண்மையைப் புலப்படுத்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

 Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"என்னமோ கல்யாணம் ஆச்சு" என்று சுவாரஸ்ய மின்றி சொல்லிக்கொண்டான்.

மூன்று வருஷங்களாக—நாற்பத்தைந்து வயதிலிருந்து—பஞ்சு தன் கல்யாணத்திற்கு எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள் கொஞ்சநஞ்சமல்ல. பேப்பரில் எவ்வளவு முறை விளம்பரம் செய்திருப்பான்! தெரிந்தவர்களிடம் சொன்ன பொழுது "இன்னும் கல்யாணம் ஆகலியா" என்று வியப்புடன் பார்க்கின்றனர்.

கல்யாணம் செய்துகொண்டே தீருவது என்ற உத்வேகம்! மும்முரமாகப் பெண் தேடத் தொடங்கினுன்.

கல்யாணமாகி விட்டது! அந்தக் கவலை விட்டது!

"முப்பத்தெட்டு வயது...!" பஞ்சுவுக்கு என்னவோ போலிருந்தது. பெண்ணின் வயது அவனை முள்ளாகக் குத்தியது. பின்னே பதினெட்டு வயதுப் பெண்ணு கிடைப்பாள்? ஏன், அவனுக்கும் நாற்பத்தெட்டு வயதாகிறதே!

கல்யாணம் ஆன சூடே தெரியவில்லை. வீட்டில் புடவைகள் பல நிறங்களில் தூளி ஆடின. "என்ன கல்யாணம் வேண்டிக் கிடக்கலே" பஞ்சு அலுத்துக் கொண்டான். அவசரப்பட்டு விட்டதாக நினைத்தான். இவ்வளவு நாட்கள் எப்படியோ தள்ளியாச்சு! பாக்கியிருக்கிற கொஞ்ச நாட்களுக்காக ஒரு கல்யாணமா? அதுவும் முப்பத்தெட்டு வயசுப் பெண்ணு?

எண்ணங்கள் மேகங்களைப் போல் சூழ்ந்தன. தொடக்கமும் முடிவுமில்லாமல, எதை எதையோ எண்ணி நேரத்தைக் கழித்தான்.

"காப்பி வச்சிருக்கேன்" என்ற குரல் அவனை உசுப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பியது. எதிலோ லயித்திருந்தவனை அதட்டி எழுப்பியது போல், திடுக்கிட்டுத் திரும்பினன்.

''மணி மூணாயிடுத்தா?''

அந்த வேளையில் காப்பி அமிர்தத்துக்கு சமானம் காப்பி குடித்ததும் சோம்பல் குறைந்தது.

காப்பி கொடுத்துவிட்டுப் போனவள் புடவைத் தலைப்பைப் பிடித்திழுத்து, கிசுகிசுமூட்டி சிரிக்கவைத்து, அவளுடன் ஓடிப்பிடித்து விளையாடும் வேகம் பஞ்சுவிடம் இல்லையே! அவனுடைய உணர்ச்சிகள் உறங்கிக் கிடக்கின்றனவோ!

பஞ்சு, அவளுடன் பேசி, அவள் உள்ளத்தை நாகுக்காக அறிந்து, அவளுக்குத் தன்னைப் பற்றி தெரிந்து கொள்ள சந்தர்ப்பமளித்து, இருவரும் ஒவ்வொருவருடைய குறைகளையும் நிறைகளையும் உணர்ந்து, புரிந்துகொண்டு, நிறைகளின் ஒத்துமையில் திருப்தியும், குறைகளை சமன் செய்வதில் பொறுமையும் பெற்று, மண வாழ்க்கையை இன்பகரமாக நடத்தவேண்டும்.

'அவள்...ஆமாம்......அலமேலு! அவள் முகத்தில் இளமை குடியிருந்த சுவடே தெரியவில்லை. முகத்தில் சதை கோடுகளுக்கிடையே அகப்பட்டுக் கொண்டு பிதுங்கியது.

அவனுடைய மாமி முப்பத்தெட்டு வயதில் பேரன் பேத்தி எடுத்து விட்டாள். பருமனான உடம்பில் மாமாவை அதிகாரம் செய்து கொண்டிருந்தாள். ஆனால் இவள் கல்யாணம் ஆவதற்கு முன்பே பாட்டி மாதிரி ஆகி விட்டாள். பேரன் பேத்தி எடுக்கும்வரை காத்திருப்பாளா?

கல்யாணத்திற்கு மாமா மாமி வராமல் போனது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பஞ்சுவிற்கு வருத்தந்தான். மாமா அவ்வளவு தூரம் சொன்னபொழுது, பஞ்சு கல்யாணம் செய்துகொள்ள மறுத்து விட்டான். அவனுக்கே கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று தோன்றியதும், மாமா மாமியிடம் சொல்வதற்கு வெட்கப்பட்டு தானே பெண் தேடிக் கொண்டான்.

அவன் கல்யாணத்திற்கு எண்ணிப் பத்து பேர் வந்திருந்தனர். எல்லாம் ஒரே அவசரம்! வைதிகர்கள் 'ஆச்சு ஆச்சு'னு அவசரப்படடனர். "ஸ்வாமிக்கு நமஸ்காரம் பண்ணிட்டு வரது' என்று அடிக்கடி சொன்னார்கள். மற்றபடி மனுஷாளுக்கு நமஸ்காரம் செய்யும்படி ஒருவரும் கல்யாணத்திற்கு வரவில்லை

பஞ்சுவுக்கு மனசிலே பெரிய குறை. ஒருத்தராவது வாய் நிறைய ஆசிர்வாதம் பண்ணவில்லை. பகவானுக்கு வாயா இருக்கு? நமஸ்காரம் பண்ணினா 'நன்னா இரு மகராஜனா" என்று சொல்லிடுவானா என்ன !

நாள் கழித்துக் கல்யாணம் செய்து கொண்டது பார்ப்போருக்கெல்லாம் பெரிதாகத் தோன்றியதோ? பஞ்சு தனக்குத்தான் கல்யாணம் செய்து கொண்டான்; மற்றவர்களுக்காக இல்லை. இருந்தாலும் நாலு பேர் கேட்டால் தான் எதுவும் திருப்தியாக இருக்கும்.

வாத்தியார் "அடடா! நான் வயசிலே ரொம்ப சின்னவன்னு! பெரியவாளுக்குப் பண்ணுங்கோ! பகவானுக்கு நமஸ்காரம் பண்ணினாலே போதும்!" என்று நகர்ந்து கொண்டார்.

பஞ்சுவுக்கு எரிச்சலாக வந்தது.

"எல்லாப் பயல்களுக்கும் பெரியவனா நான்? ஓ!"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பஞ்சுவுக்கு கோபமே வந்துவிட்டது. ''எல்லாரும் எனக்கு நமஸ்காரம் பண்ணுங்கடா, ஆசீர்வாதம் பண்றேன்'' என்று கத்தினல் தேவலாம் போலிருந்தது.

பாவம், அவளுக்கும் ஒருத்தருமில்லே. அவள் தம்பி தான் தலையெடுத்து அக்கா கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிருன். 'தேமேனு' தலையை குனிஞ்சுண்டு உட்கார்ந்திருந்தாள்.

'யாரோ தெரிஞ்சவாளாம், தாரைவாத்துக் கொடுக்கச் சம்மதித்து மனையிலே உட்கார்ந்திருந்த தம்பதி, அந்த அம்மா...அய்யோ...அவ நெளிஞ்ச நெளிசல், தண்ணிப் பாம்பை தரையிலே எடுத்துப் போட்டாப்பல. இந்த அழகிலே நாலு பிள்ளை பெத்தவளாம். இரண்டு பெண்களுக்குக் கல்யாணம் பண்ணி வைச்சவளாம். மடிசாறு கூட கட்டிக்கத் தெரியலே. மனையிலே உட்காந்திருந்தவ எத்தனை தடவை எழுந்துபோய் சரி பண்ணிண்டு வருவாளோ? நசுங்கின பித்தளை டப்ளர் மாதிரி முகம் வேறு கோணிக்கிறது. ஏன்டா கல்யாணம் செய்து கொள்ளப் போனேமென்ருகி விட்டது பஞ்சுவுக்கு.

எல்லாச் கல்யாணமும் ஒருநாளைக்குள் முடிந்து விட்டது. இனிமேல் ஒன்றும் பாக்கியில்லே. ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்குக்கூட அவகாசமின்றி, தனிமையில் வஸ்திராபரணம் செய்து கொள்ளும் கல்யாணமும் அன்றைக்கே! எல்லாக் காரியங்களும் அவசர அவசரமாக முடிந்தன. 'றெக்கை கட்டிண்டு பறந்தான்கள்.' அவதி அவதியா யார் வீட்டுக்கோ போயிட்டு ராவோடு ராவாகத் திரும்பி வந்தாப்பல...

மாமி வந்திருந்தால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்? மாமாவும் மாமியும் கடைசி நிமிஷத்தில் காலைவாரி விட்டனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாமிக்கு ஆனாலும் சின்ன வயசிலே கல்யாணம் ஆகி விட்டது. கல்யாணமான பிறகுதான் மாமி பெரியவளானாள். திரண்டுளிக் கல்யாணத்திற்கு பஞ்சுவும் போயிருந்தான். பஞ்சுவுக்கு அஞ்சோ ஆறோ வயசிருக்கும். மாமி 'இத்துனூண்டுக்கு' இருப்பா! மாமா கல்யாணத்தின்போது தான் என்ன கலாட்டா! ஒரே கும்மாளமாயிருந்தது! நாலு நாள் கல்யாணம். ஒவ்வொரு நாளைக்கும் நலங்கு, ஊஞ்சல் —நாலாம் நாள் ஊர்வலம். நலங்கின்போதுதான் என்ன ரகளை! என்ன கிண்டல் பாட்டு! ஊஞ்சலின்போது மாமி பின்னலையும் மாமா குடுமியையும் வாழை நாரினால் பஞ்சு ஒருவருக்கும் தெரியாமல் முடிச்சுப் போட்டு விட்டான். ஊஞ்சல் முடிந்து எழுந்தவுடன், மாமா காலலம்பத் திருப்பினார். மாமியும் பெண்கள் பக்கம் திரும்பினாள். மாமியின் பின்னல் மாமாவின் குடுமியை இழுக்க, இருவரும் அப்படியே சற்றுநேரம் நின்றபொழுது என்ன சிரிப்பு! என்ன கைதட்டல்.

மாமாவையும் மாமியையும் ஆசீர்வாதம் பண்ணும் பொழுது என்ன வேத கோஷம்! ஒவ்வொருத்தராக நமஸ்காரம் பண்ணி அவர்கள் கால் முட்டியே பேந்து பேச்சாம். எல்லோரும் அட்சதை போட்டு ஆசி கூறினர்.

கல்யாணம் கழிந்து ஐந்து நாட்கள் வரை காதில் மேள சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. மூக்கிலே சந்தனம் மணத்தது.

மாமாவுக்கும் மாமிக்கும் பஞ்சுதான் தூது செல்பவன். ஒரு தடவை தாத்தா பாட்டி கோவிலுக்குப் போயிருந்த சமயம். கிணற்றடியில் மாமி முகம் கழுவிக் கொண்டிருந்தாள். பஞ்சு மாமியிடம் தூது போனான். தண்ணீரை முகத்தில் வாரி வாரி யிறைத்துக் கொண்டிருந்தாள் மாமி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"என்ன கோபமாம்? மாமா கேட்டுண்டு வரச் சொன்னா?''

சோப்பு நுரையை வழித்தெறிந்து விட்டு, அரைக் கண்ணில் பார்த்தாள் மாமி.

''என்னது!'' என்றாள் மாமி காதில் விழாதது போல். 'புர்ர்ர்...புர்ர்ர்' என்று சொப்புத் தண்ணீரை வாயில் ஊற்றிக்கொண்டு கொப்பளித்தாள். முகத்தில் குழந்தைத் தனமும் விளையாட்டும் தவழ்ந்தன.

''என்ன கோபமாம்? மாமா கேட்டுண்டு வரச் சொன்னா.''

''முதல்ல ஒங்க மாமாவை குடுமியைச் சிரைச்சுப்புட்டு கிராப்பு வைச்சுக்கச் சொல்லுபோ.''

ஓடிப்போய் மாமாவிடம் இதைச் சொன்னான் பஞ்சு.

ஒருநாள் மாமா அடையாளமே தெரியாதபடி ஆற்றங் கரையில் ஸ்நானம் செய்துவிட்டு ஈரத்துணியுடன் திருடன் மாதிரி வீட்டிற்குள் நுழைந்தார். தாத்தாவும் பாட்டியும் பிரமித்து நின்றனர். மாமியின் முகத்தைப் பார்க்கணுமே! பெண்மையின் முதல் வெற்றி முரசு கொட்டியது முகத்தில். என்ன மகிழ்ச்சி!

மாமி கூடத்துள்ளே விட்டு வெளியே வரமாட்டாள். பகலில்கூட கூடத்துள் இருட்டிக் கிடக்கும். எல்லோருக்கும் முன்னதாக படுக்கையை விட்டு எழுந்து விடுவாள்.

தாத்தா பாட்டி பட்டாசாலையில் சிரித்து பேசிக்கொண்டிருக்கும் பொழுது, மாமி கலந்து கொள்ளவே மாட்டாள். கூடத்துள்ளே கதியென்று கிடப்பாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூடத்துள்ளுக்கு மாமா பூனை மாதிரி பதுங்கிப்போவது பஞ்சுவுக்குத் தெரிந்து விட்டது. மாமா சப்தமில்லாமல் மூச்சுக் காற்றால் குசு குசுத்தார். மாமி பேசுவது பஞ்சுவின் காதுகளில் விழுந்தது.

"கடுக்கன் எதுக்கு, தட்டான் மாதிரி! எனக்கு பிடிக்கலை எடுத்துடுங்கோ!"

என்ன ஆச்சரியம்! மாமா கடுக்கனை சுழட்டி பாட்டியிடம் கொடுத்து விட்டார். மாமியின் வார்த்தைக்கு அவ்வளவு மதிப்பா! மாமா எதுக்கு மாமி பேச்சை தட்டாமல் கேட்கிறார்?

மாமா, கிணற்றடி, மாட்டுக் கொட்டில் என்று சொல்லிக்கொண்டு சமையலறைப் பக்கம் வளைய வருவார். "தொள்ளைக்காது, தொள்ளைக்காது" என்று மாமா காதுக்குமட்டும் கேட்டுப்படி கேலி செய்தது பஞ்சுவுக்கும் கேட்டது.

மாமாவுக்கு எவ்வளவு கல்யாணம் நடந்தது. சாந்திக் கல்யாணம்—அதற்குத்தான் என்ன ஆர்ப்பாட்டம்!

சாயந்திரமே ஒருவருக்கும் தெரியாமல் அந்த பெரிய கட்டிலுக்கடியில் ஒளிந்து கொண்டான் பஞ்சு. "பஞ்சு எங்கே டீ, காணவே காணும்? அந்தப் பிள்ளை சாப்பிடக் கூட இல்லை." நாலு பக்கமும் தேடல்.

பஞ்சு வாயை திறக்காமல், மார்பு 'திக் திக்'கென்று அடித்துக் கொள்ள, கட்டிலுக்கடியில் ஒடுங்கிக் கிடந்தான்.

அந்த அறை வழிய கூட்டம்! சிலர் ஆசைக்கு பட்டு மெத்தையில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டனர். பஞ்சு சப்தமின்றி அடியில் கிடந்தான். ஒவ்வொருவராக வெளி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யேறிக் கொண்டிருந்தனர். மாமாவும் மாமியும் உள்ளே நுழைந்தனர். சாஸ்திரி உடன் வந்தார். என்ன கையாண்டி, வாசற்படியில் கூட்டம் மூண்டிக் கொண்டு நின்றது! 'நான் நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு பார்த்தனர்.

"எல்லாரும் வெளியே வாங்கோ" சாஸ்திரிகளின் கத்தல்.

"உள் தாப்பா நன்னுப் போட்டுக் கோடா அம்பி" சாஸ்திரிகள் கையாளச் சொல்லும் தந்திரம்.

"கட்டிலுக்கடியில் எவனுவது ஒளிஞ்சிருக்கானு பாருங் கடா" என்று தொந்தியைத் தூக்கிக் கொண்டு குனிந்தார் சாஸ்திரிகள்.

பஞ்சுவுக்கு மூச்சு நின்று விடும் போலிருந்தது. அந்தக் கழுகுக் கண்களின் பார்வையில் பஞ்சுவின் உருவம் தப்ப வில்லை.

"யார்ருல அது! வாடா வெளியே!"

பஞ்சுவுக்கு அவமானம் பிடுங்கித் தின்றது. காரியம் கெட்டு விட்டதே! ஒரே குத்தா குத்தினு என்ன? மாமாவும் மாமியும் பேசுவதைக் கேட்க வேண்டுமென்று எவ்வளவு ஆவலுடன் காத்திருந்தான்?

"எலே, பஞ்சுவா? அடப்போக்கிரி! ஓம் மருமாண்டா, வேற யாருமில்லே." என்று சாஸ்திரிகள் தொந்தி நலுங்கச் சிரித்துக் கொண்டே சொன்னார்.

குப்பற அடித்துக் கொண்டு ஓடும் எலிக்குட்டிபோல, பஞ்சு எடுத்தான் ஓட்டம். ஒருவர் கைக்கும் பிடிபடாமல் ஓடிவிட்டான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெகுநேரம் தாழ்ப்பாள் போட்டிருந்த கதவருகே பெண்கள் உட்கார்ந்து என்ன வெல்லாமோ பாடிக் கொண் டிருந்தனர்.

மாமியின் முகத்தைப் பார்க்கவே வெட்க மாயிருந்தது. கொஞ்ச நாட்கள் மாமியின் கண்களில் படாமலிருந்தான்.

தாத்தா பாட்டி இருந்த வரை, மாமி தன் குரலைஎழுப் பாமலே காரியங்களை கவனித்து வந்தாள். மாமி அடிக்கடி பஞ்சுவை குறும்பாகப் பார்க்கிறாளே! மாமி இப்பொழு தெல்லாம் மாமாவுடன் பட்டாசலையில் நின்று கொண்டு பேசுகிறாள். யாரும் பார்த்து விடப் போகிறார்களே என்று பயப்படுவதில்லை.

மாமா மாமிக்கு கல்யாணம் நடந்த வயசிலா பஞ்சு வுக்கு கல்யாணம் நடந்தது? அவர்களுக்கிருந்த காவல் பஞ்சு வுக்கு உண்டா? அவர்களுக்கிருந்த நிபந்தனைகள் பஞ்சுக்கு இருக்கிறதா? அவர்களுக்கிருந்த கட்டுக் கடங்கா உணர்ச்சி களும், நிலை கொள்ளா ஆசையும் உந்தலும், திருட்டுத்தன மாக ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளும் துடிப்பும், பஞ்சுவுக்கு இருக்கிறதா?

பஞ்சு காலேஜில் படித்துக் கொண்டிருந்த சமயம். மேலத்தெரு 'ரிடயர்டு' போஸ்டுமாஸ்டர் ரங்கனுதய்ய ருக்குக் கடைசிக் கல்யாணம் நடந்தது. ஒருத்தர் கூட அந்த கல்யாணத்திற்குப் போகவில்லை. அறுபத்தைந்து வயசில் அதிர்ஷ்டப்பிரைஸ் அடிச்சார். பொண்ணு அது! இருபது வயதிற்குள் அத்தனை அழகையும் அந்தக் கிழத் திற்கே அர்ப்பணிச்சுது.

கல்யாணமான பிறகு ரங்கனுதய்யர் நெஞ்சு விடைக்க நடந்தார். இருபத்தைந்து வயதல் கல்யாணம் செய்து கொண்டதுபோல், அவ்வளவு தைரியம்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாரையும் லட்சியம் பண்ணுவதில்லை.

பஞ்சுவுக்குப் பொறுக்கவில்லை. தனித்து அவரைக் கேட்டால்தான் அவனுக்கு திருப்தியாயிருக்கும் போலிருந்தது.

பஞ்சு துணிந்து ஒருநாள் அவரைக் கேட்டு விட்டான்.

"ஓய்! ஓமக்கு எதுக்குங்காணும் இந்த வயசிலே கல்யாணம், என்னைப் போல் பிருமமச்சாரிகளின் சௌகரியத்துக்கா."

ரங்கனுதய்யர் கத்தி ஊரைக் கூட்டி விடுவார் என்று எதிர்பார்த்தான் பஞ்சு!

"ஸ்டுபிட்! காலேஜு படிக்கிற பிள்ளை பேசற பேச்சா இது! 'மைன்ட் யூ,' நானும் ஒரு 'கிராஜுவேட்'தான்! ரொம்ப புத்திசாலித்தனமா பேசிட்டதா நெனைச்சுக்காதே. பிறத்தியாருடைய பர்சனல் மாட்டரைப் பற்றிக் கேடபது என்ன மட்டமான காரியம் தெரியுமா? காலேஜுலே படிச்சுட்டா மட்டும் ஆயிடுத்தா? பிரதர்! நானும் ஓன் வயசுலே இந்த மாதிரி எத்தனையோ பேர் கல்யாணம் பண்ணிண்டு பாத்திருக்கேன்! வாயைத் தொறந்திருப்பேனு? கொஞ்சங் கூட "மானர்ஸ்" கிடையாது."

'அடேயப்பா! எப்படி பேசி விட்டார்? என்ன தெம்பு! வார்த்தைகள் 'கணீர் கணீர்'னு வெங்கலக் கடையிலே யானை புகுந்த மாதிரி.

ரங்கனுதய்யர் தொண்ணூறு வயது தெம்பும் திடகாத்திரமா இருந்தாராம். அந்தப் பொண்ணும் இருபத்தைந்து வருஷம் தாம்பத்திய வாழ்க்கை நடத்தியது!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரங்கனுதய்யர் கல்யாணம் செய்து கொண்ட வயதிலே. இந்தக் காலத்து மனுஷன், உசிரோட இருக்கிறதே சந்தேகம்! தொண்ணூறு வயசு வரை ஜமாய்ச்சுப்புட்டாரே! அவர் நாலைந்து தடவையாவது கல்யாணம் பண்ணிக் கொண்டிருப்பர்! கொஞ்சமாவது சளைச்சாரா? பஞ்சுவுக்கு மட்டும் ஏன் சொரத்திலலாமலிருக்கிறது?

ரங்கனுதய்யர் ஒருவருடைய உபதேசத்துக்கோ, ஆறுதலுக்கோ, காத்திருக்கவில்லையே! தனக்கு மட்டும் ஏனிப்படி மந்திப்பாக இருக்கிறது?

இந்தப் புது உறவு ஒன்றும் மயக்கம் தருவதாக இல்லையே!

மாமா மாமி கல்யாணத்துக்கு வராமல் போனது, டஞ்சுவை நாதியில்லாமல் ஆக்கினது போலிருந்தது. 'புறப்பட்டு வருகிறோம்' என்று கடிதம் போட்டு விட்டு, இதுநாள் வரை ஒருவிதத் தகவலுமின்றி அழுத்தலாக இருந்தனர். உறவுக்காரர் இல்லாமல் இந்த புது உறவைத் தேடிக் கொண்டது அவனுக்குப் பாந்தமாக இல்லையோ!

"பஞ்சு..." யாரோ கூப்பிட்டது போலிருந்தது. வாரியடித்துக் கொண்டு எழுந்தான் பஞ்சு.

மாமியின் குரல்! "மாமி வந்துட்டாளா! வரட்டும் வரட்டும், வாங்குவாங்குனு வாங்கறேன்." மனதில் கறுவிக் கொண்டான்.

மனதில் கோபமும் சந்தோஷமும் பொங்கியது.

மாமி வந்தாள். 'மாமியா...மணையிலே உட்கார்ந்திருக்கிற பொண்ணு தோத்துப் போருப்பல, எப்படித்தான் வயசு ஏற ஏற அழகு வளர்ந்துண்டு போறதோ இவாளுக்கெல்லாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"பஞ்சு, கலியாணம் பண்ணிண்டையாடா!" மாமி சிரிக்கும் பொழுது, புஷ்பம் மலர்ந்ததுபோல்—அப்படி ஒரு மலர்ச்சி—அப்படி ஒரு பிரகாசம்!

"ஆமாம் பண்ணிண்டேன். நீங்கள்ளாம் வந்து நடத்தி வைச்சதுக்கு ரொம்ப சந்தோஷம்." என்று கோபம் குறையாமல் சொன்னான்.

"பஞ்சு நீ சொன்னா நம்ப மாட்டே! மாமாவுக்கு புறப்படற அன்னிக்கி 'ஹார்ட் அட்டாக்! ரொம்ப பயந்துபோயிட்டோம். நல்லவேளை, டாக்டர் 'மைல்ட்'னு சொன்னான், இருந்தாலும் ஜாக்ரதையா இருக்கணும்னான். வாங்கின டிக்கெட்டெல்லாம் 'கான்சல்' பண்ணித்து! மாமாதான் சொன்னா 'அடியே, நீ யாவது போயிட்டு வாடீ, கொழந்தை தனியா இருப்பன் டீ, இப்படி என்னைப் படுக்கையிலே தள்ளிப் பிடுத்தேன்னு வருத்தப்பட்டார்"

"கலியாணத்துக்கு இரண்டு நாள் முன்னாடி வர முடியலியாக்கும். வேடிக்கையாயிருக்கு!"

"இவன் பேசறதைப் பாரேன்! எங்கேருந்து எங்கே வரதுடா! கோட்டை, வாளாடியா! முத பஸ்ஸிலே வந்துட்டு மறு பஸ்ஸிலே திரும்பறதுக்கு? பம்பாய் எங்கிருக்கு, உத்தமர் கோவில் எங்கிருக்கு! அது கிடக்கட்டும், ஒன் ஆம்படையா எங்கேடா! டேய் படுவா. அவளை பூட்டி வச்சிருக்கியா, யாராவது தூக்கிண்டு பூடுவன்னு."

மாமி வந்ததும் பஞ்சுவுக்கு உற்சாகம் பெருகியது. மாமி எப்படி விகல்பமில்லாமல் பேசுகிறாள்?

அவள் வந்தாள். மாமி அவளை எவ்வளவு வாஞ்சையோடும், ஆர்வத்துடனும் பார்க்கிறாள்! அவள் பார்வையிலே அன்பு வழிகிறதே!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"யாருடியம்மா! எங்க பஞ்சு ஆம்படையாளா! அடி சக்கை! பஞ்சு, டேய், அடிச்சியே லக்கிசான்ஸ், பொண்ணு நன்னு யிருக்காடா" என்று குதூகலத்துடன் சொன்னாள்.

அவனும் அவளும் மாமியை நமஸ்கரித்தனர். மாமி வாய் நிறைய "நன்னு இரு. மகாராஜனு, பிள்ளை குட்டியை பெத்துண்டு சௌக்கியமா இருக்கணும்," என்று ஆசீர் வதித்தாள்.

பஞ்சுவுக்கு ஆகாசத்திலிருந்து தேவர்கள் மலர் மாரி பெய்வது போல், உடம்பெல்லாம் மயிர்க்கூச்சலெடுத்தது. தெய்வங்கள் மனிதவர்க்கம் எல்லோரும் மாமி ரூபத்தில் ஆசீர்வதிப்பதுபோல் தோன்றியது.

அவளை அணைத்துக் கொண்டாள் மாமி. "ஏண்டியம்மா, ஒனக்காகத்தான் எங்க பஞ்சு இத்தனை வருஷமா காத்துண்டிருந்தானு? டேய் பஞ்சு, திருட்டுப்பயலே, சொல்லட்டுமாடா, சொல்லு! சொல்லிடுவேன். ஏண்டியம்மா மாட்டுப் பெண்ணே! இவனைத் தெரியுமா ஒனக்கு கள்ளன் டீ இவன். ஆமாம் ஜாக்கிரதை" மாமி விஷமப் புன்னகை உதிர்த்தாள்.

மாமி கலகலவென்று சிரித்தாள். மாமியின் மனசிலே ஒண்ணுமே கிடையாதா?

"நாப்பத்தெட்டு வயசிலே கலியாணம் பண்ணின்டேனே, அதான் உங்களுக்கெல்லாம் இளப்பமாயிருந்திருக்கு! கல்யாணத்துக்கு வராமெ இருந்துட்டேள்."

"பாரேன் இவளை. அசடு மாதிரி பேசறதை! மாமா கிடந்த கிடையிலே யாருக்காவது வரத் தோணுமா? மாமாதான் 'இதைப் பத்தி அவனுக்கு ஒண்ணும் எழுத வேண்டாம் டீ'ன்னுர். ஏண்டா பஞ்சு கலியாணம் பண்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ணிக்க வயசு வேணுமா என்ன? எப்ப பண்ணிண்டா என்ன? கல்யாணம் கல்யாணந்தானே! தத்து பித்துனு ஏதாவது பேசாதேயேன்.''

பஞ்சுவுக்கு தன் உணர்ச்சி நரம்புகளை மாமி தன் பேச்சென்னும் விரல்களால் மீட்டி விட்டது போலிருந்தது. பஞ்சுவுக்கு எல்லாம் அழகாயிருந்தது. மனசு நிறைந்திருந்தது. அன்றிரவு, அடுத்த அறையில் மாமி தனியாகப் பாடிக் கொண்டிருந்தாள். அலமேலுவும் அவளும் தனியாக......

''கையைப் பிடித்திழுத்தால் கைவளை குலுங்குமே...''

அவன் காதில் அந்தப் பாட்டு விழுந்தது. கட்டிலுக் கடியில் ஒளிந்திருந்தவனை விரட்டியடித்தார்களே. அன்று இந்தப் பாட்டுத்தான் பாடியதாக நினைவு.

''கலியாணம் பண்ணிக்க வயசு வேணுமா என்ன! கல்யாணம் கல்யாணந்தான்.'' மாமி சொன்னது அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெறும் மனிதன்

எஸ். கிருஷ்ணமூர்த்தி

தெருவில் இரண்டு பேர் பேசிக்கொண்டு போனார்கள்: "அவனுக்கு என்ன! வாழ்க்கையில் வெற்றி அடைந்து விட்டான்!"

'வெற்றி' என்ற வார்த்தையைக் கேட்டதும் எனக்குச் சுந்தரத்தின் நினைவு வந்தது. நான் சுந்தரத்தைக் கடைசியாகப் பார்த்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அவரது நினைவு இன்னும் என் உள்ளத்தில் பசுமையாக இருக்கிறது. அந்தக் கடைசிச் சந்திப்பின்போது அவர் கூறிய வார்த்தைகள் இப்போதும் என் காதுகளில் ஒலிக்கின்றன: "வெற்றி புகழ். பெயர் எல்லாம் வேண்டியவைதாம், மிஸ்டர் மூர்த்தி. ஆனால் இவற்றை அடைய வேண்டும் என்ற வெறி மனிதத் தன்மையையே அழிக்க முற்படுமானால் அந்தப் புகழும் வெற்றியும் எனக்குத் தேவையில்லை. வெற்றியின் விளைவாக மனிதத் தன்மையை இழப்பதைவிட வெறும் மனிதனாக வாழ்வதே மேல்."

அப்போது நான் ஒரு பிரபல மருந்துக் கடையின் விற்பனை ஏஜண்டாக வேலை பார்த்து வந்தேன். ஊர் சுற்றும் தொழில். திருச்சி, ராமநாதபுரம், மதுரை ஜில்லாக்கள் என் தொகுதி. அப்போதெல்லாம் நான் அடிக்கடி திருமயம் வழியாகப் பிரயாணம் செய்வதுண்டு. திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்து செட்டிநாட்டுக்குப் போகும் வழியிலுள்ள சிறிய ஊர் திருமயம்.

திருமயம் பஸ் நிலையத்தில் ஒரு சிறு பெட்டிக் கடை வைத்திருந்தார் சுந்தரம். சோடா, கலர், இளநீர், பழம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெற்றிலை பாக்கு வியாபாரம். பஸ்ஸில் திருமயம் வழியாகப் போகும் போதெல்லாம் அவருடைய கடையில் வெற்றிலை பாக்கு பழம், இளநீர் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறேன். அவ்வாறுதான் எனக்குப் பழக்கமானார் சுந்தரம்

அவருக்கு வயசு அப்போது முப்பத்தைந்து இருக்கலாம். புன்சிரிப்புத் தவழும் முகம். அவர் எல்லாரையும் வரவேற்று உபசரிக்கும் அழகே தனி. ஆனால் அவரிடம் எனக்குக் கவர்ச்சி ஏற்பட்டதற்குக் காரணம் அவருடைய புன்சிரிப்புத் தவழும் முகமோ, விருந்தோம்பும் பண்போ மட்டும் அல்ல. நான் அவரிடம் ஓர் அசாதரணத் தன்மையைக் கண்டேன். அல்லது கண்டதாக எண்ணினேன். அவருடைய கண்களில் அறிவின் ஒளி மிளிர்ந்தது; அமைதி சுடர்விட்டுப் பிரகாசித்தது. வாழ்வின் அடிப்படையான தத்துவத்தை உணர்ந்துவிட்ட பாவம் அவரிடம் காணப்பட்டது. அவரிடம் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது என்று நம்பினேன். அவருடைய நடத்தையும் என் எண்ணத்தை உறுதிப்படுத்தியது.

சாதாரணப் பெட்டிக் கடைக்காரராக அவர் இல்லை. நான் அவரைப் பார்க்கும்போதெல்லாம் அவர் கையில் ஒரு புத்தகம் இருந்தது. புத்தகம் என்றால் 'மாடி வீட்டு மங்கை', 'கனவில்வந்த காரிகை', 'பாழ்வீட்டில் படுகொலை', 'பருவக் கோளாறு' போன்ற தலைப்புள்ள புத்தகங்களோ அல்லது மஞ்சள் பத்திரிகைகளோ அல்ல. தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் உள்ள உயர்ந்த இலக்கிய நூல்கள், கவிதைகள், தத்துவ ஆராய்ச்சி நூல்கள் இவற்றையெல்லாம் அவர் அனுபவித்துப் படிப்பதை நான் கவனித்து வியப்பில் ஆழ்ந்தேன். பட்டதாரியான நானே கேள்விப்படாத பல எழுத்தாளர்களின் நூல்களையும் கேள்விப்பட்டும் படிக்கத் துணியாத நூல்களையும் அவர் [illegible] ஆசரியத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துக்கு அளவில்லை. ஆங்கில மொழிபெயர்ப்பில் மார்க்கஸ் அரேலியஸின் 'சிந்தனைகள்', ஆஸ்திரிய எழுத்தாளர் ஸ்டெபான் ஸ்வைக்கின் 'நேற்றைய உலகம்', பிராண்ட்ஸ் காப்காவின் 'விசாரணை', நான் பல தடவை படிக்க முயன்றும் முடியாமல் கைவிட்ட டி. எஸ். எலியட்டின் 'பாழ் நிலம்', இன்னும் எமர்சன், டால்ஸ்டாய், தோரோ சங்கரர் இவர்களுடைய தத்துவ நூல்கள் இவற்றை அவர் வாசித்துக் கொண்டிருப்பதை நான் பல தடவை பார்த்திருக்கிறேன். எப்போதும் அவர் கையில் ஏதாவது ஒரு புத்தகம் இருக்கும். இத்தகைய அபூர்வக் கடைக்காரரிடம் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டதில் வியப்பு என்ன?

திருமயம் வழியே பல தடவை செல்ல நேர்ந்தாலும் அங்கேயே தங்கும் வாய்ப்பு எனக்கு வெகுகாலம் வரை நேரவில்லை. சுந்தரத்துடன் என் பரிச்சயமும் மேலெழுந்தவாரியாகவே இருந்தது.

ஒரு தடவை எனக்குப் புதுக்கோட்டையிலிருந்து அவசரமாக மதுரை போக வேண்டியிருந்தது. மதுரைக்குச் செல்லும் எக்ஸ்பிரஸ் பஸ்ஸைத் தவறவிட்டு விட்டேன். உடனே திருமயம் சென்றால் அங்கிருந்து மதுரைக்கு வேறு பஸ் கிடைக்கும் என்று கேள்வியுற்றுத் திருமயத்துக்குப் பஸ்ஸில் ஏறினேன். யந்திரக் கோளாறு காரணமாகப் பஸ் திருமயம் சேரச் சற்றுத் தாமதமாகிவிட்டது. அதற்குள் மதுரை பஸ் போய்விட்டிருந்தது.

இருட்டும் நேரம். நான் திருமயம் பஸ் ஸ்டாண்டில் கைகளைப் பிசைந்துகொண்டு நின்றேன். எனக்கு அவ்வூர் புதிது. தங்கும் விடுதிகள் உள்ள அளவுக்குப் பெரிய ஊர் அல்ல அது. ஊருக்குள் போய்த் திண்டாடுவதைவிடப் பஸ் ஸ்டாண்டிலேயே பெஞ்சியின் மேல் படுத்துக்கொண்டு இரவைக் கழித்துவிடுவது மேல் என்று தீர்மானித்தேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுத்துக் கொள்ளுமுன் பழம் சாப்பிடலாமென்று சுந்தரத்தின் கடைக்குப் போனேன்.

''வாருங்கள், வாருங்கள்! எங்கே போகிறுற் போல்?'' என்று வரவேற்ருர் சுந்தரம்.

நான் என் கதையைச் சொன்னேன்.

''பஸ்ஸைக் கோட்டை விட்டுவிட்டீர்களா? காலனை வெல்ல முயலும் நீங்கள் காலத்தை வெல்ல முடியவில்லை பார்த்தீர்களா?'' என்று சொல்லி அவர் சிரித்தார். ''பரவாயில்லை. என்னுடன் வாருங்கள். இரவுப் பொழுதை என் வீட்டில் கழித்துவிட்டு நாளைக் காலையில் மதுரைப் பஸ்ஸைப் பிடிக்கலாம்'' என்ருர்.

நான் சுபாவமாகவே பெரிய சங்கோசி. என்னுல் பிறருக்கு இடைஞ்சல் ஏற்படுவது எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது. ஆகையால், ''இல்லை, இல்லை, நான் இங்கேயே படுத்துக் கொண்டுவிடுகிறேன்'' என்றேன்.

''அதெல்லாம் இல்லை. நீங்கள் என்னுடன் வரத்தான் வேண்டும். இந்த மார்கழி மாதக் குளிரில் உங்களை இப்படித் திறந்த வெளியில் படுத்துக்கொள்ள விடமாட்டேன்'' என்ருர் அந்த விடாக்கண்டர்.

''என்னுல் எதற்கு ஸார் உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் அநாவசியமாகச் சிரமம்?'' என்று மறுத்தேன்.

''சிரமம் ஒன்றும் இல்லை. என் குடும்பம் என்பது நானும் என் தாயுந்தான். ஒரு விருந்தினரை வரவேற்று உபசரிக்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறதே என்று சந்தோஷப் படுகிறேன். தயங்காமல் வாருங்கள் ஸார்.''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவருடைய அன்பழைப்பை என்னால் தட்ட முடியவில்லை. அவர் கடையைப் பூட்டிக்கொண்டு கிளம்பினார். நானும் என் கைப்பையைக் தூக்கிக்கொண்டு அவருடன் போனேன்.

சந்நிதித் தெருவில் சாதாரணமான பழைய கால வீடு அது. சுந்தரம் என்னை முன்னறையில் உட்கார வைத்து விட்டு உள்ளே போனார்.

அந்த அறைதான் சுந்தரத்தின் படிப்பறை, படுக்கையறை போலும். அங்கிருந்தவை ஒரு கட்டில், ஒரு நாற்காலி ஒரு மேஜை, ஒரு பெரிய புத்தக அலமாரி இவைதாம். அலமாரி நிறைய புத்தகங்கள்; இலக்கியம், தத்துவம், மொழியாராய்ச்சி முதலிய பல விஷயங்களைப் பற்றிய பல மொழி நூல்கள்.

சுந்தரத்தைப் பற்றி ஓரளவு அறிந்திருந்த எனக்கு அங்கிருந்த புத்தகங்கள் வியப்பளிக்கவில்லை. ஆனால் அங்கே போட்டோக் கலை பற்றிய ஏராளமான புத்தகங்களைக் காண எனக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. போட்டோ துறையில் சுந்தரத்துக்கு அவ்வளவு ஈடுபாடு உண்டு என்று எனக்கு அதுவரையில் தெரியாது.

அவர் உள்ளே வந்ததும் அவரைக் கேட்டேன்: "உங்களுக்குப் போட்டோத் துறையிலும் ஆர்வம் உண்டா?"

"போட்டோத் துறைதான் ஒரு காலத்தில் என் இலட்சியம், வெறி, மூச்சு எல்லாம். பூர்வாசிரமத்தில் நான் போட்டோக்காரனாக்கும்!"

"அப்படியா? அந்தத் தொழிலை விட்டா பெட்டிக் கடை வைத்தீர்கள்?" நான் வியப்புடன் வினவினேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஆமாம், நான் போட்டோக்காரனாகத்தான் வாழ்க்கையை ஆரம்பித்தேன். அந்தத் தொழிலை விடும்போது 'மார்னிங் ஸ்டார்' பத்திரிகையின் பிரதமப் போட்டோக்காரனாக இருந்தேன்."

'மார்னிங் ஸ்டார்' பத்திரிகையின் பிரதமப் போட்டோக்காரர்! மிகப் புகழ்பெற்ற ஆங்கிலத் தினசரி அல்லவா 'மார்னிங் ஸ்டார்'? அதன் பிரதமப் போட்டோக்காரருக்குக் குறைந்தது ஆயிரம் ரூபாயாவது சம்பளம் இருக்குமே அந்த வேலை எங்கே, இந்த பெட்டிக் கடை எங்கே? இவர் ஏன் அந்த நல்ல வேலையை விட்டார்? அதை விட்டபிறகும் இவரால் எப்படி இவ்வளவு சந்தோஷமாக இருக்க முடிகிறது? இவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா என்ன?

என் மனம் ஏதேதோ எண்ணத் தொடங்கியது.

என் எண்ணங்களின் போக்கைப் புரிந்துகொண்டவர்போல் சுந்தரம் மெல்லச் சிரித்தார். "என்ன ஸார், நல்ல பைத்தியத்திடம் வந்து மாட்டிக்கொண்டு விட்டோமோ என்று யோசிக்கிறீர்களா?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை." அசடு வழியப் பதில் சொன்னேன்; ஆனால் நீங்கள் நல்ல வருமானமும் நல்ல வாய்ப்புக்களும் உள்ள வேலையை விட்டு இந்தக் கிராமத்தில் பெட்டிக்கடை வைத்துக்கொண்டிருப்பது எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. உங்களுக்கு ஆட்சேபம் இல்லை என்றால் முழுக் கதையையும் கேட்க விரும்புகிறேன்."

"முதலில் சாப்பிடுவோம். பிறகு எல்லாம் சாவகாசமாகச் சொல்லுகிறேன்.—அரியலூர் ரெயில் விபத்து ஞாபகம் இருக்கிறதா உங்களுக்கு?"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''பேஷாக!''

''அந்த விபத்துப் பற்றிய போட்டோக்களுக்காக அகில உலகப் போட்டோக் கலைஞர்கள் சங்கத்தால் பாராட்டப்பெற்று அந்த ஆண்டின் சிறந்த போட்டோக் காரருக்காக உலகப் பரிசையும் பெற்றாரே ஓர் இந்தியர், நினைவு வருகிறதா?''

அந்த நினைவு மின்னல்போல் என் நினைவுத் திரையில் பளிச்சிட்டது. அந்தப் போட்டோக்கள் நம் நாட்டில் மட்டுமின்றி வேறு நாடுகளிலும் பெருத்த பாராட்டுக்களுடன் வெளியாயின. அரியலூர் விபத்தில் சிக்குண்ட நூற்றுக்கணக்கான மக்களின் பலதிறப்பட்ட உணர்ச்சிகளையும் வேதனைகளையும் தெள்ளென எடுத்துக்காட்டின அவை. அந்தப் போட்டோக்கள் எழுத்தாளனின் எழுத்துக்கும் ஓவியனின் சித்திரத்துக்கும் அப்பாற்பட்ட உணர்ச்சிக் குவியல்களின் கருவூலமாகத் திகழ்ந்தன. மேல் நாட்டு விமரிசகர் ஒருவர் அவற்றை 'வெறும் போட்டோக்கள் அல்ல, உயிர்க்காவியங்கள்' என்று வர்ணித்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகும் இவ்விஷயம் என் நினைவில் இருந்ததற்குக் காரணம், அந்த ஆண்டு உலகிலேயே சிறந்த போட்டோக்காரருக்கான பரிசு முதல் முதலாக ஓர் இந்தியருக்குக் கிடைத்ததுதான்.

''அந்தப் போட்டோக்காரன் நான்தான்'' என்றார் சுந்தரம்.

சுந்தரத்தின் வாழ்க்கையில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது என்ற நம்பிக்கை உறுதியாகிவிட்டது. உலகப் பரிசுபெற்ற போட்டோக்காரர் குக்கிராமத்துப் பெட்டிக் கடைக்காரராக மாறிய, விந்தைக் கதையைக் கேட்க எனக்கு அளவில்லாத ஆவல் ஏற்பட்டது. சாப்பாட்டிலேயே எனக்கு மனம் செல்லவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாப்பாட்டை முடித்துக்கொண்டு முன்னறையில் போய் உட்கார்ந்தோம். நான் கதையைக் கேட்கக் காதைத் தீட்டிக்கொண்டேன்.

யாரோ கதவைத் தட்டினார்கள்.

சுந்தரம் போய்க் கதவைத் திறந்தார். "யார்? ராமுவா? சேகருமா வந்திருக்கிறானா? பாடத்தை நாளைக்கு வைத்துக்கொள்வோமா? இன்று ஒரு விருந்தினர் வந்திருக்கிறார்."

"சரி ஸார்" என்று சொல்லி, வந்தவர்கள் போய்விட்டார்கள்.

திரும்பி வந்து கட்டிலில் உட்கார்ந்த சுந்தரம் சொன்னார்: "இவர்கள் காரைக்குடிக் காலேஜில் பி. ஏ. வாசிக்கிறார்கள். என்னிடம் 'மேகஸந்தேசம்' படிக்கிறார்கள். எனக்கும் நல்ல பொழுதுபோக்கு."

பிறகு அவர் கதையை ஆரம்பித்தார்—

இதுதான் என் சொந்த ஊர். என் ஆரம்ப வாழ்க்கையில் குறிப்பிடத்தக்கது ஒன்றும் இல்லை. நான் படிப்பில் சுமார்தான். அதில் அதிக அக்கறையும் இல்லை. பரீட்சையில் ஏதோ தேர்ச்சிபெறும் அளவுக்குப் படிப்பேன். அவ்வளவுதான். ஆனால் பெரிய மனிதனாக வேண்டும். பெயரும் புகழும் சம்பாதிக்க வேண்டும் என்ற தெளிவில்லாத, ஆனால் தீவிரமான, ஆசை மட்டும் இருந்தது. எப்படிப் பெரிய மனிதனாவது என்பது பற்றி நிச்சயமான திட்டம் ஒன்றும் என்னிடம் இல்லை நன்றாகப் படித்தால் பெரியவேலை பார்க்கலாம், நிறையப் பணம் சம்பாதிக்கலாம், பெரிய மனிதனாகலாம் என்றெல்லாம் என் பெற்றோர் அடிக்கடி சொல்வார்கள். ஆனால் எனக்கு என்னவோ படிப்பில் எவ்வித ஆர்வமும் ஏற்படவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நான் எஸ். எஸ். எல். சி. படிக்கும்போது என் மாமா எனக்கு ஒரு காமிரா வாங்கித்தந்தார். அதைக் கொண்டு பொழுதுபோக்காகப் படங்கள் எடுக்க ஆரம்பித்தேன்.

நாள் ஆகஆகப் போட்டோக் கலையில் எனக்குப் பற்று ஏற்பட்டது. போட்டோ சம்பந்தமான நூல்களையும் பத்திரிகைகளையும் வாங்கிப் படிக்க ஆரம்பித்தேன். போட்டோக் கலையின் நுணுக்கமான அம்சங்களைக் கற்றுக்கொண்டு. தரமான போட்டோக்கள் எடுக்க முயன்றேன். நான் பள்ளியில் வாசித்துக்கொண்டிருந்த போதே என்னுடைய பல போட்டோக்கள் போட்டிகளில் பரிசு பெற்றுப் பத்திரிகைகளில் பிரசுரமாயின. எனக்குப் படிப்பில் இருந்த கொஞ்ச நஞ்சம் அக்கறையும் இப்போது போய்விட்டது. இதன் விளைவாகப் பரீட்சையைக் கோட்டை விட்டுவிட்டேன். எவ்வளவு முயன்றும் என் போட்டோ பைத்தியத்தை மாற்ற முடியாத என் தந்தை என்னை 'நீ எக்கேடாவது கெட்டுப் போ!' என்று என் போக்கிலேயே விட்டுவிட்டார்.

அவர் மட்டமாகக் கருதிய போட்டோத் தொழில் மூலமாகவே நான் வெற்றி காண முடியும் என்பதை அவருக்கு நிரூபிக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் நான் சென்னைக்கு ரெயிலேறினேன். அங்கு ஒரு போட்டோ ஸ்டூடியோவில் வேலைக்கு அமர்ந்து என் ஓய்வு நேரங்களில் போட்டோக் கலை பற்றிய புத்தகங்களை நிறையப் படித்தேன். புதிய புதிய முறைகளையும் கோணங்களையும் ஆராய்ச்சி செய்து போட்டோக்கள் எடுத்தேன். விடுமுறை நாட்களில் காமிராவும் கையுமாகத் தெருத் தெருவாக அலைந்தேன். என் போட்டோக்கள் பல பத்திரிகைகளில் பிரசுரமாயின. அவற்றை மக்கள் ரசித்துப் பாராட்டினார்கள். 'மார்னிங் ஸ்டார்' பத்திரிகை என்னை வலிய அழைத்து எனக்குப் போட்டோக் கலைஞர் வேலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடுத்தது. அப்போது எனக்கு வயசு இருபதுதான் இருக்கும்.

செய்திப் போட்டோக்கள் மூலம் புகழின் உச்சத்தை அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது எனக்கு. என் கனவுகளும் நினைவுகளும் போட்டோக்களையே பற்றி நின்றன. செய்தி முக்கியத்துவம் பெறக்கூடிய போட்டோக்கள் கிடைக்க எங்கெங்கு வாய்ப்பு இருக்குமென்று தோன்றியதோ அங்கெல்லாம் ஊணுறக்கம் இன்றி அலைந்தேன். என் உழைப்பு வீணாகவில்லை. நான் 'மார்னிங் ஸ்டார்' ல் சேர்ந்த மூன்று ஆண்டுகளிலேயே அதன் தலைமைப் போட்டோக்காரனாக நியமனம் பெற்றேன். சம்பளம் ஆயிரம் ரூபாய். இருபத்து மூன்றும் வயசிலேயே ஆயிரம் ரூபாய் சம்பாதிப்பதுபற்றி எனக்கு அபாரப் பெருமை. கர்வம் தலைக்கு ஏற ஏற, என் புகழ் வெறியும் அதிகரித்துக்கொண்டே வந்தது. இன்னும் புகழ் பெற வேண்டும், இந்தியா முழுவதும் உலகம் முழுவதும் என்னைப் பாராட்ட வேண்டும் என்ற உத்வேகம் என்னை எப்போதும் தூண்டிக்கொண்டே இருந்தது. 'புகழ் புகழ்' என்று ஜபம் செய்துகொண்டே காமிராவும் கையுமாக ஊரை வலம் வந்தேன்.

இந்தச் சமயத்தில் என் தந்தையிடமிருந்து கடிதம் வந்தது. என் திருமணத்தை உடனே நடத்தத் தீர்மானித்திருப்பதாயும், என்னை உடனேவரச் சொல்லியும் அவர் எழுதியிருந்தார். மணப்பெண் கமலா எங்கள் தெருப் பெண்தான். எங்கள் இருவர் குடும்பங்களும் பல தலைமுறைகளாக நண்பர்கள் எங்களுக்கு நினைவு தெரிந்த நாள்முதலே நானும் கமலாவும் கணவன் மனைவி என்பது நிச்சயமாகியிருந்தது.

என் தந்தை எனக்கு இன்னொரு வேலையும் தந்திருந்தார். கமலா கல்லூரி விடுமுறையைக் கழிக்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டில்லியில் இருந்த தன் மாமா வீட்டுக்குப் போயிருந்தாள். அவள் மறு வாரம் திரும்பி வரப்போவதாயும், அவளை ஸெண்டிரல் ஸ்டேஷனில் சந்தித்து என்னுடனே அழைத்து வரும்படியும் எழுதியிருந்தார். இந்தக் காரியம் செய்ய எனக்குக் கசக்குமா? ஊருக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தேன்.

நான் கமலாவைப் பார்த்துப் பல ஆண்டுகள் ஆகி விட்டன. நான் அவளைக் கடைசியாகப் பார்த்தது சுமார் ஐந்தாண்டுகளுக்கு முன். நான் வேலை தேடச் சென்னைக்குப் புறப்பட்டபோது, இடையில் எப்போதாவது திருமயம் போனாலும் அவளை அங்கே சந்திக்க முடியவில்லை. ஏனென்றால் அவள் அப்போது திருச்சியில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். அவள் இப்போது எப்படி இருப்பாள் என்ற கற்பனையில் லயித்துத் திளைத்தது என் மனம். அவள் நல்ல அழகி. இப்போது பருவத்துக்கு ஏற்ப அவளுடைய அழகு நன்றாக மலர்ந்திருக்கும். அழகுடன், கல்லூரிப் பெண்களுக்கு உரிய நயமும் நாகரிகமும் அவளுடைய நடையுடை பாவனைகளில் மெருகிட்டு ஒளிரும்.

அவளைப் பற்றிய இன்பக் கனவுகளில் ஆழ்ந்திருந்த எனக்கு ஒரு வாரப் பொழுது கழிந்ததே தெரியவில்லை.

குறிப்பிட்ட நாளில் ரெயில் வர ஒரு மணி முன்பாகவே ஸ்டேஷனுக்குப் போய்க் காத்திருந்தேன். கமலா இறங்கினாள் ரெயிலிலிருந்து. கமலாதானா அவள்! அந்தி வேளையில் தெருவில் நடக்கும்போது ஓரத்தில் வளர்ந்திருக்கும் மல்லிகைப் புதரிலிருந்து வரும் அடர்ந்த மணம் திடீரென்று நம்மைச் சூழும்போது நாம் ஒரு கணம் ஒன்றும் புரியாமல் திக்கித்துப் போய் நிற்கிறோமே, அதுபோல நானும் சில விநாடிகள் கமலாவைப் பார்த்தவாறே திகைத்து நின்றேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனக்குக் கற்பனைத் திறனும் இல்லை; நான் காதல் கவிதைகளும் படித்ததில்லை. ஆகையால் என் முன் அன்று நின்றிருந்த அழகை அதற்கு முன் கற்பனையில்கூடப் பார்த்ததில்லை. முன்பெல்லாம் கவுன் அணிந்துகொண்டு "பாண்டி ஆட வருகிறாயா, சுந்தரம்?" என்று கேட்டுக்கொண்டு ஓடிவரும் சிறுமிதானா இவள்? உயர்நிலைப்பள்ளியில் படிக்கும்போது பாவாடை, தாவணி போட்டுக்கொண்டு "சுந்தரம், இந்தக் கணக்கைக் கொஞ்சம் சொல்லிக் கொடேன்" என்று கெஞ்சிக்கொண்டு வரும் குமரிதானா இவள்? அவளுக்கு முன் பேச வாயடைத்து நின்றேன்.

கெட்டிக்காரியான கமலாவுக்கு என் திகைப்பின் காரணம் புரியாமல் இல்லை. என் தடுமாற்றத்தைக் கவனித்து அவளே நிலைமையைச் சமாளிக்க முன்வந்தாள்: "நீ......நீங்கள் சௌக்கியமா?"

இந்த 'நீ...நீங்கள்...' தடுமாற்றத்தில் அவளுடைய கன்னங்கள் குங்குமமாய்ச் சிவந்தன. அவளுடைய தடுமாற்றத்தை அணுஅணுவாக ரசித்துச் சுவைத்தேன்

பக்கத்தில் ஓர் ஓட்டலில் நாங்கள் இருவரும் சாப்பாட்டை முடித்துக்கொண்டு எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போனோம். எங்களுடைய பரஸ்பரக் கூச்சத்தைத் தவிர்க்கும் பொருட்டு நான் கமலாவைத் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்ஸில் பெண்கள் வண்டியில் ஏற்றிவிட்டுப் பக்கத்துப் பெட்டியில் நான் ஏறிக்கொண்டேன்.

சாதாரணமாக ரெயிலில் பிரயாணம் செய்யும்போது ரெயில் கிளம்பியதுமே எனக்குத் தூக்கம் வந்துவிடும். ரெயிலின் 'கடகடாச்' சப்தம் எனக்குத் தாலாட்டுப் போன்றது. ஆனால் அன்றிரவு வெகு நேரம் வரை எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. காரணம் உங்களுக்குப் புரிந்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருக்கும். என் மனம் எனக்கு மனைவியாகப்போகும் கமலா வைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கும்போது எனக்குத் தூக்கம் எப்படி வரும்? விவரிக்க இயலாத மகிழ்ச்சியும் பரபரப்பும் என் உள்ளத்தை நிறைத்துவிட்டன. அறிவும் அழகும் பண்பும் நிறைந்த பெண்ணை அடையப்போகிறேம் என்ற உற்சாகத்தில் எனக்குத் தலைகால் புரியவில்லை.

வருங்காலத்தின் இன்ப நினைவுகளில் ஆழ்ந்திருந்த நான் என்னை மறந்து எப்போது தூங்கிப் போனேனோ தெரியவில்லை. திடீரென்று வானமே மேலே இடிந்து விழுவது போன்ற சப்தம்! பூமியே வெடித்து எல்லாரையும் அதல பாதாளத்தில் தள்ளிவிடுவது போன்ற உணர்ச்சி! பிரளயம் வந்துவிட்டதா என்ன?

எதிலோ மோதி எங்கேயோ தள்ளப்பட்டேன் நான். கண்களைத் திறந்தேன். எங்கும் கும்மிருட்டு. எங்கு இருக்கிறேன் என்பதே முதலில் எனக்குப் புரியவில்லை கடைசியாக, ரெயிலில் ஏறினேம் என்ற நினைவு வரவே சில நிமிஷங்கள் ஆயின. நடந்தது எதுவாக இருந்தாலும் அது கனவல்ல என்பதை உறுதிப்படுத்துவதுபோல் ஒரு பேரிரைச்சல் வந்து என் காதுகளைத் தாக்கியது; ஆண், பெண், குழந்தைகள் எல்லாருமாகச் சேர்ந்து எழுப்பிய கூக்குரல். திகைப்பு, வலி, அதிர்ச்சி ஆகிய பல்வேறு உணர்ச்சிகளைத் தாங்கி வந்தது அந்த இரைச்சல்.

நான் தரையில் விழுந்து கிடந்தேன். நல்ல வேளையாக எனக்கு அதிக அடியில்லை. கீழ்ப் படுக்கையில் படுத்திருந்த நான் ரெயில் சரிந்தபோது அந்த அதிர்ச்சியில் வெளியே வந்து விழுந்துவிட்டேன் போலிருக்கிறது. என் பெட்டியும் என் அருகிலேயே விழுந்து கிடந்தது.

எழுந்து உட்கார்ந்து நான் பெட்டியைப் பார்த்தேன். அதில் தான் என் போட்டோக் கருவிகள் இருந்தன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொஞ்ச தூரத்தில் ரெயில் பெட்டிகள் ஒன்ருேடு ஒன்று மோதிப் பிணைனிக் குவியல் குவியலாக நொறுங்கிக் கிடந்தன. அவற்றில் சிக்கித் திணறிக் கொண்டிருந்தார்கள் நூற்றுக்கணக்கான மக்கள்.

என்னுள்ளே எழுந்த செய்திப்படக்காரன் தள்ளி எழுந்தான். உள்ளத்தை உருக்கும் ஒரு சோக சம்பவத்தைச் சித்திரிக்க எவ்வளவு அருமையான வாய்ப்பு! ஆயிரம் ஆயிரம் மனித உணர்ச்சிகள், சொல்லுக்கும் எழுத்துக்கும் அப்பாற்பட்ட வேதனைகள் என் காமிராவுக்காகக் காத்துக் கிடந்தன.

நான் பெட்டியைத் திறந்து போட்டோக் கருவிகளை எடுத்துப் பொருத்தினேன். அட போது நான் நானுக இல்லை. புகழும் பெயரும் அடைய வேண்டும் என்ற வெறியால் உந்தப்பட்ட யந்திரமாக இயங்கினேன். பிளாஷ் பல்பின் வெளிச்சத்தின் முன்னே விரிந்த சோகக் காட்சிகளைக் காமிரா தன்னுள்ளே பொறித்துக்கொண்டது. எந்தப் பக்கத்திலிருந்து எடுத்தால், உணர்ச்சிக் களஞ்சியமான போட்டோக்கள் எடுக்கலாம் என்பதை என் மனத்தின் ஒரு பக்கம் சிந்தித்துக் கொண்டிருக்க, மற்றொரு பகுதி என் போட்டோக்கள் பிரசுரமாகும்போது பத்திரிகை உலகில் ஏற்படப் போகும் பரபரப்பையும் அதன் மூலம் எனக்குக் கிடைக்கப் போகும் புகழையும் கணக்குப் போட்டு மகிழ்ந்துகொண்டிருந்தது. வேறு எதைப்பற்றியும் சிந்திக்க எனக்கு நேரம் இல்லை

"சுந்தரம்!...சுந்தரம்...! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?"

"எவ்வளவோ ஆண், பெண், குழந்தைகளின் அலறலும் முனகலும் சேர்ந்த அந்தப் பேரிரைச்சலில் அந்த ஒரு குரல் மட்டும் என் நினைவில் வந்து தாக்கியது. ஆச்சரியந்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தான். 'இதென்ன பழகிய குரலாக இருக்கிறதே! நம்மை யார் கூப்பிடுகிறுர்கள்?' என்று ஒரு கணம் திகைத்தேன்.

மறுகணம் என் உடல் பயத்தால் சிலிர்த்தது; என் ரத்தம் பனிக்கட்டியாய் உறைந்தது. ஐயையோ! கமலா அல்லவா அது? அவளும் என்னுடன் ரெயிலில் வந்தாளே! நான் குரல் வந்த திசையில் ஓடினேன்.

இருளும் இரும்பும் மரமும் மனிதனும் கலந்து பிணைந்திருந்த அந்தக் குவியலில் காமிராவின் பிளாஷ் வெளிச்சத்தின் உதவி கொண்டு கமலாவைத் தேடுவது சுலபமாக இல்லை. நொறுங்கிக் கிடந்த ஒரு ரெயில் பெட்டியின் அடியிலிருந்து உள்ளம் பதற, கைகள் நடுங்க நான் கடைசியில் வெளிக்கொணர முடிந்தது கமலாவை அல்ல; அவளுடைய உடலை!

என் கால்கள் பஞ்சாய்த் தொய்ந்தன. என்னைச் சுற்றிலும் ஏற்கெனவே பரவியிருந்த இருள் திடீரென்று அதிகரித்து என்னைத் தாக்கியது. அவ்வளவுதான்; நான் நினைவிழந்தேன். நான் கண்விழித்தபோது திருச்சி ஆஸ்பத்திரியில் இருந்தேன். என் பக்கத்தில் எங்கள் பத்திரிகையின் நிருபர் உட்கார்ந்திருந்தார். விபத்துப்பற்றிக் கேட்டதும் விபத்து நிகழ்ந்த இடத்துக்கு ஓடி வந்தவர் அங்கே நான் நினைவிழந்து கிடந்ததைக்கண்டு திருச்சிக்குக்கொண்டு வந்து என்னை ஆஸ்பத்திரியில் சேர்த்தாராம். என் பெற்றோருக்கும் அவர் செய்தி அனுப்பியிருந்தார்.

அதிகம் பேசும் நிலையில் நான் இல்லை. எப்படியோ உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு கேட்டேன்: "காமிரா எங்கே?"

"அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள், சுந்தரம்." ஒரு பெரிய காரியத்தைச் சாதித்துவிட்ட பெருமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொனிக்க அவர் பதில் சொன்னார்: "போட்டோக்களை டெவலப் செய்து உடனே நம்பிக்கையான ஆள்மூலம் விமானத்தில் அனுப்பிவிட்டேன். உங்கள் காமிரா என்னிடம் இருக்கிறது. உங்கள் போட்டோக்கள் ரொம்பப் பிரமாதம் போங்கள்! அவை நம் பத்திரிகையில் வெளியாவதனால் நம் பத்திரிகைக்கு எவ்வளவு மதிப்பு உண்டாகப் போகிறது தெரியுமா?"—இன்னும் ஏதேதோ சொல்லிக் கொண்டே போனார் அவர். "இத்தனை பெரிய விபத்துக்கு இடையிலும் நீங்கள் கடமையை மறக்கவில்லை. உங்கள் பொறுப்புணர்ச்சியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். உயிருக்கு ஆபத்தான நிலையில்கூட நீங்கள் உங்கள் தொழிலைச் செய்திருக்கிறீர்கள். பத்திரிகை உலகம் உங்களுக்குக் கடன்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு உலகத்திலேயே மிகச் சிறந்த செய்திப்படத்துக்கான பரிசு உங்களுக்குத்தான். சந்தேகமே இல்லை!"

அவர் சொன்னபடி நடக்கத்தான் நடந்தது. திருமயத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த எனக்கு, என் போட்டோக்கள் பத்திரிகையுலகில் விளைவித்த பரபரப்பைப் பற்றிய தகவல் வந்தது. நாடெங்கும் உள்ள பத்திரிகையாளர் சங்கங்களும், போட்டோக் கலைஞர்களின் சங்கங்களும் என் திறமையையும் கடமையுணர்ச்சியையும் பாராட்டித் தீர்மானங்களை நிறைவேற்றின. அகில உலகப் போட்டோக் கண்காட்சியில் என் போட்டோக்களைப் போற்றாதவர் இல்லை. அவை எல்லா நாட்டுப் பத்திரிகைகளிலும் 'உணர்ச்சிக் காவியங்கள்' என்ற தலைப்புடன் பிரசுரமாயின. அந்த ஆண்டின் சிறந்த போட்டோக்காரனாக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். 'மார்னிங் ஸ்டார்' பத்திரிகை என்னை வெகுவாகப் பாராட்டியதுடன் சம்பளத்தையும் உயர்த்தியது. அவருடைய பரிவுக்கும் பாராட்டுக்கும் நன்றி தெரிவித்து 'மார்னிங் ஸ்டார்' பத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரிகையின் அதிபருக்குக் கடிதம் எழுதினேன். கூடவே என் ராஜீநாமாக் கடிதத்தையும் அனுப்பினேன்.

"ராஜீநாமாவா!" நான் திடுக்கிட்டுக் கேட்டேன்.

"ஆம்." அமைதியாகப் பதில் சொன்னார் சுந்தரம். "புகழின் உச்சியை அடைந்த நான், தொழிலில் வெற்றியைக் கைப்பற்றிய நான், திடீரென்று தொழிலை விடுவானேன் என்று தோன்றுகிறது அல்லவா உங்களுக்கு? எனக்கு ஏதாவது பைத்தியம் பிடித்துவிட்டதோ என்ற சந்தேகங்கூட உங்களுக்கு எழலாம். விபத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியாலோ, அல்லது மனைவியாக இருந்த கமலாவை இழந்த துக்கத்தாலோ என் மனம் பேதலித்து விட்டதோ என்றுதான் என் தந்தையே நினைத்தார். 'போனது போகட்டும்; வேறொரு நல்ல அழகிய பெண்ணை உனக்குக் கல்யாணம் செய்து வைக்கிறேன். அசட்டுத்தனமாக நல்ல வேலையைவிட்டுவிடாதே, என்றெல்லாம் அவர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனால் நான்தான் வேலையை விடுவதில் பிடிவாதமாக இருந்தேன். ஆனால் என் முடிவின் காரணத்தை மட்டும் ஒருவருக்கும் தெரிவிக்கவில்லை. ஏனென்றால் நான் சொல்லியிருந்தாலும் ஒருவருக்கும் அது விளங்கியிருக்காது. விளங்கியிருந்தாலும் அவர்கள் என் முடிவை ஆமோதித்திருப்பார்களா என்பது சந்தேகந்தான்.

"ஆனால் ஒன்று: நான் செய்த முடிவு சரியானதுதான் என்பதுபற்றி எனக்குக் கொஞ்சமும் சந்தேகம் இல்லை. ஆகையால்தான் நான் அந்த முடிவுக்காக வருந்தவில்லை.

'விபத்துக்குப் பிறகு திருச்சி ஆஸ்பத்திரியில் படுத்துக் கொண்டிருந்தபோதும் என் உள்ளத்துக்குள்ளே புயலாகக் கொந்தளித்துக் கொண்டிருந்த எண்ணங்களை என்னால் முடிந்தவரை உங்களுக்கு விளக்குகிறேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"விபத்துக்குப் பிறகு எனக்குச் சிந்திக்க நிறைய நேரம் கிடைத்தது. அப்போது நான் ஓர் உண்மையைக் கண்டுபிடித்தேன். என்னை வெட்கித் தலைகுனியச் செய்த பயங்கர உண்மை அது!

"நூற்றுக்கணக்கான மக்கள் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த அந்தக் காரிருளில், அவர்களுடைய ஒரு முகமான வேதனைக் குரல் மூலம் தானே அழுதுகொண்டிருந்த அந்தச் சோகமயமான இரவில், நான் காமிராவைத் தூக்கிக்கொண்டு அலைந்ததற்குத் காரணம் என்னுடைய அசாதாரணக் கடமையுணர்ச்சியோ, கலையுணர்ச்சியோ அல்ல. நான் பெயரும் புகழும் அடைந்து பெரிய மனிதனாக வேண்டும். எல்லாரும் என்னைப் பாராட்ட வேண்டும் என்ற ஆசை-வெறி-தான் என்னை அப்போது செயற்படத் தூண்டியது. சாவுக்கும் வாழ்வுக்குமிடையே கிடந்து தத்தளித்துக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான மனித உடல்களை அலட்சியமாகத் தாண்டிக்கொண்டு போய் நான் என் போட்டோக்களுக்கு ஏற்ற சரியான கோணங்களைத் தேடிக்கொண்டிருந்தபோது அவ்விடத்திலிருந்து கிளம்பி வானத்தை நிரப்பிய வேதனைக் குரலொலிகள் என் மனத்தைத் தொடவில்லை.

"விபத்து நிகழ்ந்த இடத்தில் எழுந்த பல்வேறு ஒலிகளிடையே கமலாவின் குரல் மட்டும் என் காதில் விழுந்ததற்குக் காரணம், கமலா என்னுடையவள் என்ற உணர்வாக இருக்கலாம். கமலாவைக் காப்பாற்ற ஓடிய நான் என் உடைமையைக் காப்பாற்றத்தான் ஓடினேன்; ஆபத்தில் அகப்பட்ட ஒரு மனித உயிரைக் காப்பாற்ற ஓடவில்லை. ஆனால் கமலாவின் உயிரற்ற சடலத்தைக் கண்டதும் என்னுள்ளே உறங்கிக் கிடந்த 'மனிதன்' உயிர் பெற்றுவிட்டான். அக்கணமே அங்கெழுந்த வேதனைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குரல்கள் என் மனத்தில் அழுந்தவே, நான் அந்த அதிர்ச்சியில் நினைவிழந்தேன்.

'அந்த ரெயில் விபத்துக்கு நான் ஒரு விதத்தில் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்குப் பெயரும் புகழும் தேடித்தந்ததற்காக அல்ல; என்னுள்ளேயே மறைந்து கிடந்த ஓர் ஆபத்தை எனக்கு உணர்த்தியதற்காக. நாகரிகமான உடையணிந்து, கௌரவமான மனிதனாக உலகில் நடமாடும் நான் என் சொந்த நலனுக்காக, இயற்கையான மனிதனுக்கு ஏற்பட்ட பண்பையும் கடமைகளையும் மறந்து மிருகமாக ஆகமுடியும் என்பதை அப்போது அறிந்து கொண்டேன்! அன்று முதல் என்னிடம் குடியிருந்த இந்த மிருகத்தனத்தை, அரக்கத்தனத்தை ஒழிப்பதே என் கடமையாயிற்று. ஆசைக்கு இடம் கொடுத்ததனால்தானே அந்த அரக்கன் வலிவுபெற்றான்? ஆகையால் இனி ஆசைக்கு இடம் கொடுப்பதில்லை என்று தீர்மானித்தேன். அந்தத் தீர்மானத்தின் விளைவுதான் என் ராஜிநாமா.

"மறுவாரமே நான் இங்கே பஸ் ஸ்டாண்டில் பெட்டிக் கடை வைத்துவிட்டேன். வாழ்க்கையை நடத்த ஓரளவு பொருள் வேண்டும் அல்லவா? என மாத வருமானம் அதிகம் இல்லைதான்; ஆயினும் என் சிறு தேவைகளுக்கு அது போதும். எல்லாவற்றுக்கும் மேலே நான் மனிதனாக வாழ்கிறேன் என்ற திருப்தி இருக்கிறது. நான் வெறும் மனிதன். எனக்கு இந்த நிலையே போதும்!"

சுந்தரம் தம்மை 'வெறும் மனிதன்' என்று சொல்லிக் கொண்டார். எனக்கு என்னவோ அவரை அப்படி நினைக்கத் தோன்றவில்லை. புகழை விரும்புவது குறை யென்றால், மில்டன் சொல்லுவதுபோல், அது மிகப் பெரியோரிடமும் காணப்படும் குறைதான். அந்த ஆசைக்கு அடிமைப்படுவது மனித இயற்கைதான். அந்த ஆசையையும் உதறித் தள்ளத் துணிந்த சுந்தரத்தை வெறும் மனிதனாகக் கொள்வது பொருந்துமா?

— கலைமகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பனிமலராள்

வேங்கடலட்சுமி

வானவெளியில் முழுமதி மலர்ந்து, தண்மையை அள்ளிப் பொழியும் மனோகரமான இரவு. அன்று வஸந்தத் திருவிழாவின் கடைசி நாள். தில்லி மாநகரில் வதியும் மக்கள் இரவு வந்துவிட்டதை லட்சியமே செய்யாமல் மனம் நிறைந்த குதூகலத்துடன் கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். எங்கு நோக்கினும் இசைக் கருவிகள் எழுப்பும் இனிமையான நாதமும், கலகலவென்ற காற்சிலம்புகளின் ஒலியும, சிரிப்பும் விளையாட்டுமாக நகர் முற்றும் களிப்பில் மூழ்கிக் கிடந்தது. பகல் முழுதும் வர்ண நீரையும் வாசப் பொடிகளையும் ஒருவர் மீதொருவர் வீசிக் குதூகலித்த மக்கள், கதிரவன் மறைந்ததும் தீபங்களேற்றி வைத்து, வித விதமான வர்ண மத்தாப்புக்களைக் கொளுத்தி மகிழ்ந்தனர்.

மொகலாய சாம்ராஜ்யத்தின் ஒளியும் கீர்த்தியும் உச்ச நிலையிலிருந்த தருணம் அது. சாம்ராட் அக்பரின் ஆட்சியில் மதபேதமின்றி இந்துக்களும் முகம்மதியர்களும் ஒன்றுபட்டு வாழ்ந்திருந்த உன்னத சகாப்தம் அது.

அரண்மனை முழுதும் விசித்திரமான தீபங்கள் ஒளி வீசின. அந்தப்புரத்தில் அலங்காரமான உடையணிந்த அழகிகள் பலர் கலகலவென்று பேச்சும் சிரிப்புமாய் வளைய வந்தனர்.

அக்பர் சக்கரவர்த்தியின் பட்டமகிஷியான ஜோதிபாய் அம்பர தேசத்தின் இளவரசி. ராஜா மான்சிங்கின் அருமைச் சகோதரி பட்டமகிஷியான நாள் அன்று. யமுனைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கரையிலிருந்த பவானி மாதாவின் ஆலயத்தில் விசேஷ பூஜைக்கும் அலங்காரங்களுக்கும் ஏற்பாடாகியிருந்தது.

பூஜையெல்லாம் முடிந்து யாவரும் போன பின்பு, கடைசியாகக் கிளம்பினாள் அரசி ஜோதிபாய். அவளுடைய உத்தரவுப்படி, உடன்வந்த அடிமைப் பெண்களெல்லாம் முன்னதாகவே கிளம்பி அரண்மனைக்குச் சென்றுவிட்டனர்.

திவ்யாபரண பூஷிதையாய்க் கையில் வீரவாள் ஏந்தி நின்ற அன்னை பவானியின் சிலையெதிரே வணங்கிவிட்டுக் கோயிலின் பின்புறத்தை யடைந்தாள் சக்கரவர்த்தியின் பட்டமகிஷி.

அங்கே ஒரு விநாடி நின்று பார்த்தாள். பளிச்சென்று வீசிய நிலவு வெளிச்சத்தில் மிகச் சமீபத்திலேயே கரை யோரமாக ஒதுக்கப்பட்டிருந்த படகொன்றைக் கண்டாள்.

மகிழ்ச்சியுடன் வேகமாய் நடந்து படகையடைந்தாள்.

"ஜஹாம்பனா! நெடுநேரமாகக் காத்திருக்கிறீர்களா?" என்று கேட்டபடியே படகில் ஏறிக்கொள்ள எத்தனித்தாள்.

"இல்லையில்லை, சற்று முன்புதான் வந்தேன்" என்று பதிலளித்த அக்பர் பாதுஷா, அவளுடைய கையைப் பற்றிப் படகிலேற்றிக் கொண்டார். நேர்த்தியாக அலங்கரிக்கப் பட்டிருந்த அவ்வழகிய உல்லாசப் படகில் மகமல் ஆசனம் ஒன்றில் உட்கார்ந்தாள் அரசி. கரையோரமாகப் படகைப் பிணைத்து விட்டிருந்த சங்கிலியைக் கழற்றிவிட்டுத் துடுப்பைக் கையிலெடுத்தார் சக்கரவர்த்தி. அவரை வியப்புடன் நோக்கிய அரசி, "ஜஹாம்பனா! படகுக்காரன் இல்லையா?—தாங்களா படகைச் செலுத்தப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிரிப்புப் பொங்கிய முகத்துடன் அவளை நோக்கிய சக்கரவர்த்தி, "என்னுடைய மகாராணி பேகத்துக்காக இந்தப் படகை நானே செலுத்துவது என்ன அதிசயம்? என் வாழ்க்கைப் படகையே சீராகச் செலுத்தும் படகோட்டியல்லவா நீ?" என்று வேடிக்கை பண்ணியபடியே துடுப்பைக் கையிலெடுத்துப் படகைச் செலுத்தலானார்.

அரசிக்கும் சிரிப்பு வந்துவிட்டது. 'களுக்'கென்று நகைத்தாள்.

ஒரு வினாடி கழித்து மீண்டும் பேசினார் பாதுஷா.

"மகாராணி! நீ செல்லும் இடம் இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கும்?"

"மிகச் சமீபத்திலேயே யிருக்கிறது, ஜஹாம்பனா! கரையோரமாகவே அரை நாழிகை போனால் மருதாணி வேலியமைந்த மலர்வனம் ஒன்றிருக்கிறது. அதற்குப் பக்கத்தில் ஒரு சிறிய குன்று...அதற்குப் பின்னாலிருக்கிறது நான் சொன்ன மண்டபம். அந்தப் பெரியவரும் பெண்ணும் அங்கேதான் இருக்கிறார்கள்...ஜஹாம்பனா!......உண்மையிலேயே நான் சொல்லுகிறேன்......அந்தப் பெண்ணைப் போலத் திவ்ய சுந்தர ரூபிணியை நான் கற்பனையில்கூடக் கண்டதில்லை...அவளுடைய தேன்பிழியும் திவ்ய சாரீரமோ, ...நம்மைப் புலனுக்கெட்டாத ஓர் அபூர்வ உலகத்துக்கே கொண்டுபோய் விடுகிறது. அதை வர்ணிக்க ஒருவராலும் முடியாது!"

பொங்கி யெழுந்த உணர்ச்சி வேகத்தில் தழதழத்த குரலிற் பேசினாள் அரசி.

பாதுஷா ஒன்றும் பேசாமல் மௌனமாகப் படகைச் செலுத்தினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெள்ளித் தகடுபோல் மின்னித் தகதகத்தது யமுனையின் அகன்ற நீர் பரப்பு. நீல வானில் பூச்சொரிந்தது வெண்ணிலவு. ஒய்யாரமான ராஜஹம்சமொன்று நீந்திச் செல்வதுபோல கம்பீரமாக நீரில் மிதந்து சென்றது அவர்கள் அமர்ந்திருந்த படகு.

2

மலர் வனத்தின் புஷ்பக் குவியல்களிலிருந்து பரிமளத்தை யேந்திப் பரப்பிய தென்றலினூடே லேசாக மிதந்து வந்தது அந்த மதுர கானம்,

''நந்தகேலால் மதுர பன்ஸி பஜாதா ஹை''

பாதுஷாவின் உடலெல்லாம் புல்லரித்தது. துடுப்பு கையிலிருந்து நழுவியது. திரும்பிப் பார்த்தார். விழிகளில் பனிபடர அடித்த சிலையாய் உட்கார்ந்திருந்தாள் அரசி.

சர்ரென்ற ஓசையுடன் படகு கரையோரம் ஒதுங்கியது. இப்பொழுது இன்னும் தெளிவாகக் கேட்டது அத் திவ்விய கானம்.

''கா யிமேவா காயி மிஸ்ரி காயிமக்கன் காயி ஹை''

''ஐயோ! என்ன உருக்கம்? என்ன இனிமை?'' என்று அதிசயித்த சக்கரவர்த்தி படகைக் கரையிலிருந்த மர வேருடன் பிணைத்துவிட்டிறங்கினர். அரசியின் கையைப் பற்றிக் கரையில் இறங்கினர்.

எதிரே நின்றது ஒரு சிறிய குன்று. பால் நிலவின் பளிச்சென்ற ஒளியில் வழியறிந்து வேகமாய் நடந்தாள் அரசி. தொடர்ந்து சென்முர் பாதுஷா. குன்றைச் சுற்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

றிக் கொண்டு இருவரும் மலர்வனத்துள் நுழைந்தனர். உடனேயே எதிர்ப்பட்டது பழைய மண்டபமொன்று. அங்கிருந்துதான் தெளிவாய்க் கேட்டது, உள்ளந்தொட்டு உருக்கிய அவ்வின்ப கானம்.

"நந்தகேலால் மதுரபன்ஸி பஜாதா ஹை"

"ஜஹாம்பனு!......இங்கேதான்; உள்ளே வாருங்கள்" என்றபடியே உள்ளே நுழைந்தாள் அம்பர ராஜபுத்திரி. உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சிகளையெல்லாம் பிழிந்தெடுத்த அந்தப் பேரின்ப நாதத்தில் தன்னையே இழந்துவிட்ட பாதுஷா, அவள் பின்னாலேயே மண்டபத்தில் நுழைந்தார்.

மண்டபத்தின் ஓரமாகச் சிறிய மரப் பீடமொன்று. அப்பீடத்தின் மீது குழலூதும் பாவனையில் அமைந்த அழகு சிந்தும் கண்ணன் சிலையொன்று. திருத்துழாய் மாலை பூண்டு, பொன் மஞ்சள் பீதாம்பரமுடுத்து, மலர் விழிகளில் மகிழ்ச்சி துள்ள, நின்றான் அம் மாயவன்.

பக்கத்தில் விளக்கொன்று சுடர்விட்டெரிந்து அம் மண்டபத்தை ஒளி மயமாக்கியது. பீடத்தின் பக்கலில் சிறு ஓலைத் தட்டொன்றில் இரண்டொரு பழங்களும், கற்கண்டுக் கட்டியும், வாதாமி இலையில் வெண்ணை உருண்டையும் தென்பட்டன.

எதிரே விரிக்கப்பட்டிருந்த நார்ப் பாயின் மீது உட்கார்ந்திருந்தார் மிகவும் வயதான முதியவரொருவர். வெண்பனி போன்ற சிகையும் தாடியும் அவருடைய வயோதிகத்தை எடுத்துக் காட்டின. ஒளியற்ற அவர் விழிகள் சூன்யத்தில் நிலைத்திருக்க, கையிலிருந்த பழைய தம்பூராவை மீட்டியபடியே நடுங்கும் குரலில் பாடிக்கொண்டிருந்தார். அவரருகே அமர்ந்திருந்த அழகுப் பிம்பமான பெண்ணின் குரல் உடன் சேர்ந்து மதுர மோகன கீதமாக ஒலித்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாதுஷா தமது கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டார். "ஆம்! ஆம்! மகாராணி பேகம் கூறியது முற்றிலும் உண்மை. மானிடப் பெண்ணுக்கு இவ்வளவு சௌந்தர்யம் எங்கிருந்து வரும்? உதயத்தில் பனி ரேகைப் படலத்தினடுவே, வானத்தினின்று இறங்கி வந்த தெய்வ மங்கையைப் போலன்றோ விளங்குகிறாள்!...அப்புறம், இந்தக் கானம்,... ஆகா! கேட்கக் கேட்கத் திகட்டவில்லையே!"

அப்படியே ஓய்ந்து நின்ற சக்கரவர்த்தியின் கரத்தைப் பற்றியபடியே உள்ளே அழைத்துச் சென்றாள் அரசி...

கானம் சட்டென்று நின்றது.

பெரியவர் தனது ஒளியற்ற விழிகளை அவர்கள் பக்கம் திருப்பினார்.

"பிரபா!...யார் வந்திருப்பது?"

அந்த அழகி ஆச்சர்யத்துடன் திரும்பிப் பார்த்தாள்... பனி மலரொத்த அவள் முகம் அரசியைக் கண்டதும் மலர்ந்தது.

"தாங்களா?...மகாராணி பேகம்!" என்று மதுரமாகக் கேட்டபடியே எழுந்து நின்றவள், அரசியின் பக்கத்திலிருந்த பாதுஷாவைக் கண்டதும் ஒரு கணம் பயத்தினால் விதிர்த்து விட்டாள்.

"குழந்தாய்!...பிரபா!...உன்னுடைய சங்கீதம் என்னை இங்கு இழுப்பது போலவே பாதுஷாவையும் வசீகரித்தது. பயப்படாதே...அற்புதமான உன்னுடைய இசையை நான் கேட்டு ஆனந்திப்பதால் என் உள்ளம் திருப்தியடையவில்லை...அரசரும் கேட்டு மகிழ வேண்டுமென்ற ஆசையால் அவரை அழைத்து வந்தேன்" என்ற பேகத்தின் புகழுரை அவ்வழகியின் முகத்தில் சிவப்பேற்றியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"தாத்தா!...பாதுஷாவும் மகாராணி பேகமும் வந்திருக்கிறார்கள்" என்று பெரியவரின் காதில் மெதுவாகத் தெரிவித்தாள்.

மலர்ந்த முகத்துடன். "...மகாராணி அடிக்கடி பிரபாவின் பாட்டைக் கேட்க இங்கு வருவதுண்டு... இன்று சக்கரவர்த்தியும் வந்திருப்பது பற்றி மிகவும் மகிழ்ச்சி... பிரபா! அவர்களை உட்காரச் சொல்லிவிட்டுத் தொடர்ந்து கானத்தை முடி..." என்றபடியே மீண்டும் கையிலிருந்த தம்புராவை மீட்டத் தொடங்கினார் பெரியவர். அந்த நார்ப்பாயின்மீது பெரியவரின் பின்னால் அமர்ந்தார் பாதுஷா. அவர் உள்ளம் இனமறியாத ஓர் இன்பப் போதையில் திளைத்துக்கொண்டிருந்தது. கண்ணன் சிலையெதிரே அமர்ந்த அரசியோ. கண்களை இறுக மூடி அந்த நாதத் தேனைப்பருகத் தன்னைத் தயாராக்கிக்கொண்டாள்.

பிரபாவின் மதுர கண்டம் தம்புராவுடன் இழைந்தது. அடுத்த கணம், அவ்விடத்தில் அலையலையாய் எழும்பியது அதிமாதுர்யமான, தேன் பிழிந்த திவ்ய கானம்.

"சூரசியாம் மதனமோகன் சரணபரனுத தாஸ ஹை.
நந்தகேலால் மதுரபன்ஸி பஜாதா ஹை"

தெய்வக் குழந்தையான அந்தச் சியாமள மனமோகனக் கண்ணனிடம், உள்ளத்தைத் திறந்து பல வகை உணர்ச்சிகளை வெளியிடும் அற்புதமான கீதம் அது. கூட்டில் அடைபட்டு வாடும் பறவை, விடுதலையை வேண்டிக் கதறுவதுபோலும், வாழ்க்கைப் பள்ளத்திற் சிக்கி வெளிப்படத் தெரியாமல் திகைக்கும் ஜீவன், உய்யும் மார்க்கத்தை வேண்டிப் புலம்புவது போலவும் பார்வையற்ற அந்தகன், ஒளியை வேண்டி ஓலமிடுவது போலவும், பல வாறான உணர்ச்சிகளை உள்ளத்தில் எழுப்பியது அத்தெய்வ கீதம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எதிரே நின்ற கண்ணனின் சிலையில் விழிகளைப் பதித்த படியே தன்னையும் உலகையும் மறந்து பண் இசைத்தாள் பிரபா. அரசியின் மூடியிருந்த விழிக்கடைகளிலிருந்து கண்ணீர் பெருகியோடியது. உடல் இவ்வுலகைவிட்டு வேறெங்கோ சஞ்சரிப்பது போன்ற பிரமையுண்டாயிற்று.

பாதுஷாவோ, தம்மை மறந்த பரவச நிலையில் இருந்தார். அவர் செவி வழியே புகுந்து, உடலிலும் உள்ளத்திலும் நிறைந்து இணையறியாத இன்பலோக மொன்றிற்கு அவரை அனுயாசமாய் இழுத்துச் சென்ற அந்த மாயா மதுர கீதத்தின் சக்தியை வியந்து, அசைவற்று உட்கார்ந்திருந்தார்.

நேரம் சென்றதே தெரியவில்லை. நீல விசும்பின் மத்தியில் ஏறிவிட்ட பூரண சந்திரன், கீழே தன்னுடைய தண்ணொளியில் மயங்கிக் கிடந்த உலகைப் பார்த்து நகைத்துக் கொண்டிருந்தான்.

விசுக்கென்று நின்றது கீதம். சக்ரவர்த்தி தம் கண்களைத் திறந்தார். மழையில் நனைந்த பனி மலரென எதிரே நின்றாள் பிரபா.

''ஜஹாம்பனா!...பிரசாதம் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று ஞாபகப்படுத்தினாள் மகாராணி.

சொல்லுக்கடங்காத அற்புதமொன்றை நேரிற்கண்ட வியப்பு, பாதுஷாவின் விழிகளில் நிரம்பியிருந்தது. அவர் நீட்டிய கரத்தில் ஒரு துளசி தளத்தையும் கற்கண்டுக் கட்டியையும் வைத்தாள் கட்டழகி

இருவரும் எழுந்தனர்.

''சுவாமி, போய் வருகிறோம்...குழந்தாய்! போய் வருகிறோம்'' என்று விடை பெற்றுக் கொண்டாள் அரசி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வார்த்தைகள் வெளிவர முடியாத உணர்ச்சி வசத்தில் இருந்த பாதுஷா, பிரபாவை நோக்கினார்:

'ஜஹாம்பனா! அடிக்கடி வந்து போக வேண்டும்'' என்று முறுவல் தவழ்ந்த முகத்துடன் சொன்னாள் பாலிகை.

"பாதுஷா! பௌர்ணமிதோறும் நாங்கள் சியாம மோகனன் லீலைகள் புரிந்த இந்த யமுனைக் கரையில் வந்து தங்குவோம். மறுநாள் பகல் இங்கிருந்து போய்விடுவோம்'' என்று தெரிவித்த பெரியவர் மீண்டும் தம்புராவை மீட்ட லானார்.

3

படகு வேகமாய்ச் சென்றது.

"மகாராணி! பெரியவரின் பெயர் என்ன! அதை நாம் கேட்கவேயில்லையே!'' என்றார் பாதுஷா. "அந்தப் பெண் அவருக்கு என்ன பாத்தியம?''

படகில் அமர்ந்து, நதியிற் புரண்டெழுந்த சிற்றலைகளைப் பார்த்தபடியே மௌனமாய் அமர்ந்திருந்த அரசி அவரை அதிசயத்துடன் நோக்கினாள்.

"ஜஹாம்பனா!... அவரை யார் என்று நீங்கள் அறிந்து கொள்ளவில்லையா? மகாகவியான சூரதாஸர் அல்லவா அவர்! அக் குழந்தை அவருடைய பேத்தி, அற்புதமான அவ்விருவருடைய கானத்துக்கு அந்த மோகனசியாமளனே நேரில் வந்து களி நடனம் புரிகிறானும். கேட்கக் கேட்க அற்புதமாயிருக்கிறது; பார்வையை யிழந்துவிட்ட பிறகு பிரபாதான் அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டிருக்கிறாள். பெரியவருக்கு இவ் வுலகிலுள்ள பந்த மெல் ... இருந்தால்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சக்கரவர்த்தி ஒரு வினாடி மௌனமாயிருந்தார். அவருடைய கையிற் பிடித்திருந்த துடுப்பு நீரில் உண்டாக்கிய லேசான ஓசையொன்றைத் தவிர, அவ்விட முழுதும், நிச்சலனமான ஆழ்ந்த அமைதி குடிகொண்டிருந்தது

"மகாராணி!...ஒரு யோசனை எனக்கு. இந்த யமுனைக் கரையிலேயே பெரியவரும் அப்பெண்ணும் வசதியாக இருக்கக்கூடிய இருப்பிடமொன்றும், அவர்கள் பாடித் துதிக்கும் தெய்வத்துக்கு ஒரு கோயிலும் நாம் கட்டிக் கொடுக்கலாமே!"

லேசாக நகைத்தாள் மகாராணி.

"ஜஹாம்பனா! நான் அதைக் குறித்து யோசிக்கவில்லையென்று எண்ணுகிறீர்களா? பிரபாவிடமும் அவள் பாட்டனிடமும் என் எண்ணத்தை அன்றே தெரியப்படுத்தினேன். அவர்களுக்கு அதில் சிறிதும் பிரியமில்லை மேலும் வற்புறுத்த எனக்கும் அச்சமாயிருக்கிறது."

பாதுஷா ஆகாயத்தை நிமிர்ந்து நோக்கினார். படகு அரண்மனை ஜமுனாவின் படித்துறையை நெருங்கிக் கொண்டிருந்தது.

ஆழ்ந்த பெருமூச்சு ஒன்று விட்டு, 'மகாராணி இன்று கேட்ட மதுரகானத்தில் என் மனம் கட்டுவிட்ட ஜீவன் போல் உணர்ச்சியிற் சிக்கிவிட்டது! அன்பே! அற்புதம்! திவ்ய லாவண்ய ரூபிணியான அப்பெண்ணின் அதிசயமான சௌந்தர்யமும், அவளுடைய கண்டத்திலிருந்தெழும் மதுர நாதமும், ஒருமுறை கேட்டால் பின்பு மறக்க முடியாதவை" என்றவாறு சக்கரவர்த்தி படகைக் கரையில் ஒதுக்கிவிட்டு இறங்கினார். மகாராணி மௌனமாயிருந்தாள்.

*CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடுத்த இரண்டாவது பௌர்ணமி. தில்லி மாநகரம் முன்போலவே பூரண நிலவிற் குளித்துக் கொண்டிருந்தது. ஆனாலும் ஆடலும், பாடலும் இன்றி, நகர மக்கள் வருத்தத்துடன் தங்கள் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தனர். காரணம்?...மக்களின் அன்புக்குரிய பேகம், மகாராணி ஜோதிபாய் கடும் நோய்வாய்ப் பட்டிருந்தாள். இனிமேல் மரணம் இன்றோ, நாளையோ என்ற நிலைமை.

பாதுஷா தம் நிலையிழந்து தவித்தார். பெரிய பெரிய வைத்தியர்களும், ஹக்கீம்களும் கைவிட்டுவிட்ட தம் அன்புக்குரிய பேகத்தைக் காப்பாற்றும் வகையறியாமல் கலங்கித் தவித்தார்.

அந்தப்புர மெங்கும் ஆழ்ந்த அமைதி பரவியிருந்தது அடிமைப் பெண்கள் அரவம் எழுப்பாமல் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தனர்.

நோயின் வேதனை தாளாமல் மஞ்சத்திற் புரண்டு கொண்டிருந்தாள் அரசி. அடிக்கொரு முறை தன்னுடைய கண்களைத் திறந்து நாற்புறமும் பார்த்துவிட்டு நிராசையுடன் அவற்றை மூடிக்கொண்டாள்.

இருபுறமும் நின்றிருந்த அடிமைப் பெண்கள் மயிலிறகு விசிறிகளால் லேசாக வீசிக் கொண்டிருந்தனர்.

மஞ்சத்தருகில் அமர்ந்திருந்த பாதுஷா, கலங்கிய விழிகளுடன் மகாராணியின் முகத்தையே நோக்கிக் கொண்டிருந்தார்.

அவ்விடுதியின் கதவை மெதுவாகத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள் அடிமைப் பெண்ணொருத்தி.

''ஜஹாம்பனா!...இன்னும் அவர்கள் அங்கு வரவில்லை.'' என்று மெதுவாகத் தெரிவித்தாள் பணிப்பெண்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகாராணியின் விழிகள் திறந்தன. மிக மிக மெது வாகக் கேட்டாள்.

"ஜஹாம்டனு! அவள், — பிரபா, வந்தாளா?—பெரிய வர், பிரபா வரவில்லையா?"

"மகாராணி!... என்னுடைய சாம்ராஜ்யத்தில் அவர் களிருவரும் எங்கிருந்தாலும் நாளை உதயத்துக்குள் இங்கு வரவழைக்கிறேன். அன்பே! நிம்மதியாய் உறங்கு" என்று கூறிய பாதுஷாவின் மொழிகள் அவளுக்குத் திருப்தியளிக்க வில்லை. மஞ்சத்தில் மறுபுறம் திரும்பிக் கொண்டாள்.

"ஆகா!...என்ன அற்புதமான கானம்?... ஒருதரம் கேட்டால் மறக்க முடியாதே!" 'நந்தலால் மதுர பன்ஸி பஜாதா ஹை' 'சுவாமி—பிரபா' என்று முணுமுணுத்தாள் பேகம்.

அவள் விழிகள் மூடிவிட்டன. துயரம் தாங்காமல் பாதுஷா சிறு குழந்தையைப் போல் விம்மி விம்மி அழலானர்.

* * *

யமுனைக் கரையிலிருந்த மலா வனத்தினடுவே புதி தாய் எழும்பியது வெண்மையான சமாதியொன்று. அதன் மீது மலர்கள் தூவப்பட்டு, ஊதுவத்திகள் நறுமணத்துடன் புகைந்து கொண்டிருந்தன. எதிரே தலைகுனிந்து நின்றிருந் தார் பாதுஷா. அவர் விழிகள் கலங்கி இருந்தன,

"மகாராணி... உன்னுடைய கடைசி இச்சையை என் னால் நிறைவேற்ற முடியவில்லையே!" என்று மனத்துக்குள் துயருற்றபடியே நிமிர்ந்தார். அடுத்த கணம் அவர் உட லெல்லாம் புல்லரித்தது. தென்றலசைவில் தவழ்ந்து வந்தது அந்தத் திவ்ய கானம்.

"நந்தலால் மதுர பன்ஸி பஜாதா ஹை"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடுத்த சிலையாய் பாதுஷா அப்படியே ஸ்தப்பித்து நின்றார்...

தேனை அள்ளிப் பொழிந்த நாதவெள்ளம் சமீபித்தது. மெல்ல மெல்ல நடந்து சமாதியண்டை வந்துநின்றாள் பிரபா... கையிலிருந்த துளசிதளத்தையும் கற்கண்டுக் கட்டியையும் சமாதியின்மீது வைத்தாள். அவள் விழிகள் வெம்பனி நீரைச் சொரிந்தன. போகத் திரும்பினாள்.

"பாதுஷா!"...விதிர் விதிர்த்துப் போய் நின்றாள் பேதை.

"பிரபா! அவர் எங்கே? உன் பாட்டனார்?"

"சியாம மோகனனிடம் போய்விட்டார் ஜஹாம்பனா! அதனால் மூன்று பௌர்ணமியாக இங்கு வரவில்லை, நாங்கள். இன்று மாலைதான் வந்தேன். மகாராணி பேகம் மறைந்துவிட்ட சேதி கேட்டேன். ஓடோடியும் வந்தேன்." தலைகுனிந்தபடி கூறிவிட்டுப் போகத் திரும்பினாள் அவள்.

"பிரபா! தனியாகப் போகிறாயா?" கனிவுடன் கேட்டார் பாதுஷா.

"ஜஹாம்பனா! எனக்கென்ன பயம்? அந்த சியாம மோகனன் துணையிருக்கிறானே!" என்றபடி வேகமாய் நடந்து மலர்ச் செடிகளிடையே மறைந்தாள் அந்தப் பனி மலராள்.

உதயத்தின் மனோகரமான அமைதியில் ரம்யமாய் ஒலித்தது பிரபாவின் இனிய குரலோசை.

"நந்தகேலால் மதுரபன்ஸி பஜாதா ஹை"

மெய்மறந்து நின்ற சக்கரவர்த்தி மெதுவாய் அரண்மனையை நோக்கி நடக்கலானார்.

— அமுதசுரபி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பசி வந்திட...

'வாஸந்தி'

உஷ்...கொஞ்சம் பொறுத்துக்கொள். மாங்கல்ய தாரணம் ஆகட்டும். இலை போட்டு விடுவார்கள்...அதற்குள் உனக்கென்ன அவசரம்? இரண்டு நாட்களாக உனக்கு ஒன்றுமில்லைதான்—அதற்காக? வந்த இடத்தில் கொஞ்சம் கௌரவமாக இருக்க வேண்டாமா? கொஞ்சம்கூட இங்கிதமில்லாமல், சந்தர்ப்பம் தெரியாமல் இப்படி ஓலமிடுவதா? இது சாதாரணக் கல்யாணமில்லை. பஞ்சபட்ச பரமான்னங்களோடு உனக்கு விருந்து கிடைக்கும்.

வயிறே சற்று சும்மா இரு...

இது சாதாரணக் கல்யாணமில்லை. பந்தல் ஜோடனை ஒன்றே போதுமே செல்வத்தைப் பறைசாற்ற? தீப அலங்காரங்களும் மலர்த் தோரணங்களும்...அப்பப்பா! என்ன அழகு! இதற்கு முன்னால் இதைவிட அதிகச் செலவில், இதைவிடச் சிறந்த ஏற்பாட்டோடு ஒரே ஒரு கல்யாணம்தான் நடந்திருக்கிறது! எவ்வளவு ஆயிரம் செலவழிந்தது? யார் கண்டார்கள்? யாருக்கு நினைவிருக்கிறது? யார் கணக்கு வைத்தார்கள்? செலவிற்குக் கணக்கு வைத்து, கணக்கிற்கு எல்லை வைத்து, அந்த எல்லைக்குள்ளே இருந்திருந்தால்...?

உஷ்...மறுபடியும் ஓலமிடுகிறாயே? உனக்குப் பழைய நினைவெல்லாம் ரசிக்காது. ஏனென்றால் அப்பழைய நினைவுகளில் ஒரு நினைவாக நீ இருக்க முடியாது. என்னுள் நீ இருந்த நினைவேயில்லை. உன் ஓலத்தைக் கேட்ட ஞாபகம் இல்லை. இல்லாமை என்பதற்கே இடமில்லாதபோது, உன் குரலை நான் கேட்டிருக்க முடியுமா? அன்று உன்னை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அழ விடாமல் இருந்ததற்காக இன்று தயவு செய்து என் மானத்தைச் சற்றுக் காப்பாற்று, கொஞ்சம் பொறுமையாயிரு.—இலை போட்டுவிடுவார்கள்.

எவ்வளவு அழகான மணப்பந்தல். அப்பந்தலில் நடு நாயகியாய், செல்வம் தந்த பூரிப்பில் உடல் பளபளக்க, மலர் முகத்தில் நாணம் மென்மையாகச் செம்மை கூட்ட, மனத்தின் இன்பக் கிறக்கத்தில் அமிழ்ந்து அமிழ்ந்து போதை தெளியாத கண்களில்—மணப் பெண்ணின் கண்களில் இருப்பது வெட்கமா, அல்லது மருட்சியா? ஒரு கனவு மயக்கத்திலேயே விழிகள் அங்குமிங்கும் அலைபாய்கின்றன. கண்டகாட்சி ஒன்றுவது மனத்தில் பதிந்திருக்காது...வெறும் கனவு...அந்தக் கனவிலிருந்தும் விழித்துக்கொள்ளவே அவளுக்குத் தெரியாது. தெரிந்தால் அக்கனவை உருவாக்க, உருவாக்கியதை நனவாக்க ஏற்பட்ட சிரமங்கள் அவளுக்கு நினைவிருக்குமா? நினைவிருந்தால், அவளைப் பெற்றவன் கொடுத்து வைத்தவன் தான்.

அதோ. அந்தக் கொடுத்து வைத்தவர் மிகுந்த சந்தோஷத்துடன் தான் காணப்படுகிறார். பெண்ணின் அழகைக் கண்டு மகிழ்கிறாரா, அல்லது நல்ல இடத்தில் சம்பந்தம் செய்கிறோம்—என்ற பெருமிதமோ! படித்த கதையைத் திரும்பிப் படித்ததுபோல் இருக்கிறது காட்சியும் பாத்திரமும் வேறுபிருந்தாலும், சூழ்நிலை ஒன்றேதான்...அலங்காரப் பந்தலில் இந்தப் பெண்ணைவிட அழகாய் கௌசல்யா உட்கார்ந்திருக்க, அந்தப் பொற்சித்திரத்தின் பக்கத்தில் கம்பீரமாய் உட்கார்ந்திருந்தது இன்னும் நினைவில் பசுமையாக இருக்கிறது. மனத்திலுள்ள பொத்தல்களை மறைக்க, வாழ்க்கையில் ஏற்பட்ட விரிசல்களை மூட, அன்று புன்னகையை ஒட்டிக்கொண்ட மாதிரி இன்று இந்த மனிதரும வேஷம் போடுகிறாரோ?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ச்சீ, இந்தப் புத்தி ஏன் இப்படிப் போகிறது? குடல் குறுகினால் புத்தி கூடவா குறுகிவிடும்? இந்த மங்களமான நேரத்தில் இப்படியொரு அவலச் சிந்தனையா?

"கெட்டி மேளம்! கெட்டி மேளம்!!'

யாரோ உரக்கக் கூவுகிறார்கள்.

"பிள்ளையின் அக்காவைக் கூப்பிடுங்கள்!"

அதோ அவள் தான், அந்தப் பெண் தான். சௌபாக்கியத்தின் உருவமாக, தலையிலிருந்து கால் வரை பொன்னால் அலங்கரித்துக் கொண்டு முகம் முழுவதும் புன்னகை மலர ஓடி வருகிறாள். அன்றும் இப்படித்தான் கௌசல்யாவின் தாலியை முடிய வந்தாள். நான் ஏதோ ஹாஸ்யமாகச் சொல்ல அதை ரஸித்து அவள் சிரிக்க, அந்தக் காட்சியை யாரோ படம்கூடப் பிடித்துவிட்டார்கள். இப்பொழுது கூட கௌசல்யாவின் புகைப்படங்களுக்கிடையே அது பரிகாசமாகச் சிரிக்கிறது.

அன்று அப்படி இருந்தவள்தான் இன்று அடையாளமே கண்டு கொள்ளாதது போல் போய்விட்டாள்.

உஷ்...இரையாதே ... இதோ ...முகூர்த்தம் முடிந்து விட்டது. இலைபோட்டுவிடுவார்கள். இப்படித்தான் எனக்கு வரவேற்பு இருக்கும் என்று தெரிந்திருந்தும், உன் இரைச்சலைப் பொறுக்க முடியாமல்தான் இங்கு வந்தேன். இல்லை ...இல்லை...கேவலம் உனக்குப் பயந்து கொண்டா இங்கே வந்தேன்? ச்சீ! யாராவது சிரிக்கப் போகிறார்கள்.

இருந்தாலும் நீ போடும் கூச்சலில் என் மனிதத் தன்மையே அமுங்கி அடங்கிப் போய்விடுமோ என்று எனக்குப் பயமாகத்தான் இருக்கிறது. என் சுய கௌரவமும் மனத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தில் பொங்கும் பாசமும் உன் ஓலத்தில் ஒடுங்கிவிடுமோ என்று பயமாயிருக்கிறது. சிறிது நேரம் கம்பீரமாக உட்கார்ந்திருக்க விடமாட்டாயா?

எதிரே வண்ண வண்ணப் பட்டு சேலைகளை உடுத்து, தங்க வைர ஆபரணங்கள் அணிந்த எவ்வளவு பெண்கள்! இந்தப் பட்டுக் குவியலின் நடுவே குத்து விளக்கைப் பள பளவென்று துடைத்து ஏற்றி வைத்தாற்போல் அவள் தான் எவ்வளவு அழகாயிருக்கிறாள். விலையுயர்ந்த புடவை உடலை அலங்கரிக்கிறது. கழுத்தோடு ஒட்டினாற்போல் வைர அட்டிகை—அவளுடைய கல்யாணத்தின்போது ஆசாரியின் எதிரில் உட்கார்ந்து பார்த்துப் பார்த்துப் பொறுக்கிப் பொறுக்கிச் செய்தது. பதினெட்டாயிரம் ஆயிற்று.

இந்தப் பக்கம் சற்று திரும்பிப் பார்க்கிறாள். நேருக்கு நேர் பார்வை நிலைகுத்தி நிற்கிறது. உள்ளத்தில் கிறலா யிருந்த வேதனை அலையாய் எழும்பி நெஞ்சை அடைக் கிறது.

சே! நாம் இன்று இங்கு வந்திருக்கக் கூடாது. இந்தக் கும்பலின் மத்தியில் நம்மைப்பார்த்தால் யாருக்கும் வேதனை யாகத்தான் இருக்கும்...போய் விடுவோமா? உள்ளத்தின் வேதனையில் மனம் பேதலிக்கையில் 'என்னை எப்படி மறப் பாய்?' என்று குடல் உறுமுகிறது.

கேவலம் ஒரு கவளம் சோறு! இவ்வளவு தூரம் வந்து விட்டு அதுகூட இல்லாமல் போவதா? அதோ, முதல் பந் திக்கு யாரோ கூப்பிட வந்துவிட்டார்கள். முந்திக்கொள்ள வேண்டியதுதான்.

"எல்லோரும் சற்று உட்கார்ந்திருந்தார்கள். ஆசீர் வாதம் நடக்கப் போகிறது. அது நடந்து முடிந்த பிறகு சாப்பிடப் போகலாம்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடவுளே இன்னும் தடங்கலா? உற்சாகத்துடன் கிளப்பிய கால்கள் தள்ளாடியபடி பின்வாங்குகின்றன.

"நாலு ரூபா பவந்தி..."

சாஸ்திரிகளின் குரல் கம்பீரமாக ஒலிக்க ஆரம்பித்து விட்டது.

எவ்வளவு பரிசுகள்! விதவிதமான சாமான்கள்! எவ்வளவு ரூபாய் நோட்டுக்கள்! மணப் பெண்ணும் பிள்ளையும் மாற்றி மாற்றி வரும் பரிசுகளை வாங்கி வைப்பதற்குள் ளேயே சோர்ந்துவிடுகிறார்கள்.

"சோபன சோபனக் கல்யாண மகோத்ஸவத்தில் பெண்ணுக்கு அக்காள் சீதாலட்சுமியின் ஆசீர்வாதம்—தையல் மிஷின்!"

"பிள்ளைக்கு...நண்பன் சேதுராமனின் ஆசீர்வாதம்—டிரான்ஸிஸ்டர் ரேடியோ...!"

இவ்வளவு பெரிய வைபவத்தில், இவ்வளவு முக்கியச் சடங்கில், மணமக்களுக்கு ஆசி கூறக்கூட யோக்கியதை இல்லாமல் உட்கார்ந்திருப்பது உடம்பைக் கூசுகிறது. இதைப் போல் பன்மடங்கு பரிசுகளை வழங்கிக்கொண்டிருந்த கைகள் இப்பொழுது ஜீவனில்லாமல் உள்ளே வெடவெடக்கின்றன. அன்று கௌசல்யாவுக்கு வந்த பரிசுகள் தான் எத்தனை ஏராளம்! எப்படித்தான் அள்ளி எல்லோரும் கொடுத்தார்கள்! எல்லாம் பகட்டு...வெறும் வேஷம்! பகட்டுக்காக வேஷமும், வேஷத்திற்காகப் பகட்டும்... போதும் போதும்! ஒரு நாளைக்கு வேஷம் போட்டுவிட்டு இன்று படும் வேதனை...

"சோபனச் சோபனக் கல்யாண மகோத்ஸவத்தில் சம்பந்தியின் ஆசீர்வாதம்...ரூபாய்!"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"எந்த சம்பந்தி ஐயா? பேரைச் சொல்லும்!"

"ராமசாமிதான்! பின்னே வேறே யாரு...?"

லேசாகக் குட்டையின் நீரைக் கலக்கினுற்போல் நசு நசுவென்று சபையில் சிரிப்பொலி பரவுகிறது...சுரீரென்று வேல் பாய்வதுபோல் நெஞ்சில் ஒரே வலி. கும்பலாகத் துளைக்கும் பார்வையின் தீட்சண்யத்திற்கு முன்னுல் சிரம் தாழ்ந்து போகிறது. இனிமேல் தாங்க முடியாது. இருக்கும்போதே சமாதி கட்டிவிடும் இந்தப் பைசாசக் கும்பலுக்கு மத்தியில் மனிதன் உட்காருவானு? பணமே பிராதனம் என்று எக்களிக்கும் இந்தக் கூட்டத்தின் மத்தியில், வயிறே பிராதனம் என்று உட்கார்ந்திருப்பது எத்தனை கேவலம்!

போய் விடுவோம்...போய் விடுவோம்...

"யாரய்யா அது...சாப்பிட்டு விட்டுப் போங்கள்! இலை போட்டாயிற்று...!"

யாரோ ஒருவன் தன் போக்கில் பந்தி உபசாரம் செய்கிருன்.

சுய கௌரவத்தின் எதிரில் சற்றே அடங்கிருந்த வயிற்றின் ஓலம் குபீரென்று எழுகிறது. பேராசையுடன் ஓலமிடுகிறது.

சீ! இவன் வீட்டில் சாப்பிடுவதா? அவ்வளவு ஈனமாய்ப் போவதா? கூடாது...

"உங்களைத்தானய்யா! சாப்பிட்டு விட்டுப் போங்கள்!"

இது ஏதடா வம்பாய்ப் போய்விட்டது? இவனுக்கு நாம் யாரென்று தெரியாது போலிருக்கிறது. தெரிந்தால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வளவு மரியாதை செய்வாளு? பைத்தியக்காரச் சபலம் இப்படியும் அப்படியும் தயங்குகிறது. இந்தக் கடுகத்தனை மரியாதை வார்த்தைகளைக் கேட்டு பேய் மனம் பாகாய் உருகுகிறது. சுய கௌரவம் என்னவாயிற்று? கௌரவமுமில்லை, மண்ணுமில்லை. குடலின் அலறலைச் சற்றுத் தணித்த பிறகுதான் மற்றதெல்லாம்.

கேவலம் ஒரு கவளம் சோறு!

அது அவ்வளவு சுலபமாக எங்கே எப்பொழுது மறுபடியும் கிடைக்கப் போகிறது? போய்த்தான் பார்ப்போமே! அப்பாடா, சாப்பாட்டுப் பந்தலுக்குள் நுழைந்தாகி விட்டது... அட கடவுளே! நம்மைவிட அன்னக் காவடிகள் இவ்வளவு பேர் வந்திருக்கிறுர்களா? அடித்துப் புடைத்துக் கொண்டு இப்படியும் உட்காருவார்களா?

வயிறு 'ஓ' என்று ஓலமிடுகிறது. கண்கள் நிராசையோடு பந்தியைத் துழாவுகின்றன. இதைப்போல இரண்டு மடங்கு பெரிய பந்தலில் அடைத்து அடைத்து இலை போட்டு வரிசைக்கு வரிசை சென்று பந்தி விசாரித்ததெல்லாம் இப்பொழுது பழைய கதையாகி விட்டது. சாப்பிடுகிறவர்கள் 'போதும் போதும்' என்று அலறுகிற வரையில் படைத்த பூரிப்பில் நிமிர்ந்து நின்றதெல்லாம் இப்பொழுது தேய்ந்த நினைவாக நம்பமுடியாத பொய்யாகப் போய்விட்டது. இப்பொழுது தங்கியிருப்பதெல்லாம் ஒரே ஓர் உணர்வுதான்—உடலை, புத்தியை வியாபித்து ஐம்புலன்களை அடைத்துக் கொண்டு நிற்கும் உணர்வு. அதற்கு முன் மானமும் மரியாதையும் பாசமும் கௌரவமும் உணர்விற்கு அப்பாற்பட்டு வெறும் தூசாகப் போய் விட்டது.

கண்கள் மறுபடியும் பந்தியைத் துழாவுகின்றன. ஆ...! அங்கேயிருக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு காலி இடம்! வயிறு தாளம் போட, மனம் துள்ள அங்கே போவதற்குள் யாரோ வருகிறார்கள்—

"யாரய்யா அது? இங்கே சம்பந்திகளுக்கு இலை போட்டிருக்கிறது. அங்கே ரேழியில் சற்று நேரம் உட்கார்ந்திரும். இரண்டாம் பந்திக்குக் கூப்பிடுகிறோம்!"

இவ்வளவு கேவலமான வார்த்தைகளைக் கேட்டு செவி கூசினாலும், இந்த அவமானத்தையும் சகித்துக்கொண்டு உயிர் எப்படி இருக்கிறது என்று மனம் வியந்தாலும், காலி இலை போய்விட்டதே என்று வயிறு ஓலமிடுகிறது. ஈசுவரா! இது என்ன பசி!

குத்து விளக்கை ஏற்றி வைத்தாற்போல் அவள் வளைய வந்துகொண்டிருக்கிறாள். யார் யாரையோ பந்தி விசாரிக்கிறார்கள். யாரைத் தேடுகிறாள்? அப்பாடா, இந்தப் பக்கம் பார்த்துவிட்டாள்! அழகிய, பெரிய விழிகளில் வேதனை படர்ந்திருக்கிறது.

வேதனைப்படாதே. நான் போய்விடுகிறேன். ஒரே ஒரு கவளம் சாப்பிட்டுவிட்டுப் போய்விடுகிறேன். ரொம்பப் பசி தாங்கவில்லை. இரண்டு நாட்களாகப் பட்டினி. முன்பெல்லாம் உங்களுக்குப் பசி பொறுக்காது என்று ஒன்பது மணிக்கு ஏதாவது கொண்டுவந்து கொடுப்பாயே; நினைவிருக்கிறதோ? எனக்கு இப்போது ஒரு கவளம் சோறு போதும்—மணி பன்னிரண்டாகிறது பார்...

என்னைப் பார்த்துக்கொண்டே வருகிறாள்.

"அங்கு ஒரு இடம் காலியிருக்கிறது, வாருங்கள்."

ஆகா! உன் குரலா அது? எவ்வளவு நாட்களாகிவிட்டன அதைக் கேட்டு! உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்...

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உன் குரலைக் கேட்கத்தான் வந்தேன்...ஆனால் இந்தப் பாழும் பசி...பாழும் பசி...!

இலையின் முன் உட்கார்ந்தாகிவிட்டது. இவ்வளவு கம்பீரமாக இலை போட்டுச் சாப்பிடுவது இப்பொழுது புதுமையாகத் தோன்றுகிறது. பரிசாரகர்கள் எல்லாம் பரிமாறுகிறார்கள் என்று அக்கறையாகக் கவனிக்கிறாய். உனக்குப் பாசம் இல்லாமல் இல்லை. உன் குரலை எல்லோருமாக அமுக்கி வைத்திருந்தால் நீ என்னதான் செய்வாய்?

பிரிந்தவர் கூடினால் ஏற்படும் மகிழ்ச்சியைப் போல் இலையில் விழும் பண்டங்களைப் பார்த்துப் பேராசையால் கண்கள் மலர்கின்றன. இருக்கும் பசியில் எதை முதலில் சாப்பிடுவது என்றே புரியவில்லை.

அடடா! உன் கண்களில் ஏன் இப்படி நீர் நிரம்புகிறது? கலங்காதே...நான் போய்விடுகிறேன்...நொடியில் சாப்பிட்டுவிட்டுப் போய்விடுகிறேன்.

எங்கே சட்டென்று திரும்பிவிட்டாள்? ஓ! புரிகிறது. அவளுடைய மாமனார் வருகிறார். நம்மைப் பார்த்தால் அடையாளம் கண்டுகொள்வாரா...? அதோ நன்றாகத்தான் பார்க்கிறார். அழைப்பிதழ் அனுப்பியிருக்கிறார். சிரித்துத்தான் பார்ப்போமே, ஊஹூம்! பதிலுக்கு ஒரு புன்னகையின் நிழலைக் கூடக் காணோம்...சீ! இவன் வீட்டில் கூட மனிதன் சாப்பிடுவானா? ஒப்புக்கு அழைப்பிதழ் அனுப்பியிருக்கிறார்கள் என்பதற்காக, இதுதான் சாக்கு என்று வந்துவிடுவதா? சட்! வயிற்றின் குமைச்சல் சற்று அடங்கியவுடன்தான் கௌரவமும் தலைநீட்டுகிறது, பாதியில் எழுந்துவிட்டால் ராங்கிக்காரன் என்பார்களோ? உடம்பை ஒரு சாணாகக் குறுக்கிக் கொண்டு, குறுகிய வயிற்றை நெஞ்சில் எழும் போராட்டத்தோடு நிரப்புவதற்குள் போதும் போதும்...

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சலசலவென்று குழாய் நீர் வடியும் சத்தத்திற்கு மேல் பேர் சொல்லி ரகசியம் என்ற பெயரில் கிசுகிசுத்துக் கேட்கிறது.

"ஏன் சார், அதோ அங்கே நிற்கிறாரே, அழுக்கு வேஷ்டி சட்டையோடு—யார் அது? எங்கேயோ பார்த்தாற்போல் இருக்கிறது, யாரென்று தெரியவில்லை"

"யாரைக் கேட்கிறீர்கள்? சற்றுத் தள்ளி வலப்பக்கம் பார்த்தபடி நிற்கிறாரே அவரா?"

"ஆமாம். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் கல்யாணப் பிள்ளையின் மன்னி—இரண்டாமவள் அவர் சாப்பிடும் பொழுது எதிரில் நின்று கவனித்துக்கொண்டிருந்தாள்."

"அவர்தான்ய்யா சபேசன்! தெரியவில்லையா? அந்தப் பெண்ணுடைய அப்பா!"

"என்னது?"

"ஆமாய்யா ஆமாம்!" குரல் இன்னும் ரகசியமாகக் கிசுகிசுக்கிறது.

"இதென்ன சார் வேஷம்?"

"வேஷமா? அட ராமச்சந்திரா! உங்களுக்கு அந்தக் கண்றாவி விஷயமெல்லாம் தெரியாதா?"

"என்னது?"

"சரியாப் போச்சு! இவர் பிரமாதமா ஏதோ செய்திண்டிருந்தாரோல்லியோ? அதில் திடீரென்று ஏகமா நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. இருக்கிறது ஒரே பொண்ணு. வியாபார விஷயம் வெளியே தெரிந்துவிட்டதுன்னா, பெண்ணுக்கு நல்ல இடத்தில் கல்யாணம் ஆகாதுன்னு பயந்து,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நஷ்டம் ஏற்பட்ட சமாசாரம் பரவுவதற்கு முன்னால் அங்கே இங்கேன்னு, கடன் வாங்கி செலவு செஞ்சு பெரிய இடத்திலே—இந்தக் கல்யாணப் பிள்ளையுடைய அண்ணுவுக்குப் பெண்ணைக் கொடுத்துக் கல்யாணம் பண்ணினுர்.''

''ஆமாம், ஆமாம்! ஏ அப்பப்பா! எப்படிப்பட்ட கல்யாணம் அது? என்ன தடபுடல்! ஊரெல்லாம் நாலு நாளைக்கும் அதே பேச்சாக இருந்ததே!''

''அதற்கப்புறம் ஒரே மாதத்தில் சாயம் வெளுத்துப் போச்சு. நஷ்ட விஷயம் ஊருக்கெல்லாம் கொல்லென்ருகி விட்டது. கடன் கொடுத்தவர்கள் நெருக்கிப் பிடிக்க, விஷயம் கோர்ட்டுக்குப் போய் சந்தி சிரித்து கடைசியில் இந்த சபேசன் 'இன்சால்வென்ட்' என்று தீர்ப்பாகிவிட்டது. அதிலிருந்து பெண்ணின் மாமனுர் சம்பந்தியோடு உறவை அறுத்துக் கொண்டுவிட்டார். மருமகளிடமும் இனிமேல் அப்பனேடு ஒரு தொடர்பும் கூடாது என்று கூறிவிட்டாராம். பெரிய மனுஷனைப் போல் வேஷம் போட்டு ஏமாற்றிவிட்டான் என்று அவருக்குக் கோபம். பாவம், இப்போ இந்த சபேசன் சோற்றுக்குக்கூடத் திண்டாடுகிருர் என்று கேள்வி.''

நெஞ்சை வாளாக அறுக்க செவியில் புகுந்த பேச்சு கைகளையும் கால்களையும் பரபரவென்று இழுத்துக் கொண்டு குழாயண்டை போகிறது. இருக்கும் அவல நிலையை விநாடிக்கு விநாடி உள்ளமே குத்திக் காட்டும் போது, அதை நினைவுபடுத்த மனிதர்கள் வேறு? அவர்களைப் பொறுத்த வரையில் இது கேவலம் ஒரு சுவாரஸ்யமான செய்தித் துண்டு. அவ்வளவே!

கண்கள் திடீரென்று வெறுப்புடன் பந்தலைத் துழாவுகின்றன—அங்கே பாதிக்கு மேல் தெரிந்த முகங்கள் தாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரிய மனிதர்கள் என்று சொல்லிக்கொண்டு வளைய வரும் சின்ன புத்திக்காரர்கள். யாராவது ஒருவனுக்கு என்னுடன் பேசத் தைரியம் இருக்கிறதா? மனிதத் தன்மை இருக்கிறதா? கோழைகள்! போலிக் கௌரவத்திற்கு அடிமையான கோழைகள்!

ஐயோ. ஐயோ! இது என்ன பைத்தியக்காரத்தனம்? நமக்குச் சொல்ல வாயேது? போலிக் கௌரவத்திற்கு அடிமையானது யார்? அதற்காக இன்று அவமானப்பட்டு நிற்பது யார்? புத்தி பேதலித்துத்தான் போய்விட்டது...

"கொஞ்சம் வழிவிடுங்கள் ஐயா!"

திடீரென்று விழிப்பு ஏற்படுகிறது. இதென்ன இப்படி மலைத்து நிற்கிறோம்? குடலின் ஓலத்தைத் தணித்தாகி விட்டது. இனி போக வேண்டியதுதான். அவளை ஒரு தரம் பார்த்துவிட்டுப் போக வேண்டும். நடுக்கூடத்தில் பேச்சும் சிரிப்புமாகப் பெண்கள் கும்பல். அங்கு அவள் இருப்பாளோ? அங்கே எப்படிப் போவது? அதோ அவளே வருகிறாள். ஏற்றி வைத்த குத்துவிளக்கு அசைந்து அசைந்து நடப்பதுபோல் வருகிறாள்.

"போய் வருகிறேனம்மா..." வார்த்தைகள் ஒலி வடிவம். பெறுமல் நெஞ்சுக் குழியில் சிக்கிக் கொள்கின்றன. கண்களில் பொங்கும் நீர், பார்வையை மறைக்கிறது.

அவள் வேதனையுடன் சிரிப்பது மங்கலாகத் தெரிகிறது.

"கொஞ்சம் இருங்கள். முகூர்த்தத் தேங்காயும் சிறிது கல்யாணப் பட்சணமும் கொடுக்கிறேன்."

அவள் அவசரமாகப் போகிறாள்.

மீண்டும் பார்ப்பது எப்போதோ என்று மனம் ஏங்குகையில், அவளுடைய மாமியாரின் குரல் கேட்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"கௌசல்யா!"

"என்னம்மா?"

"உங்கப்பாவுக்கு யார் அழைப்பிதழ் அனுப்பியது? உன் மாமனார்கூட அனுப்ப வேண்டாம் என்றிருந்தாரே?"

"நான் தானம்மா அனுப்பினேன்......மன்னித்துவிடுங்கள்..."

"நன்றாய் அனுப்பினாய்! எவ்வளவு தைரியம் உனக்கு? பரதேசியைப் போல் அவர் வந்து நிக்கிறதும், பார்த்தவர்கள் என்னை விசாரிக்கிறதும் எனக்கு இன்று ஒரே தலை குனிவாய்ப் போய்விட்டது. என்னை அவமானப்படுத்தணும்னு உனக்கு எண்ணமா?"

"அய்யய்யோ அப்படியில்லையம்மா! எனக்கு அவரைப் பார்க்க வேண்டும் போலிருந்தது."

"சரி, சரி, கண்ணைக் கசக்கிக்கொண்டு நிற்காதே. அப்புறம் அதற்கு வேறு பதில் சொல்லியாக வேண்டும். ஒரு முகூர்த்தப் பையைக் கொடுத்துப் போகச் சொல்லு! பட்சணம் கொடுக்கிறேன் என்று நிற்காதே. மனுஷன் இருக்கிற பவிசுக்கு அது ஒன்றுதான் குறைச்சல்."

ஒவ்வொரு வார்த்தையும் நிதானமாக, மரத்துப்போய் இருக்கும் மனத்தின் மேல் மோதுகிறது. புத்தியில் உணர்வேயில்லாமல் நெஞ்சம் மட்டும் விம்முகிறது. இத்தகைய இடத்திற்குத் தைரியமாக வருவதற்கு மனம் எவ்வளவு ஜடமாய்ப் போயிருந்திருக்க வேண்டும்? வெட்கத்தை விட்டு இங்கே உடலை உந்தித் தள்ளிக் கொண்டுவந்த உணர்வு—பாசம் தானா?

கால்கள் தாமாக நகர்கின்றன.

அவள் வருவதற்குள் போய்விட வேண்டும். இது வெறும் ஜடம். மாமிசப் பிண்டம் என்று அவள் கண்டு கொள்ளுமுன் போய்விட வேண்டும்.

—ஆனந்த விகடன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜோடி

ஜம்பு

அன்றைய அலுவல்களை முடிக்க வேண்டிய தருணம் நெருங்கிவிட்டது. இன்னும் கொஞ்சம் புது மண் எடுத்து பிசைய மனம் இல்லாமல், கையில் இருந்த மண்ணை அப்படியே பிசைந்து போட்டான் பிரமன்...அது பூமியில் விழுந்து வளர்ந்தது...

வேடிக்கை!

அது வளர்ச்சியா என்ன? குறளைவிட அது கொஞ்சம் உயரம். குறள் ஒன்றேமுக்கால் அடி. இது இரண்டரை அடி!

தன் பதினெட்டு ஆண்டு வளர்ச்சியை அந்த இரண்டரை அடிக்குள்ளேயே முடித்துக்கொண்டுவிட்டது அது!

கோயிலில் அம்பிகையின் உயரம் குறைவு தான்—பார்க்க அழகாய், ஆனந்தமாய் இருக்கிறது. ஆனால் இரண்டரையே அடி உள்ள ஓர் உருவம் தெருவில் வளைய வருவதென்றால்...?

பாவாடையும், சட்டையுமாய் அப்பொழுதுதான் மழலை திருந்தியதாக இருக்க வேண்டிய உயரம். அந்த உயரத்தில் முதிர்ந்த முகமாய் புடவையோடு திரிவதென்றால்...?

அது மற்றவர்களுக்கு அதிசயம், வேடிக்கை! ஆனால் அந்தச் சின்ன உருவத்தின் மனத்திலோ பெரிய வேதனை. குருவி தலையில் பனங்காயைப் போல—

"ஏ குள்ளி...!"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் இலக்கணத்தைப் பற்றி அவ்வளவாக அக்கறைப் படாத, கேலி செய்வதையே தங்கள் வாழ்க்கையின் லட்சியப் பொருளாகக் கொண்ட சிறுவர்கள் அவளுக்கு அன்போடு இட்ட பெயர் அது!

அவள் நடமாடும் மியூசியம்—அங்கலாய்த்தவர் சிலர். ஆச்சரியப்பட்டவர் பலர். கவனிக்காமலே சென்றவர் பலர்...

அவ்வூரில் பிரசித்தி பெற்ற 'காமாட்சி நிவாஸ்' ஓட்டலின் முதலாளி சோமசுந்தர ஐயரின் வீட்டில் பணி புரிந்து வருகிருள். அவள் பிறப்போ, அவள் அங்கு வந்து சேர்ந்த விவரமோ ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டவை.

அவளுடைய அலுவல், வாழ்வு, அரண்மனை எல்லாம் அங்கே அந்த வீட்டில்—இல்லை ஒரு மூலையில்தான்!

அந்த வீட்டுக் கடைக்குட்டி சந்துருவைப் பள்ளிக்கு அழைத்துப் போவது அவள் கடமைகளில் ஒன்று.

சந்துருவுக்குப் பள்ளிக்கூடத்தில் ஒரு நாள் அகத்தியரைப் பற்றிப் பாடம் நடந்தது. அவன் இளம் மனத்தில் உடனே தன் வீட்டு வேலைக்காரி கோமுவைப் பற்றிய நினைவும் எழுந்தது.

அன்று மாலை பள்ளியிலிருந்து வரும்போது சந்துரு அவளுக்கு விளக்கம் சொன்னுன்.

"ஏ கோமு, இதைக் கேளேன். ரொம்ப நாளைக்கு முன்னுலே அகத்தியர்னு ஒரு பெரியவர் இருந்தாராம். அவர்தான் தமிழ் எல்லாம் தந்தாராம் அவருடைய உயரம் என்ன தெரியுமா? ஒரே ஒரு சாண்தான். உன்னைவிடக் குட்டை இல்லே?"

சந்துரு சொன்னதை அவள் அப்படியே மனத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாங்கிக் கொண்டாள். ஒரு சிறு ஆறுதல். "தம்பி, அவரு பேரு என்னன்னு சொன்னே?"

"அகத்தியர்..."

'அகத்தியர்'—அவளுடைய புகையிலை மெல்லும் வாயில் 'அகுத்தியரு' ஆக மாறி ஆறுதல் அளிக்கும் மந்திரமாக ஆகிவிட்டது. யாராவது 'குள்ளி' என்று கூப்பிட்டுவிட்டால் போதும்..."அட, சும்மா கிட! அகுத்தியரு கூடக் குட்டைதான்" என்று ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போடுவாள் — வெளிக்காக. ஆனால் மனம்... துயரத்தால் விம்மி வெடிக்கும். வேதனை அழுத்தியே நாளுக்கு நாள் குள்ளமாகிவிட்டாளா என்ன...?

சந்துரு ஒரு நாள் அவன் அம்மாவிடம் அடம் பிடித்து அழுது சண்டைக்கு நின்றான். காரணம் இதுதான். பள்ளிக்கூடத்தில் அவனை எல்லோரும் கேலி செய்கிறார்களாம்.

"ஏண்டா, அந்தக் குள்ளியோட ஸ்கூலுக்கு வருகிறயே, உனக்கு வெட்கமாயில்லை...?"

அவனுக்கு அவமானமாக இருக்கிறதாம். கோமு அவனுடன் வரக் கூடாதாம்.

அன்றிலிருந்து அவள் அலுவல்களில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. பள்ளிக்கூடம் வருவதற்குக் கொஞ்ச தூரத்துக்கு முன்னாலேயே கோமு நின்றுவிடுவாள். சந்துரு பள்ளிக்கூடத்தை அடைவதைக் கண் மறைவாக நின்று பார்த்துவிட்டு வரவேண்டும் அவள்.

சந்துருவுக்கு எட்டு வயதுதான்; ஆனால் அவன் அவளைவிட உயரம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஏ கோமு, உன் வயசு என்ன?"

"பதினெட்டு."

"எனக்குப் பார், எட்டு. நீ என்னைவிடக் குட்டை."

"கோமு, நீ உன் கையாலே எட்டுச் சாண் இருப்பாயோ...?"—இது சந்துருவுக்கு அடிக்கடி ஏற்படும் பெருத்த சந்தேகம்.

கோமுவுக்கு அன்று மனம் என்னவோ சொல்லத் தெரியாமல் துடித்தது. அன்றைக்கு முதல் நாள்தான் அவள் தன் எஜமானி அம்மாளுடன் ஒரு சினிமாவுக்குப் போயிருந்தாள். அங்கேகூட யாராவது அவளை விட்டால் தானே!

"கூட்டத்துலே பார்த்துப் போம்மா—யாராவது காலை வெச்சு மிதிச்சுடப் போறுங்க."

இந்த மாதிரி கேலி வசனங்கள் அவளுக்குப் பழக்கமாகி விட்டன. அந்தப் படத்தில் காதலனும், காதலியும் சந்திக்கிறார்கள்—பாடுகிறார்கள்—ஓடுகிறார்கள் — ஆடுகிறார்கள்—இன்னும் என்னென்னவோ!

அவளுக்கு இவற்றையெல்லாம் நினைக்கும்போதே வெட்கமாகக்கூட இருந்தது.

அந்தக் காதலிதான் எவ்வளவு உயரம்! அவள் நெஞ்சிலே என்னவோ குறுகுறுத்தது. அதுதான் ஆசையோ...?

அன்று இரவு கோமுவுக்குப் படுக்கையே பிடிக்கவில்லை. அந்த சினிமாவில் கதாநாயகிகூடப் பாடினாளே.

"படுக்கை குத்தலெடுத்ததடி!"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிரிப்புக்கூட வந்தது. அப்படியெல்லாம் இருக்கணும்னு உயரமா—இல்லே—ஒசரமா இருக்கணும் — அவன் குட்டைதான். அவளை யாரும் பார்க்கவே மாட்டார்கள். பார்த்தால் சிரிப்பு; அந்தக் கதாநாயகன் மாதிரி சிரிப்பா? இல்லே, கேலிச் சிரிப்பு!

மறுநாள் கோமு யந்திரமானுள். அவள் மனத்தில் முளை விட்ட ஆசை சிறிது சிறிதாக, பெரியதாக ஆகி விசுவரூபம் எடுத்தது. அந்த வாமனன் மூன்ருவது அடிக்குக் கேட்டதுபோலத் துடித்தது ஆதாரம் தேடி.

சந்துருவைப் பள்ளியில் கொண்டு விட்டாகிவிட்ட பள்ளி மணியும் அடித்தாகி விட்டது. கல்லாய் அந்த மணி ஓசையோடு ஒன்றி நின்ருள்.

' ஏம்புள்ளே, வீட்டிலே சொல்லிக்கிட்டு வந்தியா? சக்கரத்தடியிலே ஆப்புட்டுக்கிட்டியானு?''

கார் ஒன்று சர்ரென்று வந்து நின்றது. டிரைவரின் குரல் கேட்டு நிமிர்ந்தாள். பார்த்தாள் சற்றுச் சிரிப்போடு. நல்ல வாலிபன்தான்!

"ஏன் நின்னுப்பிட்டே? போம்மா..." கடுஞ் சொல்லை உதிர்த்துக்கொண்டே 'ஆக்ஸிலரேடரை' அழுத்தினுன் தன் ஆத்திரத்தை எல்லாம் சேர்த்து வைத்து:

காதல் தெய்வீகமாம். கற்பனையில், கவிதையில் பாடினுல் அழகாக இருக்கிறது...பதினுறு வயதுப் பெண்...அதுவும் கயல்விழிகள், எள்ளுப்பூநாசி இருந்தால்தான் காதல்—தெய்வீகக் காதல் வருகிறது. உள்ளம் சம்பந்தப்பட்டதாம் காதல். ஜன்ம ஜன்மங்களாகத் தொடர்ந்து வருகிறதாம் காதல்! ஆனுல் அழகற்றவர்களுடன்கூட அது ஏனே வர மறுக்கிறது!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடந்தாள் கோமு...

சுவரில் பெரிய பெரிய படமாக ஒட்டியிருந்தது. நேற்று அவள் பார்த்த படம். இருவருடைய முகமும் சேர்ந்திருந்த போட்டோ...எவ்வளவு பெரிய முகம்...! பெருமூச்சு ஒன்றை விட்டெறிந்தாள்.

கோயில் யானையொன்று பீடு நடை போட்டு நடந்து வந்தது. சந்துருவை அவள் அண்ணாந்து பார்ப்பாள். யானை மேலிருப்பவனை உயர நோக்கினாள்.

"நகரும்மா...யானை கரும்பாக்கும்னு நெனச்சு உன்னை உள்ளே போட்டுக்கிடும்...போ...போ...!"

யானைப்பாகன் வாலிபன்—சினிமாவில் பார்த்த ஆள் மாதிரியே உயரம். அவனுக்கு—அவனுக்கு மட்டுமென்ன, யாருக்குமே—அவளைக் கண்டால் எந்த உணர்ச்சியும் ஏற்படவில்லை—துளிக்கூட.

கோயில் உச்சிக்கால பூஜை மணி அடித்தது. அவள் கோயிலுக்கு வருவதுண்டு எப்போதாவது. இன்று அந்த ஆண்டவனைப் பார்த்துக் கேட்க வேண்டும். அவனுக்கு அவள் என்ன தீங்கு செய்தாள்? ஆண்டவன் ஏன் இப்படி அவளை கேலிப்பொருளாகப் படைத்தான்? துக்கம் அடைத்துக் கொண்டு வந்தது.

அம்பிகையின் சந்நிதி. விளக்கு வெளிச்சத்தில் அம்பிகை சின்ன உருவில் இருந்தாலும் புடவை கட்டி அருள் சொரிய நிற்பது தெரிந்தது.

"ஏண்டி தாயே, என்னை இப்படிப் படைச்சிட்டே... நான் இப்படியே இருந்திடுவேனோ...?"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"நகரும்மா, கோயிலேச் சாத்தணும்" குருக்கள் எரிந்து விழுந்தார்.

வெளியில் வந்தாள். கர்ப்பக் கிருகத்திலிருந்த இருட்டிலிருந்து வெளிச்சம் படும் இடம்; அவள் மனசிலும் ஒரு வித ஒளி தோன்றியது.

'ஒரு சாயா குடிச்சாத்தான் என்ன?' நாக்கு வறண்டது. அந்தச் சின்ன டீக்கடைக்குள் நுழைந்தாள். சூடான அந்த டீ நெஞ்சுக்கு இதத்தைத் தந்ததோ என்னவோ? சுவைத்துக் குடித்தாள்.

"சாயா—ஒரணு."

கல்லாவின் அருகில் நெருங்கினுள்.

"ஏம்மா, நீ எந்த ஊரு?" — கல்லாவிலிருந்தவன் கேட்டான்.

"ஏன் ஐயா, இந்த ஊருதான், ஏன் கேக்கறே?"

"இல்லே, சும்மாதான் கேட்டேன்."

எப்படிச் சொன்னுலும் அவள் மனத்தில் ஆசை பிறந்தது—நிற்க வேண்டுமென்றுதான்.

"உன் பேரு...?"

"என்னவாயிருந்தா உனக்கென்ன?" — சொல்லும் போதே அவள் அவனேப் பார்த்தாள்... அழகன்தான்... பெரிய தலே. சுருள் கிராப்பு, மீசை.

"ஒண்ணுமில்லே...சும்மாதான்."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுந்து நின்றான் கல்லாக்காரன் நாற்காலியின் மேல். அகல விரிந்தன கோமுவின் கண்கள். நாற்காலியிலிருந்து சிறு உருவம் சுமார் மூன்றடியில் பெரிய தலையோடு வாலிபக் களையோடு நின்றது.

அவள் உதடுகள் துடித்தன.

“அத்...” அந்தச் சினிமாக் காதலி அழைத்தது அவளுக்கு நினைவுக்கு வந்தது.

“நீ என் கூடவே...என் கடையிலேயே...”

கோமு வெட்கித் தலை குனிந்தாள்.

அன்று மாலை சந்துருவை அழைத்து வரக் குள்ளக் கோமு போகவில்லை.

(ஆனந்தவிகடன்)



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்ணற்றவர்

"அசுவதி'

ஸ்ரீவைகுண்டத்துக்குப் பதினைந்து மைல் தூரத்தில் இருந்தது குபேரபுரம் ஜமீன். அழகான கிராமம். பக்கத்தில் சலசலத்தோடும் தாமிரவருணி நதி. வருட முழுதும் அதனுடைய நீரை உண்டு ஊர் ஜனங்களும் வயல்களும் செழுமை பெற்றிருந்தனர். இன்று குபேரபுரம் ஜமீன் தரித்திரபுரமாக மாறிவிட்டது. இரண்டு தலைமுறைகளுக்கு முன்வரை அவ்வூர் ஜமீன்தார்கள் புலவர்களையும், அறிஞர்களையும் வைத்து ஆதரித்து வந்தார்கள். ஆனால் இன்று ஜமீன்தார் முத்துகிருஷ்ணத் தேவர் பிறர் வைத்து ஆதரிக்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டார்.

ஊருக்கு இவ்வளவு லக்ஷ்மீகரமாக விளங்கிய அன்னை தாமிரவருணி ஒரு முறை வீறுகொண்டு எழுந்தாள். அதன் விளைவாக ஆற்றருகே இருந்த பல ஏக்கரா நிலங்கள் மண்ணடித்துப் போயின. பின் நாலைந்து வருடங்கள் மழையின்றிப் போய் ஜமீன் வருமானம் குறைந்து கொண்டே வந்தது. பூச்சி அரித்த கூடுபோல முத்துகிருஷ்ணத் தேவரின் பாட்டனார் காலத்தில் ஜமீன் கைமாறியது. கிடைத்த பணமும் வெகு சீக்கிரமாகவே கரைந்து இப்பொழுது எஞ்சி நின்றதெல்லாம் ஜமீன் பங்களா வீட்டைச் சுற்றியிருந்த சில மொட்டை ஆலமரம், மாமரம் இவைதான்.

ஆனால் முத்துக்கிருஷ்ணத் தேவருக்காகவோ என்னவோ இன்னும் ஒரே ஓர் ஆஸ்தி மட்டும் விட்டுவைத்திருந்தார்கள். அதாவது 17ம் நூற்றாண்டில் தமிழகத்தில் பிரசித்தமாக இருந்த அமர சைத்ரிகன் ஒருவனை அவனுடைய முன்னோர்களில் ஒருவர் வைத்து ஆதரித்து வந்தார். அவன் தீட்டிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அற்புதச் சிற்பங்கள் கணக்கற்றவை. ஆனால் காலத்துக்கும் கரையானுக்கும் தப்பி ஓர் இருபது சித்திரங்கள் எஞ்சி நின்றன. அவைகளைத் தேவர் தன்னுயிராக மதித்துக் காத்து வந்தார். வம்ச பரம்பரையாக வந்த கலையுணர்ச்சி அவரை மட்டும் விட்டுவிடுமா என்ன?

சௌந்தரம் மெட்ரிகுலேஷன் வகுப்பு வருவதற்குள் அவனுடைய தமக்கைகள் மூவருக்கும் கல்யாணம் செய்ய வேண்டி வந்தது. பழைய தோரணையிலேயே கல்யாணம் நடந்தது. நான்கு நாட்களும் பாண்டும், வாத்தியமும் முழங்கின. ஊருக்கெல்லாம் விருந்தளித்தார். மூன்று பெண்களுக்கும் ஏதோ கொஞ்சம் நல்ல இடமாகவே கிழவர் கல்யாணம் செய்து வைத்தார். அவர்களது கல்யாணத்தின் போது சௌந்தரபாண்டியனுக்கு வயது பன்னிரெண்டு. அதற்கப்புறம் அவனை இண்டர்வரை படிக்க திருநெல்வேலிக்கு அனுப்பி வைத்தார். அதற்குமேல் படிக்க வைக்க அவருக்குச் சக்தியில்லை. சௌந்தரம் எங்கேயோ சென்னையில் ஒரு நூறு ரூபாயில் குமாஸ்தாவாகத் தான் அமர்ந்தான்.

சென்னையில் அதிர்ஷ்டவசமாக சௌந்தரத்துக்கு நல்ல சிநேகிதராக ஆராய்ச்சிக்கார நாயுடு கிடைத்தார். ராஜாராம் நாயுடு பழைய நாணயங்கள், நூல்கள், சித்திரங்கள் இவைகளை சேகரித்து வைப்பவர். பேச்சுவாக்கில் ஒரு நாள் சௌந்தரம் தன் தந்தை வைத்திருக்கும் சித்திரங்களைப் பற்றி நாயுடுவிடம் சொன்னான். அந்தச் சித்திரங்கள் 300 வருஷங்களுக்கு மேற்பட்டவை என்று தெரிந்ததும், ராஜாராம் நாயுடுவுக்கு அவற்றை எப்படியாவது தன்னுடைய அற்புத சேகரங்களோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. அவைகளைக் கேட்டால், சௌந்தரம் என்ன சொல்லுவானோ என்று உள்ளூர ஒரு பயமு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருந்தது. கடைசியில் கொஞ்சம் துணிந்து அதையும் கேட்டுவிட்டார்.

அதைக் கேட்டதும் சௌந்தரம் திடுக்கிட்டான். தன் தகப்பனார் அந்தச் சித்திரங்களின் மேல் வைத்திருக்கும் அன்பை அவன் நன்கறிவான்.

"சௌந்தரம், நீங்கள் அவைகளை எனக்கு இனாமாகத் தரவேண்டாம். கூடவே ஓராயிரம் ரூபாயும் தரச் சித்தமாயிருக்கிறேன்" என்றெல்லாம் ஆசைகாட்டிப் பார்த்தார் நாயுடு.

"நாயுடு காரு, தயவு செய்து மன்னிக்க வேண்டும். ஏதோ ஆண்டவன் கிருபையால் சௌக்யமாகவே இருந்து வருகிறோம். அந்தச் சித்திரங்களை விற்று வரும் பணம் இப்பொழுது தேவையில்லை" என்று தாழ்மையுடன் சௌந்தரபாண்டியன் தெரிவித்துக் கொண்டான்.

ராஜாராம் அத்துடன் மனந்தளரவுமில்லை, திருப்தியடையவுமில்லை.

"சரி தயவு பண்ணி ஒருமுறை அந்தச் சித்திரங்களை நான் பார்க்கவாவது ஏற்பாடு செய்வீர்களா?" என்று கேட்டுக்கொண்டார்.

சௌந்தரம் சந்தோஷமாக ஒப்புக் கொண்டான் கோடை விடுமுறைக் காலத்தில் நாயுடுவையும் கூட்டிக் கொண்டு ஊருக்கு வந்து சேர்ந்தான்.

2

ஆராய்ச்சிக்கார நாயுடுவுக்கு நினைத்ததற்கு மேலாக வரவேற்புக் கிடைத்தது. சித்திர விஷயங்களில் அக்கரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டவர் என்று தெரிந்ததும், முத்துகிருஷ்ணத் தேவரின் உற்சாகம் கரைபுரண்டோடியது. குபேரபுரத்துவாசிகளில் கலையைக் கண்டவர் யார்? சித்திரத்தின் சிறப்பைக் கண்டவர் யார்? அன்றுடம் வயிற்றுப் பாட்டுக்குஉழைத்துப் பாடுபடும் மக்கள் பாதிக்கு மேல். அவர்களுக்கு இதிலெல்லாம் கவனம் செலுத்தத் தான் நேரமேது?

மத்தியானம் சாப்பாட்டுக்கு மேல் சித்திரங்களையெல்லாம் எடுத்து ஒவ்வொன்றுகக் காட்டினார் தேவர். அந்தந்தச் சித்திரங்களில் உள்ள நுட்பங்களையெல்லாம் எடுத்து விவரித்தார். ஆனல் நாயுடுவோ அந்தச் சிற்பங்களின் ஒப்பற்ற சௌந்தர்யத்தில் தம்மை மறந்தவராய் அவர் சொல்வதை எத்தனை முறையானலும் கேட்கச் சித்தமாயிருந்தார்

பக்கத்தில் உட்கார்ந்திருந்த சௌந்தர பாண்டியன், மெதுவாக 'நீங்களே கேட்பதானல் கேட்டு விடுங்கள்' என்று கண் ஜாடை காட்டினன். நாயுடு சுற்றி வளைத்துப் பேச ஆரம்பித்தார்.

"இந்தச் சித்திரங்கள் எவ்வளவு காலமாக உங்களிடம் இருக்கின்றன?'' என்று பேச்சைத் துவக்கினர்.

"எவ்வளவு நாட்களென்று நிச்சயமாகத் தெரியாது. ஆனல் இவை தீட்டப்பெற்று குறைந்தது முந்நூறு வருடங்களாவது ஆகியிருக்க வேண்டும். இதோ இருக்கிறதே இதில் இருப்பவர் என் முன்னேர்களில் ஒருவரான சங்கிலித் தேவர். திருமலைநாயக்கரிடம் மெய்க்காப்பாளனக இருந்தார். ஒருசமயம் திருமலை நாயக்கர் பெரிய விபத்தில் சிக்கிக் கொண்டபோது, சங்கிலித் தேவர் தம்முயிரையும் பாராட்டாது, அரசரைக் காப்பாற்றினராம். அதற்காக பாண்டியர் அன்பாக சங்கிலித் தேவருக்கு ஒரு வைர வாளை அளித்தது மட்டுமின்றி, அக்காலத்தில் பிரசித்தமாயிருந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சைத்ரிகன் ஒருவனைக் கொண்டு தேவருடைய திருஉருவத்தையும் வரையச் சொன்னாராம். இங்குள்ள சித்திரங்கள் எல்லாமே அந்த "சிவவர்மன்" தீட்டியவைகள் தான் என்று என் பாட்டனார் சொல்லிக் கேட்டிருக்கிறேன்" என்றார் முத்துகிருஷ்ணத் தேவர்.

மறுபடி தேவரே பேச ஆரம்பித்து விட்டார்: "நாயுடு ஐயா, தங்களைப் பற்றி சௌந்தரம் எவ்வளவோ சொல்லியிருக்கிறான். அப்படிப்பட்ட ஆர்வம் இப்பொழுதெல்லாம் யாருக்கு இருக்கிறது? நானும் உங்களைப்போலத்தான். என்னுடைய சித்திரங்கள் என்றால் எனக்கு உயிர். என்னுடைய குடும்பத்தார் ஒரு காலத்தில், எவ்வளவோ கலைஞர்களை வைத்து ஆதரித்து வந்தார்கள். ஆனால் இன்று அதற்கு வழியில்லை. எனினும் இந்தச் செல்வங்களையாவது வைத்து ஆதரிக்க முடிகிறதே என்று எனக்குத் திருப்தி. என் உயிர் போனாலும் இந்தச் சித்திரங்களைமட்டும் விட்டுப்பிரிவதில்லை யென்று உறுதி கொண்டிருக்கிறேன். என் குடும்பத்துக்கே இவை பெரிய ஆஸ்தி என்பது என் அபிப்ராயம்" என்றார். அவருடைய குரலில் பெருமையும், உறுதியும் ஒலித்தன.

அதற்கு மேல் சித்திரங்களை விற்கும் விஷயமாகப் பேசுவதற்கு நாயுடுவுக்குப் பைத்தியமா? அவர் வெறும் கையுடன் சென்னைக்குத் திரும்பினார்.

3

விடுமுறைமுடிந்து சௌந்தரம் சென்னைக்குத் திரும்பினான். அந்த சமயத்தில்தான் ஒரு நல்ல சந்தர்ப்பம் அவனுக்குக் கிடைத்தது. சர்க்கார் உத்யோகமொன்றுக்கு ஆண்டுதோறும் எண்பது பேர் எடுப்பதாகவும் அதற்கு வேண்டிய தகுதிகளெல்லாம் சௌந்தரத்தினிடம் இருப்பதாகவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவனுடன் படித்த நண்பனொருவன் எழுதியிருந்தான். சௌந்தரம் அவசரம் அவசரமாக அதற்கு வேண்டிய மனு வெல்லாம் சேகரம் செய்தான். ஆனால் அதனடியில் கண்ட வார்த்தைகள் அவனுக்குத் திகைப்பூட்டின. "வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டால் மூவாயிரம் ரூபாய் ஜாமீன் கட்டவேண்டும்." மூவாயிரம்ரூபாய்! இத்தனை பணத்துக்கு சௌந்தரம் எங்கே போவான்? அவனுடைய சம்பாத்யத்தில் இத்தனை மீத்து வைக்க முடியுமா? அல்லது ஊரில்தான் யாராவது சொத்து வைத்திருக்கிறார்களா? காரியம் கை கூடாது போலிருக்கிறதே என்று சௌந்தரம் கவலையில் ஆழ்ந்தான்.

அன்று மாலையில் சிந்தனைச் சுழலில் சிக்கிய வண்ணம் நீலக் கடலின் பரந்த வெண் மணற்பரப்பில் உட்கார்ந்திருந்தான் சௌந்தரம். அப்போதுதான் அந்த யோசனை உதயமாயிற்று. சித்திரங்களை விற்று விட்டால் ஒருவேளை பணம் கிடைக்கலாம் என்று அவனுடைய உள்ளம் கூறியது. ஆனால் தந்தை அதற்கு ஒருக்காலும் சம்மதிக்கமாட்டார் என்ற சந்தேகமும் எழுந்தது. இத்தனை முக்கிய விஷயமாக இருக்கும் போது கூடவா பிடிவாதம் பிடிப்பார் என்ற சமாதானமும் அவனுள்ளே எழுந்தது. சரி, எதற்கும் நாயுடுவைத் தேடிப் போகலாம் என்று கிளம்பினான். அதற்குள் நல்ல காலமாக அவரே எதிரில் வந்துவிட்டார்.

"என்ன சௌந்தரம், பெரிய யோசனையில் ஆழ்ந்திருக்கிறீர்களே?" என்றார் நாயுடு.

சௌந்தரம் மெள்ள மெள்ள விஷயம் முழுவதையும் சொன்னான். ஆனால் சித்திரங்களை விற்கும் யோசனையை மட்டும் சொல்லவில்லை. ஆனால் நாயுடுவே அதைக் கேட்டுவிட்டார்.

"சௌந்தரம், நீர் கோபப்படாமலிருந்தால் ஒன்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்கிறேன். உமக்கு ரூபாய் மூவாயிரம் தானே வேண்டும், நான் நாலாயிரமாகத் தருகிறேன். உமக்கு வேண்டியது பணம். எனக்கு வேண்டியது அந்தச் சித்திரங்கள். உங்கள் வீட்டில் கிடந்தால் அவை எப்படியும் விரைவில் வீணுகி விடும். ஆனுல் என்னிடமிருந்தால் சரியான முறையில் அவைகளைப் பாதுகாப்பேன். அந்தப் படங்கள் உங்களிடமிருந்து கிடைத்தவை என்பதையும் உலகறிய வைக்கிறேன். என்ன சொல்கிறீர்?'' என்ருர்.

தன் எண்ணம் இத்தனை சடுதியில் நிறைவேறியது பற்றி செளந்தரம் உள்ளூற மகிழ்ச்சியடைந்தான்.

''தங்களுடைய உதவிக்கு மெத்த வந்தனம். நான் ஊருக்குப் போய் அவைகளைக் கொண்டுவருகிறேன்'' என்று செளந்தரம் கிளம்பினுன். வேலை நிச்சயமென்று அவனுக்கு மகிழ்ச்சி. சித்திரங்கள் நிச்சயமென்று நாயுடுவுக்கு மகிழ்ச்சி. அன்றிரவே செளந்தரம் திருநெல்வேலிக்குப் புறப்பட்டான்.

4

வெளியில் வெய்யில் உக்கிரமாகக் காய்ந்து கொண்டிருந்தது. அன்று வெள்ளிக்கிழமை. வீட்டில் நல்ல சாப்பாடு. முத்துகிருஷ்ணத்தேவர் சாப்டாடுமுடிந்து கூடத்திற்கு வந்தார். கையில் பத்திரிகை, வெற்றிலை, சீவல், புகையிலை சகிதம் ஹாலோ ரமாகப் போடப்பட்டிருந்த உடைந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். அந்த நாற்காலியில் தான் ஒரு காலத்தில் வெல்வெட்டு மெத்தையுடன், மேலே ஜரிகை துப்பட்டாவால் மூடப்பட்டு, அந்த வம்சத்தின் அதிபதிகள் அமர்ந்து வந்தது. ஆனுல் இப்பொழுது அதில் சரிகைத் துப்பட்டா இல்லை, வெல்வெட்டுத் துணியும் கிழிந்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவருடைய ஏழ்மையைக் குறிப்பதுபோல் பல இடங்களில் பஞ்சும் வெளியே வந்திருந்தது.

சௌந்தரம் காலையில் ஸ்ரீவைகுண்டம் போனவன் இன்னும் வந்து சேரவில்லை. வீட்டில் ஒரே நிசப்தம் குடி கொண்டிருந்தது. வெற்றிலையை மென்று கொண்டே தேவர் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார். பத்திரிகையிலிருந்த கவனம் புகையிலையின் மேல் திரும்பியது. குனிந்து புகையிலை டப்பாவில் கையை விட்டுத் துழாவினார். டப்பா காலி.

"என்ன எளவாயிருக்கு இது? புகையிலைக்கு எங்கே போறது? சௌந்தரம் வாங்கிட்டு வருவான்னுபார்த்தா அவனையும் இன்னும்காணலியே" என்றுதேவர் தனக்குள்ளாகச் சொல்லி முடிவதற்குள் சௌந்தரம் புகையிலைக் கட்டுடன் உள்ளே நுழைந்தான். புகையிலையை தந்தையிடம் நீட்டினான்.

"என்ன வெய்யிலடிக்குது? முன்னாடியே வரக்கூடாதா? போய்ச் சாப்பிடு" என்று பரிவோடு மகனை உள்ளே அனுப்பினார் கிழவர்.

சௌந்தரம் சாப்பிட்டு வரும்போது கிழவர் ரொம்பவும் உற்சாகமாகக் காணப்பட்டார். நல்ல சாப்பாடும் கொடிக்கால் வெற்றிலையும், புதுப் புகையிலையும் உள்ளே போயிருந்ததல்லவா? தந்தையையே பார்த்துக் கொண்டிருந்த சௌந்தரத்துக்கு தான் சென்னையிலிருந்து வந்த விஷயத்தைச் சொல்வதற்கு இதைவிட நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது என்று உணர்ந்தான். மெதுவாக வலையை விரித்தான்.

"அப்பா நான் எதற்காக இப்ப பட்டணத்திலிருந்து வந்திருக்கேன்னு நீங்கள் கேட்கவே இல்லையே?"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"நல்லாருக்கே சௌந்தரம், சொந்த வீட்டுக்கு வரதுக்குக் காரணம் காட்டணுமா என்ன?" என்று சிரித்தார் பெரியவர்.

"நான் சும்மா வரலேப்பா. எனக்கு சர்க்கார் வேலை ஒண்ணு கிடைக்கும் போல இருக்கு. சம்பளம் முந்நூறு ரூபாய் கிடைக்கும். அதைத்தான் கேட்கலாம்னு புறப்பட்டு வந்தேன்"

கிழவரின் முகத்தில் ஆனந்தமும், ஆத்திரமும் தென்பட்டன.

"அட, இதைப் பற்றி எங்கிட்ட என்ன கேள்வியப்பா? உடனே சேர்ந்திட வேண்டியது தானே?"

"அதிலே ஒரு விஷயம். அந்த வேலைக்கு சேரவங்க முதல்லே மூவாயிரம் ரூபாய் ஜாமீன் கட்டணுமாம்" என்றான் சௌந்தரம்.

கிழவரின் முகம் வாடியது. அவர் சிந்தனையிலாழ்ந்தார். அவர் மறுபடி பேச முயன்ற போது, அவரது கண்களிலும், குரலிலும் சோகமும் சலிப்பும் தென்பட்டன.

"அத்தனை பணத்துக்கு நாம் எங்கே போகிறது? ஏதோ இருக்கிற வேலை போதுமப்பா. கொடுத்து வைச்சது தானே கிடைக்கும். விட்டுத் தள்ளு."

"இல்லையப்பா, மூவாயிரம் ரூபாய் கொடுக்கக்கூட ஒருவர் தயாராயிருக்கிறாரப்பா."

"என்னது உன்னைநம்பி அத்தனை பணம் கொடுக்கத் தயாராயிருக்கிறாரா ஒருவர்?" கிழவரின் கண்களில் நீர் ததும்பியது.

"ஆனால் ஒரு சின்ன விஷயம்?"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

— சௌந்தரம் மேலே சொல்வதா வேண்டாமா என்று தயங்கினான்.

"என்ன தம்பி, என்ன விஷயம்? எதுவானாலும் சொல்லு. இந்த மாதிரி சந்தர்ப்பம் இன்னொரு தடவை கிடைக்குமாப்பா" என்றார் கிழவர் படபடப்புடன்.

"அப்பா, நம்மகிட்ட இருக்கும் சிவவர்மன் சித்திரங்களைக் கொடுத்தால், ஒருவர் ரூபாய் நாலாயிரம் வரை கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்."

இதைச் சொல்வதற்குள் சௌந்தரத்தின் குரல் கம்மியது.

கிழவருக்கு விஷயம் விளங்கவே சில நிமிஷங்கள் பிடித்தன. சித்திரங்களை விற்க வேண்டும் என்று தெரிந்ததும் அவருக்கு மூச்சே அடைத்துவிடும் போலிருந்தது. பின் ஒரு வழியாகச் சமாளித்துக் கொண்டு பேச ஆரம்பித்தார்;

"சௌந்தரம் என்ன யோசனையப்பா இது? நம்முடைய சித்திரங்கள் இன்று நேற்றைய சொத்தா? தலைமுறை தலைமுறையாக நம்மிடம் இருந்து வருவதல்லவா? என்னவோ இன்று நாம் அதிர்ஷ்ட ஹீனர்களாக ஜமீனை இழந்துவிட்டு உட்கார்ந்திருக்கிறோம். ஆனால் என்றுமே நாம் இப்படி இருந்தவர்களா? நமது குலப்பெருமை என்ன? நம்முடைய முன்னோர்கள் எத்தனை புலவர்களையும் சைத்ரிகர்களையும் வைத்து ஆதரித்து வந்தார்கள். நம்மைத்தான் பிறர் வைத்து ஆதரிக்கும்படி வைத்து விட்டான் இறைவன். அதற்காக நம்முடைய ரசிகத் தன்மையைப் பறி கொடுத்து விட முடியுமா?

"எனக்கு அந்தச் சித்திரங்களிடம் எத்தகைய பக்தி உண்டென்பதை மறந்து விட்டாயா? உயிர் போனாலும் நான் அவைகளை விட்டுப் பிரியமாட்டேன். என் காலத்திற்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குப் பின் என்ன வேண்டுமானாலும் செய்து கொள். ஆனால் என் கண் முன்னிலையில் அவற்றை விற்று விடாதே.''

சௌந்தரம் அசந்து போனான். கண்களில் நீர் துளித்தது. வாய் விட்டு அழவில்லை. அவ்வளவு தான்.

''அப்பா, நான் புத்தியற்றுப் பேசி விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்'' என்று தந்தையிடம் தலைவணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

5

தினக்கு முந்நூறு ரூபாய் வேலை கிடைக்கும் வாய்ப்பை இழந்தவனாய், சௌந்தர பாண்டியன் சென்னைக்குத் திரும்பினான்.

''ஆஹா, அந்தச் சித்திரங்களில்தான் அப்பாவுக்கு எத்தனை அன்பு! அதையறியாமல் அவரது மனத்தைப் புண்படுத்தி விட்டோமே'' என்று அவன் கண்கலங்கினான்.

இனிமேல் என்ன விஷயமாக இருந்த போதிலும், அந்தச் சித்திரங்களை விற்பதை மட்டும் மறந்துவிட வேண்டும் என்று தனக்குள் தீர்மானமும் செய்து கொண்டான்.

மாதங்கள் உருண்டோடின. நாலைந்து மாதங்களுக்குப் பின் திடீரென தந்தைக்கு உடல்நிலை சரியில்லையென்று கடிதம் வந்தது. இம்முறை முதுமைப் பருவத்தினாலும், கடுஞ் சுரத்தினாலும் நடமாடக்கூடச் சக்தியற்றவராகக் கிடந்தார் கிழவர். ஏதோ தன் சக்திக்கும் மீறி வைத்தியமெல்லாம் செய்தான் சௌந்தரம். திருநெல்வேலியிருந்து பெரிய டாக்டர்களையெல்லாம் வரவழைத்தான். சாதாரண ஜுரத்தில் ஆரம்பித்து டைபாய்டு ஜுரத்தில் கொண்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிறுத்தினார்கள். அநேகமாகத் தன் தந்தை பிழைப்பதே துர்லபம் என்றே கருதினான் சௌந்தரம். ஆனால் டாக்டர்கள் உயிருக்கு பயமில்லை என்று உறுதி கூறினார்கள். கடைசியில் இரண்டு மாதப் படுக்கைக்குப் பின் யமனோடு மன்றாடி உயிர் பெற்றெழுந்தார் முத்துகிருஷ்ணத் தேவர். ஆனால் அவருடைய தள்ளாமையும் நோயும் சேர்ந்து அவருடைய கண் பார்வையை அபகரித்துக் கொண்டன.

6

அடுத்த ஆண்டும் அதே வேலைக்கு ஆட்களெடுப்பதாகச் சர்க்கார் அறிக்கை வெளிவந்தது. முதன் முதலில் சௌந்தரம் அதைக் கவனிக்கவேயில்லை. அவனது நண்பனே, "போன வருஷம்தான் கவனியாமல் விட்டுவிட்டாய். இப்பொழுதாவது அந்த வேலைக்கு மனுப் போடு" என்று சௌந்தரத்தை வற்புறுத்தினான். சௌந்தரம் மறுபடியும் யோசனையிலாழ்ந்தான். ஆனால் மூவாயிரம் ரூபாய்க்கு எங்கே போவது? ஒரே வழிதான் உண்டு. அதாவது சித்திரங்களை நாயுடுவிடம் விற்றுவிட வேண்டும். ஆனால் அவைகளை விற்க முடியுமா?

தந்தை நோய்வாய்ப்பட்டுக் கிடந்தபோது அவர் கூறிய சில வார்த்தைகள் இன்னும் அவனுடைய காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன. எத்தனையோ முறை அந்தச் சித்திரங்களைப் பார்க்க வேண்டுமென்று விரும்பினார். கடைசியில் அவர் கண்ணிழந்ததும் வேறொன்றையும் நினைக்கவில்லை. இதைத்தான் சொன்னார்:

"சௌந்தரம் அநியாயமாகக் கண் பார்வை போய்விட்டதே. இனிமேல் எப்படி என் சித்திரச் செல்வங்களைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்டு மகிழ்வது?'' என்று அவர் கேட்டது அவனுக்கு நினைவு வந்தது.

...அதே சமயத்தில் அவனுடைய மனத்தில் பளிச்சென அந்த யோசனை தோன்றியது அதன்படி செய்வதென்றும் தீர்மானித்துவிட்டான். முதலில் சற்றுத் தயக்கமாகத் தானிருந்தது. கடைசியில் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சௌந்தரம் சித்திரங்களை விற்றுவிட்டான். நாயுடுவும் பெருமகிழ்ச்சியோடு நாலாயிரம் ரூபாயையும் கொடுத்து, மேலும் சௌந்தரத்துக்கு நல்ல சிபாரிசு செய்து அந்த வேலையையும் வாங்கித் தந்தார்.

7

எங்கேயோ சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்த சோமசுந்தரம் பிள்ளை அன்று குபேரபுரிக்கு விஜயம் செய்தார். அவர் சர்க்கார் சித்திரசாலை நிர்வாகி. மிகுந்த கலையார்வம் படைத்தவர். முத்துகிருஷ்ணத் தேவரின் சித்திரங்களைப் பற்றிய சேதி அவர் காதிலும் விழுந்திருந்தது. எனவே அவற்றைக் காண வேண்டி அங்கு வந்து சேர்ந்தார். சென்னையிலிருந்து திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டு விடுமுறையில் வந்திருந்த சௌந்தரம் வீட்டில் இருந்தான். இப்பொழுது அவன் ஒரு ரயில்வே உத்தியோகஸ்தன். குளித்துவிட்டு வீட்டின் முன்புறம் நடந்துகொண்டிருந்த கொத்து வேலையை மேற்பார்வை பார்த்துக்கொண்டிருந்தான். சோமசுந்தரம் பிள்ளை உள்ளே நுழைந்தார்.

''தாங்கள் யார் தெரியவில்லையே?'' என்றான் சௌந்தரம்.

''நான்தான் சோமசுந்தரம் பிள்ளை. நான் வருவதைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறித்து தேவரவர்களுக்கு முன்னமேயே எழுதியிருக்கிறேன்.''

அவர் வந்த விஷயம் தெரியாமல் அவரை உள்ளே அழைத்துச் சென்றான். கிழவருக்குப் பொக்கை வாயாக இருந்தும்கூட வாயெல்லாம் பல்லாகிவிட்டது.

''வாருங்கள் ஐயா வாருங்கள். உங்களைப் போன்ற அறிஞர்கள் எல்லாம் இந்த இடத்திற்கு வர நாங்கள் ரொம்பவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்று தான் இருந்த இடத்திலிருந்து எழுந்து அவரை வரவேற்றார் தேவர். பின் மகனிடம் திரும்பி, ''தம்பி, உன்னிடம் சொல்ல மறந்துவிட்டேன். ஐயா யார் தெரியுமா? சென்னை சித்திரசாலையின் அதிகாரி. நம்மிடமிருக்கும் சித்திரங்களைப் பற்றிக் கேள்விப்பட்டாராம். உடனே வருவதாக எழுதிவிட்டார்கள்'' என்று அடுக்கிக்கொண்டே போனார்.

சௌந்தரத்துக்குத் தலையில் இடி விழுந்தது போலாயிற்று. என்ன செய்வதென்றறியாமல் மென்று விழுங்கினான். அதற்குள் பெரியவர்,

''தம்பி! சித்திரங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு வரயா?'' என்று மகனுக்கு உத்தரவு போட்டார்.

''ஏனப்பா, வந்தவர்கள் குளித்துச் சாப்பிட்ட பின் காட்டலாமே?'' என்று சௌந்தரம் இழுத்தான்.

''ஆமாம் சௌந்தரம்! மறந்துட்டேன். இந்தச் சித்திர விஷயம் என்றால் இப்படிப் பைத்தியமாகப் போயிடறேன். ஐயாவை ஸ்நானம் பண்ண அழைச்சுண்டு போ தம்பி'' என்று கிழவர் உபசாரம் செய்தார்.

சோமசுந்தரம் பிள்ளையைக் குளிக்க அழைத்துச் செல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லும்போது. "ஸார். உங்களிடம் ஒரு ரகசியம் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்படி வாருங்கள்" என்று அவரை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றான். ஆதிமுதல் நடந்த விஷயங்களையெல்லாம் எடுத்துக் கூறி, தான் அச் சித்திரங்களை விற்க நேர்ந்த அவசியத்தையும் சொல்லி விட்டுக் கடைசியில் அவரிடம் ஒரு வேண்டுகோளும் விடுத் தான்

"ஸார், நீங்கள் எனக்கு ஒரு பெரிய உபகாரம் செய்ய வேண்டும். இங்குள்ள சித்திரங்கள் உண்மைச் சித்திரங் களில்லை என்று தெரிந்தால் என் தந்தை மனம் புண்ணாகி விடும். அந்த அதிர்ச்சியில் என்ன நேரும் என்றே சொல்ல முடியாது. நீங்கள் பெரிய கலா ரசிகர். நல்ல மேலான சித்திர சிருஷ்டிகளை அனுபவிப்பது போலவே இந்தப் போலிச் சித்திரங்களையும் தாங்கள் அனுபவிக்க வேண்டும். மறுமுறை நான் சென்னைக்கு வரும்போது தங்களை நாயுடு விடம் அழைத்துச் சென்று அச்சித்திரங்களைக் காட்டு கிறேன்."

சோமசுந்தரம் பிள்ளைக்குத் தான் கேட்பது கனவா, நனவா என்றுகூட சந்தேகம் வந்துவிட்டது. தன் பிள்ளை மேலான பதவிக்கு வந்து, தனது தரித்திர தசை தொலை வதையும்விட கலையைப் பெரிதாக எண்ணும் அந்தக் கிழவரைப் போற்றினார். சௌந்தரத்துக்கும் ஆறுதல் கூறினார். அப்படியே நடிப்பதாகவும் ஒப்புக்கொண்டார்.

குளித்துச் சாப்பாடு முடிந்தது. மூவரும் ஹாலில் வந்து அமர்ந்தனர்.

புகையிலையை மென்றுகொண்டே, "தம்பி, சித்திரங் களை எடுத்துக்கிட்டு வா" என்றார் முத்துகிருஷ்ணத் தேவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு காலத்தில் உண்மையான சித்திரங்களைக் கட்டி வைத்திருந்த அதே கருப்புப் பட்டுத் துணியில்தான் இந்தப் போலிப் படங்களும் இருந்தன. நடுங்கும் கைகளுடன் கிழவர் முடிச்சை அவிழ்த்து அந்தச் சித்திரங்களை எடுத்தார். சோமசுந்தரம்பிள்ளை அகங்காமல் கிழவருடைய கண்ணற்ற முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். சந்தோஷ மிகுதியால் கிழவரின் குரல் நடுங்கியது.

"பிள்ளைவாள், தங்களை மாதிரி கலையை அனுபவிக்கத் தெரிஞ்சவங்க இதுகளைப் பார்க்கணும் என்பதுதான் என்னுடைய ஆசை. இந்தப் படங்களை எத்தனை வருஷங்களாக நான் அனுபவிக்கிறேன் தெரியுமா? ஆனல் இந்தக் கண் போய் ஒன்றரை வருஷமாகுது' இருந்தாலும் இவைகளைக் கையால் தடவிப் பார்த்துக் கொள்வேன்... இதோ பார்த்தீர்களா? இதுதான் இந்த ஜமீனுக்கே காரணமான சங்கிலித் தேவர். எங்களுடைய முன்னேர். பெரிய வீர பராக்கிரமங்களெல்லாம் செய்தவர்" என்று சொல்லிக் கொண்டே ஒரு பெரிய படத்தையெடுத்தார். ஆனல் இன்று அதில் சங்கிலிக்குப் பதிலாக யாரோ கத்துக்குட்டி சித்திரக்காரன் வரைந்த நாடக மேடை ராஜா தானிருந்தார்.

"எங்க சங்கிலித் தேவர் முகத்தில்தான் என்ன கம்பீரம்! வீரமும் பராக்கிரமமும் எழுதி ஒட்டியிருக்குது பார்த்தீர்களா?" என்று கிழவர் விவரணை கூறினர்.

"ஆமாமாம், ஜீவகளை ததும்புகிறது" என்ருர் சோமசுந்தரம்.

"அடுத்ததாக இன்னென்று. இது மகாபாரதக் கதையிலுள்ளது. பாஞ்சாலி வீர சபதமிடும் இடம். பாஞ்சாலி முகத்திலேதான் என்ன கோபம் ஜ்வலிக்கிறது பார்த்தீர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களா? கண்கள் கனலைக் கக்குது. என்ன அழகான சித்திரம்!''

''அதிலும் இத்தனை அவமானத்திலும் தன்னிலை தவருது, முகத்தில் ஒரு விதக் கோபமோ, சிடுசிடுப்போ இல்லாமல் அவர் தீட்டியிருக்கும் தருமபுத்திரனுடைய உருவம் ரொம்பவும் பிரமாதம்'' என்று சோமசுந்தரம் ஆர்ப்பரித்தார்.

''இந்தச் சித்திரங்களெல்லாவற்றிலும் சிறந்தது இது தானுங்க. வேட்டைக்காரன் என்ற சித்திரம் பாருங்களய்யா, அந்த வேட்டைக்காரனது முகபாவத்தை'' என்று வேருெரு படத்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டே வந்த அவருடைய குரல் சட்டென நின்றது. ஒரு முறை சட்டத்தைத் தடவிப் பார்த்தார்.

''தம்பி இதென்ன சட்டம் புதிதாக இருக்குதே'' என்று சந்தேகத்துடன் கேட்டார்.

சௌந்தரத்துக்குப் பதில் சொல்ல முடியாமல் நாத் தழுதழுத்தது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு,

''ஆமாம்ப்பா, நம்ப குடும்ப சொத்தாச்சேன்னு அவைகளுக்குப் புதிதாகச் சட்டம் போட்டேன்'' என்று சொல்லி முடித்தான்.

இதைக் கேட்டதும் கிழவரின் கண்ணற்ற முகத்திலும் ஒரு மலர்ச்சி தென்பட்டது.

''தம்பி, அப்படித்தாம்பா செய்யணும்'' என்று சொல்லிவிட்டு மறுபடி பிள்ளையிடம் திரும்பி, ''வேட்டை நாய்கள் மோப்பம் பிடிக்கிற அழகைப் பார்த்தீங்களா?'' என்று தடவிக் கொண்டிருந்தவர் மறுபடியும் பேச்சை நிறுத்தினர். அவருடைய முகம் இருளடைந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஏன் சௌந்தரம். இது வேட்டைக்காரன் சித்திரந் தானே?"

"ஆமாம்."

"பின் அந்த வேட்டை நாயின் காதோரமாகச் சித்திரம் சற்றுக் கிழிந்திருக்குமே?" என்று கேட்டார்.

சோமசுந்தரம் பிள்ளை ஆச்சரியத்தில் மூழ்கிப் போனார். "ஆகா, இந்தச் சித்திரங்களில்தான் இவருக்கு என்ன அன்பு, ஞாபக சக்தி" என்று நினைத்துக்கொண்டார்.

'ஆமாம், இது வேட்டைக்காரன் சித்திரம்தான். தங்கள் மகன் இவைகளைப் பாதுகாக்க வேண்டி பின்னால் ஒட்டுப் போட்டிருக்கிறார்" என்று சொன்னபோது அவருடைய கண்களிலும் கண்ணீர் பொங்கி வழிந்தது.

"அடுத்தது கார்த்தவீர்யனுடைய பட்டணம். இது குஹனும், ராமனும் சந்திக்கும் கட்டம். கங்கையின் நீர் பற்பல இடங்களில் பற்பல வர்ண ஜாலங்களோடு மாலை வெயிலில் பிரகாசிப்பது எப்படி இருக்குது?" என்றார் முத்துகிருஷ்ணத் தேவர்.

"ஆகா என்ன அற்புதம் தேவரே, இந்தச் சித்திரங்களைப் பார்த்து ஒரே பரவசமாகிவிட்டேன். எங்கள் சித்திரசாலையில்கூட இவ்வளவு உயர்ந்த சித்திரங்கள் அதிகமில்லை. உங்களுடைய கலைத்திறனை நான் மிகவும் பாராட்டுகிறேன்" என்று சோமசுந்தரம் பிள்ளை அடுக்கிக் கொண்டே போய்க் கடைசியில், "உங்களுக்குத்தான் கண் பார்வை போய்விட்டதே. இவ்வளவு ஞாபகமாக சித்திரங்களின் ஒவ்வொரு நுணுக்கத்தையும் எப்படி மனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேள்வியும் கேட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முத்துகிருஷ்ணத் தேவரின் பதில் கம்பீரமாக வெளி வந்தது.

"பிள்ளைவாள், கலைஞனுக்கு இந்த வெளிக்கண்கள் போய்விட்டால் என்ன? கலைக் கண்கள் எங்கே போய் விட்டன?"

பொங்கி வந்த அழுகையைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான் செளந்தரம்.

9

சோமசுந்தரம் பிள்ளை ரொம்பவும் அன்பாக முத்துகிருஷ்ணத் தேவரிடம் விடை பெற்றுக்கொண்டார். செளந்தரம் அவரை வழியனுப்ப வாசல் வரை போனவன் அவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"பிள்ளைவாள், இன்றுதான் என்னுடைய அறியா யாமையை உணர்ந்து கொண்டேன். நடுவில் அவரிடம் உள்ளதைச் சொல்லிவிட வேண்டுமென எத்தனையோ முறை என் உள்ளம் துடித்தது. நல்ல காலமாக அப்படிச் செய்யவில்லை. கண்ணற்றவர் அவரா நானு என்பதுதான் எனக்கு இப்பொழுது சந்தேகம்" என்று சொல்லிப் பொல பொலவென்று கண்ணீர் உகுத்தான்.

பிள்ளை மௌனமாக விடைபெற்றுக் கொண்டார்.

— தினமணி கதிர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மலராள்

எஸ். கே.

அது ஒரு நறுமலர்ப் பூங்கா. பல்வகை மலர்கள் மலர்ந்து குலுங்கும் இடம். அவற்றில்தான் எவ்வளவு வகைகள்! எத்தனை நிறங்கள்! பசும் புல்லின் நிறம், கருமேகத்தின் நிறம், குங்கும நிறம், சந்தன நிறம், பஞ்சவர்ணம், இன்னும் எத்தனையோ! மணம் நிறைந்தவை, மணமற்றவை, முள்ளில் மலர்பவை, மலர்ந்தவுடன் வாடி மடிபவை, வாடாமலே இருப்பவை, பூவைக்குகந்தவை, பூசைக்குகந்தவை என்றெல்லாம் பல்வேறு வகைகள்!

நம்மைப் பொறுத்தவரை அவைவெறும் மலர்தான். ஆனால் பரமனின் படைப்பில் உணர்ச்சிகள் மனித சாதிக்கு மாத்திரம்தான் சொந்தமா?

மலருடலிலே மலருள்ளங்கள் கொண்டு பல்லாயிரக் கணக்கான உயிர்கள் வாழும் நகரம் அந்தப் பூங்கா. சொல்லவொண்ணாத பலவகை ஆசாபாசங்களை உள்ளடக்கிக்கொண்டு தாங்கள் மலரும் நாளை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் மொட்டு உள்ளங்கள்; அப்போதுதான் மலர்ந்து வாழ்வின் இன்பத்தை நுகரத் தொடங்கியிருக்கும் புது மலர்கள்; இன்பந்துய்த்து, இதழ்கள் உலர்ந்து, காம்புகள் கருகிய கிழ மலர்கள்; இவை எல்லாமே இருந்தன அங்கே.

நம் கதாநாயகி மலராளுக்கு அன்று பெருநாள். அவளுக்குக் கன்னி கழியும் நாள் அது! அவளழகை எப்படி வருணிப்பது! மென்மைக்கு மலர் உவமை; மலருக்கு எது உவமை! மலராளின் நுண்ணிடையைச் சுற்றிப் பச்சைப் பசேலென்ற காம்பு. அவளுடலில்தான் எவ்வளவு 'வளைவுகள்!' மனித இனத்தில் இத்தகைய 'வளைவுகளை' இயற்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாகப் பெருத பெண்கள் அவற்றைச் செயற்கையாக உண்டாக்கிக்கொள்ள எவ்வளவு சிரமப்படுகிருர்கள்!

தூய்மையின் பிரதிபலிப்பாகத் திகழ்ந்தன அவளது வெண்ணிற இதழ்கள்; இன்னும் அவை நன்ருக மலரக்கூட இல்லே. பொழுது இன்னும் நன்கு புலரவில்லே. பொழுது புலரும்போது மலராளும் மலர்ந்து விடுவாள். அவளகத்தை இலேசாக மறைத்திருக்கும் இதழ்த்திரைகள் விலகிவிடும். பிறகு அவள் தான் இத்தனே காலமாகச் சேர்த்து வைத்திருக்கும் மகரந்தத்தையும் தேனேயும் தன்னே நாடிவரும் காதலனுக்கு வாரி வழங்குவாள். அவனுடைய அணேப்பின் இன்பப் போதையில் மயங்கித் தன்னேயே மறந்து விடுவாள். தன் வாழ்நாள் முழுதும் அவனுக்கே அடிமை செய்வாள். இது அவளது நெடுநாள் கனவு. மொட்டாயிருக்கும்போது தன்னுள்ளே மகரந்தம் வளர்வதையும் தேன் ஊறுவதையும் உணரும் போதெல்லாம் அவளது உள்ளம் குறுகுறுக்கும். உடல் புல்லரிக்கும். தேனும் மகரந்தமும் அவளுக்காகவல்ல. அவளது கரம் பிடிக்கப்போகும் காதலனுக்கு, அவற்றை அவள் அவனுக்குக் காணிக்கையாக அளிப்பாள்; அவனடையும் மகிழ்ச்சியில் தானும் மகிழ்வாள்.

அவள் இவ்வளவு காலமாகக் காத்திருந்த நாள் வந்து விட்டது. இன்னும் சற்று நேரத்தில் அவளது கனவுகள் நனவாகி விடும். பல நாட்கள் காத்திருந்தவளுக்கு இன்னும் சில நிமிடங்கள் பொறுத்திருப்பது கஷ்டமாகத்தான இருந்தது!

ஆனல் ஆவலூடேயும் அவளுக்கு உள்ளூற ஒரு விவரிக்க முடியாத பயம். முன்பின் தெரியாத ஒரு அனுபவ உலகில் முதன் முதலாகக் காலெடுத்து வைக்கும்போது பெண்மைக்கு இயல்பாக ஏற்படும் கூச்சம். அவள் பெண்மையின் பூரணப் பொலிவை எய்தி விட்ட நாள் அதை அனு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பவிக்க வரப்போகிறவன் யார்? அவள் அவனைப் பார்த்த தில்லை; அவனைப் பற்றிக் கேள்விப் பட்டதுமில்லை. அவன் எங்கிருந்து வருவான்? என்னென்ன பேசுவான்? அவள் அவனிடம் என்ன சொல்ல வேண்டும்?

மலராளின் மெல்லிதழ்களில் சிந்தனைக் கோடுகள் படர்ந்தன...

"காதல் சொல்லித் தெரிவதல்லடி!"

அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். அவளுடைய எண்ணங்களை யாராவது கண்டுபிடித்துவிட்டார்களா?

பக்கத்தில் மலர்ந்திருந்த வாடாமல்லிகையாள்தான் அவளைப் பார்த்துக் குறும்பாகச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

மலராளுக்கு அளவிட முடியாத நாணம். அவள் தன் முகத்தை இலைச் சோதரனின் பின்னால் மறைத்துக்கொண்டாள்...

மலராள் பருவமெய்திவிட்டாள். சிறிது குவிந்திருந்த அவளது இதழ்கள் நன்கு விரிந்து விட்டன. பளபளக்கும் அவ்விதழ்களின் மேல் வானவெளியிலிருந்து வந்தமர்ந்த பனித்துளிகள் அவளுடைய அழகுக்கு அழகு செய்தன. அம் மெல்லிடையாளுக்கு வானத்துச் சீமாட்டி மணப் பரிசாக அளித்த முத்துக்களோ அவை!

அவள் தனது காதலனின் வரவுக்காக உள்ளத்தில் ஆசை பொங்க, இதழ்களில் நாணங் கலந்த முறுவல் தவழக் காத்திருந்தாள். வாழ்வின் பேற்றைப் பெறப் போகிறோம். அப்படிப் பெறும்போதே வேறொருவருக்கும் இன்பம் தரப் போகிறோம் என்ற பெருமிதம் அவளது கண்களில் மின்னியது...

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திடீரென்று அவளது மெல்லுடல் அவள் அதுவரை அறிந்திராத ஒரு உணர்ச்சியால் சிலிர்த்தது. ஆடைமெல்ல நெகிழ்வது போன்ற உணர்ச்சி; தேகத்தில் ஒரு புதுமாதிரியான குளுமையை உண்டாக்கிய கிளர்ச்சி; உள்ளத்தில் இனம்புரியாத சலனம்...

அவள் இப்போது தனியளல்ல. ஆமாம், அவளது காதலன் அவளை வந்தடைந்து விட்டான். அவளது வாழ்வு நிறைவெய்திவிட்டது. வாயுதேவனின் ஆலிங்கனம் அவளை ஒரு புது உலகுக்கே அழைத்துச் சென்று விட்டது...

வாயுதேவனுக்கு மிகவும் பிடித்தமான வேளை அது. உலகத்தினரின் பார்வையால், பரிசத்தால், நுகர்வதால் மலர்க்கன்னியரின் தூய்மை மாசு படுவதற்கு முன்னால், அவர்கள் இளமைப் பருவத்தின் வாயிலில் காலெடுத்து வைக்கும் போதே அவர்களது அழகைச் சுவைக்க அதை விடச் சிறந்தசமயம் வேறு எது?

அவன் அவளைத் தழுவிக் கொண்டபோது அவனிடமிருந்து வந்த மணத்தின் போதையில் மலராளின் உள்ளம் கிறுகிறுத்தது. அந்தப் போதையின் தன்மையை விவரிக்க இயலாது, பாறையின் மேல் மோதிச் சிதறும் நீர்த்திவலைகளின் மீது இளஞ்சூரியனின் கிரணங்கள் பிரதிபலிக்கும் போது அவற்றின் நிறம் என்னவென்று யார்தான் திட்டமாகச் சொல்ல முடியும்? வாயுதேவன் கொணர்ந்த மணத்தின் தன்மையும் அம்மாதிரிதான். அவன் சற்றுமுன் நுகர்ந்த பல்வேறு பல்வேறு மலர்களுடைய மணங்களின் கலவை அது. அதில் ஒரு இனம் புரியாத கவர்ச்சி இருந்தது. மலராள் அக்கவர்ச்சியில் மயங்கி விட்டாள். ஆறறிவு படைத்த மனித இனத்தைச் சேர்ந்தவளாயிருந்தால் அவள் இவ்வாறு மயங்கியிருக்க மாட்டாள். பரஸ்திரீயைத் தீண்டி விட்டு வரும் காதலன் தன்னை அணுகும்போது அவனுடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மோசத்தை மோப்பம் பிடித்து விடும் திறமை மானிடப் பெண்ணுக்கு இருக்கிறது. வஞ்சகம் நிறைந்த இவ்வுலகில் ஆடவரின் சாக்சத்தில் ஏமாறித் தங்கள் கற்பைப் பெண்கள் இழந்து விடாமலிருக்க இயற்கை அவர்களுக்கு அளித்திருக்கும் பாதுகாப்பு இத்திறமை... ஆனால் பாவம், மலராள் என்ன கண்டாள்? உலக அனுபவம் கொஞ்சமும் இல்லாத பேதை அவள். மற்றவர்களும் தன்னைப் போலவே கள்ள மற்றவர்கள் என்று அவள் எண்ணியதில் வியப்பு என்ன இருக்கிறது?...

அவள் எவ்வளவு நேரம் வாயுதேவனின் மடியில் மயங்கிக் கிடந்தாளோ அவளுக்கே தெரியாது.

அவள் விழித்துக்கொண்டபோது வாயு தேவன் அங்கில்லை. அவனுக்குக் காதலிகள் எத்தனையோ! அவன் சபல புத்திக்காரன். சலனம் அவனது பிறவிக் குணம். அவன் விரும்பினால்கூட அவனால் ஒரே இடத்தில் நிலைத்திருக்கமுடியாது. மலராளுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்? அவள் அவனளித்துச் சென்ற இன்பத்தின் மயக்கத்தில் தன்னை மறந்திருந்தாள். தன்னுடைய மகரந்தச் செல்வத்தின் பெரும் பகுதியை அவன் எடுத்துக் கொண்டு சென்றுவிட்டதைக் கூட அந்தப் பேதை உணரவில்லை...

திடீரென்று வேறொரு மாதிரியான புது அனுபவம் ஏற்பட்டது அவளுக்கு. தன்னை யாரோ தீண்டுவதுபோன்ற உணர்ச்சி; வெம்மை நிறைந்த ஸ்பரிசம்; அவளுடைய உடலின் மேல் காதலார்வம் செறிந்த மூச்சின் தாபம்... மலராளின் இதழ்க் கன்னங்கள் நாணத்தால் சிவந்தன.

ஆம், அவனும் ஒரு காதலன்! அவன் அருணனை முன் கொண்டு கீழ்வானத்தில் எழுந்து கொண்டிருந்தான். அவன் பெயரே 'மலர் அரசன்' அல்லவா! மலராளின் இதழ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களில் படிந்திருந்த பனித்துளிகள் பளபளத்தன. காதலன் வரவு கண்ட காதலியின் கண்களில் மின்னும் ஆனந்தக் கண்ணீர்த் துளிகளைப்போல சிவந்த ஒளிப்பிழம்பாகத் திகழ்ந்தான் கதிரவன். அவளுக்கு அவனை நிமிர்ந்து பார்க்கக்கூட அச்சமாக இருந்தது. அவன் தேவன்; வானவெளியில் கம்பீரமாகப் பவனி வருபவன்; கோடிக்கணக்கான ஜீவ ராசிகளுக்கு ஒளியளித்து, வெப்பமளித்து, உயிரளித்து, வாழ்வும் அளிக்கும் வள்ளல்; நக்ஷத்திரங்களின் நாயகனான சந்திரனுக்கே ஒளிப் பிச்சையளிப்பவன். பூமியின் ஏதோ ஒரு மூலையில் வளர்ந்து கொஞ்ச நேரத்தில் வாடிவதங்கி மண்ணோடு மண்ணாக மடியப்போகும் மலராள் எங்கே, ஊழி ஊழி காலமாக அண்டசராசரங்களுக்கும் ஒளியும் உயிரும் அளிக்கும் சூரியதேவன் எங்கே! அவ்வளவு தூரத்திலிருந்து கொண்டு அவன் அவளைத் தன் ஒளிக்கிரணங்களால் அணைத்துக் கொள்கிறானே, அதுவே அவள்பாக்கியம். அவனுக்குக் காணிக்கையாக அளிக்க அவளிடம் என்ன இருக்கிறது? அவளிடமிருப்பதெல்லாம் வானத்தரசி அவளுக்குப் பரிசாக அளித்த பனித்துளிகளாலான முத்தாரந்தான். அதை அவள் அவனுக்கு அன்போடு அளித்தாள் அவனும் அதை ஆர்வத்துடன் பருகினான்... அந்தப் பனியாகிய அணி போய் விட்டால் அவள் மூளியாகி விடுவாள். அவளது மென்மையான உடல் உலர்ந்து போய்விடும். போனாலென்ன? பிறருக்கு இன்பமளிக்கத்தானே அவள் வாழ்கிறாள்!

இனிய கீதமொன்று அவளது செவிகளில் பாய்ந்தது. வெறுங் கீதமா அது? கீதமிசைத்தவனின் உள்ளத்தின் ஆர்வத்தையெல்லாம் ஒருங்கே சேர்த்துத் திரட்டிய ஒலிச்சித்திரம் அது! காதற் சுழலில் சிக்கித் தத்தளிக்கும் ஒரு உயிரின் உள்ளமுருக்கும் வேண்டுகோள் அது!...

கீதமிசைத்தவன் வேறொருவருமில்லை; வண்டுக் காத

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லன் தான். அவன் மலராளை நோக்கி ஆர்வத்துடன் வந்து கொண்டிருந்தான்...

அந்தக்கீதம் அவளுக்கு ஒன்றும் புதிதல்ல. அவள் மொட்டாக இருக்கும்போது வண்டு அந்தக் கீதத்தை இசைத்துக்கொண்டு ஒரு மலரிலிருந்து வேறொரு மலருக்கு பறந்து போவதை அவள் கண்டிருக்கிறாள். ஆனால் அப்போ தெல்லாம் அவளுக்கு அந்தப் பாட்டின் பொருள் தெரியாது. அது ஏதோ பொருளற்ற ஒரு சொற்குவியல் என்றே அவள் அதுகாறும் நினைத்திருந்தாள். ஆனால் இன்று அவளுக்குத் தெரிந்து விட்டது. அது காதலின் அழைப்பு என்று! அதில் பொதிந்திருந்த பொருளும் புரிந்துவிட்டது! இவ்வளவு கால காலமாகப் புரியாதிருந்த அந்தப் பாட்டு எப்படித் திடீ ரென்று புரிந்து விட்டது என்பது அவளுக்கே விளங்க வில்லை.

வண்டுக் காதலன் அவளை நோக்கி வந்துகொண்டிருந் தான். அவன் கண்களில் ஆர்வம்; இறக்கைகளில் பரபரப்பு குரலில் வேண்டுகோள்! அவள் மொட்டாக இருந்தவரை யில் அவன் அவளை அணுகவில்லை. ஆயினும் அவனுக்கு அவள் மேல் எப்போதும் ஒருகண் உண்டு. அவள் பருவ மெய்தி மலரும் நாளை அவன் வெகுகாலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் எதிர்பார்த்துக் காத்திருந்த இன்பம் இன்று அவனுக்குக் கிடைத்து விடும். அவன் ஒரு காரியவாதி வாயுதேவன் போல் ஒரு சில மகரந்தத்துளிக ளால் மட்டும், அல்லது சூரியதேவன் போல் ஒரு சில பனித் துளிகளால் மட்டும் திருப்தியடைந்து விடுபவன் அல்ல அவன். மலராளின் அகத்தில் ஊறியிருந்த மதுவை, அந்த இன்பக் கருவூலந்தான் அவனது இலட்சியம்....

அவன் மலராளின் மேல் வந்து அமர்ந்தான். அவனது நீண்ட, மெல்லிய பாதங்களின் ஸ்பரிசம் அளித்த இன்பத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தில் அவளது இதழ்கள் படபடத்தன. அவள் தன்னை மறந்தாள். மறு நிமிடம் அவன் அவளகத்துள்ளே நுழைந்துவிட்டான். அவள் நாணம் மீதூரத் தன்னிதழ் களைக் குவித்துக்கொண்டாள். வண்டுக் காதலனின் கால் களும், பட்டுப்போன்ற இறக்கைகளும் அவளது உடலில் பட்ட இடமெல்லாம் அவளுக்குப் புல்லரிப்பு. அந்த இன்ப மயக்கத்தில் அவள் கொஞ்சமும் தயக்கமின்றித் தன்னிட மிருந்த மதுவை அவனுக்கு வாரி வழங்கினாள்...

மது வுண்ட பிறகு அவனுக்கு அங்கென்ன வேலை? அவன் வெளியே வந்தான்; போகிற போக்கில் அவளிடம் எஞ்சியிருந்த கொஞ்ச நஞ்சம் மகரந்தத்தையும் தன் உட லில் ஒட்டிக்கொண்டு போய்விட்டான்.

மலராள் மதுவிழந்து, மகரந்த மிழந்து, தன்னை யணி செய்த பனியுமிழந்து, பொலிவிழந்து நின்றாள்.

யாரோ ஒருவன் அந்தப் பூங்காவுக்கு மலர் கொய்ய வந்தான். மலராளுக்கு அருகே வந்த அவன், "சீ! இதென்ன பூ! மணமுமில்லை அழகுமில்லை; வாடி வதங்கிக் கிடக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே அவளைப் பறித்துக் கீழே எறிந்துவிட்டுச் சென்றான்.

மலராள் தன் நிலையைப் பற்றி வருந்தவில்லை. அவள் தனக்குள்ளே சிரித்துக்கொண்டாள்.

யாரோ இருவர் அந்தப் பக்கம் வந்தார்கள். ஒருவன் சொன்னான், "நான் விஞ்ஞானி, நான் கடவுளை நம்ப வில்லை, ஆனால் மனிதனை நம்புகிறேன். இயற்கை மனிதனை ஒரு முக்கிய நோக்கத்துடன் தான் படைத்திருக்கிறது என்பது என் திடமான நம்பிக்கை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதோ அந்த மலரைப் பார். இன்று காலைதான் மலர்ந்தது அது; சில மணி நேரத்தில் வாடி வதங்கி மண்ணில் விழுந்துவிட்டது. அதன் வாழ்வுக்குப் பொருளில்லை. மனித வாழ்வும் இதுபோன்று அர்த்தமற்றதா? இல்லவே யில்லை! மனித வாழ்வுக்கு ஒரு இலட்சியம் இருக்கிறது.''

அவர்கள் பேசிக்கொண்டே போய்விட்டார்கள்.

மலராள் மறுபடி சிரித்துக்கொண்டாள். இந்த மனிதர்கள் தாம் எவ்வளவு விசித்திரமானவர்கள்! வாழ்வின் பொருளும், இலட்சியமும் கால அளவால் அளக்கப்படக் கூடியவையல்ல; அவை இன்பத்தையனுபவிக்கும் அளவில், இன்பத்தைப் பிறருக்கு அளிக்கும் அளவில்தான் அளவிடத் தக்கவை என்ற சிறு உண்மையை நம்மைவிட அறிவில் சிறந்த அவர்கள் உணரவில்லையே, என்ன ஆச்சரியம்!'' என்று அவள் மனிதனின் அறியாமைக்கு இரங்கினாள்.

— சுடர், தில்லி



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எப்படிப் புரியும்?

எம். எஸ். ராஜகோபாலன்

நடையைச் சற்றே தளர்த்தி, நின்றான் கிழவன். நடை அப்படி ஒன்றும் வேகம் இல்லை என்றாலும் வயது காரணமாக நினைத்த இடத்தில் அதே மாத்திரத்தில் நிற்க முடியவில்லை அவனால். வலது கையிலிருந்த கோலை இடது கைக்கு மாற்றிக்கொண்டு வந்த வழியை ஒருமுறை திரும்பிப் பார்த்தான்.

தொலைவில் அணி வகுக்கும் புளிய மரங்களுக்கும் அரச மரங்களுக்கும் நடுவே ஓடும் பாதை புள்ளனூருக்கு அப்பாலிருக்கும் மலைக்குத் தெற்குப் பக்கத்தில் எங்கிருந்தோ கிளம்பி, மலைக்கு நடுவே ஓடி, ஆற்றுப் படுகையில் இறங்கி, —அங்கே பாலம் எதுவும் இல்லை—புள்ளனூரின் கடைத் தெருவாக நீண்டு, பஸ் ஸ்டாண்டு அருகே அகலப்பட்டு, அதோ தெரிகிறதே, அந்த மரங்களின் ஊடே புகுந்து ஏழுமைல் வடக்காலேயே ஓடி, மறுபடியும் கிழக்கே திரும்புகிறது. அந்தத் திருப்பத்துக்குக் கொஞ்சம் முன்னே, அரச மரப் பிள்ளையாரை ஒட்டி ஒரு கப்பி ரஸ்தா பிரிகிறதே, அதிலேயே போனால் நந்தம்பாக்கம் பதினேழு மைல் தூரம்.

ரோட்டோடு போனால் தார் ரோடு ஏழு மைலும், கப்பி ரோடு பதினேழு மைலுமாக மொத்தம் இருபத்து நான்கு மைல் தூரம் என்பதும், வயற்காட்டின் குறுக்கே வரப்பு வழியாகப் போய் ஏரியைத் தாண்டிவிட்டால்—ஏரியில் அப்போது தண்ணீர் கிடையாது—நந்தம்பாக்கம் கூப்பிடு தூரம்தான் என்பதும் கிழவன் ஏற்கெனவே அறிந்த விஷயங்கள் தான். சீக்கிரம் போகவேண்டும் என்பதற்காக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வும், அதிக தூரம், நடக்க தன்னுடைய இயலாமை காரண மாகவும் குறுக்கு வழியில் போகும் எண்ணத்தில், பச்சை யும் பழுப்பும் கலந்த ரோட்டுச் சரிவில், மனிதர்கள் காலடி பட்டுப் புழுதி பூத்துப்போய், இங்கிருந்து பார்ப்பதற்கு வெள்ளையாய்த் தெரியும் ஒற்றையடிப் பாதையில் தான் வெகு தூரம் நடந்து வந்திருப்பதையும் கிழவன் உணர்ந்து கொண்டான். காலைக் கருக்கலின்போது பனி மூட்டத்தின் குளிருக்கு இதமாக இருந்த ஆரம்ப வெய்யில் இப்போது 'சுள்'ளென்று அடித்தது.

நெற்றியில், புருவங்களின்மேல் வெயிலுக்கு மறைப் பாக கையை வைத்து, தான் வந்திருக்கும் தொலைவை அனு மானித்துக் கொண்ட கிழவன், நெற்றியில் பொடிப் பொடி யாய்ப் பூத்திருந்த வியர்வையை வழித்து எறிந்தான். கட் டாந்தரையில் ஒரு பெரிய புள்ளியாகவும், தொடர்ந்து வரி சையாய் நான்கைந்து சிறு புள்ளிகளுமாக வியர்வைபட்ட மண் ஈரித்தது.

"நேரம் எம்மாத்தம் ஆயிருக்கும்? பத்தெர, பதி ணொண்ணு இருக்குமா?...நம்ப மண்டபமானுச் சொல்லிட லாம்... உம்?"

இடது மணிக்கட்டை முதுகுப்புறம் சற்றே கூன் விழுந்த இடுப்பின்மேல் அழுத்தி, விரல்களை மூடிக்கொண்டு வலது கையில் கோலுடன் மேலே நடக்கவாரம்பித்தான் கிழவன்.

"சாயரட்சைக்குள்ளார போய்ச் சேந்துருவமா?...சே! என்னு, இந்தப் பண்டாரம் இப்பிடிப் பேசிப்புட்டானே! என்னெக் கையாலாகாத கபோதிப் பயன்னு நெனச்சு கிட் டாம் போல இருக்கு. ஒடம்பு மட்டும் இருந்தால் போறுமா? தெகிரியம் வாணுமா? ஹூம். சுத்தக் கோழப் பய!"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிழவனுக்குச் சொந்த ஊர் எது என்பது யாருக்கும் தெரியாது. கும்பகோணம் பக்கம் என்று எப்பவோ பேசிக் கொண்டார்கள். பூர்வீகமும் சந்தேகாஸ்பதமாகவே இருந்தது. நன்ருக வாழ்ந்து கெட்டவன் என்றும் எல்லாம் தொடித்துப்போய் தேசாந்திரியாகக் கிளம்பிவிட்டான் என்றும் சொல்லிக் கொண்டார்கள். எல்லாம் கொஞ்சநாளைக் குத்தான். தங்கள் அன்ருட வாழ்க்கையின் அம்சங்களில் தனி கவனம் செலுத்தாமல் அதை ஏற்கவோ மறுக்கவோ செய்யும் மனித இயல்புடன் புள்ளனூர் மக்கள் அவனைத் தங்களுடன் ஏற்றுக்கொண்டார்கள். அல்லது மறந்து விட்டார்கள். கிழவனும் அங்கே நிரந்தரமாகத் தங்கும் எண்ணத்துடன் வரவில்லை. யாசித்து வாழும் வாழ்க்கையில் எந்த ஊராய் இருந்தால் என்ன என்ற எண்ணத்தில்தான் அவன் அந்த ஊருக்கு வரும்போது இருந்தான். ஆனல் ஊருக்குத் தெற்கே ஓடும் ஆறும், ஆற்றையும் ஊரையும் பிணைக்கும் டிரங்க் ரோடில் உள்ள கருமுனியம்மன் கோயில் மண்டபமும் கிழவனை வெகுவாக வசீகரித்துவிட்டன. அந்த ஊருக்கு வந்த முதல் நாள் யாசக உணவைச் சாப்பிட்டுவிட்டு ஆற்று நீரை இரண்டு கைகளாலும் அள்ளிப் பருகி ஈரக்கையை ஆற்று நீரிலேயே உதறிவிட்டு, வேஷ்டியால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, முனியப்மன் கோயில் சிமெண்டுத் தரையில் மல்லாந்து படுத்தபோது சில்லிட்ட முதுகின் சுகத்தில் உலகையே மறந்து போனன்...

நாற்புறமும் திறந்த வெளிக் காற்றின் குளுமையும், சில்லிட்ட சிமெண்டுத் தரையும் சூழ் இருளின் அமைதியும் கூடிய சுகானுபவத்தோடு நித்திரைக் களிப்பில் சில நாட்கள் நீடித்தான்......

தங்குவதற்கு வசதியாகக் கோயில்மண்டபமும் குளிப்பதற்கும் துணி துவைப்பதற்கும் தோதாக ஆற்றுப் படுகை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யும், வயிற்றுக்குச் சோறுபோட மக்களும் கிடைத்துவிட்ட நிரந்தரத்தில் அங்கேயே தங்கியும் விட்டான்...

காலையில் எழுந்ததும், குளிக்கவும் துணிதுவைக்கவும் குடிநீர் கொண்டுபோகவும் வரும் கிராமத்து ஆண்களும் பெண்களும் அவனை முதன் முதலாக சந்தித்தபோது ஓரிரு விநாடிகள் நின்று கவனிக்கத்தான் செய்தார்கள். அவனோ அவர்களையெல்லாம் கவனிக்கவேயில்லை. ஆனால் மனசுமாறி அங்கேயே நிரந்தரமாக தங்கிவிட உத்தேசித்து அவர்களின் முகங்களைப் பரிச்சயம் செய்து கொள்ள அவன் முயன்றபோது, அவர்களுக்கு அவனைப் பற்றிய அக்கரை குறைந்து போய்விட்டது

அப்புறம் வாழ்க்கை யந்திரமாகி விட்டது தினமும் இரவு ஒன்பது மணிக்கு மேல் வாயகன்ற மண் சட்டி ஒன்றை எடுத்துக் கொண்டு கிளம்புவான் முதலில் ஒன்பது மணிவரை காத்துக் கொண்டிருப்பதே கஷ்டமாக இருந்தது. ஆனால் அதற்கும் முன்னால் கிளம்பியபோது "இன்னும் சாப்பாடு ஆகலை, போ!" என்ற பதிலைச் சந்திக்க வேண்டி வந்தது அவனைக் காக்க வைத்து விட்டது. ஒவ்வொரு நாளுக்கு ஒவ்வொரு தெரு விதம் ஊரிலுள்ள ஏழெட்டுத் தெருக்களிலும் யாசித்து விட்டு வருவான். அக்ரஹாரம் மட்டும் பெரிசு. இரண்டு நாள் அதற்கே சரியாய்ப் போய்விடும். கலெக்ஷனும் சுமாராக இருக்கும். சோறு, குழம்பு, கறி ரஸம் எல்லாம் சேர்ந்த அந்தக் கூட்டாஞ் சோறுக்குப் பிறகு—சமயத்தில் அசைவமும் உண்டு—ஆற்று நீரைக் குடித்து விட்டுப் படுக்கப் போக வேண்டியதுதான். டிரங்க் ரோடில் இரவில் போகும் லாரிகளின் சப்தம் முதலில் அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனால், சமயங்களில் வண்டியை நிறுத்தி விட்டு இறங்கி வந்து சாமி கும்பிட்டு விட்டுப் போகும் டிரைவர்களையும், ஊருக்குள் லாரியில் போக [illegible] கோயில் அருகிலேயே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறங்கி, டிரைவர்களிடமிருந்து சில்லரையும் விடையும் பெற்றுக் கொண்டு டீக்கடைக்குப் போகும் உள்ளூர் 'தெரிந்த' பெண்களின் கசங்கிய புடவையையும் கலைந்த தலையையும் அவன் ஒருவித உற்சாகம் கலந்த கவனிப்போடு பார்க்க ஆரம்பித்தான். போகப் போக அதுவும் பழகி விட்டது.

வாழ்க்கை அவனுக்கு இனிக்கத்தான் செய்தது. ஆற்றுத் தண்ணீரில் தோய்த்துத் தோய்த்து வெள்ளையும் இல்லாமல் காவியும் இல்லாமல் ஒருவித பழுப்பாகிப் போன அந்த வேட்டியும், நீளமாய் வளர்ந்த தாடியின் தளர்ச்சியும் எண்ணெயும் சீப்பும் காணாமல் சடை கட்டி, செம்பட்டையாகிப்போன, பிடரியில் வழியும் தலைமுடியும் சேர்ந்து, 'மண்டபத்துச் சாமியாரா'கத் தன்னை ஊரார் அழைக்க ஆரம்பித்தபோது அவனுக்குப் பெருமையாகத்தான் இருந்தது. யாருக்காகவும் காத்திருக்காமல் ஊர் மக்கள் அவனுக்கு வழங்கி விட்ட சன்னியாசத்தை அவன் தயங்காமல் ஏற்றுக் கொண்டான்.

அந்த சன்னியாசப் போர்வைக்குள் தன் பிச்சைக்காரத்தனத்தை மறைத்துக்கொண்டு தன் மண்டபத்தில் பகல் பொழுது பூராவும் மல்லாந்து படுத்து, வலது காலை மடித்துக் குத்திட்டு நிறுத்தி, இடது காலை வலது தொடைமேல் மடித்துப் போட்டுக் கொண்டு — நாற்காலியில் உட்கார்ந்திருப்பதுபோல — இருப்பான். அப்படி முனியம்மன் கோயிலின் சிமெண்டுத் தரையில் மல்லாந்து கிடந்தபோது சில்லிட்ட முதுகின் சுகத்தில் உலகையே மறந்து போவான்.

வெய்யில் ஏறிவிட்டது. பசிக்கும் வயிறும் கொதிக்கும் தரையும் சேர்ந்து உடலைக் காந்த அடித்தன. கைக்கோலையும் கால்களையும் 'சிக் சிக்' கென்று மாற்றிப் போட்டுக் கொண்டிருந்தான் கிழவன். வடியும் வியர்வை உலர்ந்து, தாவில் ஒட்டிய உப்பு தினவு ஏற்படுத்தியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"எங்கே சாமி போறீங்க?"—கிழவன் மெதுவாகத் திரும்பிப் பார்த்தான். யாரோ ஒரு கூடைக்காரன். கறுப்பாய், உயரமாய் கட்டுமஸ்தாக இருந்தான். தலையில் சும்மாடு கட்டி மேலே ஒரு கூடை வைத்திருந்தான். கூடை பாரத்தையும், எரிக்கும் வெயிலையும் சமாளிக்கும் முயற்சியில் அவன் தாடை எலும்புகள் இறுகின. தலைச் சுமையால் புடைத்து தெரிந்த கழுத்து நரம்புகள் எல்லாம் வியர்வையில் நனைந்து பளபளத்தன.

"நந்தம்பாக்கத்துக்கு இதுதானே வழி?"

"ஆமாங்க. நானும் அங்கனெதான் போய்க்கிட்டு இரிக்கேன். காய்கறி யாவாராம். வாரீயளா?"

"என்னாலே ஒங்கூட நடக்க ஆகாதுப்பா. வழி எப்பிடி? சொல்லிட்டுப் போ!"

"அதாலெ தெரியுதில்லே, ஒத்தப்பனமரம். அதுக்கு கொஞ்சம் தொலவுலேயே ஏரிக்கரை. ஏரியை தாண்டினுக்க கிட்டதான். ஆமா, தண்ணியில்லாமெ பாளம் பாளமா வெடிச்சுக் கெடக்கே ஏரி! எப்பிடி நடப்பீக சாமி?"

"எப்பிடியோ பாத்துக்கறேன்."

கூடைக்காரன் கால்களை எட்டிப்போட்டு நடக்க ஆரம்பித்தான். இடுப்பில் வேஷ்டி இறுக்கத்துக்கு மேலே பிதுங்கிய முதுகுச் சதை அவன் வேகமாக நடக்கும்போது குதியிட்டது. கிழவன் அதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று ஒரு நாள் கோயில் மண்டபத்துக்கு வந்து சேர்ந்தான் சதாசிவப் பண்டாரம். தனிக்காட்டு ராஜாவாக ஆண்டு வந்த மண்டபத்துக்குப் போட்டியாக இன்னொருவன் வந்ததைக் கிழவன் ரசிக்கவில்லை. ஆனாலும் அவ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தப் புதியவன் சிரித்தபோது, அந்தக் கறுத்த முகத்தில் பளீரிட்ட வெள்ளைப் பற்களில் கிழவன் மகிழ்ந்துதான் போனான்.

சதாசிவம் நல்ல குண்டாக இருந்தான். குண்டு என்றால் ஊளைச் சதையல்ல. நல்ல ஊட்டமான உடம்பு. கழுத்தே இல்லையோ என்று சந்தேகிக்கும்படியான தலை அமைப்பு. கழுத்தில் கட்டப்பட்டிருந்த ஒத்தை ருத்ராக்ஷக் கொட்டையின் கயிறு பின் கழுத்து மடிப்புக்குள் புகுந்து கொண்டிருந்தது. நெற்றி மார்பு கைகளில் கட்டுக்கட்டாய் விபூதி. இடுப்பில் சற்றே அழுக்கேறிய வேஷ்டி. மார், முதுகு, கை காலெல்லாம் புசு புசுவென்று மயிர். அதற்கு மாறான வழுக்கை மண்டை. நல்ல உயரமாக இருந்தாலும் தேகப்பருமனால் அது தெரியவில்லை. இடது தோளில் ஒரு பித்தளைப் பாத்திரத்தைத் துணியில் உறிபோல் கட்டி மாட்டியிருந்தான். கையில் ஒரு ஜால்ரா. குழைத்த விபூதியை நெற்றியில் பூசுவதற்கு முன்பு உச்சி மண்டையில் வைத்த விரல்களின் வெள்ளைப் பொட்டுக்கள் வரிசையாய்த் தெரிந்தன.

கிழவனின் தாடியும் பழுப்பு வேஷ்டியும் சதாசிவத்தின் உள்ளத்தை என்ன செய்ததோ, கிண்ணரத்தைக் கட்டியிருந்த கயிற்றை தோளின் குறுக்கே போட்டுக் கொண்டு இரண்டு கைகளையும் வழுக்கைத் தலைக்கு மேலே தூக்கிக் கூப்பினான்.

''சிவோஹம்!''

''பாடுவியா?''

''ஏதோ, ஆண்டவன் மேலே ஒண்ணு ரெண்டு...''

''உக்காரு.''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''சிவோஹம்!''—சதாசிவம் உட்கார்ந்தான்

''பாடு.''

சதாசிவம் உடனே பாடினான். திரைக்கயிறு அறுந்த தும் 'படீ'ரென்று அடிக்கும் வெளிச்சம் மாதிரி. ''பொன்னார் மேனியனே......'' கீழ்ஸ் தாயியில் பேசிய சாரீரம் மேலே வரும்போது பிசிறியது. சுருதி சுத்தத்தைப்பற்றி அவன் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை' பாடும்போது தெறித்த எச்சிலால் கிழவன் நகர்ந்து உட்கார்ந்தான். புருவத்தைத் தூக்காமல், தலையை ஆட்டாமல் எந்தவித மான சேஷ்டையும் இல்லாமல் இவனால் எப்படிப் பாட முடிகிறது? பாட்டு முடிந்ததும் கிழவன் கேட்டான்.

''எத்தினி நாளு இருப்பே?''

''இன்னும் ரெண்டு இல்லெ மூணு நாள்லெ போயிரு வேன்'' சதாசிவத்துக்குத் தான் வந்ததைக் கிழவன் விரும்ப வில்லை என்பது புரிந்தது. கிழவனும் அப்புறம் பண்டாரத் தோடு பேசவில்லை.

ஆனால் அன்று ராத்திரி அடித்த ஜுரத்தில் கிழவன் வாய் முனகத் தொடங்கினான். காலில் கண்டிருந்த பித்த வெடிப்பு அன்று ரொம்பவும் தொல்லை கொடுத்ததோடு காய்ச்சலையும் வருவித்துவிட்டிருந்தது

''என்ன சாமி? வெனத்துறீங்க''—கிழவன் பதில் சொல்லவில்லை. சதாசிவம் தான் படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்து கிழவனின் அருகில் வந்தான். ஜுரவேகத் தில் நடுங்கிக் கொண்டே காலபக்கம் விரலைக் காட்டினான் கிழவன். விஷயத்தைப் புரிந்து கொண்ட சதாசிவம் ராத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரியெல்லாம் திறந்திருக்கும் ஒரு டீக்கடைக்குப் போய் வென்னீர் வாங்கி வந்து ஒத்தடம் கொடுத்தான். தன் கைப் பணத்தில் டீயும் பன்னும் வாங்கிக் கொடுத்தான் வலி யால் துடித்த கிழவனின் கால்களைப் பிடித்து விட்டான்...

இவ்வாறு பலவிதமாகத் தனக்கு உதவிய சதாசிவத் தைப் பற்றி மனசு மாறிப் போய், கிழவன் அவனைத் தன் இடத்தைப் பகிர்ந்து கொள்ள அனுமதித்தான்.

காலையில் எழுந்ததும் சதாசிவம் ஆற்றுக்குப் போய்க் குளித்து விட்டு, தன் யாசகப் பாத்திரத்தையும் 'பளிச்' சென்று தேய்த்து எடுத்து வருவான். மண்டபத்துக்கு வந் ததும் பாத்திரத்தினுள் இருக்கும் ஈரவேஷ்டியையும் துண் டையும் தோளில் எடுத்துப் போட்டுக் கொண்டு, பாத்தி ரத்தை ஒரு மூலையில் கவிழ்ப்பான். பிறகு தோளிலிருந்து ஈரவேஷ்டியை மண்டபத்தின் ஒரு காலுக்கும் அருகிலிருக் கும் செடிக்குமாகப் பிரித்து உதறிக்கட்டி, அதன் மேலேயே துண்டையும் விரித்துப் போட்டு உலரவிடுவான். கடந்த நாட்களில் யாரோ பொங்கவிட்டு விட்டுப் போன வரட்டிச் சாம்பலை எடுத்து நெற்றியிலும் கையிலும் மார் பிலும் பூசிக் கொள்வான். எரிந்த சாம்பல் இல்லை யென்றால் இதற்காகவே வரட்டியை எரிப்பதும் உண்டு. அப்புறம், அவன் வருவதற்கு முதல் நாள் வரை பெருக்கியே அறியாத மண்டபத்துத் தரையைத் தன் காவடித் துணியால் தட்டிச் சுத்தப் படுத்துவான். பிறகு கொஞ்சம் பாட்டு ஜால்ராத் தாளத்தோடு—சில சமயம் யாசகப் பாத்திரத்தின் மேல் சில்லறை நாணயத்தால் தாளம் போடுவான். மத்யானம் தூக்கம். இரவானதும் கிழவனைப் படுக்கச் செய்து விட்டுத் தானே யாசகத்துக்குப் போவான். திரும்பி வந்ததும் இரு வரும் சேர்ந்து சாப்பிடுவார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

நீண்ட நாட்கள் பிரிந்து இருந்தவர்கள் மீண்டும் சந்

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திக்கும்போது, ஏற்கெனவே பழக்கத்திலிருந்த ஒரு அன்றாட நிகழ்ச்சி நிரலை அமுல் படுத்துவதுபோல் நடந்து கொண்டார்கள்.

இரண்டு நாட்கள் கழிந்ததும் ஒரு ராத்திரி சதாசிவம் கேட்டான். ''இன்னிக்கு எந்தத் தெரு?''

''ஜைனத் தெரு.''

''என்னது?'' சதாசிவம் வியப்பில் வாயைத் திறந்தபோது கிழவன் சிரித்தான். ''ஏன்?''

''அவுங்க கிட்டப்போய் பிச்சை கேக்கிறதா?''

''ஏன், கேட்டாக்க என்ன?''

''நான் மாட்டேன். அவுங்க நம்மவங்க இல்லே!''

''அடிச் சக்கே! பிச்சையிலியும் ஆசாரமா?''

''அப்பிடியில்லீங்க சாமி. எனக்கென்னவோ மனசு ஒப்பலை.''

''இன்னிக்கி அவுங்க ரோடுதாம்பா மொறை. வேறெ எடத்திலே குடுக்க மாட்டாங்க.''

''வேணா உங்களுக்கு வாங்கியாறேன். ஆனா நான் துண்ண மாட்டேன்!''

தான் வழக்கமாக ரசிக்கும் சதாசிவத்தின் பின் மண்டை வழுக்கையை மறந்து கிழவன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே சதாசிவம் மண்டபத்தை விட்டு இறங்கி, காவடியைத் தோளில் சரி செய்தபடி நடக்க வாரம்பித்தான்.

''சதாசிவம்! இண்ணுரம்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''நாம் பாடப் போறதில்லே.''

''............''

''எம்பாட்டு நம்மவங்களுக்குத்தான்!''

''ஏய், இந்தா?''

''இன்னா?''

''நீ இன்னிக்குப் போவாணும். பன்னும் டீயும் போறும். இந்தா சில்லறை. போய் வாங்கியா. போ!''

அன்று டீயும் பன்னும் உணவாக அமைந்த பிறகு சதாசிவம் பீடி ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டு, கிழவனிடம் ஒன்று நீட்டினான்.

''ஊஹூம்! நான் புடிக்கிறதில்லே!''

சதாசிவம் தனது வலதுகை நடு விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் நடுவே பீடியை வைத்து விரல்களை மூடி வைத்துக்கொண்டு கட்டை விரல் பக்கம் வாய் வைத்து உறிஞ்சிப் புகை விட்டான். ஒவ்வொரு முறை உறிஞ்சும் போதும் பீடி முனை பிரகாசிப்பதையும், புகைக் காரத்தைத் தவிர்க்க அவன் கண்களை இடுக்கிக் கொள்வதையும் கவனித்த கிழவன் சிரித்தான்.

சிட்டிகை போட்டுச் சாம்பலைத் தட்டிய சதாசிவம் கேட்டான்: ''என்ன சாமி சிரிக்கிறீங்க?''

பதிலை எதிர்பார்த்து ஒரு நிமிஷம் மௌனமாக இருந்து பிறகு கடைசியாக ஒருமுறை புகையை உறிஞ்சி ஊதிய சதாசிவம், நாக்கின் மேலிருந்த பீடிக் காரத்தைப் பல்லால் சுரண்டித் துப்பினான். பீடித் துண்டை எறிந்து விட்டு கிழவனிடம் வந்து உட்கார்ந்து கொண்டான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"சாமி எதுக்குச் சிரிச்சீங்கன்னு எனக்குத் தெரியும். ஜைனத் தெருவுக்கு பிச்சைக்குப் போகக்கூடாதுன்னு ஒழுக்கம் பேசறவன் பீடி குடிக்கிறானே. இது என்னுடா ஒழுக்கம்னு பாக்கறீங்க, அதானே?"

"அதெல்லாமில்லே!"

"எனக்குப் பீடி புடிக்கலாம்னு தோணுது. ஆனா ஜைனருங்ககிட்ட சோறு வாங்கப் புடிக்கல்லியே! நான் இன்னா பண்ணட்டும்? எனக்கு மனசிலே இருக்கறத்தெப் புட்டு வெக்கத் தெரியலெ. ஆனா நாம் பண்றது ரைட்டுன்னு தோணுது...என்னா, சும்மா இருக்கீங்களே? ... கொரலு குடுங்க! நா வேணா நாளைவேந்து அங்கியும் போறேன்."

"சதாசிவம்! நாளைக்கு இன்னா, நீ என்னிக்குமே அங்கே போவாணும். எப்பிடியாவது சமாளிச்சுக்கலாம்!"

விவகாரம் பண்ணுவதைவிட இருக்கும் நிலையிலேயே இவனை விடுவதுதான் உத்தமம் என்று முடிவுபண்ணிப் பேசின கிழவனை சதாசிவமும் புரிந்து கொண்டான்.

தன் கடந்த நாள் வாழ்க்கை நினைவுகளை எதிரிலிருப்பவனுடன் பங்கிட்டுக் கொள்ளும் வகையில் அவற்றை மறுபடியும் உள்ளத்தில் கொண்டுவந்து அசைபோடக் கிழவன் விரும்பவில்லை. சதாசிவமும் அதற்கு முயற்சிக்கவில்லை இருவரும் தங்கள் பழைய நாட்கள் ...அப்படி ஒன்று உண்டு என்பதையே—மறந்துபோனது போலவும், மற்றவனைச் சந்தித்த அந்த நிமிஷமே தானும் பூவுலகுக்கு வந்தது போலவும்—ஒரு புதிய அத்தியாயத்தைப் பாதியிலிருந்து எடுத்துப் படிப்பதுபோல—சட்டென்று திறந்து கொண்ட ஒரு வாசற் கதவு வழியே இருவரும் ஒன்றாகக் கை கோர்த்து நடப்பதுபோல்—தங்களைப் பரஸ்பரம் புரிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

வைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். வலுக்கட்டாயமாக ஏற்பட்ட அந்த உறவின் சுகத்தை வலுவில் சென்று பெற்றார்கள்.

பேச்சும் பொதுவாகவே இருக்கும். பொன்னார் மேனியனே, பாட்டுப் பிறந்த கதை, காயம் நிலையாமை பற்றிய வாய்க்குச் சுகமான வேதாந்தம், விடியற்காலையில் ஜில்லிட்டுப்போகும் ஆற்றுத் தண்ணீர், இரண்டு நாளைக்குமுன் செத்துப்போன கோவிந்தமூப்பன், லாரி டிரைவரிடம் சில்லறைத் தகராறில் சண்டை போட்ட உள்ளூர்காரி, கடந்த ஒரு மாசமாகக் கடுமையாகியிருக்கும் வெய்யில்... இந்த ரீதியிலே பேசுவார்கள். பெரும்பாலும் சதாசிவத்தின் குரல் கேட்கும். அவன் பேசுவதை முன்பின் கேட்டிராதவர்கள் அவன் வாயைத் திறக்கும்போது கனத்த குரலை எதிர்பார்த்தால் ஏமாந்தே போனார்கள். சில நாட்கள் பேச்சே இருக்காது. இருவரும் இருளின் சூனியத்தை வெறித்தபடி உட்கார்ந்திருப்பார்கள். 'சிவோஹம்' என்ற சதாசிவத்தின் முணு முணுப்போடு சரி. ஏதோ ரத்து செய்ய முடியாத உறவு அவர்களைப் பிணைத்திருப்பதால் அதிலிருந்து அறுத்துக்கொள்ள முடியாத கடமை உணர்வோடு இருப்பவர்கள் போல-நட்பெனும் பெருஞ் சிலுவையை தாங்கிக் கொள்ளும் கூட்டு வியாபாரத்தின் பாகஸ்தர்களாக—அவர்கள் இருப்பார்கள். மிக மென்மையான வஸ்து ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு பேச்சின் எதிரொலியே அதை நொறுக்கி விடுமோ என்று பயப்படுவதுபோல் மௌனமுற்றுக் கருவின் துயிலாய்க் கிடப்பார்கள்.

ஆற்றங்கரைப் பக்கம் வந்த ஜனங்கள், முதலில் சதாசிவத்தைக் கண்டபோது கொஞ்சம் கவனித்து விட்டுத்தான் போனார்கள். ஆனாலும் காலாவட்டத்தில் அவனையும் ஒன்றோடு இரண்டு என்ற ரீதியில் தங்கள் இயல்புப்படி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்க்கையின் அம்சமாக ஏற்கவும் மறக்கவும் செய்தார்கள். இருவரையும் வித்தியாசப் படுத்துவதற்காக ஒருவனை "ஜால்ராச் சாமியார்" என்றும் மற்றவனைத் "தாடிச் சாமியார்" என்றும் குறிக்கத் தொடங்கினார்கள்.

கிழவன் இதையெல்லாம் கவனிக்கவேயில்லை. யாசகத்துக்குப் போகவேண்டிய தொல்லை நீங்கியதால் சோம்பலும், சதாசிவம் பழக்கிவிட்ட கஞ்சாப் புகைப் பழக்கமும், "தாடிச் சாமியார்" என்று ஊராரின் மரியாதையும் பட்டமும் அவனுள் ஏற்படுத்திய மதமதப்பில் அவன் அந்த மண்டபத்திலேயே, நாள் பூராவும் படுத்து, வலது காலை மடித்துக் குத்திட்டு நிறுத்தி, இடது காலை வலது தொடை மேல் மடித்துப் போட்டுக்கொண்டு-நாற்காலியில் இருப்பது போல—கிடப்பான். அப்படி அந்தக் கோயிலில் சிமெண்டுத் தரையில் அவன் மல்லாந்து படுத்தபோது சில்லிட்ட முதுகின் சுகத்தில் உலகையே மறந்து போவான்...

ஒற்றைப் பனைமர நிழலில் கொஞ்சம் நின்றான் கிழவன். புள்ளனூர் டிரங்க் ரோட் எப்பொழுதோ அடிவானத்தில் மறைந்து விட்டிருந்தது. நாலு பக்கமும் நில வெடிப்புக்கள் கட்டமிட்டுக் காட்சி விரித்தனவே தவிர அண்மையில் நிழல் எதுவுமில்லை. எதிரே அடிவானத்தில் ஏரிக்கரை நிழலாய்த் தெரிந்தது. மேற்கு வெய்யில் நெற்றியில் சுரீரிட்டது.

மேற்கொண்டு தன் பிரயாணத்தைத் தொடர ஓரடி எடுத்து வைத்த கிழவன் குப்புற விழுந்தான். கோலை அவன் ஊன்றிய இடத்திலிருந்து மண்கட்டி பொலபொலத்துச் சரிய, ஆதாரமின்றித் தடுமாறி விழுந்த கிழவனின் உடம்பில், அறுவடைக்குப் பிறகு வயலில் நீட்டிக் கொண்டிருந்த கதிரின் அடிக்கட்டைகள் குத்தின. ஒன்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வலது காலின் பித்த வெடிப்பிலே சென்று தாக்கியது. துடித்துப் போனான் கிழவன்.

சமாளித்துக்கொண்டு எழுந்து வரப்பின் மேல் உட்கார்ந்த கிழவன் காலைப் பார்த்தான் வெடிப்பிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது கீழே கிடந்த கோலை எடுத்து வரப்பின் பக்கவாட்டில் குறுக்காக நிற்கவைத்த பிறகு தன்னைக் கீழே வீழ்த்திய மண் கட்டியை எடுத்துப் பொடி மண்ணாக உதிர்த்து வெடிப்பின் மேல் தூவினான். ரத்தக் கசிவு நின்றது.

மிச்சமிருந்த மண்ணை ஆத்திரத்தோடு காற்றில் தூற்றினான் கிழவன்.

பல நாட்களாகத் தொடர்ந்து நடந்து வந்த அவர்களது வாழ்க்கையில் திடீரென்று ஏற்பட்ட சிக்கல் அது. ஜைனத் தெருவுக்கும் சாயபுத் தெருவுக்கும் போகாது போனாலும் இரண்டு பேரும், இரண்டு வேளை திருப்தியாய்ச் சாப்பிடும் அளவுக்குக் கிடைத்து வந்த பிச்சை சமீப காலமாகக் குறைந்துவிட்டது. வெயிலின் தீட்சண்யமும், பருவ மழை பெய்யாததும் சேர்ந்து, தங்கள் சாப்பாட்டுக்கே நெற்குதிரைச் சுரண்டும்படி ஊர் மக்களை பண்ணிவிட்ட போது யாசகத்துக்கு என்ன? திருஷ்டிபட்ட செடியின் வாட்டம்போல சட்டென்று விழுந்துவிட்ட வருலுக்குச் சிகரம் வைத்ததுபோல் போன இரண்டு நாட்களாகவே கிழவனும் சதாசிவமும் கொலைப் பட்டினி

இரவின் அமைதியில் மண்டபத்துச் சிமெண்டுத் தரையில் மல்லாந்து படுத்தபடி கிடந்தான் கிழவன் தொலைவிலிருந்து சீராகவும் மெல்லவும் ஒலித்து நெருங்கி வந்து மண்டபத்தின் தரைமீது எழுந்த சத்தத்திலிருந்து அது சதாசிவத்தின் வருகை என்றும் அவன் [illegible] [illegible] வைத்தபடி எழுப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிய ஒலியிலிருந்து அது காலி என்பதையும் கிழவன் ஊகித்துக் கொண்டான.

"இன்னிக்கும் ஒண்ணுமில்லே!"

"அதான் தெரியுதே!"

"ஜைனத் தெருவுக்குக் கூடப்போய் வந்துட்டேன்!"—கிழவன் பேசவில்லை.

"சாமிக்கு இன்னிக்கு மூணு நாள் வெரதம்."

"வெரதம் என்னடா பெரிய்ய விரதம்? பட்டினின்னு சொல்லிட்டுப் போவியா?"

கிழவன் புரண்டு குப்புறப் படுத்தான். கோயில் வாசலின் பக்கவாட்டில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த சரவிளக்கின்மேல் அடையாக ஒட்டிக்கொண்டிருந்த எண்ணெய்ப் பிசுக்கைக் கட்டை விரல் நகத்தால் சுரண்டி எடுக்க ஆரம்பித்தான். கீழே பிசுக்கு உதிர உதிர இரும்புச் சட்டம் வெண்மையாகப் புலப்பட்டது.

"மருந்து வெச்சிருக்கயா?

"இருக்கு ஆனா பீடி இல்லியே!"

"பின்னே?"

'பொயிலே இருக்கு. அதுலே போட்டுச் சுத்தித் தரட்டா?"

'உம்."

சதாசிவம் தன் இடுப்பு மடியை அவிழ்த்து, இரண்டு பொட்டலங்களை எடுத்தான். அதில் பெரியதைப் பிரித்து, காகிதத்தின் ஓரத்தை நீவிச் சமப்படுத்தி [illegible] ருந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புகையிலையை எடுத்து அதன் நரம்பைக் கிழித்து, இரண்டு பெரிய துண்டுகளாகக் கிள்ளி எடுத்துக்கொண்டான். பிறகு மற்றொரு பொட்டலத்தைப் பிரித்து அதிலிருந்த பொடியை இரண்டாகப் பகிர்ந்து இரண்டு புகையிலைத் துண்டுகளிலும் கொட்டிப் பரப்பினான். பிறகு இரண்டையும் உருட்டி ஓரங்களை உள்ளுக்குள் மடித்து, தன் வேஷ்டியிலிருந்தும் ஒரு நூலைப் பிரித்து எடுத்து அந்தச் சுருட்டுக்கள் பிரியாமலிருக்கும்படிச் சுற்றினான். ஒன்றைக் கிழவனிடம் கொடுத்துவிட்டு மற்றதைத் தன் பற்களால் கடித்துக் கொண்டான். இடுப்பிலிருந்த தீப்பெட்டியை எடுத்து, கிழவன் தன் சுருட்டைப் பற்றவைக்க நெருப்புக் கொடுத்து உதவியவுடன் தானும் பற்றவைத்துக் கொண்டான்.

இரண்டாவது இழுப்பிலேயே கிழவனுக்குத் தலையைச் சுற்ற ஆரம்பித்தது. கட்டைவிரல் நகக்கணுவில் புகுந்து கருப்பாய்த் தெரிந்த பிசுக்கைப் பல்லால் சுரண்டி எடுத்துத் துப்பினான். பிசுக்கு உப்புக்கரித்தது.

"நந்தம்பாக்கத்துலே நாளைக்கி அன்னதானம் பண்ணுறாங்களாம். ஸ்ரீராம நவமியில்லே!" சதாசிவம்தான் பேசினான்.

"எங்கே?"

"நந்தம்பாக்கத்துலே!"

"ஹைரோட்டு அரசமரப் பிள்ளையாருக்கு பக்கத்துலே போவுதே அந்த கப்பி ரோடோடெப் போனா வருதே, அந்த ஊருதானே?"

"வயக்காட்டு வளியாய் போனா சுருக்கு." சதாசிவம் ஏரிக்கரை வழியை விவரித்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

புகையை இழுத்து ஊதிய கிழவன் தனக்குத் தானே

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பேசிக்கொண்டான். "காலையிலே எந்திரிச்சிக் கருக்கலோ டெக் கௌம்பினு சாயரட்சைக்குப் போய்ச் சேர்ந்துட லாம்."

சதாசிவம் திடுக்கிட்டான். 'சாமி அம்மாந் தொலவும் நடந்துபோகப் போவுதா?''

"தொலவு இன்னுடா தொலவு? அங்கனெப் போனு சோறு நிச்சியமாக கெடைக்குமே அதை யோசிச்சியா?"

"சாமி இருக்கிற நெலையிலே..."

"இங்கே இருந்தாக்க சோறு கெடைக்குமாடா? எங் கேக் கிடைக்குதோ அங்கே போகவேண்டியதுதானே. நெலெலயைப் பார்த்துக்கிட்டே இருந்தா பொணமாக வேண்டிதுதான்."

சதாசிவம் திகிலடைந்துபோய் உட்கார்ந்துவிட்டான். ஏண்டாப்பா சொன்னேம் என்று இருந்தது அவனுக்கு.

கடைசியாக ஒருமுறை புகையை ஊதிவிட்டு சுருட்டை தூர எறிந்த கிழவன், கீழே உதிர்ந்து கிடந்த எண்ணெய்ப் பிசுக்கு அடையை எடுத்து உள்ளங்கையில் உருட்டிக் கொண்டே பேசினுன்.

"சதாசிவம் பார்த்தியா இதை! கோயில்லே சாமியெல் லாம் முழுசா இருக்குயில்லே. இதுலே தலெய மட்டும் வெச்சிருக்காங்க. தலென்னு இன்னு? அறிவு. அறிவு இன் னுடா அறிவு? பசி வந்துட்டா அறிவெல்லாம் போயிடும்! அதான் ராமாயணத்துலே வருதே ஒரு ராச்சசன். தலேயே இல்லியாம். நீ படிச்சிருப்பியே? வவுறு மட்டும் தானும் அவ னுக்கு. ஏன்? வவுறுன்னு பசி. அதனுலெ பசிதான் ராச்சசன். அறிவுதான் தெய்வம். இன்னு தெய்வமோ ராட்சசனே?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பசின்ற ராச்சசன் வந்துட்டா எந்த தெய்வமும் தோத்துப் போயிரும். இன்னு புரிபுதா?"

சதாசிவத்துக்குப் புரிந்தது. கிழவனுக்கு மருந்து நன்ருக வேலை செய்யறது என்று.

"எனக்கு என்னவோ நீங்க போறது நல்லதுக்கு இல்லேன்னு படுது."

"சும்மா தொணப்பாதெடா! நாளைக்கு வெள்ளன எந்திரிச்சாகணும்."

பிசுக்கு உருண்டையை இருளில் வீசி எறிந்துவிட்டு மல்லாந்து படுத்த கிழவன் கோயில் மண்டபத்துச் சிமெண்டுத் தரையில் ஜில்விட்ட முதுகின் சுகத்தில் உலகத்தை மறந்து போனுன்...

"அடேயப்பா இம்புட்டு சனமா?" கோயில் கோபுர வாசலில் கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்துப் பிரமித்துப் போனுன் கிழவன்.

வாசலின் இருபுறமும் நீண்ட வரிசையாய் கொலுவிருந்த பிச்சைக்கார வர்சையைப் பார்த்தபோது அதற்கு முடிவேயில்லையோ என்று தோன்றிற்று. கண்ணில்லாதவர்கள். கையில்லாதவர்கள், காலில்லாதவர்கள், வியாதியஸ்தர்கள், சூனு வயிறுக் குழந்தைகள், அவற்றின் தாய்மார்கள் ......

'என்னு இருக்குதோ இல்லியோ எல்லாருக்கும் பசி இருக்கு!'

வரிசையின் கடைசியில் போய் நிற்பதற்கு பொறுமை இல்லை கிழவனுக்கு. நடுவிலே ஏதாவது இடைவெளி இருக்கிறதா என்று பார்த்தான். வரிசையின் முக்கால்வாசி தாண்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டின பிறகு ஒரு நோஞ்சான் பிச்சைக்காரனுக்கு பக்கத்தில் கொஞ்சம் இடம் இருந்தது. அங்கே அவன் காரித்துப்பிக் கொண்டிருந்தான். அதற்காகவே இடைவெளி விட்டு உட்கார்ந்திருந்தாள் பக்கத்துக் கிழவி. ஜனங்களின் கருணையைச் சம்பாதிக்கும் நோக்கத்தில் அவள் வீங்கிப் பருத்திருந்த தன் யானைக் கால்களை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

"நான் இங்கே குந்தவா?" எங்கே சண்டைக்கு வந்து விடுவாளோ என்று பயந்துகொண்டே கேட்டான் கிழவன்.

"அந்த ஆளுதான் ஓரேயடியா காறித்துப்புதே!" காலில் உட்கார்ந்த ஈக்களை ஒருகையால் விரட்டியபடியே மற்றொரு கையை இருமல் காரனை நோக்கிக் காட்டினாள் கிழவி.

வரிசையின் பின்னாலிருந்தவள் அதற்குள் குரல் கொடுத்தாள்.

"ஏய் கெயவா? எங்கே நொழயறே!"

"இந்தா! சொம்மா கெடவேன்! அதுதான் அங்கே குந்துரேன்னு சொல்லுதே!" கிழவி காரித்துப்பிய இடத்தைக் காட்டினாள். "ஒரு ஆளு வந்துட்டா இன்னா முழுகிப் போயிரும்?" கிழவன் இதற்குள் காலால் மண்ணைத் தள்ளி கோழையை மூடிவிட்டு உட்கார்ந்தும் விட்டான்.

"சீ சனியன்! அதுக்குள்ளார வந்து உக்காருது!" கிழவன் திடுக்கிட்டுத் திரும்பினான். பட்டென்று இரண்டு கைகளையும் அடித்துப் பிரித்து உள்ளங் கையிலிருந்து உதிர்ந்த ஒரு ஈயை தூர எறிந்தாள் கிழவி

நோஞ்சான் பிச்சைக்காரன் புகைந்து புகைந்து இருமிக் கொண்டே இருந்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோயில் நிர்வாகிகள் நல்ல வேளையாகக் கிழவனை அதிக நேரம் காக்க வைக்கவில்லை. சோறு நிறைந்த பெரிய அடுக்கின் இரண்டு காதுகளையும் இரண்டுபேர் பிடித்துத் தூக்கிவர ஒருவர் உருண்டை உருண்டையாகச் சோறு அள்ளிப் போட்டுக் கொண்டே வந்தார். சோறு போடப் போட வரிசை கலைந்து கொண்டே வந்தது.

ஆயிற்று. அருகிலேயே வந்து விட்டார்கள். அதோ கூனல் முதுகுக்காரன்... நொண்டி... இருமல் காரனுக்கும் போட்டு விட்டார்கள். கிழவன் எழுந்தே விட்டான்.

"கெழவா, ஏனம் எங்கே?"

தன்னிடம் பாத்திரம் ஏதும் இல்லை என்பதை அப்பொழுதுதான் உணர்ந்த கிழவன் வேஷ்டி முனையைத் தூக்கிப் பிடித்தான். 'பொத்'தென்று விழுந்த சோறின் கனம் வேஷ்டியைக் கீழே இழுத்தது.

அடுத்த கணம் கிழவன் திகம்பரனாய் நின்றான்.

பொறுமை இல்லை கிழவனுக்கு. பாதி கீழேயும் பாதி வேஷ்டியிலுமாக இருந்த சாதத்தை அங்கேயே சாப்பிடத் தொடங்கி விட்டான். நன்றாக மணத்தது சோறு. வாய்க்குள் விரலை விட்டு உறிஞ்சிச் சாப்பிட்டான், மூன்று நாளைக்கு அப்புறம்!

"பைத்தியம் டோய்!"

—தன்னைச் சுற்றிப் பெருகி வரும் அந்தக் கூச்சலை அவனால் உணர முடியவில்லை. சோறு முழுவதும் வழித்து விழுங்கி, விரல் இடுக்குகளையும் நக்கித் துப்புரவாக்கிய கிழவன் [illegible]னான். நான்கடி தள்ளி கீழே கிடந்தது அது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"பைத்தியம்தாம்மே!" சிறுவர்களும் சிறுமிகளும் கிழவனைச் சூழ்ந்து கொண்டு கூச்சலிட்டார்கள். "பைத்தியம்! பைத்தியம்!"

யாரோ ஒருவன் இருமிக் காறித் துப்பினான்.

சுற்றுமுற்றும் பார்த்த கிழவன் திடீரென்று முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தான், 'ஓ' வென்று பெருங்குரல் எடுத்து அழுதான். விக்கி விக்கி நீண்டநேரம் அழுது கொண்டே இருந்தான்.

போகிறவர்கள் வருகிறவர்கள் எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். யாருக்கும் ஒன்றும் புரியவில்லை.

எப்படிப் புரியும்?

அவ்வளவு பெரியவனாய் வளர்ந்துவிட்ட அந்தக் கிழவன் ஒரு குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுகிறான் என்றால்—

ஓ! அதைப் புரிந்து கொள்ள ஒரு பக்குவம் தேவை!

தாமரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மீனாட்சி ராணியின் வளையல்

ஆர். வி.

மண்ணையும் விண்ணையும் ஒன்றாக இணைப்பதுபோற் காலையிலிருந்து ஓரே சீராகக், கம்பித் தாரையாய்ப் பெய்து கொண்டிருந்தது மழை. மேக மூட்டமும் பனிப்படலமு மாக எங்கும் ஒன்றாகக் கவிந்து கப்பிக்கொண்டிருந்தது— ஆவணி மாதக் கடைசியாய்விட்டபோதிலும் நினைத்தபோ தெல்லாம் கொட்டிக்கொண்டிருந்த மழையைத் தவிர, உத கைக்கே உரித்தான வாடைக் காற்றும் உடலை ஊசி கொண்டு துளைப்பதுபோல் வீசியது.

மூடுபனி காரணமாக, சஞ்சீவியின் ஜீப் மெதுவாகவே போய்க்கொண்டிருந்தது. டிரைவர், மலையின் கொண்டை யூசி வளைவுகளிலெல்லாம் வண்டியை அதி ஜாக்கிரதையாக வளைத்து ஓட்டினான். போன மாதம்தான் அதேயிடத்தில் ஒரு மோட்டார் விபத்திற் சிக்கி மயிரிழையிற் பிழைத்திருந் தான் அவன்—ஆகவே மலைப்பாதையும் பனிமூட்டமும், தன் உயிர்மீதிருந்த கவனமும், எல்லாமுமாக அவனை மிக வும் எச்சரிக்கையாயிருக்கச்செய்தன. ஆனால் வண்டிக்குள் ளிருந்த சஞ்சீவியோ சீக்கிரமாக வீட்டையடையத் துடித் துக் கொண்டிருந்தான். ஆகவே ஜீப் வண்டி மெதுவாக ஊர்ந்து செல்வது அவனுக்குச் சொல்ல முடியாத எரிச்சலை யுண்டாக்கியது. அவனால் முடிந்தால் அதிலிருந்து குதித்து வீட்டை நோக்கி ஓட்டமாய் ஓடியிருப்பான். ஆனால் அந் தச் சந்தர்ப்பத்தில், அந்தச் சூழ்நிலையில், அது அவனால் முடியாத காரியம். ஏனெனில் அந்த மலைப்பாதையில் அவ னுக்கு வழி தெரியாது. கோயமுத்தூரிலிருந்து இரண்டு தினங்கள் முன்புதான் அவன் குந்தா அணைக்கட்டிற்கு மாற்றலாகி வந்திருந்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொட்டும் மழை, உடல் சிலிர்க்கும் குளிர், விரைத்துச் சில்லிட்டுக் கிடக்கும் ஓட்டல் சோறு, எல்லாமாக இரண்டு நாளிலேயே அந்த இடம் அவனுக்கு வெறுத்துவிட்டது. குந்தாவுக்கு மாற்றல் கிடைத்தவுடன் நீலச் சிகரங்களையும், வண்ண வண்ணமான மலைப் புஷ்பங்களையும், செழித்து வளர்ந்திருந்த பழவிருட்சங்களையும் கொண்ட அழகான வர்ணக் காட்சிகளை மனதிற் கற்பித்துக்கொண்டு வந்திருந்த அவனுக்கு, நேரிற் கண்ட ரசமற்ற இந்தச் சூழ்நிலை பெரும் ஏமாற்றத்தை யுண்டாக்கிவிட்டது.

வரும்பொழுது தனது இள மனைவியையும் ஆறு வயதுக் குழந்தையான சந்திரனையும் கோயமுத்தூரிலிருந்த அவளுடைய பிறந்த வீட்டில் விட்டுவிட்டு வந்திருந்தான். அவன் மனைவி சாரதாவுக்கு இரண்டாவது பிரசவ சமயம். அதுதான் அவளுக்கு மாதம். ஆகவே எந்த நிமிஷத்திலும் கோயமுத்தூரிலிருந்து தந்தியையோ, டிரங்காலையோ அவன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அதனால்தான் வீடு போய்ச் சேருவதில் அவனுக்கு அவ்வளவு துடிதுடிப்பு.

ஜீப் வண்டி இடைக்காட்டை நெருங்கிக்கொண்டிருந்தது. மணி நாலேதான் ஆகியிருந்த போதிலும் எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது. அங்கங்கேயிருந்த சிறுசிறு படுக மக்களின் குடியிருப்புக்களிலிருந்து மினுக் மினுக்கென்று விளக்கு வெளிச்சம் தெரிந்தது. சில் வண்டுகளின் ரீங்காரம் அவ்விடத்தைக் கப்பியிருந்த ஆழ்ந்த அமைதியை மேலும் பயங்கரமாய் எடுத்துக் காட்டியது. நீலப் பிசின் மரங்களின் கிளைகளை உலுப்பி, ஹொய்யென்று வீசிச் சென்றது உடலைச் சிலிர்க்கும் குளிர்காற்று.

டிரைவருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த சஞ்சீவியின் மனத்தில் விவரிக்க முடியாத ஒரு பயமும் குழப்பமும் கலந்த உணர்ச்சி [illegible]டாயிற்று. தூரத்தே தெரிந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar.

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விளக்குகளின் சிறு வெளிச்சத்தை நோக்கியபடியே அந்த உணர்ச்சியை அடக்க முயன்றவனாய் வண்டியில் சிலையாய் அமர்ந்திருந்தான். எதற்காகப் பயம்? அவனுக்கே வெட்கமாயிருந்தது. டிரைவரைத் திரும்பிப் பார்த்தான். தன் வேலையிலேயே கவனமாயிருந்த அவன் பாதையையே கூர்ந்து நோக்கிய வண்ணம் மிக மெதுவாக வண்டியைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

''சாமி! சாமி! டாக்டரய்யாவா?'' பாதையோரத்திற்கப்பாலிருந்து இருளிலிருந்து வெளிப்பட்டாள் ஒரு கிழவி.

சடக்கென்று வண்டியை நிறுத்தினான் டிரைவர்.

அந்த நடுக்கும் குளிரில் தெப்பமாய் நனைந்த உடையுடன் வண்டியை நெருங்கி வந்தாள் அவள். டாக்டரய்யாவுக்கு அங்கே கொட்டும் மழையில் காத்துக்கொண்டிருக்கிறாள் போலிருந்தது. யாரோ நோயாளியைப் பார்க்க டாக்டரை அழைத்துப் போவதற்காக, அவர் திரும்பி வீடு செல்லும் வழியறிந்துகொண்டு அங்கே நின்றுகொண்டிருக்கிறாள்! பகீரென்றது சஞ்சீவிக்கு. ''அப்படியானால் இப்போதைக்கு வீடு செல்ல முடியாது போலிருக்கிறதே! அட ஈசுவரா? இதென்ன உபத்திரவம்?'' என்று எண்ணிக்கொண்டான்.

''சாமி! கொஞ்சம் தயவு செய்யுங்க. மூணு நாளாக் கண்ணையே திறக்கலீங்க, என் மக விட்டுட்டுப் போன ஒரே புள்ளெங்க; மூணு நாளா சுரம் நெருப்புப் பறக்குது மத்தியானத்திலிருந்து மூச்சுக்குத் திக்குமுக்காடுது.'' என்றாள் குளம் கட்டி உதிர்ந்த கண்ணீருடன்.

சஞ்சீவி ஒரு விநாடி அப்படியே உட்கார்ந்திருந்தான்.
''சாமி! கொஞ்சம் சட்டுனு வாங்களேன்! குழந்தைக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்னேரம் உயிரிருக்கிறதோ, இல்லையோ? மகேசுவரா! நீதான் துணை!'' என்று பறந்தாள் கிழவி.

விருட்டென்று எழுந்தான் சஞ்சீவி. ஜீப்பில் ஒரு ஓரமாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்த மழைக்கோட்டை எடுத்து மாட்டிக்கொண்டான். ஸ்டெதஸ்கோப்பைக் கையிலெடுத்துக்கொண்டு, டிரைவரை நோக்கித் தலையசைத்துவிட்டுக் கொட்டும் மழையில் கிழவியின் பின்னால் நடந்தான். ஜீப்பிலிருந்த மருந்து பையை எடுத்துக் கொண்டு அவனைத் தொடர்ந்தான் டிரைவர்.

பாறைபோல் கனத்தது சஞ்சீவியின் இதயம். சேறும் சகதியும் நிறைந்த வழியில், மேட்டிலும் பள்ளத்திலும் இறங்கி, அக்கிழவியிருந்த குடியிருப்பை யடைந்தான்

வரிசையாய் நின்ற நாலைந்து சிறு வீடுகள். ஓட்டு வீடுகள் தாமாயினும் ஓரேயொரு அறைகொண்டவைகளாய் மிகவும் பழையனவாயிருந்தன. கடைசியாகவிருந்த வீட்டுக்குள் வழிகாட்டிக்கொண்டு நுழைந்தாள் கிழவி.

ஒரு ஓரமாக எரிந்துகொண்டிருந்த அடுப்பின் புகை அந்த முழுதும் சூழ்ந்துகொண்டிருந்தது. அதன் மீது போடப்பட்டிருந்த சட்டியில் எதையோ வறுத்துச், சமீபத்தில் ஒரு கோணியின் மீது படுத்திருந்த சிறு உருவத்திற்கு ஒத்தடம் கொடுத்துக்கொண்டிருந்தாள் இன்னொரு கிழவி. பக்கத்துக் குடியிருப்புக்காரி போலும்! துணைக்காக வந்திருந்தாள்.

உள்ளே நுழைந்த சஞ்சீவிக்குப் புகை மூச்சு முட்டியது. கண்ணைக் கரித்து மாலை மாலையாய் வழிந்தது கண்ணீர். கைக்குட்டையால் துடைத்துக்கொண்டான். முதற் காரியமாக அடுப்பை அணைக்கச் சொல்லிவிட்டுப் புகை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சற்று விலகிய பின்பு தன்னிடமிருந்த மின்சாரக் கைவிளக்கின் உதவியால் நோயாளியைப் பரிசோதித்தான் சஞ்சீவி. டிரைவர் பக்கத்தில் ஒத்தாசை செய்தான். கிழவிகளிருவரும் சற்று விலகி நின்றனர்.

நோயாளிப் பையனுக்கு ஆறு வயதிருக்கும் சரியான போஷாக்கும் பார்வையுமில்லாமையால் மிகவும் துர்ப்பலமாயிருந்தான். சுரம் அதிகமிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் நாடி மிக மெதுவாக அடித்துக் கொண்டது. மூச்சு விட முடியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருந்தான். வாயைத் திறக்கச் செய்து விளக்கின்னொளியால் தொண்டையைப் பரிசோதித்தான் சஞ்சீவி அவன் எதிர்பார்த்தது போலவே பையன் கடுமையான டிப்தீரியா நோயினால் தாக்கப்பட்டிருந்தான்.

"கடவுளே! இப்பொழுது என்ன செய்வது? சோதனைக்கு மேல் சோதனையாய் வருகிறதே! பையன் பிழைக்க வேண்டுமானால் இங்கிருந்து ஒன்றும் செய்ய முடியாது. அவனை ஆஸ்பத்திரிக்குத்தான் எடுத்துச் செல்ல வேண்டும். அப்படியானால் விடிய விடிய நானும் அங்குதானிருக்க வேண்டும்! வீட்டில் கோயமுத்தூரிலிருந்து ஏதாவது செய்தி வந்தால்? இரண்டு நாள் முன்பு கூடச் சாரதாவுக்கும் சந்திரனுக்கும் கொஞ்சம் ஜுரமாயிருந்ததாகக் கடிதம் வந்ததே! இப்பொழுது எப்படியிருக்கிறதோ? போதாததற்கு டாக்டர் வேறு இந்தத் தடவை சாரதாவுக்குக் கொஞ்சம் சிரமமாயிருக்குமென்று சொல்லியிருக்கிறார்! லீவெடுத்துக் கொண்டு போகலாமென்றாலும் முடியாது போலிருக்கிறதே! 'இந்த அத்துவானத்திற்கு எனக்குப் பதிலாகப் பத்து நாளைக்குக் கூட யாரும் வரமாட்டேனென்கிறார்களே!' என்று எத்தனை எத்தனையோ எண்ணங்கள் ஒரு வினாடியில் அவன் மனதிற் தோன்றி மறைந்தன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

அவன் காலடியில் கிழித்த நாராய்க் கண் மூடிக்கிடந்

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தான் நோயாளிப்பையன். அவன் பாட்டியோ, தனது குழி விழுந்த கண்களில் ஆருயிப்பெருகிய கண்ணீருடன் தன் பேரப்பிள்ளையையும் டாக்டரய்யாவையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

டாக்டரய்யாவைப் பார்க்கும்தோறும், அவள் மனதிலுண்டாகிய நம்பிக்கையின் ஒளி, கண்ணீர் ததும்பிய அவளுடைய விழிகளிற் பிரதிபலித்தது.

சட்டென்று டிரைவர் பக்கம் திருப்பி மெதுவாக ஏதோ சொன்னான் சஞ்சீவி. பிறகு கிழவியை நோக்கினான்.

"பையனை இந்த ஜீப்பிலேயே ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகணும்! இங்கிருந்து ஒன்றும் செய்யமுடியாது" என்றான்.

"எப்படியாவது பிள்ளை பிழைச்சால் போதும்; என்ன வேண்டுமானாலும் செய்யுங்க" என்றாள் கிழவி துக்கத்தினால் திணறியபடியே.

"சிக்கம்மாவுக்கு இந்தப் பையன் ஒண்ணுதானுங்க, உயிர் நாடி. வேறே யாருமேயில்லே. அந்த மாகேசுவரன் கிருபையிலே ஐயாவுடைய கைராசி, பிள்ளை பிழைச்சுக்கிடணும், என்று கையெடுத்துக் கும்பிட்டாள் பக்கத்துவீட்டுக் கிழவி.

சஞ்சீவிக்கு மனதை என்னவோ செய்தது எங்கேயோ கோயமுத்தூரிலிருந்த மகனும் மனைவியும் மாறி மாறி அவன் நினைவில் வந்து நின்றார்கள்.

"ஒரு வேளை குழந்தை சந்திரனும் அங்கே ஏதாவது உடம்புக்கு வந்து இப்படி......" சஞ்சீவியின் தொண்டையில் ஏதோ உருண்டையாய் அடைத்துக் கொண்டது. சட்டென்று உமிழ் நீரைக் கூட்டி விழுங்கிக் கொண்டான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடுத்த ஐந்து நிமிஷம் டிரைவரும் அவனும் பரபர வென்று வேலை செய்தார்கள். பையனைக் கூடிய வரையில் சௌகர்யமாகத் தூக்கிக் கொண்டுபோய் ஜீப்பில் படுக்க வைத்தார்கள். கிழவியும் ஏறிக்கொண்டாள். வண்டி ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்றது.

வெளியே மழை விடாமற் பெய்தது. மின்னல் பளீர் பளீரென வெட்டி வானைத் துண்டித்தது. மையிருள் எங்கும் அப்பிக் கிடந்தது. இடையே வீசிச் சென்ற ஊதற் காற்று அவ்விருளின் பயங்கரத்தைப் பின்னும் அதிகமாக எடுத்துக் காட்டியது.

அணைக்கட்டின் நான்கே அறைகள் கொண்ட சிறிய ஆஸ்பத்திரியில் சிறியதோர் அறையில் கட்டிலின் மீது கிடந்தான் பையன். அங்கிருந்த ஒரு மருத்துவத் தாதியும் சஞ்சீவியும் அவனைக் கண்ணும் கருத்துமாய்க் கவனித்துப் பார்த்தார்கள். ஊசி போட்டுவிட்டு அவனுடைய நாடியைப் பிடித்தபடியே பக்கத்தில் கிடந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான் சஞ்சீவி. அவனுடைய விழிகள் பையனுடைய முகத்தைக் கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தன. தாதிக்கு அவ்வப்பொழுது ஏதோ உத்தரவுகள் பிறப்பித்தபடியே அரை மணிக்கொரு முறையாகப் பின்னும் இரண்டு ஊசிகள் போட்டான். கிழவி ஒரு மூலையில் சுவரோடு ஒண்டிக்கொண்டு உட்கார்ந்துவிட்டாள். நடு நிசி வரையிலும் நோயாளியின் நிலைமையில் எதுவிதமான மாறுதலுமில்லை. போட்டபடியே கிடந்தான். சுவாசம் மட்டும் திணறியபடியே தான் இருந்தது. விடியறகாலம் நான்குமணி சுமாருக்கு அவனுடைய நாடி பின்னும் இறங்கி விட்டது. திணறலும் விக்கலும் மிகவும் அதிகமாய்விட் டன. சஞ்சீவி மீண்டும் கடைசியாக ஒரு ஊசியைப் போட்டுவிட்டுக் கடவுள் மீது பாரத்தைச் சுமத்திவிட்டுப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பையனின் மூடிய விழிகளை நோக்கியபடியே அசையாமல் உட்கார்ந்துவிட்டான்.

இரண்டு மாதங்கள் முன்பு வீட்டின் கூடத்தில் மின்சார விசிறியைச் சுழலவிட்டுவிட்டுப் படுத்திருந்தாள் சாரதா. சஞ்சீவி ஒரு சின்னத் தூக்கம் போட்டு விழித்தவன் மத்தியானக் காப்பியை எதிர்பார்த்தபடி ஒரு நாவலைப் புரட்டிக் கொண்டிருந்தான். வாசலில் விளையாடிக் கொண்டிருந்த சந்திரன் ஓடிவந்து தன் தாயாரை எழுப்பினான்.

"அம்மா! வளையல்காரக் கிழவி வந்திருக்காம்மா! நல்ல நல்ல வளையலெல்லாம் கொண்டு வந்திருக்காள்! பக்கத்து வீட்டு மாமி உன்னை வரச் சொன்னா!" என்றான்.

வளையல் என்றவுடனேயே வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்துவிட்டாள் சாரதா அவசர அவசரமாகப் புடவையைச் சரிப்படுத்திக்கொண்டு வாசலுக்குப் போனாள். வளையலென்றால் கொள்ளை ஆசை அவளுக்கு. காம்பவுண்டுக் கேட்டுக்கருகிலிருந்த பன்னீர் மரத்தடியில் ஒரு துண்டை விரித்து அதில தன் கடையைப் பரப்பியிருந்தாள கிழவி. அழகழகான வர்ண வளையல்கள். அக்கம்பக்கத்துப் பெண்களெல்லாம் அங்கே கூடியிருந்தார்கள். சாரதாவும் கூட்டத்துக்குள் நுழைந்தாள்.

"வா! கண்ணு! தினுசு தினுசான வளையலெல்லாம் கொண்டு வந்திருக்கிறேன் பார்!" என்று அன்போடு வரவேற்றாள் கிழவி அவளை. "சின்னச் சின்ன வளையல் பார்! வைஜயந்திமாலா வளையல். பிறக்கப் போகிற மீனாட்சி ராணிக்கு வாங்கிக்கோ!" என்று ஜிகினாப் பொட்டுக்கள் வைத்த இரண்டு ஜோடி வளையல்களை நீட்டியபடியே சாரதாவை ஏற இறங்கப் பார்த்துத் தன் பொக்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாயைக் காட்டிச் சிரித்தாள் கிழவி. பக்கத்திலிருந்த பெண்களெல்லாரும் அந்தச் சிரிப்பிற் கலந்துகொண்டார்கள். "அப்படிச் சொல்லு ஆயா! சாரதாவுக்கு மீனாட்சிதான் பிறக்கப் போகிறாள், இல்லையா?" என்றாள் ஒருத்தி. சாரதாவுக்கு முகம் குங்குமமாய்ச் சிவந்து போயிற்று. கையிலெடுத்த வளையல்களைச் சட்டென்று கீழே வைத்து விட்டாள்.

"எடுத்துக்கோ, தாயே! இதுபோல வளையல் இனிமேல் வரவே வராது! எல்லாம் செலவாயிடுத்து" என்ற கிழவி அந்த வளையல்களை எடுத்து மீண்டும் சாரதாவின் கையில் வைத்தாள்.

"வாங்கிக்கோடி! வளையலைமாத்திரம் வேண்டாமென்று சொல்லக் கூடாது," என்றாள் பழைய கருத்துக்களில் நம்பிக்கை கொண்டவளான பங்கஜம்.

வெட்கத்தாற் சிவந்த முகத்துடன் அந்த வளையல்களை உள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டு அதற்குரிய காசைக் கிழவியிடம் கொடுத்துவிட்டு உள்ளே வந்தாள் சாரதா.

சன்னல் வழியாக இதையெல்லாம் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த சஞ்சீவி, அந்த வளையல்களைக் கையிலெடுத்துப் பார்த்துக் கொண்டே, "இது யாருக்கு? மீனாட்சிக்கா?" என்று கேட்டான் குறும்பாக. சாரதாவின் அபிலாஷை அவனுக்குத் தெரியும்? பெண் குழந்தையென்றால் அவளுக்குக் கொள்ளை ஆசை.

"பிள்ளையென்ன வேண்டியிருக்கு? ஒரு பாவாடை கட்ட முடியுமா?—ரிப்பன் வைக்கலாமா?—விதம் விதமாக நகை பூட்டிப் பார்க்க முடியுமா? என்னவிருந்தாலும் பெண் குழந்தையிருந்தால்தான் வீட்டுக்குக் களை! இந்தச் சந்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரனைப் பாருங்கள்—கிராப்புத் தலையைக் கூட வாரிவிடக் காட்டாமல், மண்ணையும் மட்டையையும் தூக்கிக்கொண்டு விளையாட ஓடிவிடுகிறது!" என்று அடிக்கடி அலுத்துக் கொள்வாள். இரண்டொரு தரம் சந்திரனுக்குக் கவுன் தைத்துப் போட்டு அழகுகூடப் பார்த்திருக்கிறாள்.

ஆகவே சஞ்சீவி சொன்னதைக் கேட்டவுடன் "போங்கள்! உங்களுக்கு எல்லாமே விளையாட்டுத்தான்!" என்று பொய்க் கோபத்துடன் கூறிவிட்டுச் சமையலறைக்குள் போய்விட்டாள். சஞ்சீவி உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். அன்றிரவு அவன் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வந்தவுடன் வளையல்களை மேஜைமீது காணவில்லை. சாரதா அவற்றை எங்கேயோ ஒளித்து வைத்துவிட்டாள்.

பையனின் உடம்பு சில்லென்றிருந்தது. திக்கென்றது சஞ்சீவிக்கு! சட்டென்று குனிந்து பார்த்தான். பக்கத்தில் உட்கார்ந்திருந்த மருத்துவத் தாதி, பையனின் நெற்றியிலிருந்த வியர்வைத் துளிகளைத் துணியினால் ஒத்தியெடுத்தாள்.

நிறைந்து நின்று நிதானமாக மூச்சு விட்டுக்கொண்டிருந்தான் நோயாளிப் பையன். மருத்துவத் தாதி சஞ்சீவியின் முகத்தைப் பார்த்தாள். மனப் பாரம் குறைந்து உடலெல்லாம் லேசாய்விட்டது போலிருந்தது அவனுக்கு. புன்சிரிப்புடன் அவளைப் பார்த்து தலையசைத்து விட்டுக் கண்களை மூடி நாற்காலியிற் சாய்ந்தான். அவளும் நோயாளிக்கு நன்றாகப் போர்த்தி வைத்துவிட்டு அடுத்த அறைக்குப் போய்விட்டாள். இளைப்பாற பையனின் பாட்டிக் கிழவி உட்கார்ந்தவிடத்திலேயே படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

சஞ்சீவி கண் விழிக்கும்பொழுது மழை நின்றுவிட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பனி மூட்டம் விலகி தூரத்தே தெரிந்த நீலச் சிகரங்களின் மீது சூரியன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். சட்டென்று எழுந்தான் சஞ்சீவி.

"டாக்டர்! இதோ உங்களுக்கு ஒரு தந்தி! சற்று முன்னுல்தான் வந்தது; நல்ல சமாசாரமாயிருந்தமையால் கொஞ்சம் பொறுத்தே சொல்லிக் கொள்ளலாமென்று உங்களை எழுப்பவில்லை" என்று சிரித்த முகத்துடன் உள்ளே நுழைந்த தாதியிடமிருந்து தந்தியை வாங்கிப் படித்தான் சஞ்சீவி.

"இன்று காலை சாரதாவுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. தாயும் குழந்தையும் க்ஷேமம்" என்று தந்தி கொடுத்திருந்தார் சாரதாவின் தந்தை. சட்டென்று சட்டைப் பையிலிருந்து ஐந்து ரூபாய் நோட்டொன்றை எடுத்து நீட்டினுன். "எல்லாரும் கற்கண்டு வாங்கிக் கொள்ளுங்கள்" என்ருன். அவள் அதை வாங்கிக்கொண்டு சிரித்துக்கொண்டே வெளியே போனுள்.

அவர்கள் பேசும் சப்தம் கேட்ட கிழவி சட்டென்று விழித்துக் கொண்டு அவர்கள் சமீபம் ஓடிவந்தாள்

"பிள்ளைக்கு எப்படியிருக்குங்க?" என்று கேட்டாள் திகிலுடன்.

'உன் பேரன் பிழைத்துவிட்டான்! கவலைப்படாதே" என்று சிரித்தான் சஞ்சீவி. கிழவியின் கண்களில் நன்றிக் கண்ணீர் முட்டியது. சற்றுப் பொறுத்து ஒரு பெரிய கற்கண்டுக் கட்டியை அவளிடம் கொடுத்துவிட்டு, 'நீ வீட்டுக்குப் போய்ச் சாயங்காலம் வா, போதும். இங்கே பையனை நன்ருகக் கவனித்துக் கொள்வார்கள். கவலைப்படாமல் போய் வா!" என்று சொல்லிவிட்டு, "ஆமாம்! உன் பேர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

னின் பெயர் என்ன? நீ சொல்லவேயில்லையே!'' என்று கேட்டான்.

''கெப்பராஜ்'' என்று கூறிவிட்டு அவனைக் கையெடுத்துக் கும்பிட்டவளாய்ப் புறப்பட்டுப் போனாள் கிழவி. பேரனைத் தொட்டுப் பார்த்துவிட்டு—

நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்த பையனை மருத்துவத் தாதியிடம் ஒப்பித்துவிட்டு வீட்டை நோக்கிக் கிளம்பினான் சஞ்சீவி. போகும் வழியில் ''பாவம், சாரதாவின் ஆசைக்கு இதாவது பெண்ணாய்ப் பிறந்திருக்கலாம்!'' என்றெண்ணிக் கொண்டான். வீடு போய்ச் சேர்ந்தவுடன் மாமனாருக்குப் பதில் தந்தியடித்துவிட்டுத் தன் ஆசை மனைவிக்குக் கடிதம் எழுதினான்.

''......மீனாட்சிராணி ஏமாற்றிவிட்டாள் போலிருக்கிறது! வளையலை என்ன செய்யப் போகிறாய்? மறந்துவிட்டேனே! பையனுக்கு 'கெம்பராஜ்' என்று பெயர் வைத்துவிடு, வளையலையும் வேணுமானால் அவனுக்கே போடலாம்......''

இரண்டு நாளில் பதில் வந்தது. ''...கெம்பராஜ் என்ற பெயர் பிடிக்கவில்லை. இருந்தாலும் அதையே வைத்துவிட்டேன், பையனுக்கு! வளையல் போடவில்லை. இரண்டு வருடம் கழித்துப் பிறக்கப் போகும் மீனாட்சிராணிக்காக எடுத்து வைத்துவிட்டேன்...'' என்று எழுதியிருந்தாள் சாரதா.

— கதம்பம், கொழும்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆத்ம தரிசனம்

"வாஸந்தி"

"நாராயணு! நாராயணு!"

அவர் ஆடிக்கொண்டிருந்தார். அப்பா! அது என்ன பக்தியா? அவநள் அவனுய், அவனே அவராய் நின்ற நிலையா? பார்ப்பவர்களை மெய்சிலிர்க்க வைத்தது அக் காட்சி. இரண்டு தோள்பட்டையிலும் இரண்டு பால கர்களை ஏந்திக்கொண்டு, சுமக்கும் கனத்தின் உணர்வே யில்லாமல் முதிர்ந்து தேய்ந்த அந்த எலுப்புக் கூடு, இறைவனின் நாமத்திற்கு ஜதிபோட்டது ஜீவனெல்லாம் முகத்தில் தேங்கி, கண்களில் சுடர்விட்டது.

"நாராயணு! குருவாயூரப்பா!"

கோயில் யானையும் பக்தர்கள் கூட்டமும் பின் தொடர அவர் பிராகாரத்தைச் சுற்றிச்சுற்றி வந்தார். எவ்வளவு முறை சுற்றினுலும் எவ்வளவு முறை நாரா யணனை ஜபித்தாலும் அவருக்கு வேகம் தணியாது. உள்ளும் உடலும், அகமும் புறமும் எங்குமாய் வியாபித் திருக்கும் ஓங்காரத்தில் லயித்து நிற்கையில், அகத்தையும் புறத்தையும் பேதப்படுத்த முடியாத ரம்மிய நிலையில், கோயில் யானை தன்னுடைய சுற்றுகளை முடித்துக்கொண்டு போய்விட்டது. பக்தர் குழாம் குருவாயூரப்பனைத் தரிசிக்க திமுதிமுவென்று சந்நிதிக் கதவு திறக்கப்பட்டதும், விரைந்துவிட்டது. தோள் மேல் இருந்த சிறுவர்கள் கீழே மெள்ள இறங்கி விட்டார்கள். கிழவரின் புலன்களுக்கு எதுவுமே ஏற்படவில்லை. தன்னுள் ஐக்கியமாகி இருந்த அவரை தெய்வ தரிசனமாய்ச் சிறுவர்கள் பார்த்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றார்கள். வெகு நேரம் கழித்து அவர் விழித்துக் கொண்டார்

''தாத்தா, சந்நிதிக்குப் போவோமா?''

''அவசியமில்லை குழந்தை, அங்கும் இங்கும் எங்கும் ஒன்றுதானே குழந்தை.''

வழக்கம்போல் அவர் குளத்துக்கு விரைந்தார். மறைவாக ஓர் இடத்தில் உட்கார, சிறுவர்கள் இருவரும் குதிபோட்டுக்கொண்டு குளத்தில் இறங்கி விட்டார்கள். கிழவர் ஆனந்தலயத்தில் தன்னுள் புன்னகை பூத்திருந்தார்.

''பெரியவரே!''

கிழவர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்.

''யாரு?''

''நான் டில்லியிலிருந்து குருவாயூரப்பனை தரிசிக்க வந்தேன். இன்று காலை உங்களுடைய தரிசனமும் கிடைத்தது...''

பெரியவர் புன்னகையுடனேயே உட்கார்ந்திருந்தார்.

''நான் இத்தனை தூய்மையான, பரிசுத்தமான பக்தியை எங்குமே கண்டதில்லை. தங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளணும்னு எனக்கு ஆசை. தங்களுக்கு இந்த ஊர்தானே?''

கிழவர், அரண்டவர்போல் விழித்தார். திடீரென்று எழுந்த அந்தக் கேள்வி, பொட்டில் அடித்தாற்போல் இருந்தது.

''எதையோ மறக்க நினைத்து இங்கே ஓடி வந்திருக் கிறேனப்பா, ...''

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"சொல்லக் கூடாதென்றால் நான் வற்புறுத்தவில்லை, பெரியவரே!"

கிழவர் சிரித்துக் கொண்டார்.

"சொல்லக் கூடாதஒன்றுமில்லை அப்பா. என்னை ரொம்பப் பெரியவனாக மதித்து என் பூர்வோத்தரத்தைக் கேட்கிறாயே. அதுதான் வேடிக்கை. என் மனசில் நான் சுமந்திருந்த அழுக்கை நினைத்தால் எனக்கு இன்னும் உடல் கூசுகிறது. நினைக்காமல் இருக்கவும் முடியவில்லையே...!"

அவர் உடம்பே மனத்துடன் துடித்தது. அவர் கண்களை மூடிக்கொண்டு நினைவலைகளில் அமிழ்ந்து விட்டார்.

"அப்பனே. நீ திருச்செந்தூருக்குப் போயிருக்கிறாயோ? அந்த சமுத்திரத்தையும், கரையை யொட்டிய கோயிலை யும், கோயிலுக்குள் முருகனையும் தரிசித்திருக்கிறாயோ? அங்கு போயிருந்தால் சுப்பிரமணிய சர்மாவைப் பற்றி நிச்சியம் கேள்விப்பட்டிருப்பாய். மகா ஆசார சீலர். ஆசாரமென்றால் எப்படிப்பட்ட ஆசாரம்? சாஸ்திர சட்ட திட்டங்களை எல்லையாக வகுத்து அந்த எல்லைக்கு வரம்பிட்டு, அந்த வரம்புக்குள் தன்னைச் சிறைபடுத்திக் கொண்டு, அந்தச் சிறைக்குள்ளேயே தன் மனத்தை விட்டுக் கொண்டிருந்தாரே அந்தப் பரிதாபமான மனிதரை நீ பார்த்ததில்லையே அப்பா? புரியாத கோடுகளை இழுத்தும் அவையே பிரதானமாக நினைத்து அதற்கு அப்பால் துல்லியமாக விளங்கும் உண்மையே விளங்காமல் ஜடமாக. இருப்பது எவ்வளவு பாபமான காரியம்? வாழ்க்கையே விரயமாகப்போவது போலில்லையா? ஆனால் சர்மாவிடம் வேஷமில்லை. தான் நினைத்ததே உண்மை யென்று நம்பினால்தான் எழுப்பிய சுருதியில் இருந்த பேதத்தைத் அவருடைய [illegible] அறியவேயில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனிக் கட்டையாய், நிம்மதியாய் முருகன் சந்நிதியில் வீழ்ந்து கிடந்த போதுதான், அவருக்கு வாழ்க்கையில் ஒரு மகத்தான திருப்பமேற்பட்டது. வடக்கே இருந்த அவருடைய ஒரே மகள் தன்னுடைய கணவனுடன் கண்ணை மூடிவிட்டாள் ஒரு விபத்தில். எங்கேயோ மண்ணோடு கலந்துவிட்ட அவளுடைய உதிரத்தின் துளி ஒரு வாரிசையும் விட்டு விட்டுச் சென்றது. அந்த சிறிய கொழுந்து தெற்குக் கோடியில் சிவனே என்று கிடந்த தனிக் கட்டையிடம் சேர்த்துக் கொண்டது.

சர்மாவுக்கு வேடிக்கையாக இருந்தது. சன்யாசியைப் போல் இருந்த அவருக்குக் கடைசி காலத்தில் இப்படி ஒரு வாழ்க்கைப் பிடிப்பா?

வீட்டில் ஒரு சின்னஞ் சிறு பாலகன் வளைய வருகையில், அவருடைய உள்ளத்தில் இதுவரை அனுபவித்திராத கிளுகிளுப்பு ஏற்பட்டது. அவனுடைய மழலைப் பேச்சிலும் முல்லைச் சிரிப்பிலும் நெகிழ்ந்து நெகிழ்ந்து நிற்பார். அவன் ஓடுமிடமெல்லாம் கண்ணாய், பேசுமிடமெல்லாம் செவியாய் அவர் நெக்குருகி நிற்கையில் அண்மையின் மிசப் பெரிய சாதனை தனக்குக் காத்திருப்பது போல் பிரமை ஏற்படும்.

அவர் தன்னுடைய நியம அனுஷ்டானங்கள் ஒன்றையும் குறைத்துக் கொள்ளவில்லை. அதிகாலையில் கடலில் நீராடிவிட்டு, சிவகுமாரனையும் எழுப்பி நீராட்டி, கோயிலுக்குப்போய் தியானத்தில் உட்கார்ந்து விடுவார். பிறகு ஒரு மணிநேரம் கழித்துத்தான் எழுந்திருப்பார். அதுவரை கோயிலுக்கு முன்னால் இருக்கும் மணற்பரப்பில் குழந்தை விளையாடிக் கொண்டிருப்பான.

ஒரு நாள் தியானத்தை முடித்துக்கொண்டு வெளியே வந்து பார்க்கையில், சிவகுமாரனைக் காணாமல் மனம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பதைத்தது. சமுத்திரக் கரையில் பார்த்தார். அங்கேயும் காணோம்,

'கல கல' வென்று சிரிப்பொலி கேட்கவே அவர் திரும்பிப் பார்த்தார். கோயிலுக்கு வெளியே கடலையொட்டி யிருக்கும் வெளிப்பிராகாரத்தில் யாரோ ஒரு சிறுவனுடன் சிவகுமாரன் விளையாடிக் கொண்டிருந்தான். தூணுக்குத் தூண் ஓடிப்பிடிப்பதும், தட்டாமாலை சுற்றுவதுமாக அவனுக்கு ஒரே குஷி!

"சிவகுமாரா!"

அவன் குதி போட்டுக்கொண்டு ஓடி வந்தான்.

"தாத்தா, என்னுடைய சிநேகிதனைப் பாருங்கோ தாத்தா. அவனுக்குக் கந்தன்னு பேரு. அவனுடைய அப்பா நிறைய மீனெல்லாம் பிடிப்பாராம் தாத்தா."

சர்மாவுக்கு உடலெல்லாம் பதறியது. அவருக்குத் தெரியும். அது செங்கோடனுடைய மகன் என்று.

"சரி, நீ வீட்டுக்கு வா."

தாத்தாவின் குரலில் இருந்த கடுமை விளங்காமல் சிவகுமாரன் தொடர்ந்தான்...

கிழவர் கண்களில் நீர்முட்ட நின்றார்.

"அப்பனே. உனக்குக் குழந்தைகள் இருக்கிறார்களல்லவா? அவர்கள் மனம் மல்லிப்பூவை போல, தெய்விக மணம் பரப்பும், விரைவில் சொந்தும்விடும்...அந்த தெய் விகத்தை உணராமல் இருந்தது எத்தகைய அறிவீனம்...!

கிழவர் "மடேச் மயேசுர" என்று தலையில் அடித்துக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டார். அப்பனே, சர்மாவுக்கு அந்தப் பரிசுத்த உள்ளத்தைக் கும்பிடத் தெரியவில்லையே'' குழந்தையின் சிநேகத்திற்கு முட்டுக்கட்டை போட்டார். தன்னுடைய பேரன் ஒரு செம்படவப் பையனுடன் தொட்டுச் சீண்டி விளையாடுவதா? அவர், தெய்வ குற்றமே ஏற்பட்டு விட்டாற்போல் பயந்தார். படைப்பில் இப்படி ஒரு பேதமா— அவர் சிந்திக்கவேயில்லை. தான் பின்னிய வலைக்குள்ளேயே சுற்றிச்சுற்றி வந்தவருக்கு, வலைதான் எல்லையாகத் தெரிந்தது. அவரை வெளியே இழுக்கத்தானோ என்னவோ, அவருடைய கட்டுப்பாட்டையும் மீறிக்கொண்டு சிவகுமாரனுக்குக் கந்தனிடம் ஈடுபாடு அதிகமாயிற்று.

சர்மா செய்வதறியாது திகைத்தார். வைதிகத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தனக்குக் கடைசி காலத்தில் இப்படிப்பட்ட சோதனையா? அவருடைய கோபத்துக்குப் பயந்துகொண்டு சிறுவன் திருட்டுத்தனமாகக் கந்தனுடன் விளையாட ஆரம்பித்தான்...''

கிழவர் கண்களைத் துடைத்துக் கொண்டு எங்கேயோ வெறித்துப் பார்த்தார்.

அப்பா! அன்று என்ன மழை பெய்தது! ஊழிக் காற்றும் பெருத்த சாரலுமாகக் காலனே வந்துவிட்டாற் போல் எப்படிப்பட்ட மழை! அன்று மாலையிலிருந்து சிவகுமாரனுக்கு திடீரென்று உடம்பு அனலாய்ச் சுட்டது. 'இதென்ன சோதனை ஆண்டவனே' என்று அவர் இரத்தமெல்லாம் உறைய, நிலைப்படியில் தடுமாறி நிற்கையில் யாரோ பனங்குடையைப் பிடித்துக்கொண்டு போவது தெரிந்தது.

''செங்கோடா!''

''சாமீ!'' அவன் ஓடி வந்தான். சர்மாவுக்கு நாக்கு குழறியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"செங்கோடா, குழந்தைக்கு சாயங்காலத்திலிருந்து ஒரே காய்ச்சல், கண்ணை முழிக்கல்லே..."

"இதோ, வைத்தியரைக் கூட்டியாரேன் சாமீ..."

அடுத்த ஐந்தாவது நிமிஷம் அவன் வைத்தியருடன் வந்து சேர்ந்தான்.

வைத்தியர் மட்டும் உள்ளே வர, அவன் செய்த உதவிக்குப் பிரதியாக மழையிலேயே நின்றான். நன்றியில் நெஞ்சு சுரக்கும் நிலையிலும் அவனை உள்ளே அழைக்க நா எழவில்லை சர்மாவுக்கு...

கிழவர் கூசிக் குறுகி உட்கார்ந்தார்.

சர்மாவின் ஆசாரத் தீவிரம் செங்கோடனின் உதவிக்குக் கூட இளகவில்லை; அன்புக்குக்கூட இளகவில்லை... அப்பனே, இதை அகந்தை என்பதா, அறியாமை என்பதா? குழந்தைக்கு ஜுரம் வந்ததே ஆசாரக் குற்றத்தினால்தான் என்று தீர்மானித்துவிட்டார். அவனுக்கு உடம்பு சரியானதும், கந்தனின் முகத்திலேயே அவனை முழிக்க விடக் கூடாது என்ற முடிவுக்கு வந்தார்.

சிவகுமாரனுக்கு ஜுரம் விட்டு இரண்டு நாட்களாயின. சர்மா அவனை வீட்டிலேயே படுத்திருக்கச் சொல்லிவிட்டு சமுத்திர ஸ்நானத்திற்குக் கிளம்பினார். அன்று அவருக்கு ஏதோ மனசே சரியாக இல்லை. என்னவோ சிதறிய சிந்தனைகள். குழப்பமான எண்ணங்கள். என்றுமில்லாத பரபரப்புடனும் அவசரத்துடனும் ஸ்நானம் செய்தார். முதல் நாள் பௌர்ணமி அல்லவா? அலைகள் ராட்சஸ வேகத்துடன் அடித்தன. அன்றைக்கு அவருடைய சக்தியே கரைந்து போய்விட்ட மாதிரி இருந்தது. வேகமாகக் கரைக்குப் போய் [illegible] உட்கார்ந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தும், மனத்தை லயத்திற்கு இழுக்க முடியாமல் அவர் முருகன் சந்நிதிக்கே போய் நின்றார். அவருடைய குழப்பமும் இனம் புரியாத மனத்தின் நடுக்கமும் அவருக்கே புரியவில்லை. சந்நிதியில் வெகுநேரம் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து கிடந்தார்.

'உருவாய் அருவாய் உளதாய் இலதாய் மருவாய் மலராய் மணியாய் ஒளியாய், கருவாய் உயிராய் கதியாய் விதியாய் குருவாய் வருவாய் அருள்வாய்...'

கிழக்கு வெளுக்க ஆரம்பித்திருந்த அந்த நேரத்தில் செங்கோடன் சமுத்திரத்தை நோக்கி ஓடுவது தெரிந்தது. அவருக்குப் பகீரென்றது. 'ஏன் அப்படி ஓடுகிறான்? அங்கே அலைகளுடன் போராடிக்கொண்டிருப்பது சிவகுமாரனல்லவா? அவனுடன் கந்தனுமா? சிவகுமாரன் எப்படி வந்தான்? ஐயோ இதென்ன சிநேகிதம், குடியைக் கெடுக்கவா, உயிரைக் கொல்லவா?' தன்னுடைய வயதையும் சக்தியையும் மறந்து வெறியுடன் அலைகளை நோக்கி ஓடினார். செங்கோடன் திடீரென்று பெரிதாகக் கத்தினான்.

"சாமீ! வராதீங்க, நீங்க வராதீங்க!" சர்மா பிரமை பிடித்து நின்றார்.

செங்கோடன், இரண்டு சிறுவர்களையும் சேர்த்துப் பிடிக்க சமுத்திரத்துடன் மல்லுக்கு நின்றான். தெய்வமே, அப்பொழுதுதான் அந்த அற்புதம் நிகழ்ந்தது. அலை அடித்த வீச்சில் இரண்டு சிறுவர்களும் தனியே பிரிந்து விட்டார்கள். கந்தன் சுழல் பக்கம் சிக்கிவிட்டான். செங்கோடன் ஒரு கணம் தயங்கி நின்றாற் போல் இருந்தது. விழிகள் தெறிக்க சர்மா இதயத்தைக் கையிலேயே பிடித்துக் கொண்டு நின்றார். திடீரென்று செங்கோடன் ராட்சஸ வெறியோடு சிவகுமாரன் பக்கம் விரைந்தான். பெற்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிள்ளை சுழலில் அமிழ்ந்து போக, இந்தப் பாவியின் சொத்தைக் காப்பாற்ற விரையும் அவன் தெய்வமல்லவா? அவரக மெங்கும் மின்வெட்டு தெறித்தாற்போலிருந்தது வெறும் தூசாய், மண்ணாய்ப் போய்விட்ட அவர் முன் விசுவரூபமாய் எழுந்த செங்கோடனின் உருவத்தில், அவரே அவனாய், அவனே அவராய்க் காண்கையில், வெளிப் போர்வை சரசரவென்று கிழிந்தது. சிவகுமாரனைக் கையில் ஏந்தி அவன் அவர் காலடியில் கிடத்தினான்.

"செங்கோடா!" அவர் தாவி அவனை அணைத்துக் கொண்டார்.

"என்ன காரியம் செய்தாய் அப்பா!" குழந்தைபோல் அழுதார்.

செங்கோடன் மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டான்.

"எனக்கு இன்னொரு மவன் இருக்கிறான் சாமி!" பிறகு அவன் திரும்பியே பார்க்காமல் போய்விட்டான்...

கிழவர் குலுங்கக் குலுங்க அழுதார்...

அப்பனே, சர்மாவிற்கு அது எப்படிப்பட்ட திருப்பம் என்று உன்னால் புரிந்துகொள்ள முடியுமோ? விதி அத்துடன் விடவுமில்லை. இரண்டே நாள் விஷ ஜுரத்தில் திடீரென்று செங்கோடன் இறந்துவிட்டான். விவரம் அறிந்து சர்மா அவனுடைய வீட்டிற்கு ஓடினார். கூடப் பிறந்தவனை அணைத்துக் கதறுவதுபோல் கதறினார். மூலையில் அநாதையாகப் போய் நின்றுவிட்ட அவனுடைய கடைசிப் பையனைக் கையுடன் தூக்கிக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டார்.

கிழவர் டளீரென்று உடலெல்லாம் பரவப் புன்னகைத்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"அப்பனே, அது எவ்வளவு பெரிய சாதனை தெரியுமா? ஆனால் இந்தத் தூசு படிந்த உலகம் ஒரே நாளில் இவ்வளவு பெரிய மாறுதலை ஏற்குமா? சர்மாவை உத்தண்டமாகப் பழித்து ஒதுக்கிவிட்டது. நிம்மதியைத் தேடி, குழந்தைகளோடு திருச்செந்தூரை விட்டுக் கிளம்பி விட்டார் அவர்.

கிழவர் சிரித்துக்கொண்டார். 'அங்கேயும் நான்தான் இருக்கிறேன்' என்று இங்கே முருகன் அனுப்பிவிட்டான். ஒருவருக்கும் இங்கே என்னைத் தெரியாதே..."

அவர் எழுந்துவிட்டார். இரண்டு சிறுவர்களும் குளித்துவிட்டு ஓடி வந்ததும், அவர்களை அனாயாசமாகத் தூக்கித் தோள்மேல் வைத்துக் கொண்டார்.

"நீயே நானாய், நானே அவனாய் இருக்கையில், என்ன பேதம் அப்பனே?"

இரவு பிரதட்சணத்திற்குக் கிளம்பிவிட்டார் அவர். சுமக்கும் கனத்தின் உணர்வே இல்லாமல் முதிர்ந்து தேய்ந்த அந்த எலும்புக் கூடு இறைவனின் நாமத்திற்கு ஜதி போட ஆரம்பித்துவிட்டது. ஜீவனெல்லாம் முகத்தில் தங்கி கண்களில் சுடர் விட்டது.

— ஆனந்தவிகடன்



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மெய்மை நாடி

வங்கத்தமிழன்

அங்கம் 1 காட்சி 1

இடம்: சரஸ்வதி ஆற்றின் கரையில் குசக்ஷேத்திரம் என்னும் கிராமம்.

காலம்: வேத காலம். மாலை நேரம்.

ஜபாலையும் சத்தியகாமனும்.

ஜாபாலை: குழந்தாய் சத்தியகாமா! ஏனிப்படி சோர்ந்து உட்கார்ந்திருக்கிறாய்? விளையாடிவிட்டு வந்த களைப்பா?

சத்தியகாமன்: களைப்பொன்றுமில்லை அம்மா வெறுப்புத்தான்.

ஜாபா: என் கண்ணே! இந்த வயதில் உனக்கென்ன வெறுப்பு வந்துவிட்டது?

சத்திய: பின்னே வராதா? விளையாட்டு எனக்குப் பிடிக்கவே இல்லை.

ஜாபா: சிறு பிள்ளைகள் ஓடி ஆடி விளையாடும் காலம் இது! நன்றாகச் சொன்னாய்!

சத்திய: சும்மா விளையாடிக் கொண்டிருப்பதால் என்ன லாபம்?

ஜாபா: உழைப்புக்கு உடலுறுதிதானே வேண்டும்?

சத்திய: வேண்டியதுதான். ஆனால் உள்ளமும் உறுதியோடிருக்க வேண்டாமா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜாபா : என்ன சொல்லுகிறாய் சத்தியா?

சத்திய : வெறும் உடலுறுதியால் விலங்குப் பலமே உண்டாகும். உள்ளும் புறமும் தூய்மையோடும் உறுதியோடுமிருந்தால் அதன்மூலம் ஒருவன் அடைய முடியாதது ஒன்றுமிராது அம்மா!

ஜாபா : உன் விருப்பம்தான் என்ன?

சத்திய : அறிவையும் வளர்க்க வேண்டும். ஆதலால் பிரம்மசாரியாகப் போகிறேன்.

ஜாபா : குழந்தைப் பருவத்தில் உனக்கிருந்த அறிவை விட இப்பொழுது உன் அறிவு எவ்வளவு அதிகமாகியிருக்கிறது. சிறியவன் நீ. பெரியவன் ஆக ஆக அறிவு தானே வளரும்.

சத்திய : அதனாலேயே அந்த அறிவோடு கல்வி அறிவும் சேர்ந்தால் அரிய பெரிய விஷயங்களைக் கற்றறிந்து மனிதன் மண்ணிலே ஆண் மகனாக வாழலாம். விண்ணிலும் அமரனாகத் திகழலாம்.

ஜாபா : பத்து வயதிலே உனக்கு எவ்வளவு புத்திக் கூர்மையடா, என் கண்ணு! இவற்றை உனக்கு யார் சொன்னார்கள்?

சத்திய : அறியாப் பருவம்தான் கடந்துவிட்டதே அம்மா. நானாக கண்டு, கேட்டு அறிந்துகொண்டேன்.

ஜாபா : எங்கிருந்து? எப்படி?

சத்திய : ஆற்றுக்கு அக்கரையிலிருக்கும் கௌதமர் ஆசிரமத்தில் நிறைய முனிகுமாரர்கள் கல்வி கற்று வருகிறார்களே.

ஜாபா : என்னை மகிழ்விக்க வந்த மாணிக்கம்! தெரிந்தது. உனக்குக் கல்விப் பயிற்சி அளிப்பது பற்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

னானே யோசித்துக் கொண்டிருந்தேன். ஓரிரு ஆண்டுகள் போகட்டும். ஏற்பாடு செய்கிறேன்.

சத்திய: அம்மா இன்றும் யோசிப்பதும் ஏற்பாடு செய்வதுமாயிருப்பதில் ஒரு உபயோகமுமில்லை 'இளமையில் கல்' என்னும் ஆன்றோர் நல்லுரையை மறந்துவிட்டீர்களா? அம்முனி குமாரர்களோடு நானும் பிரம்மசாரியாக இருந்து கல்வி கற்கப் போகிறேன்.

ஜாபா: என்ன! முனி குமாரர்களோடா?

சத்திய: ஏன் அம்மா! எனக்குப் படிப்பு வராதா?

ஜாபா: அது இல்லை.........

சத்திய: சொல்லுங்கள் அம்மா, ஏன் இருக்கிறீர்கள் சும்மா.

ஜாபா: ....(நீண்ட பெருமூச்சு.) ஹூ......ம்! சரி. உன் விருப்பப்படியே செய்.

சத்திய; வணங்குகிறேன் அம்மா. ஆசி கூறுங்கள்.

ஜாபா: நோயற்ற நீண்ட ஆயுளோடு சகலகலா வல்லவனுய் இருந்து வா, என் செல்வமே!

சத்திய: இப்பொழுதே அங்கு போகிறேன் அம்மா.

ஜாபா: சூரியன் மலைவாய் அடையப் போகிறுன்; காட்டுப் பாதையில் இராவழி நடக்கக் கூடாது.

சத்திய: இருட்டுவதற்கு இன்னும் அதிக நேரம் இருக்கிறது. ஒரே ஓட்டத்தில் ஆசிரமம் அடைந்துவிடுவேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(ஒலி அமைப்பு)

[மாலையில் வீடடையும் பசு, தன் கன்றை நினைத்து ஹம்பா! என்று குரல் கொடுத்தல்—கன்றும் தாயின் வருகை கண்டு பதில் குரல் கொடுத்தல]

ஜாபாலை: சத்தியா! அதோ இலட்சுமி! பசியாறப் புல் மேய்ந்துவிட்டு, மடி நிறையப் பால் ஏந்தி வருகிறாள். உனக்குப் பசியாகவிருக்கும் ஒரு நொடியில் பால் கறந்து கொண்டு வருகிறேன். அதைச் சாப்பிட்டுவிட்டுப் படுத் துறங்கு. காலையில் ஆசிரமத்திற்குச் செல்லலாம்.

சத்தி: இப்பொழுது எனக்கு வயிற்றுப் பசியில்லை. அறிவுப் பசிதான் மிகுந்திருக்கிறது. பசும்பால் தேவை யில்லை அது உடலைத்தான் வளர்க்கும். அறிவு (ஞான)ப் பாலே தேவை. நான் வரேன் அம்மா.

ஜாபா: என் செல்வமல்லவா! சொல்வதைக் கேள்.

சத்தி: கேட்காமலா இருக்கிறேன். நீங்கள் என் விருப்பப்படி செய்யச் சொல்லவில்லையா? ஆசியும் கூறினீர் களே!

ஜாபா: எவ்வளவு சமர்த்து என் கண்மணி! இப்படி வா. உச்சி முகர்கிறேன். (முத்தகல் ஒலி)

சத்தி: நான் சிறு குழந்தையில்லை. போதும் அம்மா, வரேன்.

ஜாபா: ஜாக்கிரதையாகப் போய் வா என் கண்ணு.

அங்கம் 1 காட்சி 2

கௌதமர் ஆசிரமம்

நேரம்: அந்திப் பொழுது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இடம்: சரஸ்வதி ஆற்றின் அக்கரையில்

[ஒலி அமைப்பு: சங்கொலி முழங்குதல். புள்ளினங்கள் சப்தமிட்டுக்கொண்டு மரங்களில் கூட்டை அடைகின்றன. ஆசிரமத்தில் ஓமெனும் சாமகானம் பாடப்படுகிறது. கானம் சிறிது சிறிதாகக் குறைந்து ஒடுங்கி விடுகிறது]

கௌத: சீடர்களே! உலகம் எவ்வாறு தோன்றுகிறது. அதிலே பல்லுயிர்கள் எப்படி உண்டாயின. பிரமனால் படைக்கப்பட்ட எண்ணரிய உயிர்களுள் மனிதப் பிறவியே மிக அரிது. புல்லாகி, பூண்டாகி, செடியாகி, கொடியாகி, பூச்சி, புழுவாகி, பறவையாகி, விலங்குமாகி பிறகே மனிதன் மண்ணிலே பிறந்தான். மிகவும் அரிதான இம்மனிதப் பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? நற்பிறவி எடுக்க அவன் செய்ய வேண்டியவை என்ன என்ன ஆகியவை பற்றிக் கூறினேன். அவற்றில் ஏதாவது சந்தேகம் இருப்பின் கேட்கலாம்.

சீடர்கள்: சந்தேகமே இல்லை. குருதேவா சந்தேகமே இல்லை.

கௌத: இன்னும் சுருதி என்னும் தரும சாத்திரம் நான்கு மறைகள் ஆகியவற்றையும் கூறி, வேதங்கள் (மறைகள்) அனைத்தும் ஒரு பரம் பொருளையே குறிக்கின்றன என்றெல்லாம் சிறிது விளக்கினேன் அல்லவா?

சீடர்கள்: ஆம் ஆம். விளக்கம் பெற்றோம்.

கௌத: இப்பொழுது உங்களுக்கு மிகப் பெரிய வித்தை ஒன்று கற்றுக் கொடுக்கப் போகிறேன்.

சீடர்கள்: காத்திருக்கிறோம் குருதேவா!

கௌத: அதுதான் மனிதன் பிறவாமல் இருப்பதற்கு வழி காட்டும் கல்வியாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சீடர்-1: அக்கல்விக்குத் தனி பெயர் உண்டல்லவா?

கௌத: ஆம். பிரம்ம வித்தை என்று அதற்குப் பெயர்.

சீடர்கள்: சொல்லிக் கொடுங்கள் குருவே! கற்றுக் கொடுங்கள்!

கௌத: சரி. நாம் அனைவரும் ஆண்டவன் குழந்தைகள். நமது தந்தை அவரே; தாயும் அவரே; அம்மை அப்பர் ஆவார். அவரை அறிந்து கொள்வதே அவரைப் பற்றிய அறிவைப் பெறுவதே பிரம்ம வித்தையாகும்.

சீடர்-2: குருதேவா! பிரம்மாசாரிகளான நாங்கள் மட்டும் இக்கல்வி கற்க அருகதை உள்ளவர்களா அல்லது......?

கௌதமர்: பிரம்மசாரி, குடும்பி வானப்பிரஸ்தன் எல்லோருமே அருகதை உள்ளவர்கள்.

சீடர்-3: குருதேவா. மன்னிக்கவும். பிரம்மம் என்பதற்கு விளக்கம் கூறும்படி வேண்டுகிறேன்.

கௌதமர்: அதைக் கூறவே எண்ணியிருந்தேன். நல்லது கேளுங்கள். எங்கும் எல்லாவற்றிலும் நிறைந்திருப்பதுவே பிரம்மம். நிலையற்ற பொருள் நிறைந்த உலகில் நிலையான பொருள் ஒன்று உண்டு எனும் உறதியான உணர்வே அறிவு. உடலுற்ற உயிர்ப்பொருள்களுக்குள்ளே உடலற்ற பொருள் ஒன்று உண்டு. மாறும் தன்மையுள்ள உலகப் பொருள்களுக்குள்ளே மாறாத இயல்புடைய ஒரு பொருள் உண்டு. அதுவே மெய்ப்பொருள். அம்மெய்ப்பொருளை அறிவதே-உணர்வதே அறிவு-பேரறிவாகும். அப்பேரறிவே பிரம்மம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சத்திய காமன் வருகை

சத்திய : மா முனிவரே! கோடி வணக்கங்கள்.

கௌத : குழந்தாய்! என்ன வேண்டும்?

சத்திய : பிரம்மசாரியாகவிருந்து பிரம்ம வித்தை கற்க ஆவல் மிகுந்துள்ளேன். தாங்களே என் ஆசான். தயை புரிய வேண்டும்.

கௌதம : மிக்க மகிழ்ச்சி. ஆயினும், முன்பின் தெரியாத உன்னை எப்படி ஏற்றுக் கொள்வது? உன் பெயர் என்ன?

சத்திய : சத்தியகாமன்.

கௌதம : வெறும் சத்தியகாமன் தானா? உன் தந்தையின் பெயர்?

சத்திய : தெரியாது.

கௌதம : குலம் கோத்திரமாவது தெரியுமா?

சீடர்-4 : அவன் விழிக்கிறதைப் பார்! (சிலர் சிரிக்கின்றனர்) (ஒலி அமைப்பு)

கௌதம : சீடர்களே! அமைதி. சத்தியகாமா சொல்.

சத்திய : அதுவும் தெரியாது முனிவ! இப்பொழுதே ஓடிச்சென்று என் அன்னையிடம் எல்லாவற்றையும் கேட்டு வந்து சொல்லுகிறேன். அனுமதி கொடுங்கள்.

கௌத : சரி. போய் வா.

சத்திய : தங்கள் உத்தரவு ஐயே! வணக்கம்.

கௌத : இரவில் வேண்டாம். காலையில் வந்தால் போதும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சத்திய : அப்படியே செய்கிறேன்.

கௌத : சீடர்களே! இன்று பாடப் பயிற்சியை இத்துடன் நிறுத்திக் கொள்வோம். துதி கீதங்களைப் பாடுங்கள். (கானம் சில நிமிடங்கள்—ஒலி அமைப்பு)

இடம்: குசசேத்திரம்-ஜாபாலையின் வீடு.

அங்கம் 1 காட்சி 3

ஜாபாலை : (தனக்குள்) விளக்கு ஏற்றி எவ்வளவு நேரம் ஆகிவிட்டது. என் செல்வன் ஒரே பிடிவாதமாக கௌதமரிடம் சென்ருன். காட்டுப்பாதையில் துட்ட விலங்குகளும், விஷமுள்ள ஊர்வனவும் இருக்குமே. ஒன்றுமறியாப் பாலகன் எவ்வளவு அச்சத்தோடு சென்ருனே! ஆண்டவா! என் குழந்தைக்கு ஒரு தீங்கும் வரக்கூடாது. உம்மையே நம்பினேன். என் கண்மணியைக் காரும்.

சத்தி : அம்மா? அம்மா! (தூரத்திலிருந்து)

ஜாபா : யாரது சத்தியின் குரல் போலிருக்கிறதே! வாசலில் சென்று பார்க்கிறேன்.

சத்தி : நானே வந்துவிட்டேன் அம்மா!

ஜாபா : குழந்தாய்! என் ஆசி வீண்போகாது. உன்னையே நினைத்துக் கொண்டிருந்தேன். வந்துவிட்டாய். ஆமாம். ஏனிப்படி வியர்க்க வியர்க்க ஓடிவந்தாய்? எங்காவது பயந்து கொண்டாயா? அல்லது கௌதமர் ஏதாவது கடிந்து கொண்டாரா?

சத்தி : அப்படிக்கெல்லாம் ஒன்றுமில்லை. அம்மா வந்து......

ஜாபா : சொல்லடா கண்ணே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சத்தி : என் அப்பா பெயர் என்ன?

ஜாபா : எப்படி நான் சொல்லமுடியும்?

சத்தி : என் குலம் கோத்திரம்தான் என்ன?

ஜாபா : எதற்கு இதெல்லாம் கேட்கிறாய்?

சத்தி : நான் கேட்கவில்லை அம்மா. கௌதமர் தான் என்னிடம் கேட்டார்.

ஜாபா : அப்படியா? ஹூ...ம் உனக்கு எப்படித் தெரிந்திருக்கப் போகிறது.

சத்தி : சொல்லுங்கள் அம்மா.

ஜாபா : (வருந்தியவாறு) சத்தியா! நான் இளமையோடிருக்கையில் விருந்தினரை உபசரிப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்து வந்தேன். உன்னைப் பெறுவதற்கு முன்பே உன் தந்தை இறந்துவிட்டார். விருந்தோம்பலில் என் கவன முழுதும் இருந்ததால், உன் தந்தையிடம் குலம் கோத்திரம் ஒன்றையும் கேட்டறிந்து கொள்ள முடியாமற் போய்விட்டது.

சத்தி : (வருந்தியவாறு) அப்படியானால் பிரம்ம வித்தை கற்றுக்கொள்ள உரிமையற்றவனா? அந்தப் பேறு எனக்கு இல்லையா? அம்மா.

ஜாபா : ஏனில்லை? காலையில் கௌதமரிடம் சென்று உன் பெயர் சத்தியகாம ஜாபாலன் என்று சொல்லு. உன்னை அவர் ஏற்றுக்கொள்வார்.

சத்திய : அப்படியே செய்கிறேன் அம்மா.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜாபா : சத்தியா! நீ களைமிகுந்திருக்கிறாய், முகம், கை, கால்களைக் கழுவிக்கொண்டு ஆண்டவனைத் தொழுது விட்டு, உணவு உண்ண வா.

சத்தி : ஒன்றும் வேண்டாம். பசியில்லை என்று முன்பே சொன்னேனே.

ஜாபா : இரவில் பட்டினியோடு படுத்தால் உறக்கம் வராது. உன் உடம்புதான் என்ன ஆகும், என் கண்ணல்லவா? பால் தான் பிடிக்கவில்லை என்று சொன்னாய், கொஞ்சம் பழங்களாவது சாப்பிடு.

சத்தி ; விடமாட்டீர்கள் போலிருக்கிறதே, சரி. ஒரே ஒரு பழம் போதும்.

அங்கம் 1 காட்சி 4

இடம் : கௌதமர் ஆசிரமம்

காலம் : வைகறை வேளை

[புள்ளினங்கள் இனிய கானம் பாடுகின்றன. சங்கொலியும் முழங்கி ஒடுங்குகிறது. ஓமெனும் சாம கானம் கேட்கிறது [ஒலி அமைப்பு].

கௌதம : சீடர்களே! நேற்று பிரம்மத்தைப் பற்றி ஓரளவு கூறினோமல்லவா?

சீடர்கள் : ஆம் குருதேவா! அதனை அறிவதற்கு— உணர்வதற்கு உரிய வழி என்னவென்று கூறுங்கள்.

கௌத : கூறுகிறேன் கேளுங்கள். சாத்திரங்களை ஆய்வதாலும், சொந்த அனுபவத்தில் கண்ட அமைதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின் இனிமையான ஆழ்ந்த சிந்தனையாலும் தன்னுள்ளத்துற்ற அவ்வழிவற்ற பொருளை அறிய நம்பிக்கை எழும். இப்பேற்றைப் பெற, முக்கியத் தேவைகள் மூன்று. அவை முறையே மனத்தை அடக்குதல், உணர்ச்சிகளை அடக்குதல், ஆண்டவன்பால் மனத்தை (தியான ஜப மூலம்) நிலைநாட்டல் ஆகியவை. நான் என்னும் ஆணவமில்லாத- கற்றடங்கியவருக்கே அது என்னும் (I am that I am) பிரம்மம் (பேரறிவு) கிட்டும். இன்னும் விவரமாகப் பிறகு......யார் அது.

சீடன்-1 : டேய்! அதோ அந்தச் சிறுவன் வந்து விட்டான்!

சீடன்-2 : ஆமடோய்! தந்தை பெயர் தெரியாதவன் தானே!

சீடன்-3 : குலம் கோத்திரம் அறியாதவனப்பா!

சீடன்-4 ; பிரம்ம வித்தை கற்க வந்தவனும்! ஆளைப் பார்!

கௌத : (கடும் கோபமடைந்து) சீடர்களே! அமைதி! அமைதி!

சத்திய : குருதேவா! வணக்கம்,

கௌத : வா; சத்தியகாமா உன் அன்னையிடம் கேட்டு வந்தாயா?

சத்திய : ஆம் ஐயே.

கௌத : குலம் கோத்திரம் என்னவென்று சொன்னாள்?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சத்தி: தெரியாதாம். ஆனால், வந்து......

கௌத: என்ன. ஆனால் வந்து ...தயங்காமல் கூறு.

சத்தி: நான் இளமையோடிருக்கையில் விருந்தினரை உபசரிப்பதிலே கண்ணும் கருத்துமாயிருந்து வந்தேன். உன்னைப் பெறுவதற்கு முன்பே உன் தந்தை இறந்துவிட்டார். விருந்தோம்பலில் என் கவன முழுவதும் இருந்ததால், உன் தந்தையிடம் குலம், கோத்திரம் ஒன்றையும் கேட்டறிந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. கௌதமரிடம் உன் பெயர் சத்தியகாம ஜாபாலன் என்று கூறு'' என்று என்னிடம் சொன்னார்.

கௌத: அப்படியா! (தாமதித்து) ஆஹா நீயே மெய்யன். சத்தியத்தை நாடுபவன். உத்தமன். மெய் குலத்தவனும் கூட. தேர்வில் வெற்றி பெற்றாய். சத்தியகாமா! என்னருகில் வா. இன்றிலிருந்து உன்னை என் சீடனாக ஏற்றுக் கொண்டேன்.

சத்தி: குருதேவா! தங்களைக் கோடி முறை வணங்குகிறேன். எனது அறியாமை என்னும் இருளிலிருந்து நான் அறிவாம் ஒளியில் செல்ல வழி காட்டுங்கள். என்னைச் சூழ்ந்திருக்கும் பொய்யிலிருந்து நான் மெய்யை அடையும் மார்க்கத்தில் என்னை இட்டுச் செல்லுங்கள். என் இறப்பிலிருந்து நான் பிறவாமலிருப்பதற்கு ஏற்ற பாதையை உணர்த்துங்கள்.

கௌத: எல்லாம் நாளடைவில் அறிந்து கொள்வாய். சீடர்களே! இன்று முதல் சத்தியகாமனும் உங்களில் ஒருவன். நம் ஆசிரம விதிப்படி எல்லோரும் சகோதர பாவமாக அன்போடு இருந்து வந்து கல்வி பயின்று கடவுளைக் காணும் பேற்றைப் பெறுவீர்களாக.

ஓம் தத்சத்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கட்டுரைகள்

Forwarded With Compliments From
THE DEPARTMENT OF CULTURE
GOVERNMENT OF INDIA.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மங்கையர்க்கரசியார்

ந. சிங்காரம்

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்று இல்வாழ்க்கைக்குத் துணைவியாக அமையும் பெண்ணின் இலக்கணத்தை வள்ளுவர் வரையறை செய்தார்.

இல்வாழ்க்கைக்கு ஏற்ற துணைவி தன்னுடைய கற்பைக் காத்தும், தன்னைக் கொண்டவனாகிய கணவனுடைய நலத்தைப் பேணிப் பாதுகாத்தும், தான் பிறந்த குடியின் பெருமைக்கும், தான் புகுந்த குடியின் பெருமைக்கும் இழுக்கு வராமல் விழிப்புடன் காப்பதிலும் சோர்வில்லாமல் இருக்க வேண்டும் என்பதாகும். வள்ளுவர் வகுத்த இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர் மங்கையர்க்கரசியார். அவர் சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரிய புராணத்தில் கூறப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக எண்ணப்படுபவர். அவருடைய வரலாற்றுச் சிறப்பைப் பற்றிச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சுமார் கி. பி. ஏழாம் நூற்றுண்டின் மத்தியில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தவன் மாறவர்மன் அரிகேசரி என்ற நெடுமாறன். அவனுடைய உடல் கூன் காரணமாகக் "கூன் பாண்டியன்" எனவும் அழைக்கப்பட்டான். அவனுக்கு மனைவியாக வாய்த்தவள், சோழ அரசனுடைய மகளாகிய மங்கையர்க்கரசியார் ஆவர்.

மங்கையர்க்கரசியார் கற்பில் மிகச் சிறந்தவர் சிவபெருமானிடத்திலும் சிவனடியார்பாலும் சிறந்த பக்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யுடையவர். அங்கையர்க் கண்ணியோடு அமர்ந்த ஆலவாய் அரனைத் தினந்தோறும் வழிபடும் நியமம் உடையவர். அப்படி இருக்கும் நாளில், தென்னாட்டில் உள்ள எண் பெருங் குன்றங்களில் வாழ்ந்து வந்த திகம்பரப் பிரிவைச் சார்ந்த சமணர்கள் தங்கள் சமயத்தைப் பரப்பலாயினர். அவர்கள் அரசனைத் தங்கள் மாயாஜால வித்தைகளால் மயக்கி, வசப்படுத்திச் சமண சமயத்திற்கு ஆக்கம் தேடிக்கொண்டார்கள். அரசன் சமண சமயத்தில் சேரவே, "அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்" என்பதற்கிணங்க மக்களும் சமண சமயத்தை மேற்கொண்டு ஒழுகினர். இதனால் நாடெங்கும் சமணம் பெருகியது; சைவ ஒழுக்கம் அருகிப்போயிற்று.

இந்நிலையைக் கண்ட மங்கையர்க்கரசியார் மனம் வருந்தினர். கணவன் அச்சமயத்தில் அழுந்தியது அதன் கோட்பாடுகளை ஆராய்ந்து தெளிந்து, தேறி முடிவு செய்த காரணத்தால் அல்ல. சமணக் குருமார்களின் ஜால வித்தைகளால் மயக்குண்டு அதை ஒரு பெரிய சமயம் என்று நினைத்ததால் வந்த கேடு. இதனைச் சேக்கிழார், "தென்னவன் தானும் முன்செய் தீவினைப் பயத்தினாலே, அன்னெறிச் சார்பு தன்னை அறமெனநினைத்து நிற்ப" என்று மன்னன் தீவினையினாலே அப்படிச் செய்தான் என்று சொல்கிறார்.

மன்னனின் மதமாற்றம் பாண்டிய குலத்திற்கே களங்கம் ஏற்படுத்திவிட்டது. "குடிப்பிறந்தார் கண் விளங்கும் குற்றம் விசும்பின், மதிக்கண் மறுப்போல் உயர்ந்து" என்று வள்ளுவர் கூறியபடி பரம்பரையாக சைவ ஒழுக்கத்தில் நின்று சிறப்புப் பெற்ற பாண்டிய வம்சத்திற்கு வந்த இந்தக் களங்கத்தைக் கண்டு மங்கையர்க்கரசியார் மனம் நொந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எப்படியாவது தான் உறுதியோடு சைவ நெறியிலேயே நின்று, கற்பு முறை வழுவாது காத்து, கணவனுக்கான பணிவிடைகளெல்லாம் செய்து அவன் மனத்தில் சமண சமயத்தில் கொண்டுள்ள மயக்கத்தை தகுந்தவரைக் கொண்டுபோக்கி, சைவ ஒழுக்கத்தில் மறுபடியும் நிற்கச் செய்ய வேண்டும் என்று உறுதி பூண்டார். தினந்தோறும் ஆலவாயமர்ந்த பெருமானை வழிபட்டு, அரசன் மனம் திருந்த அருள் புரியுமாறு விண்ணப்பம் செய்து வந்தார்.

இவரைப்போல் சைவ நெறியில் உறுதியாக நின்று, மன்னனை மறுபடியும் சைவ நெறிக்குத் திருத்திக் கொண்டு வர வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்ட மற்றொருவர், அரசனின் முதல் அமைச்சராகிய குலச்சிறையார் என்பவர். குலச்சிறையார், பாண்டிய நாட்டில் உள்ள மணமேற்குடியில் பிறந்தவர். சிவபெருமானிடத்திலும், சிவனடியாரிடத்திலும் மிகுந்த அன்புடையவர். சிவனடியார்கள் தனியாக வந்தாலும், கூட்டமாக வந்தாலும் விரும்பி உபசரித்து வேண்டுவன கொடுத்து வழிபடும் இயல்புடையவர். சுந்தரர்பெருமானால் அறுபத்து மூன்று அடியார்களில் ஒருவராகப் பாராட்டப் பெற்றவர். அத்தகைய அமைச்சர், மங்கையர்க்கரசியாரின் சிவத்தொண்டுக்கு ஊக்கம் அளிக்கும் வண்ணம் அவருக்கு உறுதுணையாக நின்று உதவி வந்தார். இதனால் 'பாயசீர்புனை பாண்டிமாதேவியார், மேயதொண்டுக்கு மெய்த்தொண்டராயினர்'' என்று சேக்கிழார் இவரைப் பாராட்டுவார்.

பாண்டிய நாடு முழுவதும் சமண ஒழுக்கத்தில் அழுந்த, மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகிய இருவரிடத்தில் தான் அப்போது அங்கே சைவம் வாழ்ந்தது. இவர்கள் சிறுபான்மையராக இருந்த காரணத்தால், சைவ நெறியை ஆடம்பரமின்றி அடக்கமாகவும் பாண்டியனுக்கு எரிச்சலூட்டாத வகையிலும் கடைப்பிடித்து வந்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தார்கள். இதனைச் சேக்கிழார், "ஓங்கிய சைவ வாய்மை ஒழுக்கத்தில் நின்ற தன்மை, பூங்கழல்செழியன் முன்பு புலப்படா வகைகொண்டுய்த்தார்" என்று வியந்து பேசுவார்.

இவர்கள் இவ்வாறு தொண்டு செய்துவரும் நாளில், சிவபெருமான் திருவருள்பெற்ற திருஞானசம்பந்தப் பிள்ளையார் சோழ நாட்டுத் தலமாகிய திருமறைக்காட்டில் திருநாவுக்கரசருடன் தங்கி இருக்கிறார் என்ற நல்ல செய்தியை மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் ஒற்றர் மூலம் கேள்வியுற்றனர்.

திருஞானசம்பந்தப் பெருமான் மூன்று வயதிலேயே சீர்காழிப் பதியில் அம்மையப்பன் திருவருளால் உமாதேவியார் அளித்த ஞானப்பாலுண்டு, சிவஞானம் கைவரப் பெற்றுச் சிவபெருமான் அருளால் பொற்றாளம், முத்துச்சிவிகை, முத்துச்சின்னங்கள், முத்துப்பந்தர் ஆகியவைகளைப் பெற்றுத் தொண்டருடன் சிவத்தலங்கள் தோறும் சென்று, பதிகங்கள் பாடி வழிபட்டு, பரசமயத்தவர்கள் அஞ்சப் பல அற்புதங்கள் நிகழ்த்தி, வேதங்களால் பூசிக்கப்பெற்ற திருமறைக்காட்டில் திருக்கோயிலின் கதவுகளை மூடவும் திறக்கவும் பாடித் திருநாவுக்கரசருடன் தங்கி இறைவனை வழிபட்டுக் கொண்டிருந்த சமயம் அது.

பிள்ளையாரின் பெருமையை அறிந்துகொண்ட மங்கையர்க்கரசியார் மகிழ்ச்சியடைந்து அவரைத் தவிர வேறெவரும் மன்னன் மயக்கத்தைத் தீர்த்து நாட்டில் சைவத்தைப் பரவச்செய்ய முடியாது என்பதை உணர்ந்தார். குலச்சிறையாருடன் கலந்து ஆலோசித்து திருஞானசம்பந்தப் பெருமானை மதுரைக்கு எழுந்தருள வேண்டும் என்ற விண்ணப்பத்தை ஒற்றர்கள் மூலம் திருமறைக்காட்டிற்கு அனுப்பினர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒற்றர்கள் திருஞானசம்பந்தப் பெருமானை வணங்கிப் பாண்டிமாதேவியாரின் வேண்டுகோளை விண்ணப்பம் செய்துகொண்டார்கள். அப்போது அங்கு உடனிருந்த அடியார்கள் பிள்ளையாரை நோக்கித் தாங்கள் பாண்டிய நாட்டுக்கு எழுந்தருளி, சமணர்களை வாதில்வென்று, வேத நெறியை விளங்கவைத்து, மன்னனைத் திருநீறு அணியும் படிச் செய்து, நாடு முழுவதும் சைவ ஒழுக்கத்தில் நிலை நிறுத்தத் திருவுள்ளம் பற்றவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

இதைக் கேட்ட திருஞானசம்பந்தர் அதற்குச் சம் மதித்து, திருநாவுக்கரசரிடம் விடைபெற்றுக்கொண்டு, அடியார்களுடன் மதுரை நோக்கி புறப்பட்டார்.

பிள்ளையார் மதுரைக்கு எழுந்தருளும் செய்தியைக் கேட்ட மங்கையர்க்கரசியார் மகிழ்ச்சியடைந்தார். குலச் சிறையாரை அழைத்துப் பிள்ளையாரை எதிர்கொண்டு வணங்கி, வரவேற்றுத் திருக்கோயிலுக்கு அழைத்து வருமாறு வேண்டிக்கொண்டார். பிறகு தான் திருக்கோயில் சென்று வழிபட்டுப் பிள்ளையாரைச் சந்திக்க வேண்டும் என்று கருதி, மன்னன் அனுமதியைப் பெற வேண்டி அவன் பால் சென்று ''ஆலவாய் அமர்ந்தார் தம்மைக் கும்பிட வேண்டும் என்று கொற்றவன் தனக்குக் கூறி'ச் சென்றார். அங்கே இறைவனை வணங்கி, திருஞானசம்பந் தரை வரவேற்கும் நிமித்தம் ஒருபுறம் காத்திருந்தார்.

குலச்சிறையார் பரிசனங்களோடு பாண்டிய நாட்டின் தலைநகர் எல்லையில் சென்று திருஞானசம்பந்தப் பெருமானை எதிர்நோக்கிக் காத்திருந்தார். பிள்ளையாரின் முத்துச் சிவிகையைக் கண்டு அதன் முன் எல்லா அங்கங் களும் தரையில் படுபடி விழுந்து வணங்கி அப்படியே கிடந்தார். இதனைக் கேள்வியுற்ற திருஞானசம்பந்தர்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிவிகையினின்றும் கீழே இறங்கி, தனது திருக்கரங்களால் அன்புடனே குலச்சிறையாரைத் தூக்கி எடுத்தார் பின்னர் பாண்டிமாதேவி குலச்சிறையார் ஆகிய இவர்களின் நலத்தைப்பற்றி விசாரித்தார். அப்போது குலச்சிறையார் தனது தலைமேல் இரு கரங்களையும் கூப்பிக் கண்களில் நீர்வர அரசியார் சார்பிலும் தன் சார்பிலும் வரவேற்பு கூறினர்.

அந்த வரவேற்பு மிக அற்புதமான முறையில் அமைந்தது. பெரியோர்கள் தங்கள் வாயினால் அனுசிதமான வார்த்தைகளைச் சொல்லமாட்டார்கள். பாண்டிய நாடு அந்தச் சமயம் சமணர்கள் வசமாகித் தன் சோபையை இழந்திருந்தது அதைச் சொல்லாமல்.

'சென்றகாலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
எற்றைக்கும் திருவருள் உடையேம்'',

என்று விநயமாகச் சொல்லி வரவேற்று நின்றார்.

திருஞானசம்பந்தர் தன்னைத் துதித்து நின்ற அமைச்சரை நோக்கி இங்கு இறைவனது கோயில் எங்கே இருக்கிறது என்று கேட்டார். அப்போது குலச்சிறையார் சற்று தூரத்தே ஆகாயத்தை அளாவிக்கொண்டிருக்கும் கோபுரத்தைச் சுட்டிக்காட்டினர். உடனே பிள்ளையார் சிரசின் மேல் கைகுவித்து நிலமுறப் பணிந்து, ''மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை, வரிவளைக்கை மடமானி'' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடித் துதித்தார்.

மதுரையம்பதியின் கோபுத்தைக் கண்டவுடன் உடனே மங்கையர்க்கரசியின் சிவத் தொண்டுதான அவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண் முன் நிற்கிறது. ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு நால் வேதமும் ஆகமப் பொருள்களையும் அருளிச் செய்த இறைவன் அங்கையர்க்கண்ணி அம்மையுடன் கோயில் கொண்டு இந்தப் பரசமயச் சூழலில் இருப்பது எது கருதி என்ற வினா மனத்தில் எழுகிறது. உடனே விடையும் கிடைக்கிறது. மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அன்புடன் பணிந்து நாள்தோறும் வழிபட வேண்டு மல்லவா? அதனால் அவர்கள் பொருட்டுத்தான் நீ இங்கே எழுந்தருளியிருக்கிறாய் போலும் என்று இவ்விருவருடைய சிவத் தொண்டைப் பாராட்டும் வகையில் அந்தப் பதி கத்தை அமைத்துப் பாடினார்.

பிறகு குலச்சிறையாருடன் திருக்கோயிலுக்குச் சென்று, விழுந்து வணங்கி பதிகம்பாடித் துதித்து மீண்டும் வெளியே வந்தார். அப்போது, அங்கே ஒரு புறம் ஒதுங்கி நின்று கொண்டிருந்த மங்கையர்க்கரசியாரைப் பிள்ளை யாருக்குக் குலச்சிறையார் அறிமுகம்செய்து வைத்தார். பாண்டிமாதேவியார் பிள்ளையார் பாதங்களில் விழுந்து வணங்கினார். திருஞானசம்பந்தப் பெருமான் அவரைத் தம் கரங்களால் அன்புடன் தூக்கி எடுத்தார். அப்போது பாண்டிமாதேவியார் கண்களில் நீர்மல்க, மொழி குழற, "யானும் என்பதியும் செய்த தவம் என் கொல்" என்று கூறிப் பிள்ளையாரை வரவேற்றார்.

மங்கையர்க்கரசியார் கற்புக்கரசியானதால் அந்தச் சமயத்தில் தன் கணவனை மறக்கவில்லை என்பது அவர் வாக்கிலிருந்து புலனாகிறது. 'யானும் என் பதியும் செய்த தவம் என்கொல்" என்னும்போது யானும் என்னுடைய ஊரும் என்றே சாதாரணமாகப் பொருள்படும். திருஞான சம்பந்தப் பெருமானுடைய வருகையைப் பெறற்கரிய பேறாகும். அவரைத் தானும் தன் பதியாகிய பாண்டியனுமல்லவா சேர்ந்து வரவேற்கும் பாக்கியத்தைப் பெற வேண்டும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசன் அமண் சமயத்தில் சேர்ந்த காரணத்தால் அவனில்லாமல் தானே தனியாக வரவேற்கிறேன். அவனுக்கு அந்தப் பாக்கியம் இல்லையே என்ற ஏக்கம் இருந்தாலும், பதி சார்பிலும் அவரை வரவேற்க வேண்டுமென்ற துணிபினால் "என் பதியும்" என்ற சொல்லில் 'என் கணவனும்" என்ற பொருள் தொனிக்கும்படிக் கூறி வரவேற்றார். இது கற்புக்கரசியின் இலக்கணம்.

மங்கையர்க்கரசியார் கூறிய வார்த்தைகளைக் கேட்ட பிள்ளையார், அவரை அன்புடன் நோக்கி எங்கும் பரவியிருக்கும் இந்தப் பரச்சமயச் சூழலில் நீங்கள் எப்படி உறுதியாகவும் சோர்வில்லாமலும் சிவத் தொண்டு செய்து வருகிறீர்கள் என்பதைக் காணவல்லவா நான் வந்திருக்கிறேன் என்று பொருள்பட,

"சூழுமாகிய பரசமயத் திடைத் தொண்டு
வாழும் நீரமையீர் உமைக்காண வந்தனம்"

என்று சொன்னார்.

பிறகு குலச்சிறையார் திருஞானசம்பந்தப் பெருமானையும் அடியார்களையும் ஒரு மடத்திற்கு அழைத்துச் சென்று அவர்கள் அனைவருக்கும அமுது செய்வித்தார். பாண்டிமாதேவியார் பிள்ளையாரிடம் விடைபெற்றுக் கொண்டு தம் மாளிகைக்குத் திரும்பினார்.

பிள்ளையார் திருக்கோயிலுக்கு அடியார்களுடன் சென்று இறைவனை வழிபட்டதைக் கண்டும், அடியார்கள் செய்த சிவநாம முழக்கத்தைக் கேட்டும் பொருத அமணர் குருமார்கள் அரசன்பால் சென்று சீர்காழி மறைச் சிறுவர் வருகையைப் பற்றியும் அவர் தங்களுடன் வாது செய்யப் போவதாகச் சொல்லும் முழக்கத்தைப் பற்றியும் கவலையுடன் முறையிட்டார்கள். அதற்கு அரசன் என்ன

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்யலாம் என்று அரசன் கேட்க, வந்தவர் சிறுவரான படியால் வாது செய்வதற்குத் தகுதியானவர் அல்லர். ஆதலால் நமது சமயத்திலுள்ள மந்திர பலத்தினால் அவர் தங்கியிருக்கும் மடத்திற்கு தீ மூட்டினால், அவர் பயந்து நாட்டைவிட்டு ஓடிவிடுவார் என்று அவர்கள் சொன்னார்கள். இதைத் தவிர வழி வேறொன்றும் இல்லையென்றால் அப்படியே செய்யுங்கள் என்று கூறிவிட்டு அரசன் மிகுந்த கவலையுற்றுத் தன் அந்தப்புரத்துக்குச் சென்றான். அங்கே அவனுடைய கவலைக் குறியைக் கண்ட மங்கையர்க்கரசியார் கணவனுடைய கவலையின் காரணத்தை வினவ அதற்கு மன்னன் சீர்காழிச் சிறுவர் சமண அடிகள்மாரை வாதுக்கு அழைக்கிறாராம் என்று சொன்னார். அரசியார் மன்னனைப் பார்த்து "இதற்காகக் கவலைப்படுவானேன். பரம்பொருள் நிச்சயத்தைப் பற்றி வாதுசெய்து யார் வெற்றி பெறுகிறார்களோ அவர் பக்கம் சேர்ந்தால் போயிற்று. இது முறையும் தகுதியுமாகும்" என்று இதமாகச் சொன்னார்.

பின்னர் குலச்சிறையாரைக் கண்டு மன்னனுடைய மனநிலையையும் அமணர்களின் பொறாமையையும் பற்றிக் கூற அமைச்சர் அது கேட்டு அச்சம் அடைந்து இந்த அமணர்கள் திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு ஏதாவது தீங்கு செய்தாலும் செய்யக்கூடும் என்று தெரிவித்தார். அப்போது மங்கையர்க்கரசியார், "திருஞானசம்பந்தருக்கு ஊனம் வந்தடையில் நாமும் உயிர் துறந்து ஒழிவோம்" என்று சொல்லி அந்த இரவை அச்சத்துடன் கழித்தார்.

அரசனை விட்டுச்சென்ற அமணர்கள் அன்றிரவு பிள்ளையார் மடத்திற்குத் தீ வைக்கும் பொருட்டு மந்திர உச்சாடனம் செய்து பார்த்தார்கள். மந்திரம் பலிக்கவில்லை. ஆதி மந்திரமாகிய பஞ்சாஷரத்தை ஜபிக்கும் திருஞானசம்பந்தரிடம் எந்த மந்திரந்தான் என்ன

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்யும்? ஏமாற்றமடைந்த அமணர்கள், அரசன் அறிந்தால் தண்டிப்பான் என்று பயந்து அன்றிரவே திருஞானசம்பந்தர் மடத்திற்குச் சென்று தங்கள் கைகளி னலே தீ வைத்தார்கள். மடத்தில் தீ பிடித்ததும் அடியார் கள் விழித்துக்கொண்டு அங்குமிங்குமாக ஓடித் தீயை அணைத்துவிட்டுத் திருஞானசம்பந்தரிடம் வந்து செய் தியை அறிவித்தார்கள். அதைக் கேட்ட பிள்ளையார் அடியார்களுக்கு நேர்ந்த தீங்கைக் கண்டு வெகுண்டு இந்த அமணர் செயலுக்கு அரசன் பொறுப்பாளி. எனவே இந்த தீ பாண்டியனைப் போய் மெதுவாகப் பற்றட்டும் என்று பொருள்பட

"செய்யனே திருவால வாய் மேவிய
ஐயனே அஞ்சல் என்றருள் செய் எனை
பொய்யராம் அமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியர்க் காகவே"

என்று பதிகம் பாடித் துதித்தார்.

அதன் விளைவாகப் பாண்டியனுக்கு உடனே ஜுரநோய் கண்டது. மன்னன் துடிதுடித்துப் போனுன். சமண குருமார்கள் ஓடோடியும் வந்து குண்டிகையிலுள்ள நீரை தெளித்து, மந்திரம் சொல்லி, மயிற்பீலிகளைக்கொண்டு மன்னன் உடலைத் தடவினுர்கள். ஜுரம் குறைந்த பாடில்லை. அதற்குப் பதில் அது வீறுகொண்டு எழுந்து மன்னனை வாட்டியது. பீலிகள் எரிந்து சாம்பலாயின. மன்னன் தாங்கமாட்டாமல் 'சமணர்களே வெளியே செல்லுங்கள்' என்று வெகுண்டு கூறினுன். இந்தச் செய்தியைக் கேள்வியுற்ற மங்கையர்க்கரசியார் மன்ன னிடம் வந்து நிலையைக் கண்டு அஞ்சி, அது சமணர்கள் திருஞானசம்பந்தர் மடத்திற்குத் தீ வைத்ததால் வந்த அபசாரம். அதைத் தீர்க்கக் கூடியவர் பிள்ளையார் ஒருவரே ஆவர் என்பதை உணர்ந்து,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"அருகர்கள் செய்த அநுசிதம் அதனால் வந்து
பெருகியது இதற்குத் தீர்வு பிள்ளையார் அருளே"

என்றும்,

"மேயவே ணியர்பால் ஞானம் பெற்றவர் விரும்பி நோக்கில்
தீயஇப் பிணியே அன்றிப் பிறவியும் தீரும்"

என்றும் சொன்னார்.

உடம்புக்கு நோய்வருவது இயல்பு. அதனால் துன்பம் உண்டாகிறது. துன்பத்தைப் போக்க மணி, மந்திரம் ஔஷதம் ஆகியவைகளினால் போக்க முயல்கிறோம். இருந்தாலும் உடல் உள்ள வரையில் அதற்கு ஏதாவது நோய் வந்துகொண்டே இருக்கும். கடைசியில் உடலுக்கு மரணம் என்பது பெரியதோர் பிணியாகும் இதனை யாரும் தவிர்க்க முடியாது. எனவேதான் 'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம் என்றார்கள். ஜுரம் முதலியன உடலைப்பற்றுகிற நோய்கள் அதுபோல இந்த உடம்பே ஒருவித நோய்தான். அது உயிரைப் பற்றி நிற்கிற நோய். எனவேதான் உடலைப் பெறுவதைப் பிறவிப்பிணி என்பார்கள், உயிர் அஞ்ஞானத்தால் செய்யும் புண்ணிய பாபக்கன்மங்களுக்கு ஈடாக இவ்வுடலாகிய பிறவியைப் பெறுகிறது. துன்பப்பட்டு பிறகு இறக்கிறது, இப்படியே பிறப்பு இறப்பு இவைகளினூடே இந்த உயிர் சுழன்றுகொண்டே இருக்கிறது. பிறவியாகிய பிணியினின்றும் நீங்கிப் பிறப்பே இல்லாத நிலை அடைந்தால்தான் இன்பம் உண்டாகும். இதனைப் பேரின்பம் என்பார்கள். "பிறவார் உறுவது பெரும் பேரின்பம்" என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இந்த நிலை வரவேண்டுமானால் உயிருக்குள்ள அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் வரவேண்டும். ஞானத்தை ஊட்டுபவர் மெய்ஞ்ஞான குருவே அவர் [illegible] உயிர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களுக்கு ஞானசம்பந்தத்தை ஊட்டுவதற்கென்றே திரு அவதாரம் செய்தவர். சிவபெருமானிடத்திலிருந்து ஞானம் பெற்றவர். "பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானத்தைப் பெற்றவரானபடியால் அவர் ஒருவரே உயிர் களுக்கு ஞானத்தை ஊட்டி மறுபடியும் பிறவாமல் இருக் கும் நிலைமை அருள் செய்வதற்குரிய தகுதியுடையவர். அவர் அருளோடு நோக்கினுல் பாண்டிய மன்னனுடைய உடல் பிணியேயன்றி, பிறவிப் பிணியும் தீரும் என்று மங்கையர்க்கரசியார் தன் கணவனின் இம்மை நலத்திற்கு மட்டும் அல்லாமல் மறுமை நலத்திற்கும் வழிகாட்டித் துணைபுரிகிறுர்,

இறைவன் எப்படிப்பட்டவன் என்று சொல்ல வந்த திருஞானசம்பந்தர்.

"நுண்ணியான் மிகப்பெரியான் நோயுளார் வாயுளான்"

என்றுர். உடம்புக்கு நோய்வரும் போதுதான் இறைவனைப் பற்றிய நினைவு வரும் என்பது இதனுல் புலனுகிறது. அது போல திருஞானசம்பந்தர் என்ற திருநாமம் மந்திரம் போல பாண்டியன் செவியில் ஏறவே, அவனுக்குக் கொஞ்சம் அயர்வு நீங்கியது. திருஞானசம்பந்தரைக் காண வேண்டுமென்ற ஆர்வம் தோன்றியது.

உடனே தேவியைப் பார்த்து திருஞானசம்பந்தரை அழைத்து வருமாறு சொன்னுன். திருஞானசம்பந்தர் அருளால் தான் குணமடைந்தால் அவர் பக்கமே சேர்வது உறுதியென்றும் கூறினுன். இந்த நல்ல செய்தியைக் கேட்ட மங்கையர்க்கரசியார் மகிழ்ச்சியடைந்தார். அமைச்சர் குலச்சிறையாருடன் திருஞானசம்பந்தர் மடத்திற்குப் போய், அவரைப் பணிந்து, அரசனுடைய உடல்நிலை மனோ நிலை, ஆகியவைகளை எடுத்துக் கூறி, அரசனுக்கு அருள் செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருஞானசம்பந்தர் திருவருளை நினைத்து ஆலவாய், அரன் கோயிலுக்குச் சென்று, வணங்கி, இறைவன் திருவுள்ளச் சம்மதம் பெற்று, மன்னன் அரண்மனைக்குள் புகுந்தார். அவர் வருகையைக் கண்ட அரசன் சற்று அயர்வு நீங்கித் தன் பக்கத்தில் போடப்பட்டிருந்த பொன் பீடத்தில் அவரை அமரும்படி குறிப்பால் தெரிவித்தான். இந்தக் காட்சியைக் கண்ட அமண குருமார்கள் சீற்றமும், பொறாமையும்கொண்டு, திருஞானசம்பந்தரைச் சூழ்ந்துகொண்டு, அவரை வாதுக்கிழுத்தார்கள்.

இதைக் கண்ட மங்கையர்க்கரசியார், பிள்ளையாருக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டுவிடுமோ என்று அச்சங்கொண்டு, மன்னனை நோக்கி, இப்பிள்ளையார், எளிய திருமேனி கொண்டவர், தனியாக இருப்பவர். அமணர்கள் எண்ணில்லாதவர்கள். எனவே முதன் முதலில் பிள்ளையாரைத் தங்கள் உடல் பிணியை நீக்கச் சொல்லுங்கள். பிறகு அமணர்களுக்கு வாதுசெய்ய வல்லமை இருந்தால் செய்யட்டும்' என்று கூறினார்.

மங்கையர்க்கரசியாரின் தூயன்மையும் தவிப்பையும் கண்ட திருஞானசம்பந்தர் 'மானினேர் விழி மாதராய் வழுதிக்குமா பெருந் தேவிகள்'' என்று அரசியாரை விளித்துப் பதிகப்பாடி நான் பாலன் என்று கவலைப் படாதே, ஆலவாய் அரன் என்பால் நிற்க, இந்த ஈனர்களாகிய அமணர்களுக்கு நான் எளியவன் அல்லன் என்று தேறுதல் கூறினார்.

திருஞானசம்பந்தர் தனது புனித வாக்கால் எந்த தனிப்பட்ட ஒருவரையும் முன்னிலைப்படுத்திப் பாடியதே இல்லை. ஆனால் அதற்கு விலக்கு மங்கையர்க்கரசியாரை விளித்துப் பாடிய இந்தத் தேவாரம் ஒன்றே ஒன்றுதான். அதனால்தான் சேக்கிழார் மங்கையர்க்கரசியாருடைய பெருமையைச் சொல்லப் போக,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"பூசுரர் சூளாமணியாம் புகலி வேந்தர்
போன ஞானம் பொழிந்த புனித வாக்கால்
தேசுடைய பாடல் பெறும் தவத்தினுரைச்
செப்புவதியாம் என்னறிந்து"

என்று பாராட்டுகிறார்.

மங்கையர்க்கரசியாருடைய மொழியைக் கேட்ட மன்னவன் சமணர்களை நோக்கி எனது உடலில் இடது பாகத்திலுள்ள வேதனையை உங்கள் மந்திர பலத்தினால் குணப்படுத்துங்கள். சீர்காழிப் பிள்ளையார் வலது பாகத்தைக் குணப்படுத்துவார். இதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர் பக்கம் நான் சேர்வது உறுதியாகும் என்றான்.

சமணர்கள் அவ்வாறு இடது பக்கத்தைக் குணப்படுத்த குண்டிகை நீரைத் தெளித்தார்கள். மயிற்பீலிகள் கொண்டு தடவினார்கள். ஜுரம் முன்னைவிட முடுகி எழுந்து மன்னனை வாட்டியது. பீலிகள் எரிந்தன. உடனே பிள்ளையார் முகத்தை ஏக்கத்தோடு பார்த்தான். அந்தக் குறிப்பை உணர்ந்துகொண்ட திருஞானசம்பந்தப் பெருமான் திருநீற்றைத் திருக்கரத்தில் எடுத்துக்கொண்டு "மந்திரமாவது நீறு" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி மன்னன் வலது பாகத்தில் தடவினார். உடனே அந்தப் பக்கம் பொய்கைபோல் குளிர்ந்து இருந்தது. இப்போது மன்னன் ஒரே காலத்தில் வலது பக்கம் குளிர்ந்து இன்பமாகவும் இடது பக்கம் வெப்பம் மிகுதியினால் நரகம் போன்ற துன்பமயமாக இருப்பதையும் உணர்ந்தான். உடனே அவன் வெகுண்டு சமணர்களைப் பார்த்து நீங்கள் தோற்றுப் போனீர்கள். இவ்விடம் விட்டுப் போய்விடுங்கள் என்று கூறித் திருஞானசம்பந்தப் பெருமானை இடது பக்கத்தையும் குணப்படுத்த வேண்டும் என்ற குறிப்போடு பார்த்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருஞானசம்பந்தர் திருநீற்றை எடுத்து அதே பதிகத்தைப் பாடி நிறைவு செய்து இடது பக்கத்தில் தடவினார். உடனே அந்தப் பக்கமும் குணமடைய மன்னன் மகிழ்ச்சியடைந்து,

''மானமொன் றில்லார் முன்பு
வன்பிணி நீக்க வந்த
ஞானசம்பந்தர் பாதம்
நண்ணிநான் உய்ந்தேன்'' என்று

அவர் பாதங்களில் விழுந்து வணங்கினான். இதனைக் கண்டு மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் மகிழ்ந்து பிள்ளையார் திருவடிகளில் விழுந்து வணங்கினார்கள்.

அரசன் நீறுபூசி சைவன் ஆனான் என்பதைக் கண்ட அமணர்கள் பிள்ளையார்பால் பொருமையும் சீற்றமும் கொண்டு, வாதுக்கழைத்தார்கள். என்ன வாதம் செய்வது என்று பிள்ளையார் கேட்டார் அதற்குச் சமணர்கள் 'கனல்வாதம்'' என்றார்கள். ஒவ்வொருவரும் தங்கள் சமயக் கருத்தை ஏட்டில் எழுதித் தீயில்போட, யாருடைய ஏடு எரியாமல் இருக்கிறதோ அவர்கள் சமயம்தான் மெய்ச் சமயம் என்றார்கள். பிள்ளையார் இதற்கு ஒப்புக் கொண்டார் உடனே அரசன் முன்பு தீ வளர்க்கப் பட்டது. அதில் திருஞானசம்பந்தர் தன் சுவடிக் கட்டி லிருந்து ஒரு ஏட்டை எடுத்தார். அந்த ஏடு ''போக மார்த்த பூண் முலையாள்'' என்று தொடங்கும் திருநள் ளாற்றுப் பதிகத்தைக் கொண்டது. அதனைப் பிள்ளையார் தீயினில் இட்டார். அது பச்சை பசேலென்றிருந்தது. பிறகு தன் கையாலேயே அதனை எடுத்து மன்னனிடம் காட்டினார். பிறகு அமணர்கள் அவர்கள் ஏட்டை தீயினில் இட்டார்கள். அது உடனே எரிந்து சாம்பலாயிற்று. இந்த வாதத்திலும் சமணர்கள் தோற்றார்கள். இதைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்டு அரசன் சமணர்களை நோக்கி வெதண்டு இகழ்ந் துரைத்தான். சமணர்கள் இத்துடன் தங்கள் தோல் வியை ஒப்புக்கொள்ளவில்லை. மூன்ரும் முறை வாதம் செய்வோம். அது புனல் வாதம். யாருடைய சமயக் கருத்தை ஏந்திய ஏடு வைகையாற்று வெள்ளத்தில் எதிர்த்துச் செல்லுமோ அவர்கள் சமயமே மெய்ச் சமயம் என்ருர்கள். உடனே குலச்சிறையார் இதிலும் நீங்கள் தோற்று விட்டீர்கள் என்ருல் என்ன செய்யப் போகிறீர்கள் என்று சமணர்களைக் கேட்டார். உடனே அவர்கள் தங்கள் வாய் சோர்ந்து, இதிலும் தோற்று விட்டால் இம்மன்னனே எங்களைக் கழுவிலேற்றித் தண் டிப்பான் என்ருர்கள்.

உடனே மன்னன் அங்கே குழுமியிருந்த எல்லோ ருடன் வைகைக் கரையை அடைந்தான். வைகையில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. சமணர்கள் தங்கள் ஏட்டை ஆற்றில் இட்டார்கள். அது வெகு வேகமாக வெள்ளத்தோடு சென்று கண்ணுக்கு மறைந்தது. சமணர்கள் தங்கள் அச்சத்தையும் தோல்வியையும் மறைத்துக்கொண்டு பிள்ளையாருக்கும் அதே கதிதான் நேரும் என்ருர்கள். உடனே பிள்ளையார்,

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெலாம் அரன் நாமமே
சூழ்க வையகம் முந்துயர் தீர்கவே"

என்ற பாசுரத்தை ஏட்டில் எழுதி வெள்ளத்தில் இட்டார். உடனே அது வெள்ளத்தை எதிர்த்துக் கிழித்துக் கொண்டு சென்றது. அதைக் கண்டு எல்லோரும் ஆரவாரித்தார்கள். பிறகு பிள்ளையார் அருளால் அந்த ஏடு திருவேடகம் என்ற இடத்தில் நட்டாற்றில் நின்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மிதந்துகொண்டிருந்தது. அதனைக் குலச்சிறையார் எடுத்துத் தலைமேல் வைத்துக்கொண்டு வந்து மன்னன் திருமுன்னர் வந்தார். மன்னன் திருஞானசம்பந்தரை வணங்கி நீறணிந்தார். எல்லோரும் பிள்ளையாரை வணங்கினார்கள். சமணர்கள் கழுவேறினார்கள். பாண்டிய நாட்டில் வேத நெறியும் சைவ ஒழுக்கமும் மறுபடியும் எங்கும் பரவியது. "வேந்தனும் ஓங்குக" என்று பிள்ளையார் பாசுரத்தில் ஓதியதால் பாண்டியனுடைய கூன் உடல் நிமிர்ந்தது இப்போது அவன் நின்ற சீர்நெடுமாறன்" ஆனான். பிறகு எல்லோரும் திருஞானசம்பந்தருடன் திருக்கோயில் சென்று வணங்கினார்கள்.

பாண்டியன் மங்கையர்க்கரசியோடு நெடுங்காலம் வாழ்ந்து சைவ ஒழுக்கத்தைப் பாதுகாத்து இறுதியில் தன் மனைவியோடு ஈசன் திருவடி சேர்ந்தான்.

பரசமயத்தில் அழுந்திய தன் கணவனைத் திருஞானசம்பந்தர் அருளினால் மீண்டும் சைவ நெறிக்குக் கொணர்ந்து அவனை அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவன் ஆகும் பெருமை தந்து, இம்மை, மறுமை ஆகிய இரண்டு நலன்களும் அவன் அடைவதற்கு உறுதுணையாய் நின்று, தான் பிறந்த குலத்திற்கும், புகுந்த குலத்திற்கும் பெருமையைத் தேடித் தந்த கற்புக்கரசியான மங்கையர்க்கரசியார், அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகத் திகழ்கிறார்.

—திருவள்ளுவர் கலைமலர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கம்பனின் சுந்தர காண்டம்

டி. பி. சித்தலிங்கையா

"ஒவ்வொரு மக்களினத்தின் பெருமையும் அதன் கண் தோன்றிய கவிஞர்களைக் கொண்டு மதிப்பிடப் பெறுகின்றது" என்று ஆங்கில அறிஞர் டாக்டர் ஜான்சன் கூறுகின்றார். தமிழர்கள் கலைப் பண்பு வாய்ந்தவர்கள். அவர்களது இலக்கியச் செல்வம் மிகச் சிறந்ததொன்றாகும். அத்தகைய இலக்கியக் கருவூலத்திலே காணப்படும் சிறந்த மணியாகத் திகழ்வது கம்பராமாயணமாம். மேல் நாட்டில் சிறந்த காப்பியக் கவிஞர்களான ஹோமர், மில்டன் ஆகியவர்களுக்கு ஒப்பாகக் கூறக் கூடிய ஒரு சிறந்த தமிழ்க் கவிஞர் கம்பராம். "விழுந்த ஞாயிறு எழுவதன் முன்" வால்மீகியின் கூற்றைப் பாடி முடித்து, "எழுந்த ஞாயிறு விழுவதன் முன்னம் எழுநூறு கவிகளைப் பாடிய"தாகப் போற்றப்படும் கலைஞராவார் கம்பநாடர். கம்பர் ஓர் உயர்ந்த கலைஞர் என்பதைக் கலையின் இலக்கணத்தை பொருத்தி அவர் நூலினைப் பார்ப்பின் புலனும். 'மனிதன் தனது கற்பனை யாற்றலால் தோற்றுவித்து அங்ஙனம் தோற்றுவிக்கப்பட்ட பொருளைப் பிறர் உணர்ந்து அநுபவிக்கத் தக்க விதமாகச் சொல், இசை, கூத்து, ஓவியம், கல் ஆகியவற்றிலே காட்டிவிடின் அதுவே கலையாம். (Art is to be imagined first and then made manifest through the medium of visible materials, visible movements, audible sounds and perceptiple smells.). எனவே முதற்படியாக வால்மீகி முனிவர் வகுத்துரைத்ததைத் தெளிவுறச் சிந்தித்துப் பின்பு அனைவரும் அநுபவிக்குமாறு, அதனைச் சொல்லிலே வடித்துத் தந்த கம்பர் ஓர் உயர்ந்த கலைஞரல்லரோ?

இனி, கலைஞராகிய கம்பரைக் கொண்டு, கம்பர்க்குரிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கணத்தை அவரது நூலில் அமைத்துக் காண்டல் முறையாம். வடநாட்டுக்குரிய பண்புகளையும் நடைமுறைகளையும் வகுக்கும் வால்மீகியாரைப் படித்த கம்பர், தமிழ்நாட்டுப் பண்பாடுகளுக்கேற்பக் கதையைப் புனைவதாகத் தீர்மானித்தனர். பிறகு கதை மாந்தர்களைச் (Characters) சிறப்புறுத்துவதற்கு வேண்டிய இடங்களைத் தெரிந்து கொண்டார். இதுதான் கலையின் முதற்படியாய சிந்தனையாம். இச்சிந்தனை செயலின் முடிவாக சுந்தரகாண்டத்தை ஒப்பற்றதாகவும், மற்ற காண்டங்களின் நிகழ்வுகளுக்கெல்லாம் காரணமாகவும் இயற்றுவதென முடித்துக் கொண்டார். இது சிந்தனைக்கு அடுத்ததாகிய முடிவு. பின்பே அதனைத் தொடர்ந்து நிற்பதாய தோற்றம். (கலையின் பிறபபு).

அமைப்பு

கதைக்கும் வரலாற்றிற்கும் உள்ள வேற்றுமை அனைவரும் அறிந்ததொன்றாம். ஒருவருக்குப் பின்னொருவராக வந்து ஆண்டு மறைந்த மன்னர்களைப் பற்றி வரலாறு கூறுகிறது. அவர்களது வாழ்க்கையிலே சிக்கலும் அதனை விடுவிப்பாரும் எவரும் இலர். ஆனால், கதை ஓடும்பொழுது ஒரு சிக்கல் எழுகிறது. அதன் தொடக்கமே கதையின் தொடக்கம். இச்சிக்கல் முறுக்கேறி அவிழ்வதே கதையின் நடுவிடம் சிக்கல் அவிழ்ந்ததும் கதை முடிவுறுகின்றது. சிக்கல் எழவில்லையெனில் கதை நீளுவதற்குரிய வழியில்லையாம். இரண்டாவது சிக்கலொன்றும் தோன்றுமாயின் கதை மேலும் நீள்கிறது. இத்தகைய சிக்கல்களே கதையின் திருப்பு மையங்களாம். இத்தகைய திருப்பு மையங்களை நாம் இராமாயணத்தில் காண முடிகிறது. அதில் மூன்று சிக்கல்கள் திருப்பு மையங்கள்—கதையின் நீட்சிக்குத் [illegible] இரண்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டாவது சிக்கலும், அதனைவிட மூன்றாவது சிக்கலும் இன்றி யமையாதனவாகக் காட்சியளிக்கின்றன.

முதற்சிக்கல் அயோத்தியிலேயே தோன்றிவிட்டது. அதுதான் இராமன் முடிசூடுதலைக் கைகேயி மறுத்தல். கைகேயியின் மறுப்பின்றேல் இராமன் மன்னனாக மகுடம் புனைந்திருப்பான். கதை, அவனுடைய முடிசூடலோடு நின்றிருக்கும். இச்சிக்கல் தோன்றியதால், இராமன் வனம் புகுந்தான். கதை இங்கே நீளத் தொடங்கியிருக்கிறது. எனவே, இதுவே முதல் திருப்பு மையம்.

இதனினும் உயர்ந்ததாகத் தோன்றுவது அடுத்த சிக்கல் வனவாசம் செய்யப் புகுந்த இராமன், புதிதோர் நிகழ்ச்சியேதுமின்றி இருந்திருப்பின் புத்த சாதகக் கதையில் வரும் தசரதன் கதைபோல, "வனத்தில் வாழுங் காலத்துப் பரதன் வேண்ட, நாடி திரும்பினான் இராமன்" என்று முடிந்திருக்கும். இங்கேதான் இரண்டாவது திருப்பு மையம் தோன்றுகிறது. சூர்ப்பனகை மானபங்கமும், மாயமான் தோற்றமும், கதை மேலும் தொடர உதவுகின்றன.

இனி, மூன்றாவதும், மிக இன்றியமையாததுமாகிய திருப்பு மையம் சுந்தரகாண்டத்தில் காட்டப்படுகிறது. சீதையை இழந்த இராம லக்குவர்கள் சுக்கிரீவனது நட்பைப் பெற்றுச் சீதையைத் தேட, நாற்பக்கமும் ஆட்களைப் போக்கினார்கள், வடக்கு, கிழக்கு, மேற்கு ஆகிய முத்திசைகளிலும் சென்றவர்கள் 'சானகியைக் காணவில்லை' என்று திரும்புகின்றனர். ஆயின் தெற்கே சென்றார் வரவில்லை. இஃது இராமனுடைய மனத்தில் ஒரு நம்பிக்கையை உண்டுபண்ணுகிறது கடல் கடந்த அநுமன் காகுத்தனின் காதலியைக் கண்டான் என்பதுதான் அம் மூன்றாவது திருப்பு மையமாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு அநுமன் சீதையைக் கண்ட செய்தியைக் கூறும் சுந்தரகாண்டமே இராமாயணத்தின் உயிர் நிலையாம். முகத்திற்கும் கண்களே போல இவ்விராம காதையின் உயிர் நாடியாகத் திகழ்கின்றது இச் சுந்தர காண்டம். மற்றவற்றினும் அழகாக இருப்பதால் இப் பெயர் பெற்றதென்றும், சுந்தரனாகிய அநுமனது செயலைக் கூறுவதனாலும், சுந்தரனாகிய இராமனது அங்க விலக்கணங்களைக் கூறுதலினும், இஃது இப்பெயர் பெற்ற தென்பர். சுந்தரமான முடிவுக்குக் காரணமாயும், முன்பு நிகழ்ந்த ஆரணிய, கிட்கிந்தா காண்டங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளாய பின்னணிக்கு (Back-ground) ஏற்ற நிகழ்ச்சியாயும் இருத்தலின், இஃதே இவ்விராமாயணத்துள் சிறந்ததும், இப் பெயர்பெறப் பொருத்தமானதெனவும் கொள்ளலாம்.

சீதையைப் பிரிந்த இராமனும் இலக்குவனும், பல விடங்களிலும் அவளைத் தேடி யலைகின்றார்கள். சடாயுவைக் கண்டார்கள். பிறகு வாலியைக் கொன்று சுக்கிரீவனோடு நட்புக் கொண்டனர். சீதையைத் தேடும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டனர். தெற்கொழிந்த ஏனைத் திசைகளிற் சென்றார் வெறுங் கையுடன் மீண்டனர். தெற்கே சென்ற அங்கதனோடிருந்த வானரங்கள் அநுமனைக் கடல் கடக்கு மாறு வேண்டிக்கொள்கின்றன. இத்துடன் கிட்கிந்தா காண்டம் முடிவுறுகின்றது. சுந்தர காண்ட நிகழ்ச்சிகள் இல்லாதிருப்பின், முயற்சி வறிதாயினமை கண்டு இராமன் உயிர் துறந்திருப்பான் அல்லது பதினான்காண்டுகள் கழித்து அயோத்தியை அடைந்திருப்பான். இவ்வாறன்றி கதை மேற்கொண்டு நடத்தற்கு வேண்டிய செய்திகள் இதிற் கூறப்படுகின்றன.

இன்றியமையாமை (Importance)

ஹோமர் (Homer) எழுதிய இலியட்டில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(Illiad), டிராய் (Troy) நகரத்தரசனுகிய பாரிஸ் (Paris) என்பவன் ஸ்பார்ட்டா (Sparta) நகரத்தரசன் மனைவியாகிய ஹெலனைத் (Helen) தூக்கிச் செல்கின்றுன்; அவளை மீட்க வேண்டி, அவளது கணவன், மற்றைய கிரேக்க மன்னருடன் சேர்ந்து டிராய் நகரத்தை முற்றுகையிட்டு வெல்கின்றுன்; ஹெலனும் மீட்கப்படுகின்றுள். பெண் தூக்கிச்செல்லும் இக் கதை இராமயணத்திற்கு ஒப்புமை கூறத் தக்கது. ஸ்பார்ட்டா நகரத்தசரன் போன்றே, அயோத்திக் கிறைவனுகிய இராமனும் தன் மனைவியை இழந்தான். அம் மன்னன் கிரேக்க வேந்தரைத் துணைகொண்டது போன்று, இராமனும் சுக்ரீவனைத் துணையாகக் கொண்டான். அவனைப்போன்றே, இராமனும், வானரங்களின் துணை கிடைத்தபோதே இலங்கைமீது படையெடுத்திருக்கலாம். ஏனெனில், இலங்கை மன்னனுகிய இராவணன் தான் சீதையைக் கவர்ந்து சென்றுன் என்ற செய்தியை முன்பே, (சுக்கிரீவனெடு நட்பு கொள்வதற்குமுன்) சடாயுவிடமிருந்து, இராமன் அறிந்திருந்தான். ஆனல், சுந்தர காண்டத்தின் பெருமையெல்லாம் இங்குதான் தோற்றுவிக்கப்படுகிறது; 'இராமன் மனைவியைப் பற்றிச்சென்றுன் இராவணன்' என்ற ஒரு காரணம் மட்டுமன்றி, வேறு சில காரணங்களையும் காட்டக் கருதிய கம்பர் யுத்த காண்டத்தின் மூன்பாகச் சுந்தரகாண்டத்தை யமைத்தார்.

"கறங்குகால் புகாமலும், கதிரவனெளி உட்புகாமலும்" இயமனின் ஆற்றல் அவ்விலங்கை நகருள் செல்லாதிருத்தலும் ஆகிய இவை, அந் நகருக்கும் அதனரசனுக்கும் பெருமையெனினும் அவை தெய்வ நீதிக்கு அப்பாற்பட்டனவாம். பின்பு அநுமன் கருதியதாகக் கூறப்படும் "அறம் புகா திந்த அணிமதிட் கிடக்கை நின்றகத்தின்" என்ற கூற்றும் இதற்கு அரண் செய்கின்றது. "அறத்தினூஉங் காக்கமுமில்லை" என்னுப குறளில் வள்ளுவர் அறததாற்றின் இன்றியமையாமையைக் குறிப்பிடுகின்றுர். பின்னும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனை வலியுறுத்துவான் வேண்டி, எதிர்மறை முகத்தான் " அதனை மறத்தலினூ உங்கில்லை கேடு " என்று குறிக்கின்றார். எனவே அறத்தாற்றினையும் ஓம்பாது, மறமே மிகுந்து, தம் நகரின் எல்லையுள் அறமே புக இயலாதவாறு ஆட்சி செய்தார் மிகக் கொடியரன்றோ? பின்னும் "அறந்திறம் பினராருள ராயினர் " என்ற பிணிவீட்டுப் படலச் செய்யுள், அறம் பிழைத்தவர் அழிவது உறுதி என்பதை வலியுறுத்துகின்றது. மேலும், அநுமன், " ஓத நீருல காண்ட வருன்றுணைப் போதநீதிய ராருளர் போயினர் " என்று ' இதுவரையாண்ட மன்னருள் நீயே நீதிமிக்கவன் ' என இராவணனைக் குறித்துப் பின்பு " வேதநீதி விதி வழிச் " செல்பவரும் போற்றத்தக்க நீயும் ' அறத்தெல்லை நடத்தியோ ' என்று கூறினன். இதனின்றும் இராவணன் நீதிவழிச் செய்பவனுயினும் தன் செயலில் தவறினான் என்பதும், அரசனுகிய அவன் மன்னுயிரைத் தன்னுயிர்போல் கருதாது, காட்டில் தனித்திருந்த சானகியைக் கவர்ந்துவந்து றவாடக் கருதுதல் அரசியல் பிழையென்றும் போதரும். இனி, " அரசியற் பிழைத்தோர்க்கு அறங் கூற்ருவது " இயல்பாதலின், இராவணனை அறம் ஒறுக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டுவிடுகின்றது. எனவே, அறவடிவினனுகிய இராமன், தன் மனைவியைக் கவர்ந்ததற்காக மட்டுமன்றி, அறத்தினைக் காப்பதற்காகவும், இராவணனை யழிக்கவேண்டியிருக்கின்றது. எனவே, கடல்கடந்து போர்தொடுக்கப் போகின்றனன். இதனை யடுத்துவரும் யுத்தகாண்டத்தில். எனவே அதற்கு அடிப்படையாகப் போருக்குரிய காரணங்களைச் சுந்தரகாண்டத்துள் பொதிந்து வைத்தார் கம்பர்.

இனி, இவ் விராம காதையின் தலைவன் இராமனும். எனவே, அவன் மனைவியாகிய சீதையே இக் காப்பியத்தின் தலைவி (Heroine) என்பது தெற்றெனப் புலனும். இந் நூலின் கதைப்போக்கிலே ஏறக்குறைய பாதியைத் தன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்க்கையாக உடைய சீதை காட்டப்படும் நிலைகள் எத்தகையன என்பதை நோக்குழி, காப்பியத் தலைவிக்குரிய பண்பு எவ்விடத்தும் கூறப் பெறவில்லை என்பது புலனும். தந்தை சனகன் வீட்டிலே செல்வ மகளாகத் திகழ்ந்த சானகி, கன்னிமாடமறுகிலே இராமனைக்கண்டு காதலித்து, மணந்தபின் அயோத்தியை யடைந்தாள். பின்பு சீதையை நாம் காணுமிடம் இராமன் வனம்புகும் காலத்தேதான். காட்டில், இடையிடையே சில காட்சிகளில் இராமனும் சீதையும் ஒன்ருகக் காட்டப்படுகின்றனர். மாயமானின் தோற்றத்திற்குப் பிறகு இராவணனுல் சிறை யெடுத்துச் செல்லப்பட்ட சீதை—இக்காப்பியத் தலைவி—என்னவாயினள் என்பது கூறப்படவில்லை அடுத்த காண்டத்துள். ஆரணிய காண்டத்து இறுதிக்குப்பின், கிட்கிந்தாகாண்டத்தில, இராமன் பிரிவாற்ருது தனிமையிற் புலம்பலும், பின்பு சுக்கிரீவனேடு நட்புப் பூணுதலும் ஆகிய இரண்டுமே கூறப்படுகின்றன. இடையிலுள்ள இவ்வெளி (Gap) கதைத் தலைவியின் நிலைபற்றியறிய விரும்பும் நம் மாவலை (Curiosity) அதிகப்படுத்தவேதான் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறையெடுக்கப்பட்ட சீதையின் நிலையை ஆசிரியர் சுந்தரகாண்டத்திலேதான் விளக்குகின்ருர். எனவே, காப்பியத்தலைவி களவாடப்பட்ட அந்தக் கதையின் உச்சநிலைக்கு (Climax) அடுத்த களனுகும் இது. பின்பு வரும் நிகழ்ச்சிகள் படிப்படியாக முடிவை நோக்கிச் செல்வதற்குக் காரணமாகவும் இருப்பது இச் சுந்தர காண்டமே !

மேலும் தலைவனுக்கும் தலைவிக்கும் உறுதுணையாயிருந்த ஒருவனைப் பற்றிக் கூறுவதற்கேற்ற இடமாக இஃதமைந்துள்ளது. சுக்கிரீவனின் அமைச்சனுகிய அநுமன், தன்னரசனையும் இராமனையும் நட்பினராக்குகின்ற அத்துடன் நிற்கின்றனன். சீதையைத் தேடிப் புறப்பட்ட போதும், அங்கதன் தலைமையின் கீழேயே செல்கின்றனன். ஆக, இதுவரை காட்டப்பட்ட இடங்களிலெல்லாம் அநுமன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு துணைவனாக (A Subordinate)க் காட்டப்படுகின்றானே யன்றி, அவனுடைய அறிவு, ஆற்றல், திறமை முதலியன குறித்துக் கூறப்படவில்லை. எனவே சீதையை இழந்து வருந்திய இராமன் மீண்டும் அவளை யடைவதற்கு மிகவும் உதவியாயிருந்த இத்தகையதொரு கதாபாத்திரத்தின் முழுத்தன்மையையும் நமக்கு எடுத்துக் காட்டுவதற்காகவே கம்பர் சுந்தரகாண்டத்தைப் பயன்படுத்தியிருக்கின்றார். மேலும் கிட்கிந்தா காண்டத்துள், இராமன், இலக்குவனை நோக்கி, அநுமனைக் குறித்து, 'யார்கொலோ இச் சொல்லின் செல்வன்' என்று கூறிய அப்புகழ்மாலைக் குரியவனாக வும், இலக்கணமாகவும் தன்னைக் காட்டுவதற்கென்று, ஆசிரியர், இக்காண்டத்துள், அநுமனுக்குச் சந்தர்ப்பமளிக்கின்றார்.

கதையெனில், தலைவன், தலைவி, கொடியன் (Villain) ஆகிய மூவர்தானே இன்றியமையாதவர்கள்? அதிலும் இக் கொடியன் இல்லாவிடின் கதையே ஓடாது. இத்தகைய தொரு கொடியனாக இக்காப்பியத்துள் வருபவன் இராவணனாம். மற்றையிடங்களிலும் இராவணனது நிலையினைக் கூறிச் செல்லினும், சீதையைக் கொணர்ந்த பிறகு அவளது அழகினாற்றன்பால் தோன்றிய காதல்தீ தன்னைச் சுட்டெரிக்கும்போது அவன் நடந்துகொண்ட முறையினை நாம் இப்பகுதியில் தான் பார்க்கின்றோம்.

கதைமாந்தர் (Characters)

இராமனது பண்பு நலன்களையே யாண்டும் கூறிவந்த கம்பர், அவனது வடிவழகையும் பாடுவதற்குக் கருதி, அதற்கேற்ற இடம் இச் சுந்தரகாண்டமென்று கொண்டார். கவி, தான் இராமனது அழகைப்பற்றியும் அங்கவிலக்கணங்களைப்பற்றியும் கூறக்கருதியதை யெல்லாம், அநுமன் வாயிலாகச் சீதையிடத்துக் கூறச் செய்கிறார். அஃதே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போன்று, சீதையின் புறவழகைப் 'பொன்னின் சோதி' 'போதினில் நாற்றம்!' 'தென்னூண் தேனின் தீஞ்சுவை, 'செஞ் சொற் கவியின்பம்', ஆகிய, கண்டு, உயிர்த்து, உண்டு, கேட்டு முறையே உணரக்கூடிய எல்லாம் திரண்டு உருவெடுத்ததாகக் காட்டுகின்றார் கம்பர். இவ்வாறு சீதையின் வடிவழகைப் புகழ்ந்த அவர், அவளது பண்பு நலனைக் காட்டுமிடமாகச் சுந்தரகாண்டத்தைக் கொண்டார். முற்பட இவ்வாறு புனைந்துரைத்த அழகெல்லாம், சிறையுளிருந்தபோது, மாசுபடிந்து தோற்றினதாயினும் அது தன் னீர்மை குன்றவில்லை என்பதை,

'ஆவி யந்துகில் புனைவதொன்
றன்றிவே றறியாள்
தூவி யன்னமென் புனலிடைத்
தோய்கிலா மெய்யாள்
தேவு தென்கட லமிழ்து கொண்
டனங்க வேள் செய்த
ஓவி யம்புகை யுண்டதே
யொக்கின்ற வுருவாள்'

என்ற செய்யுளால் புலப்படுத்துகின்றார். இவளது உயர்வைக் காட்டக் கருதிய அவர், அநுமன் வாயால், இற்பிறப் பென்பதொன்றும் இரும் பொறையென்ப தொன்றும், கற்பெனும் பெயரதொன்றும்' ஆகச்சீதை விளங்கினள் என்று கூறச் செய்கின்றார். 'தென்கடலமுது கொண்டனங்கவேள் செய்த ஓவியம்' என்று, 'கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றறியுமைம் புல'னுமுடைய உடலைக் கூறி, அவள் அழகாக மட்டுமின்றிப் பொறை, நற் குடிப்பிறப்பு, கற்பு ஆகியவற்றின் வடிவமாகவும் திகழ்ந்தாள் என்னலின் அவளது மனப்பாங்கு பெற்றும்.

பின்னும் அநுமன், "நின்பால் நேசமே அச்சம் நீக்க,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரக்கம் என்றென்றும் தானே ஏந்திழை வடிவம் எய்தித் தருக்கிய சிறையுற்றன்ன தமியள்' எனவின், சுற்றிலும் அலகைகளும் அஞ்சவரும் அரக்கிய ரிருக்க, அச்சமகற்றும் அயில்வேலாகத் தன் கணவனையே நினைத்திருந்தாளாய சீதை, 'தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழு'வாள் என்ற இலக்கணத்துக்குரியளாகிக் கற்பின் சிகரத்தை எட்டிப் பிடித்து விடுகின்றனள். இனி கவிக் கூற்ருகத் தானே மொழிவதன்றிப் பிறிதொரு பாத்திரத்தைக் கொண்டு, ஒரு பாத்திரத்தின் சிறப்பைக் கூறச் செய்வது நாடக விலக்கண மாம். சீதையின் எல்லையற்ற பண்புகளையும் அநுமன் வாயிலாகவே வெளிப்படுத்துகின்ருர் கம்பர். "மனைப்பிறவி யும, நாணமும் இவள் பிறந்தமையினலே உயர்வடைந்தன. இவ்வாறு இவள் வருந்தி நிற்ப, இவ்வருத்தங் கண்டு மன நெகிழும் பேறுபெற்றிலனே அவ்விராமன்; அவன் காணின் என்ன கருதுவானே" என்று

'பேண நோற்றது மனைப்பிறவி பெண்மை போல்
நாணம் நோற்றுயர்ந்தது நங்கை தோன்றலால்
மாணநோற்று ஈண்டிவள் இருந்த வாறெலாம்
காணநோற் றிலன்அவன் கமலக் கண்களால்'

என்ற செய்யுளால் பெறச் செய்கின்ருர்.

இவ்வாறு, சீதையின் வடிவழகும், பண்பு நலனும் மட்டுமின்றிச் சீதையின் பெண்மையியல்புகளும் இக்காண் டத்திற் கூறப்படுகின்றன. நாம், பெண்ணின் உளப் பாங்கை (Female Psychology) இங்கு காணவியலுகிறது. செயலாற்ற கில்லா விடத்துக் கண்ணீர் வாரும் சீதையை நம் கண்முன் காணலாம். பிரிவாற்ருத் துயரத்தால், துயில் அவளிடமிருந்து ஓடிவிட்டதாம். "துயிலெனக் கண்கள் இமைத்தலும் முகிழ்த்தலும் துறந்தாள்." எனவும், 'விழுதல்', 'விம்முதல்', 'ஏங்குதல்' இராமனை எண்ணிச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சோருதல் துளங்குதல், அழுதலன்றி மற்றய லொன்றும் செய்குவதறியாள்'' எனவும் பெண்மை பேசப்படுகின்றது மனம் தான் பற்றி நிற்கும் பொருள்களையன்றி, அவற்றோ டியைபுடைய பொருள்களைக் காணினும் உணர்வு பெறும். இதனை எண்ணத்தொடர்பு (Association of ideas) என்பர். இதனைப் பெண்களிடத்துப் பெருக்கக் காணலாம். அத் தகைய பெண்மைப் பண்பு நிறைந்த சீதையைக் காணுங் கள்.

'அரிய மஞ்சிறோ டஞ்சன முதலிவை யதிகம்
கரிய காண்டலுங் கண்ணிநீர் கடல் புகக் கலுழ்வாள்''

கரிய நிறமுடையன வெல்லாம் காகுத்தனை நினைவு படுத்தினவாம். அதனால் வருத்த மிகுந்தாள். மேலும் அவளது தோற்றமும் வருத்தமும், 'உரிய காதலி னொரு வரோ டொருவரை யுலகில் பிரிவெனுந் துயருருவங் கொண் டாலன பிணியா'ளது போன்றனவா யிருந்தன.

கணவரோடு மாறுபட்டிருந்தாராயினும் அவரைப் பற்றியே சிந்திக்கும் தன்மை பெண்களுக்குண்டு. அதிலும் கருத்தொருமித்த காதலனைப் பிரிந்து வஞ்சனையாற் கொண்டு வரப்பட்ட பெண் கணவனைக் கருதாது இருப் பாளோ?

''சித்திரத் தினலர்ந்த செந்தாமரை யொத்திருந்த மலர் தன்னை யுன்னுவாள்'' இது மட்டுமன்றிக் கணவன் கூறிய சொற்களும் அவள் மனத்திலிடம் கொண்டன. ''ஏழை வேடனுக்கு எம்பிநின் றம்பி, மங்கை கொழுந்தி'' எனச் சொன்னவைகளையெல்லாம் நினைத்து வருந்தினாள்.

பிறனொருவன் தீய எண்ணத்துடன் நெருங்குகின்றான் என்று கண்டவுடன் கூசும் பெண் மனமும் அங்கே காண

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லாம். "கூசியாவி குலையுறுவாள்" தன்னெதிர் இராவண னைக் கண்டாள்.

தன் கணவனின் பெருமை பேசும் பெண் நம் கண் முன் வந்து காட்சி தருகின்றாள். "குன்று நீ யெடுத்த நாடன் சேவடிக் கொழுந்தா லுன்னை வென்றவன் புரங்கள் வேவத் தனிச் சரம் துரந்தமேரு, என்றுணைக் கணவனுற்றற் குர னிலா திற்று வீழ்ந்த. அன்றெழுந் துயர்ந்த வோசை கேட் டிலைபோலும்" என்று தன் கணவனாய இராமனின் ஆற் றலைக் கூறுகின்றனள் சீதை இராவணனிடத்து.

பின்பு அரசன் மகளாய சானகி அரசியலிலும் வல் லவள் என்பதைக் கம்பர் காட்டுகின்றார். பெண்ணாயினும் "இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே கெடுக்குந் தகைமை யவர்" என்பதறிந்தவள் என்பதனை, "அடுக்கு மீதடா தென்றுன்ற வறிவினல் ஏதுக்காட்டி இடிக்குந ரில்லை" போலும் என்பதனாற் குறிக்கின்றார்.

பழி நாணும் பெண்மையை, "நான், பூணும் பழியோடு பொருந்துவதோ" என்பதிற் காணலாம். உயிர்விடுந் தருணத்திலும் உயிர்க் காதலனை எண்ணுகின்றாள். அதனை யடுத்து ஐயமும் தோன்றுகிறது. "அறையிருங் கழலவற் காணுமாசையால், உயிரும் போற்றினேன், சிறையிருந் தேனையப் புனிதன் தீண்டுமோ?" என்று. இதனையடுத்துத் தன் தூய்மையை நிலைநாட்டுவ தெங்ஙனம் என்ற கேள்வி எழுகின்றது. 'கற்பினை எப்பரிசிழைத்துக் காட்டுகேன்' என்று.

ஆழியைக் கண்டதும் ஐயனைக் கண்ட மகிழ்ச்சி தோன்றிற்று! 'குழந்தையை யுயிர்த்த மலடிபோன்றுனள்' "வாங்கினள் முலைக்குமையில் வைத்தனள், சிரத்தால் தாங்கினள்" எனப் பலவாறு, பெண்மை உணர்ச்சிகளின் களஞ்சியம் என்பதை நிரூபித்தாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனக்குதவிய பெருந்தகையை வாழ்த்தும் வைதேகி, 'உலக மேழும், ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றெ(ன)ன இருத்தி' என ஆசி கூறுகின்றாள். பழிவாங்கும் பெண்மையை, "அரக்கன் விழி காகங்கள் உண்டபோதன்றி யானுமுள ளுவனோ" என்பதிற் காணலாம். தன் முதுகின் மீது ஏற்றிச் செல்வதாகக் கூறிய அநுமனுக்குப் பதிலுரைக்கும் கூற்றில், பெண்மையின் திண்மை காணப்படுகிறது. 'இன்னு மீண்டொரு திங்களிருப்பல் யான், பின்னையாவி பிடிக்கிலேன்' என்ற கூற்றில் பெண்மையின் குறைபாடு (Weakness) காணப்படுகிறது. "இளையற்கு எனைக் காத்திருந்தவற்கே கடன்" என்று சொன்னதில், பெண்மையின் தவறு நினைந்து மறுகும் தன்மையைக் காணலாம். இவ்வாறு பல கோணங்களிலும் பெண்மையை எடுத்துக் காட்டிய கம்பனின் அறிவு என்னே!

இனி, 'யார் கொலோ இச் சொல்லின் செல்வன்' என்றதற்கேற்ப அநுமன் சீதையிடம் உரையாடும் முறை வகுக்கப்பட்டுள்ளது. "அன்று நீ இழித்து நீத்த மற்றை நல்லணிகள் காணுன் மங்கலங்காத்த" என்று இராமன் அவளது பிரிவால் வருந்துதலையும், அணிகள் கிடைத்திலையேல் அவன் உயிர் துறந்திருத்தல் ஒருதலை யென்பதனையும் உணர்த்திய சொல்லாற்றல் போற்றத் தக்கது.

பெண்மைக்குரிய அவநம்பிக்கையை யுணர்ந்து, வானர சேனையின் பெருமையினை, "வெள்ளமேழுபத்துளதால் வீரன் சேனை, இவ்வேலைப் பள்ளமொரு நீரள்ளிக் குடிக்கச் சாலும் பான்மையதோ" என்று, தன்னாற்றலுடையார் மிகப் பலர், எனவே கவலவேண்டியதின்று' எனப் பெண் மனத்திற்கு நம்பிக்கை யளித்த நயம் சாலச் சிறந்த தோன்றும்.

இனி, சம்புமாலி, பஞ்சசேனாபதியர், அட்சகுமாரன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகியவரை அழித்த அவன் செயல், அவனது அளவிறந்த ஆற்றலை வெளிப்படுத்துகின்றது.

"திறந்திறம்பிய காமச் செருக்கினுல் தம்மை மறந்து மயங்கியவர்" பலர் அறந்திறம்பின ராருளராயினுர்" எனவே இக்கொடிய எண்ணத்தினின்றும் 'நீங்குக' என இராவணனுக்குத் தந்த அறிவுரை, அநுமனது நல்லுரை பகரும் அறிவுத் திறனைக் காட்டுகின்றது.

"அரக்கனே யஞ்சாதே! 'வெஞ்சின வாலி மீளான் வாலும் போய் விளிந்ததன்றே'" என்று, இராவணனை வருத்திய வாலியும் இராமனுலேயே கொல்லப்பட்டன னென்று கூறித் தன் தலைவனை அநுமன் உயர்த்தியது சிறந்த சொல்வன்மையாம். இவற்றையும் சீதைபால் இவன் கொண்ட அன்பையும் நோக்க, "அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப் பார்க்கின்றி யமையாத மூன்று" என்ற தூதரிலக்கணமுடைய தூதன் அநுமன் என்பது பெறப்படும்.

சீதையினிருப்பும் அவளிடமிருந்து அடையாளம் கொணர்ந்ததும் சொல்லிப் "போரில் நீண்டவா ளரக்க ரோடு நிகழ்ந்ததும் நெருப்புச் சிந்தி மீண்டதும் விளம்பான் தான் தன் வென்றியை விளம்ப வெள்கி' நின்ற நிலைமை அநுமனின் பணிவையும் அடக்கத்தினையையும் குறிக்கும்.

மைநாகமலை யுபசரிக்கவும் தரியாது, 'அருந்தேனினி யாதும் என்னுசை நிரப்பினல்லால்' என்று மேற்சென்றது அவ் வானர திலகனின் மேற்கொண்ட செயலை முற்று வித்தலைக் குறிக்கின்றது.

பின்னும் இராமனை யடைந்த வநுமன்' "தையலை நோக்கிய தலையினன் கையினன், வையகந்தழீஇ நெடிதி றைஞ்சி"க் குறிப்பினுற் சீதை இருந்தமை புலப்படுத்தினுன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்பு, 'காலந்தாழ்க்கின் கவலும் இராமன்' என்று, "கண்டனன் கற்பினுக் கணியை" என்முன். கற்பிழந்து வாடிய நங்கையையன்று யான் கண்டது என்னும் பொருள் அதில் தோன்றக் கூறினுன். மேலும் குடிப்பிறப்பு, கற்பு முதலியவற்றிற்கு யாதொரு பழியும் நேராதவாறு அவள், 'உம்பி புல்லிஞல் தொடுத்த தூய சாலையின் இருந்தாள்" என்று கூறியமை உண்மையிலேயே அவன் சொல்லின் செல்வன் என்பதை வலியுறுத்துகின்றது. இவ்வாறு இக்காண்டம் கதை மாந்திருவரின் குணநலனைக் கூறுகின்றதாம்.

நாடகக் கலைத்திறன் (Dramatic Expression)

மேலும் இச் சுந்தரகாண்டம் நாடக அமைப்பில் செல்கின்றதெனலாம். இலங்கையை யடைந்த அநுமன் நேரே சீதையைக் கண்டான் என்று கூறப்படவில்லை. மகேந்திர மலையினின்று வரும் பொழுதே பல தடைகள்! இலங்கை நகரிலும் குறித்த இடம் காணுது பலவிடங்களிலும் தேடியலைதல் ஆகியவை நாடகக் காட்சிக்குரிய நிலை கொள்ளாமை அல்லது சந்தேகத்திலாழ்த்துதல் (Suspense) என்ற இலக்கணத்துக்குரியன.

இனி, இராவணன் வந்து எதிரில் நிற்கச் சீதை தன் நிலை குலைந்தனள். இவ் விருவரையும் மரத்தின் மீதிருந்து அநுமன் கண்டான். காமபரவசனுய இராவணனது நிலை; அச்ச மிகுந்த சானகியின் நிலை; இருவரையும் கண்டு ஊசலாடும் மனத்தானுய அநுமன், ஆகிய இம் மூன்று பாத்திரங்களின் உணர்ச்சிகளும் ஒரே பாட்டில் பொங்கி வழிகின்றன.

"கூசியாவி குலைவுறு வாளையும்,
ஆசையாலுயி ராசழி வானையும்
காசில் கண்ணினைச் சான்றென கண்டனன்,
ஊசலாடி யுளையுமுள் ளத்திஞன்"

என்பதுதான் அப் பாடல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இனி, இராவணன் சீதையை நோக்கிக் கூறுபவற்றுள் மனித இயல்பு காட்டப்படுகின்றது. பிறர் தன்னினும் இழிந்தவர் என்று காட்டக் கருதும் மனித இயல்பை, இராவணன் கூறிய "இன்னுயிர்க் காந்தன் மாண்டிலன் காடு கடந்துபோய் வாழ்ந்த வாழ்வது மானிட வாழ்வன்றே" என்ற செய்யுளிற் காணலாம். அதுவும் 'மாண்டிலன்' என்ற தொடரால் 'இராமன் தவறாது இறந்துவிட்டான்' என்பதையும் குறிப்பிடுகின்றான். சீதை மறுப்புரைக்க அது கேட்ட இராவணன் வெகுண்டான். அவனது காமத்தைச் சீற்றம் தணித்தது. சிறிது பொழுதில் இரண்டும் சமமாயின. "காமன்றன் திறத்தையும் கடந்தது சீற்றத்தின் தகைமை" "கிளர்ந்த சீற்றமும் காதலும் எதிரெதிர் கிடைப்ப" என இரு உணர்ச்சிகளை ஒரே பாத்திரத்தினிடத்துத் தோற்றுவிக்கும் இஃது நாடக வியல்புடையது தெற்றெனப் புலனாகும்.

அநுமனால் அலைக்கழிக்கப் பெற்ற வரக்கர் புறமுதுகிட்டு ஓடலாயினர். அத்தகையோர். நம்மவர் வந்து தழுவ, (அநுமனுக்கஞ்சி)'நாங்கள் உம்மவரல்லேம்; வானவர்' என்றரற்றி யோடினார்களாம். "தந்தாரமுழுறு கிளையுந்தமையெதிர் தழுவுந்தொறும் நுமதமரல்லேம், வந்தேம் வானவரென்றேகினர்" என்ற செய்யுள் நாடக மெய்ப்பாடுகளுள் ஒன்றாகிய 'நகை' யென்பதை மறுத்தலொல்லுமோ?

இனி, இறுதியாக, உருக்காட்டுப் படலத்தில் அநுமனிடமிருந்து ஆழி பெற்ற சீதை, "வாங்கினள் முலைக்குவையினில் வைத்தனள் ....தடந்தோள் வீங்கின"ளாகக் கூறிய கம்பர், பின்பு திருவடி தொழுத படலத்தில், அநுமன் வாயிலாக, முலைத்தடத்துள் வைத்த ஆழியானது காதல் வெம்மையால் உருகிப் பின் மனமகிழ்ச்சியால் இறுகிற்று என,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"ஒருகணத் திரண்டு கண்டேன்
ஒளிமணி ஆழிஈன்ற
திருமுலைத் தடத்து வைத்தாள்
வைத்தலும் செல்வ! நின்பால்
விரகமென் பதனின் வந்த
வெங்கொழுந் தீயினால்வெந்
துருகிய துடனே யாறி
வலித்தது குளிர்ப்புள்ளுற"

என்று சொல்லுவித்த நயம் பாராட்டிற்குரியது. ஆழி வாங்கியபோது நிகழ்ந்த இந்நிகழ்ச்சி அப்பொழுது கூறப்படவில்லை. பின்னால் அநுமனால் இராமனுக்குக் கூறப்படுகின்றது. இவ்வாறு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சியைப் பின்னர், ஒருவர் மற்றொருவர்க்குக் கூறுமாறு அமைப்பது, நாடகம், நிழற்காட்சி (Cinema) ஆகியவற்றுள் கொள்ளப் படும் முறையாம். இதனைப் 'பின்னோக்கு' (Flash Back) என்பர். இம்முறையை அந்நாளிலேயே தன் காப்பியத் திற் காட்டிய கம்பனை ஒரு நாடகாசிரியன் என்றும், இச்சுந்தரகாண்டத்தை நாடகக் கலைச் சுவை மிகுந்த ஒரு பகுதியென்றும் கூறல் சாலபுடைத் தாகாதோ?

— பாரதி ஜயந்தி மலர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காவிய நாயகன்

ப. ந. தியாகராஜன்

காவியத்தின் பல்வேறு இலக்கணங்களில் மிக முக்கியமான ஒன்று "தன்னேர் இல்லாத் தலைவனைக் காவியம் கொண்டிருக்க வேண்டுமென்பது." இந்த இலக்கண அடிப்படையில் இராமாயணத்தின் காவிய நாயகனைக் காணும்போது, அற்புதமான பாத்திரத்தை ஆதிகவி படைத்திருப்பதை நம்மால் காண முடிகிறது. "வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி" யின் மூல காவியத்தை அடிப்படையாகக் கொண்டு மகாகவி கம்பன் படைத்த இராம காதையில் மூலகாவியத்தில் சாதாரணமாகப் படைக்கப்பட்ட சின்னஞ்சிறு பாத்திரங்களைக் கூடக் கலையழகோடு அற்புதமான குணசித்திர பாத்திரமாகத் தமது காவியத்தில் படைத்துவிட்ட கம்பன் காவியத்திற்கு நாயகனாக-கவிக்கு நாயகனாக விளங்கும் இராமனை சாதாரணமாகவா படைத்து விடுவான்? கலையின் இருப்பிடமாக, தர்மத்தின் திருவுருவாக, சாந்தத்தின் உறைவிடமாக அழகின் எல்லைக்கோடாக, வீரத்தின் சிகரமாக அல்லவா படைத்து விடுகிறான்!

காவியத்தின் துவக்கத்திலிருந்தே "கடவுளின்" திரு அவதாரம் இராமன் என்று கூறிக்கொண்டு வருகின்ற கவிஞன், இராமனைத் திருமாலின் திரு அவதாரம் என்று மட்டும் கூறவில்லை. தொழில் வழி மூன்றாகப் பிரிந்து உலகைப் படைத்து, காத்து அழிக்கும் தொழில்களைச் செய்கின்ற மூன்று அம்சங்களில் காத்தல் தொழிலைச் செய்கின்ற ஓர் அம்சம் திருமால். இம்மூன்று அம்சங்களும் எங்கிருந்து, தோன்றினவோ அந்தப் பரம் பொருள்-அந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூலசக்தியின் திரு அவதாரமே இராமன் என்று கம்பன் தனது காவியத்தின் பல இடங்களில் குறிப்பிடுகிறான்.

கோசிகன் கண்ட ராமன்

கோசல நாட்டின் அரசவை. இந்திரனை யொப்பக் கொலுவீற்றிருக்கிறான், தசரதமகா சக்ரவர்த்தி. 'மன்னுயிர் அடங்கலும் உலகும் வேறு அமைத்து தேவரோடு நான்முகனையும் படைப்பன் ஈண்டு எனத் தொடங்கிய' தொல்தவத்துக் கோசிக முனி அரசவைக்கு வருகிறார். வந்த முனிவரை வரவேற்று முகமன் கூறிய மன்னர் மன்னனிடம், முதல் முறையாகப் பேசத் துவங்கும்போதே இராமனின் அவதார இரகசியத்தைக் கோசிகன் வாயிலாகக் கூறிவிடுகிறான் கம்பன். என்ன சொல்லுகிறான்?

"என் அனைய முனிவரரும் இமையவரும்
இடையூறென்று உடையரானால்
பல்நகமும் நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதுமபீடத்து
அந்நகரும் கற்பக நாட்டணி கவரும்
மணிமாட அயோத்தி என்னும்
பொன்னகரும் அல்லது புகலுண்டோ
இகல் கடந்த புலவு வேலோய்!

(பாலகாண்டம், கையடைப்படலம்)

தம்மைப்போன்ற முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் இடையூறு ஏதாவது ஏற்பட்டால், தாங்கள் செல்லும் இடங்களில், இறைவன் எழுந்தருளியிருக்கும் கைலாயம்; அல்லது திருமால் அரவணையில் யோகநித்திரை புரியும் பாற்கடல் அல்லது படைப்புத் தொழிலதிபன் வாழுகின்ற சத்தியலோகம்; அல்லது கற்பக நாடு என்று பாராட்டப் படுகின்ற இந்திரபுரிக்கு ஈடாக விளங்குகின்ற அயோத்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாநகரம் என்று கோசிகன் சொல்லும்போதே தமக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் இடையூறைத் தவிர்க்க எண்ணிக் கைலாயம் சென்ருல், அங்கே இறைவனின் பூரண அம்சத்தைக் காண முடியாது. பாற்கடலுக்குச் சென்ருல் அங்கே மங்கை மார்பன் திருமாலின் பூரண அம்சத்தைக் காணமுடியாது. பதுமலோகம் சென்ருல் அங்கு பிரமனின் பூரண அம்சத்தைக் காண முடியாது. காரணம் பரமேசுவரன், திருமால், பிரமன் ஆகிய மும்மூர்த்திகளின் அம்சங்கள் ஒன்று சேர்ந்து இங்கு இராமனுக அவதரித்திருக்கின்றன. ஆகவே தமது குறை தீர இங்கு வந்ததாகக் குறிப்பிடும் முறையில் இராமனுடைய அவதார இரகசியத்தை வெளியிடுகிருன் கவிஞன். இதே கருத்தைக் கவிக்கூற்ருகவும், பல்வேறு காவியப் பாத்திரங்களின் வாயிலாகவும், வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம், காவியத்தின் பல்வேறு இடங்களில் கவிஞன் உறுதிப்படுத்திக் கொண்டே வருகிருன்.

முன்பயில்—கார்முகம்

இன்னும் மேலே பார்க்கலாம். இராகவன் மேலே காதல் கொண்டு அவனையே நினைந்து உருகிக் கொண்டிருக்கும் சீதையிடம் இராகவன் கார்முகம், திரயம்பகம் என்று பாராட்டப்படுகிற சிவதனுசை முறித்த விந்தையைக் கூற வந்த சீதையின் உயிர்த்தோழி நீலமாலை,

"மாத்திரை அளவில்தாள் மடுத்து, முன்பயில்
சூத்திரம் இதுவெனத் தோளின் வாங்கினுன்;
ஏத்தினர் இமையவர்; இழிந்த பூமழை;
வேத்தவை நடுக்குற முறிந்து வீழ்ந்ததே."

(பாலகாண்டம்-கார்முகப்படலம்)

என்று கூறுகிருள். மதநீர் வழிகின்ற யானையையொத்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வலிமை மிக்க மன்னுதி மன்னர்களால் அசைக்கக்கூட முடியாத அந்த மாபெரும் வில்லை மாத்திரை அளவில் தனது காலில் வைத்து, "இது என்னால் முன்பே உபயோகிக்கப் பட்ட ஆயுதம்" என்று சொல்லுமாப்போலத் தோளில் வாங்கி, நாணை இழுத்து, வில்லை முறித்தான்" என்று நீலமாலை வாயிலாகக் கூறும்போது, திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளின் அம்சம் இராமனிடம் குடிகொண்டிருக்கிறது என்னும் செய்தியை ஊர்ஜிதப் படுத்துகிருன் கவிஞன்.

முத்தாரம் காட்டும் மூலம்

இது மட்டுமல்ல: திருமணத்திற்காக இராகவன் தன்னை அலங்கரித்துக் கொள்ளும்போது, முத்தாலான கோவைச் சரங்களைத் தனது தடக்கையில் அணிந்து கொண்டதை வருணிக்க வந்த கம்பன்—

"கோவையின் பெருவடம் முத்தங் கோத்தன
காவல்செய் தடக்கையின் நடுவண் காந்துவ
மூவகை உலகிற்கிற்கும் முதல்வன் ஆமென
ஏவரும் பெருங்குறி இட்ட போன்றவே"

(பாலகாண்டம்-கடிமணப்படலம்)

என்று குறிப்பிடுகிருன். இராமன் யார் தெரியுமா? மூவகை உலகிற்கும் முதல்வனுன அந்த ஆதிப்பரம் பொருளே, அந்த மூலப்பொருளே இராமனுகத் திருவுருக் கொண்டிருக்கிறது என்று பெருங்குறியிட்டுக் பறை சாற்றுவது போன்றிருந்ததாம், இராமனின் கரங்களை அணி செய்த மூன்று வடங்களும் ஒன்றுகச் சேர்க்கப்பட்டு விளங்கிய முத்தாரம்.

பிரம்ம முடிச்சு

மணக்கோலம் பூணும் இராகவன் பூணூல் அணிந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டிருக்கிறான். அவன் பிரம்மச்சாரி. ஆகவே மூன்று நுண் இழைகளாலான பூணூலை அணிந்து கொண்டிருக்கிறான். மூன்று நுண் இழைகளைச் சேர்த்து முடியப்பட்ட இடத்திற்கு "பிரம்ம முடிச்சு" என்று பெயர். அந்த முடிச்சில் மூன்று நுண் இழைகளும் ஒன்று சேர்ந்திருக்கும். இந்த பிரம்ம முடிச்சுடன் கூடிய பூணூலை இராமன் அணிந்து கொண்டிருந்தான் என்று கூற வந்த கம்பன்,

"மேவரும் சுடரென விளங்கும் மார்பின் நூல்
ஏவரும் தெரிந்தினிது உணர்மின் ஈண்டெனத்
தேவரும் முனிவரும் தெரிக்க லாமுதல்
மூவருந் தானென முடித்த தொத்ததே."

(பாலகாண்டம்-கடிமணப் படலம்.)

என்று கூறுகிறான். வானத்தில் பவனி வரும் சூரியன், சந்திரன் ஆகியவைகளின் பேரொளியோடு இராமனின் மார்பில் விளங்குகின்ற பூணூலில் போடப்பட்டிருக்கும் "பிரம்ம முடிச்சு" உலகிற்கு ஒரு பெரும் உண்மையைக் கூறுகிறதாப்! என்ன உண்மை? "ஏ உலகத்தாரே! இவ் விராமன் யார் தெரியுமா? தேவர்களும், முனிவர்களும் 'இவன் இன்ன தன்மையன்' என்றெல்லாம் அறிந்து கொள்ள முடியாத, பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற மும்மூர்த்திகளின் திரு அவதாரம் இந்த இராமன் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்" என்று, கூறுமாப் போல அமைந்திருந்ததாம், மூன்று இழைப் பூணூலைச் சேர்த்திருக்கும் "பிரம்ம முடிச்சு."

முப்பரம்பொருளுக்கும் முதல்

இராமன் திருமணத்திற்காகத் தன்னை அலங்கரித்துக் கொண்டதையெல்லாம் விரிவாக வருணித்துவந்த கவிஞன் மேற் கொண்டு வருணிக்க முடியாத ஒரு நிலையை அடைந்த போது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"முப்பரம் பொருளுக்குள் முதலை மூலத்தை
இப்பரம் துடைத்தவர் எய்தும் இன்பத்தை
அப்பனை அப்பினுள் அமிழ்தம் தன்னையே
ஒப்பனை ஒப்பனை உரைக்க ஒண்ணுமே."

(பாலகாண்டம்-கடிமணப் படலம்)

என்று கூறி முடித்து விடுகிறான்.

பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற முப்பரம் பொருள்கள் எங்கிருந்து தோன்றினவோ, அந்த மூலப் பொருள்கள் இவ்வுலகைவிட்ட மெஞ்ஞானியர்கள் சென்றடையக் கூடிய இன்பப் பொருள், உலகுக்கெல்லாம் தந்தையாக இருக்கும் அப்பன் பாற்கடலில் தோன்றிய அமுதத்திற்கு ஒப்பானவனாக இராமன் திருக்கல்யாணத்திற்காகச் செய்து கொண்ட ஒப்பனையைத் தன்னால் வருணிக்க முடியுமா என்று கூறி முடிக்கும்போது மும்மூர்த்திகள் ஒருங்கு சேர்ந்து எடுத்த திரு அவதாரமே இராமன் என்பதை வலியுறுத்துகிறான் கவிஞன்.

பிராட்டியின் கூற்று

இன்னும் சுந்தர காண்டத்தில் சிறையிருந்த செல்வி ஜானகி வாயிலாக இதே கருத்தை வெளியிடுகிறான் கவிஞன். அசோகவனத்தில் அன்னை சிறையிருக்கிறாள். அண்ட சராசரங்கள் அத்தனையும் தமது வலிமையினாலும், தபோபலத்தினாலும் ஆட்டிவைக்கும் இலங்கையர்கோன் பிராட்டியிடம் வந்து, தனது வீரப் பிரதாபங்களையெல்லாம் எடுத்துக் கூறி, தன்னை மணக்கும்படி வேண்டுகிறான். ஊடல் காலத்தில் தனது மனைவி மண்டோதரி முன் கூட வணங்காத தலை முதல் கால் ஈறாக இமயமலை போன்ற உடல் முழுவதும் பூமியில்பட பிராட்டியை வணங்கி வாழ்த்திக் கெஞ்சுகின்ற இராவணனை இகழ்ந்து பலவாறாகப் பேசும் பிராட்டி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"உலகங்கள் அனைத்தும் அஞ்சும்படி வாழ்கின்ற வெம்மை பொருந்திய கண்களோடு கூடிய அரக்கனே! பிறன் மனைவியை விரும்பும் உன் புன் தொழிலை விலக்க மாட்டாயா? திருமால் நான்முகன், சிவன், என்று நினைத் தாய் என் நாயகனை. என் நாயகன் இம் மூர்த்திகளின் தோற்றுவாயான, மூலப் பொருளின் திரு அவதாரம் என்பதைத் தெரிந்துகொள்" என்ற கருத்தை வெளியிடு கிறான். இனி, பாட்டைப் பார்க்கலாம் :—

"அங்கண் மா ஞாலமும் விசும்பும் அஞ்ச வாழ்
வெங்கணாய்! புன் தொழில் விலக்க உட்கொள்ளாய்
செங்கண் மால், நான் முகன் சிவன் என்றே கொலாம்
எங்கள் நாயகனையும் நினைந்தது ஏழை நீ!

(சுந்தர காண்டம், நிந்தனைப் படலம்)

அனுமான் அறிவுறுத்தல்

இது மட்டுமல்ல-சொல்லின் செல்வன் அனுமான் வாயிலாக இராமன் மும்மூர்த்திகளின் திரு அவதாரம் என்று இறுதியாக முடிவு கூறி விடுகிறான் கவிஞன்.

அரசவையில் கொலு வீற்றிருக்கும் இராவணன் தன் முன் குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கிற அனுமானை நோக்கி,

நேமியோ? குலிசியோ நெடுங்கணிச்சியோ?
தாமரைக் கிழவனோ தறு கண் பல் தலைப்
பூமி தாங்கு ஒருவனோ?—பொருது முற்றுவான்,
நாமமும் உருவமும் கரந்து நண்ணினாய்

(சுந்தர காண்டம்)

என்று கேட்கிறான் உறுமுகின்ற குரலில். அனுமான் அமைதியாகப் பதில் கூறுகிறான் :—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"சொல்லிய அனைவரும் அல்லென்: சொன்ன அப்
புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்
அல்லி அம் கமலமே அனைய செங்கண் ஓர்
வில்லி தன் தூதன் யான் இலங்கை மேயினேன்.

(சுந்தர காண்டம்)

"நீ சொன்ன அத்தனை பேரும் அல்ல நான். நீ கூறிய அத்தனை பேரும் வலிமை அற்றவர்கள். ஆகவே அவர்களுடைய ஆணையை ஏற்று வருபவன் நான் அல்லன். தாமரை மலரையொத்த செங்கண்களையுடைய வில்லின் செல்வன் தூதனாக இலங்கைக்கு வந்தேன். அவன் என் தலைவன்-யார் என்று அறிய விரும்புகிறாயா சொல்கிறேன் கேள்:

மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த காரணன்-கைவில் ஏந்தி,
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும், வெள்ளிப் பொருப்பும் விட்டு
[அயோத்தி வந்தான்.

(சுந்தர காண்டம்)

"சிவ பெருமான் தன் கையில் உள்ள சூலத்தை விட்டெறிந்து வெள்ளிப் பனி மலையைவிட்டு அயோத்தி வந்து கையில் ஏந்தி இராமனாக அவதரித்தான். இந்த உலகம் அத்தனையும் தன் உந்தியில் வைத்துக் காக்கும் பரந்தாமன் சங்கையும் சக்கரத்தையும் உதறித் தள்ளிவிட்டு ஆலிலையைத் துறந்து அயோத்தி வந்தடைந்து கையில் ஏந்தி இராமனாக அவதரித்தான். இந்த உலகம் அத்தனையும் படைத்த பிரமன் கையிலுள்ள கமண்டலத்தைத் துறந்து தாமரை மலரைவிட்டு அயோத்தி நகரம் வந்தடைந்து கையில் ஏந்தி இராமனாக அவதரித்தான். என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அனுமான் வாயிலாக ஐயத்திற்கிடமின்றி இராகவன் மும்மூர்த்திகளின் திரு அவதாரம் என்று கம்பன் காட்டி விடுகிறான்.

சைவர்களும் வைணவர்களும் வேறுபாடின்றி தம் தம் இஷ்ட தெய்வமாக இராமனை இன்று வழிபடுகிறார்கள். இந்த அற்புதமான சூழ்நிலையை உண்டாக்கிய பெருமை கம்பனைச் சார்ந்தது என்றால் அது மிகையாகாது. இந்த அற்புதமான சமரசச் சூழ்நிலையை தமிழகத்தில் தன் காவியம் மூலம் உருவாக்கித் தந்த பெருமை மகாகவி கம்பனையே சாரும்.

—தினமணி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மயக்குறு மக்கள்

செ. நீலா

ஒருவன் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் கவிப் பெருக்கும், கற்பனையில் வடித்தெடுக்கும் கதையமைப்பும் சொல்லுவோன் திறனால் சிறப்புப் பெறுகின்றன. ஆன்ற கவிஞர்களின் உயர்ந்த கவிதைகள் சொல்லும் திறனால் வெல்லும் வாழ்வு பெற்று அழியாப் பெருஞ்செல்வமாக நிலைபெறுகின்றன. அத்தகைய பாடல்களில் ஒன்று பாண்டியன் அறிவுடைநம்பியின் பாடல்.

"கல்லாமழலைக் கனியூறல் கலந்து தன் சொல்லால் செஞ்சொற்கவியின்பம் சேர்க்கும்" சேய்முகம் பாராமல், மழலையுரையாடாமல், சிறுகை அளாவிய கூழினைச் சுவைக்காமல், சித்திரத் தேரும், சிறுபறையும் சித்தரிக்கும் சிங்கார வாழ்வை அனுபவியாது வாடியவன் அரசன் அறிவுடை நம்பி. அவனுடைய ஏக்கமெல்லாம்,

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி,
இட்டும், தொட்டும்; கவ்வியும், துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்—தாம் வாழும் நாளே.

எனும் பாட்டாக வெளிவருகின்றது. குழந்தையின் சிறு குறும்பையெல்லாம் மனக்கண்ணிலே கண்டு சொல்லிலே தீட்டும் அவன் திறம் "மயக்குறும் மக்கள்" எனும் சொல்லிலே தெரிகிறது. குஞ்சுக் கால்கள் குறுகுறு நடக்க,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிஞ்சுக்கரம் நீட்டி, நெய்மணங் கமழும் சோற்றினை அள்ளி, எங்கும் சிந்தி, வாயிலிட்டுக் குதப்பி அளைந்து விளையாடி, மெய்தீண்டி இன்பம்தரும் காட்சியைச் சொல்லி "மயக்குறு மக்களின்" தன்மையை விளக்குகிறான். குழந்தை செய்யும் பல குறும்புகளில் இது ஒன்றுதான். பலவற்றில் ஒன்றை மட்டும் கோடிக்காட்டி மற்றவற்றை "மயக்குறு மக்கள்" எனும் சொல்லிலே அடக்குகிறான். இச் செல்வத்தைப் பெற்றோரே—மழலைச் செல்வத்தின் பெற்றோரே இவ்வுலகில் பெறற்கரிய பெருஞ்செல்வம் பெற்றோர். மற்றோர் உடைப் பெருஞ்செல்வராயினும்—பல்வகைப் பண்டங்களையும் பாங்குறச் சமைத்துப் பலரோடு அமர்ந்து உண்ணும் அளவு செல்வம் பெற்றவராயினும், அவர் வாழ்நாள் "பயக்குறையில்லை" என அவன் கூறுமிடத்து மக்கள் செல்வமின்றி மனமழியும் மனித உள்ளத்தை உள்ளவாறு உணரச் செய்கின்றான். அவன் நினைவிலே காணும் இன்பமனைத்தையும் "மயக்குறு மக்கள்" தீட்டித் தருவது போன்றே, நனவிலே அவ்வின்பத்தை அனுபவிக்கும் பேறு இன்னும் இல்லையே எனும் ஏக்கம், இனிமேலாவது கிட்டும் எனும் நம்பிக்கை, கிட்டாது போய்விடுமோ எனும் தாங்க முடியாத தவிப்பு, கிட்டாவிடில் பிறவிப் பயனே இல்லையே என நடுங்கிச் சோரும் உயிர் அனைத்தையும் 'பயக்குறை" எனும் சொல் வடித்துக் காட்டுகிறது.

பாண்டியன் அறிவுடைநம்பியின் பாடல்களிலே பாங்குற அமைக்கப்பட்ட இவ்விரு சொற்களும் பாவேந்தன் பாரதியின் "கண்ணம்மா என் குழந்தை" எனும் பாடலின் வழி புத்துயிர் பெற்று நிற்பதை இலக்கியம் படிப்போர் உணர இயலும். கவிஞன் கையாளும் சொற்கள் திறன் வாய்ந்த சொற்களாயின் இப்படித்தான் வெல்லும் வாழ்வைப் பெற்று நிற்கும். பாண்டியன்பாடிய சுருங்கிய சொற்களின் ஆழம் பாவலன் பாரதியின் பாடல் மூலம் விரிந்து வெளிப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குழலினிமை, யாழினிமை இவற்றினைத் தன் வாழ்வில் துய்த்து மகிழ்ந்த பாண்டியனுக்கு அவற்றினும் இனிமை தரும் மழலையின்பம் எட்ட முடியாத தொலைவில் நின்றது. அறிவுடைநம்பி பெறத் துடித்த அனுபவத்தைத் தன் வாழ்விலே பெற்று மகிழ்ந்தவன் பாரதி. மழலை தரும் இன்ப வேதனையனைத்தையும் "மயக்குறு மக்கள்" எனும் சொல்லிலே அவன் அடக்கித் தருகிறான். மயக்கம் என்பது ஒரு பொதுச் சொல். மிதமிஞ்சிய மகிழ்ச்சியில் மூழ்கி நிலை தடுமாறுவதும் மயக்கம்தான் அதே சமயம் துன்பத்தால் மனம் சோர்ந்து நிலை தடுமாறித் தவிப்பதும் மயக்கம்தான். மக்களைப் பெற்றோருக்கு இருவித அனுபவங்களையும் தருவது அச்செல்வம். தம் மக்கள் செய்யும் சிறு குறும்பெல்லாம் கண்டு, துய்த்து மனம் மகிழ்ந்து மகிழ்ச்சியில் திளைக்கும் பெற்றோர், அவர்கள் வளர்ந்து கால் ஊன்றி நிலைத்த வாழ்வு பெறும்வரை அடையும் இன்னல்கள் எழுத்திலடங்கா. இவ்விரு நிலைகளையும் தனக்குள் கொண்டு நிற்கும் "மயக்குறு மக்களின்" தன்மையைத் தன் பாட்டிலே தீட்டித் தருகிறான் பாரதி. சிறு குறும்பில் சிறிது மகிழ்ந்து படிப்படியாய் அதன் உச்சிக்குச் செல்வதைக கண்ணம்மா பாட்டைப் படிப்போர் உணர்வர். அவனது சின்னஞ்சிறு கிளி, செல்வக் களஞ்சியம் பேசும் பொற்சித்திரமாய் ஆடி வருகையில் அள்ளி அணைத்திடத் தூண்டுகிறது.

பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
    பேசும் பொற்சித்திரமே!
அள்ளி அணைத்திடவே—என் முன்னே
    ஆடி வருந்தேனே

என முதற்படியில் உடற் பரபரப்பைக் காட்டுகிறான். ஆடி வருகையில் அள்ளி அணைக்கத் தூண்டிய அவ்வழகுப் பெட்டகம், ஓடி வருகையில் அவன் உள்ளம் குளிருகிறது. அது ஆடித் திரிந்தாலோ அவனது ஆவி அச்செல்வத்தைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தழுவும். முதற்படியில் இன்பப்பரவசத்தில் உடல் செயல் பட, இரண்டாம் படியில் உடலோடு உள்ளமும் நெகிழ்ந்து நிற்க, மூன்றும் படியில் முன்னிரண்டோடு உயிரும் நெக் குருகி நிலைதடுமாறி மயங்குவதைக் கூறுகிறான். அது

ஓடிவருகையிலே—கண்ணம்மா
 உள்ளம் குளிருதடி
ஆடித் திரிதல் கண்டால்—உனைப்போய்
 ஆவி தழுவுதடி !

—என வெளிவருகின்றது.

உடல் குழைய, உள்ளம் நெகிழ, உயிர் உருக இன்பம் சேர்க்கும் செல்வத்தை அணைத்து முகர்ந்தாலோ கருவம் ஓங்கும். ஊரார் புகழக் கேட்டால் தன்னிலை மறந்து மேனி சிலிர்க்கிறது. மனம் மயங்கிய நிலையில் பிஞ்சு முகத்தில் அன்பு முத்தமொன்று பதிய மயக்கம் வெறியாகி, தழுவி அவ்வெறியைத் தீர்க்க முற்படுகிறது மனம். அப்படி ஆவி சேரத் தழுவிட வெறியும் முற்றி நிலை மறந்து உன்மத்தம் ஆகி நிற்க நேரிடுகிறது.

உச்சி தனை முகர்ந்தால்—கருவம்
 ஓங்கி வளருதடி
மெச்சியுனை ஊரார் புகழ்ந்தால்
 மேனி சிலிர்க்கு தடி
கன்னத்தில் முத்த மிட்டால்—உள்ளம் தான்
 கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ—கண்ணம்மா
 உன் மத்தமாகுதடி

எனும் வரிகள் பிள்ளைக்கனி யமுது தரும் இன்ப மயக்கம் வளர்ந்து, பெருகி, வெறியாகி உன்மத்தமாக்குவதைப் படம் பிடிக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏடுகளைவிடச் சிறப்பாக இன்பக் கதை பேசும் இச் செல்வம் துன்பக் கதையும் பேசுவதுண்டு. மக்கள் உறும் சிறு துன்பமும் தம்மைச் சுமையாய் அழுத்த மனம் கலங்கிப் போவான் மனிதன். பூத்த புது மலராய் விரியும் மழலையின் முகம் சிறிது வாடினும் உடல் நிலையில்லை என்று உணரும் பெற்றோர் மனச் சஞ்சலமடைந்து குழம்புவர். துன்பம் சிறிது அதிகரிக்கக் குழந்தையின் நெற்றி சுருங்கினாலோ இவன் நெஞ்சம் பதைப்பான். குழந்தையின் துன்பம் மிக கண்ணில் நீர் வழிந்தால் போதும் இவன் நெஞ்சில் உதிரம் வழியும். இல்லையில்லை உதிரம் கொட்டும். ஏனெனில் அச்செல்வமே அவனது கண்பாவை, அவனது உயிரே அச் செல்வம்தான். அதற்கு ஊறு ஏதேனும் நேருமோ எனும் நினைப்பே அவனது சிந்தை தடுமாறச் செய்து மயக்கும்.

சற்று உன் முகம் சிவந்தால்—மனது
 சஞ்சலம் கொள்ளுதடீ
நெற்றி சுருங்கக் கண்டால்—எனக்கு
 நெஞ்சம் பதைக்குதடீ
உன் கண்ணில் நீர் வழிந்தால்—என்னெஞ்சில்
 உதிரங் கொட்டுதடீ
என் கண்ணிற் பாவையன்றோ—கண்ணம்மா
 எனதுயிர் நின்னதன்றோ

என்று பேசும் பெற்றோர் கண்ணை இமை யிரண்டும் காப்பது போல் அதனைக் காக்கத் துடிக்கின்ற துடிப்பு வெளிப்பட்டு நிற்கும். சஞ்சலம் பதைப்பாகி, பதைப்பு கொட்டும் உதிரமாக மாறுவதைப் பார்க்கையில் இன்ப மயக்கத்தை விடத் துன்ப மயக்கம் விரைந்து தாக்குதலைக் காண்கிறோம். மழலை தரும் இன்பமும் துன்பமும் மயக்கமாகி மயக்கம் மிதமிஞ்சி வெறியாக மாறி, வெறியும் எல்லை மீறுகையில் ஐம்பொறியும் செயலற்றுத் திணறுவதைத்தான் பாண்டி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யன் "மயக்குறு மக்கள்" எனும் ஓரே சொல்லில் அமைக்கிருன். அதுவே பாரதி பாடலில் விரிந்து நிற்கிறது.

மனித வாழ்வு பெற்றும் பயனின்றி வீணுன தன் வாளுட்களை எண்ணி மனம் வெதும்பி "உடைப்பெருஞ் செல்வராயினும் மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறையில்லை தாம் வாழும் நாளே" எனப் புலம்புகிருன் அறிவுடைநம்பி. அவன் பெற்ற பெருஞ் செல்வம் பாரதிக்கு இல்லை. ஆனுல் மனிதர் பெற வேண்டிய பெறற்கரும் பேறு அவனுக்குண்டு அளவற்ற பொருட் செல்வத்தைத் தான் பெருவிடினும், தான் பெற்ற மக்கட்பேறு தன்னைப் பெருஞ்செல்வத்திற்கு உரிமையாக்கி, உடைப்பெருஞ் செல்வனுக மாற்றியதை

சின்னஞ்சிறு கிளியே—கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே

எனும் சொற்களில் புலப்படுத்துகிருன். மனிதனுகப் பிறந்தவன் பெற வேண்டிய பேறெல்லாம் அவன் பெயரை நிலைநாட்டும் மக்கட்பேறே என்பதனைப் பாண்டியனது உடைப்பெருஞ் செல்வத்தைவிடத் தன் செல்வம் மிஞ்சியது என்பதனை, "செல்வக் களஞ்சியமே" என்பதில் உணர்த்துகிருன். இவ்வரும்பெருஞ் செல்வமில்லையேல் அது பயக்குறை மட்டுமில்லை தீராத துன்பம் அதாவது "கலி" எனக் காட்டி, பாண்டியன் தவிப்பையெல்லாம் தன் ஒரு சொல்லில் தொகுத்துத் தருகிருன். மக்கட் செல்வம் பெற்றேர் அடையும் பேறு உலகில் வேறு எவர்க்கும் கிட்டாது என்பதனை "உலகில் ஏற்றப் புரிய வந்தாய்" என்று சொல்லிப் பூரிக்கிருன். "எனைக் கலிதீர்த்தே" என்பதில் அமைந்த ஏகாரம், "உலகில் ஏற்றம் புரிய வந்தாய்" எனும் சொற்கள், "உடைப்பெருஞ் செல்வராயினும்" "மயக்குறு மக்களை இல்லோர்க்குப் பயக்குறையில்லை தாம் வாழும் நாளே"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனும் சொற்களின் எதிரொலியாய் நின்று, அவை உணர்த்தும் பொருளுக்கு விளக்கமாய் அமைகின்றன. 'உடைப் பெருஞ் செல்வராயினும்'' என்பதினுள்ள ''உம்''மை, ஏன் பாண்டியன் அதனை அங்கு இட்டு அழுத்தம் கொடுத்தான் என்பதன் விரிவு பாரதியின் பாடலில் ''கலி தீர்த்தே ஏற்றம் புரிய'' எனும் சொற்களில் பொருந்தியிருப்பினும் இன்னும் விரிவாக

மார்பில் அணிவதற்கே உனைப்போல்
வைரமணிகள் உண்டோ ?
சீர்பெற்று வாழ்வதற்கே—உன்னைப்போல்
செல்வம் பிரிது முண்டோ

எனும் வரிகளில் துலக்கம் அடைகிறது. அறிவுடைநம்பி அழுகுமப் பொருத்திய 'உம்'மைக்கு வேறு உருவில் வடிவம் கொடுக்கிறது. உலகில் ஒருவனடையும் உயர் வாழ்வெல்லாம், சீரும் சிறப்புமெல்லாம் மக்கட் செல்வமே. அதை அடையாதார் வாழ்வு பயனற்றது என்பதனைத் தெளிவாக்கி, நமது வாழ்வின் கருவூலமே அச்செல்வம்தான் என்பதனை ''கண்ணம்மா'' எனும் சொல்லிலே தேக்கி உயர்வு பெறுகிறது பாரதியின் பாடல்.

சீர்பெற்ற வாழ்வு தான் பெறவில்லையெனத் துடித்த பாண்டியன் அமைத்த 'மயக்குறு மக்கள்' 'பயக்குறையில்லை' எனும் சொற்கள் திறனறிந்து சொலலப்பட்ட தேர்ந்த சொற்களாய், ஓர்ந்த பொருளும் விழுமிய கருத்தும் கொண்டிருப்பதால்; தம்மை வெல்லுஞ்சொல் பிறிதின்றி, தம்மைக் கையாண்ட கவிஞனுக்குப் புகழ் சேர்த்து, தாம் அமைந்த பாவினுக்கு ஏற்றம் கொடுத்து தாமும் பாரதிப் புலவன் வாயிலாக அழியாப் பெருவாழ்வு பெற்றுள்ளன. அவை அள்ள அள்ளக் குறையாத தெள்ளமுது, தெவிட்டாத தீங்கனி.

—பாரதி மனர், துர்காபூர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதிரவன் கோயில்

ரசிகன்

"எண்ணரிய மறையினொடு கின்னரர்கள்
இசைபாட உலக மேத்த
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரங்குவிப்ப வேலை யென்னும்
மண்ணுமணி முழவதிர"

எழும் இரவியின் இரதத்தின் வனப்பையும் கம்பீரத்தையும் கண்கூடாகக் காணவேண்டுமானால், கலிங்க நாட்டுக் கடற்கரையிலுள்ள கோணார்க் என்னும் 'சூரிய மூலை' க்குப் போகவேண்டும். அங்கே, கின்னரர்களும் அப்சரசுகளும் இசைபாடுவதும், நடம் நவில்வதும், விண்ணவரும் முனிவர்களும் வேதியரும் கரங் குவிப்பதும் மட்டும் அல்ல; சூரியோதயத்திலே விழிப்புற்ற மக்கள், மாக்கள் உலகம் என்ன என்ன தொழில்களிலே ஈடுபடுகின்றதோ, அத்தனையும் உயிர்ச் சிற்பங்களிலே நம் கண் முன் நிற்கின்றன. காதற் கிழத்திகளுடன் இல்லறம், அரசவை, போர், வேட்டை, கப்பலோட்டுதல், இசை—நடனம் பயிலுதல் முதலிய பல்வேறு தொழில்களும், இணையற்ற சிற்பங்களிலே நம்முன் நடைபெறுகின்றன. பாரத மக்களுக்கு அதிகமாக அறிமுகப்படுத்தப்படா விட்டாலும், உலகத்தின் பிற பாகங்களிலிருந்து மக்கள் இந்தக் கலை அற்புதத்தைக் காண வருகின்றனர்.

கோணார்க் என்னும் இடம் ஒரிஸ்ஸா மாநிலத்தில், பூரி-ஜகந்நாதத்திலிருந்து, சுமார் 22 மைல் வடகிழக்கே, கடற்கரையில் உள்ளது. நடந்தோ, அல்லது 'ஸகடோ' என்னும் கட்டை வண்டியிலோ போனால்தான் 22 மைல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நவீன சாதனங்களான கார், பஸ்ஸுகளில் போவதானால் 52 மைல் சுற்ற வேண்டும்; அதுவும், மாரிக் காலத்தில் செல்ல முடியாத பாதை.

இப்பொழுது நவீன உலகத்திலிருந்து ஒதுங்கியிருக்கும் இந்த இடம் சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் மிகப் பெருவாரியான மக்கள் வாழும் பிரதேசமாக இருந்திருக்க வேண்டும். ஜன சூனியமான இடத்தில் இத்தனை கலைச் சிறப்பைக் கொட்டியிருக்க முடியாது. அன்று பக்கத்திலே சந்திரபாகா நதி ஓடிக் கொண்டிருந்தது. அதன் சங்கமம் பெருந்துறைமுகமாக இருந்தது என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது புகார் நகரம்போல, மணல் மேடிட்டுக் கிடக்கிறது. பண்டைப் பழங்காலத்தில் மைத்திரேய வனம் என்று பெயர் பெற்று, பெரும் தவச்சாலையாகத் திகழ்ந்தது.

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் குமாரன் சாம்பன் சாபத்தினால் தன் பேரழகு கெட்டுக் குஷ்டரோகியாகி, பிறகு இந்த இடத்தில் சூரியனைக் குறித்துப் பன்னிரண்டாண்டு தவம் கிடந்து, தன் முன்னுருப் பெற்றான் என்று தல புராணம் கூறுகிறது.

இந்தியச் சிற்பக் கலையின் மிகச் சிறந்த சாதனை என்பது மட்டுமல்லாமல், சிற்பக் கலை வரலாற்றிலும் இந்தக் கோயில் முக்கிய இடம் பெறுகிறது. கி பி. 6-7-ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டிலிருந்து இரண்டு கிளர்ச்சிகள் துவங்கிய பிறகு இந்தியா முழுவதும் வியாபித்தன. ஒன்று, ஆழ்வார்கள் நாயன்மார்களில் ஆரம்பமான பக்தி வெள்ளம் வடக்கே டரவி, இறுதியில் வங்கத்திலே ஸ்ரீசைதன்ய மகாப் பிரபுவின் சம்பிரதாயமாகப் பரிணமித்தது. மற்றொன்று, அதே சமயத்தில் காஞ்சியிலும் மாமல்லபுரத்திலும் பல்லவர்கள் துவங்கிய சிற்ப சம்பிர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாயம், வடக்கு நோக்கிச் சாளுக்கியர்களுடன் வாதாபிக்குச் சென்று, பிறகு ராஷ்டிரகூடர்களின் எல்லோரா கைலாசநாதர் ஆலயத்திலும், கிழக்காகத் திரும்பிச் சந்தேலர்களின் கஜுராஹோ ஆலயங்களிலும், இன்னும் கிழக்கில் புவனேசுவர ஆலயங்களிலும் மிளிர்ந்து, கடைசியில் கிழக்குக் கடற்கரையில் கோணர்க்கில் பூர்ணத்துவம் அடைகிறது.

அங்கே, நரசிம்ம சோள கங்கதேவன் என்னும் கலிங்க அரசன் சூரிய பகவானுக்குப் பிரம்மாண்டமான ஒரு கோயில் எழுப்பினான். கட்சின் (katcin) போரில் (கி. பி. 1234) முஸ்லிம் படையெடுப்பை முறியடித்த தன் ஜய ஸ்தம்பமாக இந்தக் கோயில் கட்டப் பெற்றதாகச் சொல்கிறார்கள். ஆயிரத்திருநூறு சிற்பிகளின் பன்னிரண்டு ஆண்டு முயற்சியில், நாட்டின் பன்னிரண்டாண்டைய வருமானச் செலவில் இது கட்டப்பெற்றது. ஆதித்தர் பன்னிருவர் என்பதனால் சூரியனுக்கும் பன்னிரண்டு என்னும் எண்ணுக்கும் தொடர்பு காண்கிறது போலும்!

இப்பொழுது நிற்பது, கோயிலின் அடித்தளமும் ஜகன்மோஹன் என்னும் மகாமண்டபமும் அதற்கு முன்னால் காணும் கூரையில்லாத நடன மண்டபமுமே. அதிலும், முழுவதும் நிற்பது மகா மண்டபம் மட்டுமே. இவையே, பரிமாணத்தாலும் சிற்ப ஜாலங்களாலும் நம்மைப் பிரமிக்க வைக்கின்றன. கோயிலின் அடித்தளத்தின் நீளம் இருநூறு அடி, அகலம் நூறு அடி. இப்பொழுது நிற்கும் மகா மண்டபத்தின் உயரம் நூற்றிருபத்தெட்டு அடி. கர்ப்பக்கிருகத்துக்கு மேல் நின்றிருந்த விமானத்தின் உயரம் இருநூற்றிருபத்தேழு அடி என்று நிர்ணயிக்கப் பெற்றிருக்கிறது. பெரும்பாலும் வெண்ணிறக் கிளோரைட் என்னும் கல்லால் இவற்றைக் கட்டியிருக்கிறார்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருந்தேர் வடிவிலே அமைக்கப் பெற்றிருக்கும் இந்தக் கோயிலின் அடித்தளத்தில், இருபத்துநான்கு பெரிய சக்கரங்களைச் செதுக்கியிருக்கிறார்கள். சூரியனின் மந்திரமான காயத்திரியின் இருபத்து நான்கு எழுத்துக்களின் கணக்கை எண்ணியே இவ்விதம் அமைத்திருக்கிறார்கள். இந்தச் சக்கரம் ஒவ்வொன்றின் உயரம் பத்து அடி. இவற்றை மிக நுட்பமான சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. தேர்ச் சக்கரங்களில் காணும் அச்சு அச்சாணி முதலியவை கூட மிக இயற்கையாகக் கற் சக்கரங்களில் செதுக்கப் பெற்றிருக்கின்றன.

அடித்தளத்தின் உயரம் பதினைந்து அடி. அதன் பரப்பு அனைத்தும், இடையின்றிச் சிற்பங்களால் நிரப்பப் பெற்றிருக்கிறது. கீழே கோயிலைச் சுற்றிலும் ஒரு யானைத் தொடர் வெகு வேகமாக நடந்து போய்க் கொண்டிருக்கிறது. அதற்கு மேலே, கொடிப் பின்னல்களும் குதிரைகளும் யாளிகளும் கோயிலைச் சுற்றுகின்றன. பிறகு, உறக்கத்திலிருந்து விழிப்புற்ற மக்கள், பல்வேறு தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இதோ, அரசி சேடியர்களுடன் தன்னை அலங்கரித்துக் கொள்கிறாள். ஒரு சேடி ஏதோ ரகசியத்தை அவள் காதோடு சொல்லுகிறாள். முகபாவத்திலிருந்து, அவர்கள் பேசுவது நம் காதிலும் லேசாக விழுவது போல் தோன்றுகிறது. மறுபுறம், அரசன் அவைக்களத்திலே, ஏதோ சிக்கலான விஷயம் ஆலோசனையில் இருக்கிறது. எல்லோர் முகத்திலும் ஒரு தீவிரம் தோன்றுகிறது. மற்றொரு புறம், போருக்குப் புறப்படும் வீரன் மனைவியிடம் விடை பெறுகிறான். இடையில் குழந்தையுடன் நிற்கும் அந்த மங்கையின் முகத்தில் கவலை தேங்கி நிற்கிறது. "நின் வல்வரவு வாழ்வார்க்குரை" என்று அவள் சொல்வது போல் தோன்றுகிறது. சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கையைச் சிற்பிகள் நன்றாகச் சித்திரித்துள்ளார்கள். உழவர் உழுகின்றனர்; வியாபாரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடக்கிறது. சிலர் கப்பலிலே திரைகடல் ஓடித் திரவியம் தேடுகிறார்கள். ஆசிரியர் மாணாக்கர்களுக்குப் பாடம் கற்பிக்கிறார். ஓர் இளமங்கை நடனமாடுகிறாள். அருகில் இசைக் கருவிகள் ஒலிக்கின்றன. ஆண்-பெண் காதல் வாழ்க்கை மிக அப்பட்டமாகக் காட்டப் பெற்றிருக்கிறது. தென்னாட்டுக் கோயில்களிலே இலைமறை காயாகச் சில மிதுனச் சிற்பங்கள் உண்டு. ஆனால், இங்கே இவை மிகப் பெருவாரியாகவும், பெரிய உருவிலும் இருக்கின்றன.

மகா மண்டபத்தின் விமானம், சுவருக்கு மேல் மூன்றடுக்குள்ள பீட வடிவில் உள்ளது. ஒவ்வோர் அடுக்கின் தளத்திலும் அப்சர மடந்தையர் இசைக் கருவிகளை முழக்குகின்றனர். இந்தச் சிலைகள் உலகச் சிற்பக் கலையின் அற்புதங்களாகக் கருதப்பெறுகின்றன. இந்தத் தெய்வப் பெண்கள், நன்றாக அமைப்பான உருவில் ஏழு அடி உயரத்திற்குக் குறையாமல் நிற்கின்றனர். இளமையின் பூரிப்பும், வனப்பின் பெருமிதமும் ஒவ்வோர் அங்கத்திலும் மிளிர்கின்றன. முகத்தில் எல்லையற்ற இன்ப பாவம். சிலைகளின் முன்னால் நின்றால் கதையில் வருவதுபோல, "பெண்ணே! மலர்ச் செண்டைத் தா" என்று கேட்கத் தோன்றுகிறது. ஆடையாபரணங்களின் அழகும், அவர்கள் நிற்கும் ஒயிலும் நம்மைச் சொக்க வைக்கின்றன.

இதற்குப் பின்னால், கர்ப்பக் கிருகமும், விமானமும் நின்றிருந்திருக்கின்றன. கர்ப்பக் கிருகத்தின் உள்ளே மூர்த்தி இல்லை. பூரி ஆலயத்தில் காணும் சூரிய நாராயண விக்கிரகந்தான இங்கே இருந்ததாகச் சொல்கிறார்கள். ஆனால் அற்புத வேலைப்பாடு அமைந்த விக்கிரகம் நின்ற பீடம் மட்டும் இருக்கிறது. கர்ப்பக் கிருகத்தின் வெளியே சூரிய பகவானின் மூன்று கம்பீர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மான சிலைகள், நின்ற கோலத்தில் இரண்டும், குதிரையில் வரும் கோலத்தில் ஒன்றுமாகக் காண்கின்றன. அணிந்திருக்கும் ஆடையின் பூவேலை முருகன் 'மருங்கில் கட்டிய குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்' துகிலை நினைவூட்டுகிறது.

கர்ப்பக்கிருகத்தின் மேல் நின்றிருந்த விமானம் எவ்வாறு விழுந்தது என்பதைக் குறித்துப் பல ஊகங்கள் உள்ளன. ஒன்று, விமானம் தன் கனம் தாங்காமல் விழுந்துவிட்டது என்பது. விமானம் முன்னெச்சரிக்கையுடன் மிக உறுதியாகக் கட்டப்பெற்றிருந்தது என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. அந்தக் காலத்திலேயே பெரிய எஃகு உத்தரங்கள் இந்தக் கட்டடத்தில் உபயோகிக்கப் பெற்றிருக்கின்றன. துரு ஏறாத கலவை எஃகினாலான இவை புராதன இந்தியரின் சிறந்த உலோகப் பொருள் அறிவிற்கு எடுத்துக் காட்டாக இருக்கின்றன.

கல்லாலான தேர்ச் சக்கரம்

மற்றோர் ஊகம்: விமானத்தின் மேலே அமலகத்தில் ஒரு பெரும் காந்தக் கல் பொருத்தப்பட்டிருந்ததாகவும், கடலில் செல்லும் கப்பல்களை இது ஆகர்ஷித்து அவற்றைச் சிதைத்து வந்ததாகவும், [illegible]த்தார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோயிலைத் தாக்கி விமானத்தை இடித்ததாகவும் சொல்லு கிருர்கள்.

மூன்ருவதாக 'காலாபஹாட்' என்னும் முஸ்லீம் படைத் தலைவன் இந்துவாகப் பிறந்து மதம் மாறியவன், ஒரிஸ்ஸாக் கோயில்கள் பலவற்றை பாழாக்கிய வெறியன், கோணுர்க் கோயிலையும் இடித்தான் என்று சொல் கிருர்கள். எவ்வாருயினும் கலையுலகின் மிகச் சிறந்த ஒரு சாதனை நஷ்டமாயிற்று.

மகாமண்டபத்தின் பிரதான வாயில் கொடி வரிசை களாலும் நாகப் பின்னல்களாலும் அலங்கரிக்கப் பெற் றிருக்கிறது. அதற்கு மேல், நவக்கிரங்களின் மிகப் பெரிய சிலைகள் பொருத்தப் பெற்றிருந்தன. கீழே விழுந்து கிடந்த இவற்றைக் கப்பலேற்றி லண்டன் பிரிட்டிஷ் காட்சிச் சாலைக்கு எடுத்துச் செல்லச் சிலர் முயற்சி செய்தனர். ஆனுல் அவற்றைச் சில அடி தூரமே தூக்கிச் செல்ல முடிந்தது. பிறகு துண்டு செய்து அப்புறப்படுத்தப் பார்த்தனர். அதுவும் இயல வில்லை. இப்பொழுது அங்கே ஒரு சிறு கோயிலை அமைத்து, இந்த விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து பூசை முதலியனவற்றுக்கும் இந்திய அரசாங்கத்தினர் ஏற்பாடு செய்திருக்கிருர்கள்

மண்டபத்தின் முன்ஞல் இரதத்தை இழுத்துச் செல்லும் ஏழு குதிரைகள் பூட்டப் பெற்றிருக்கின்றன. இவற்றுக்கும் முன்ஞல் ஓர் அருண ஸ்தம்பம் நின்றிருந் தது. இப்பொழுது அது பூரி ஆலயத்தின் வாயிலில் நிற்கிறது.

கோயிலுக்கு முன்ஞல் 'தூணிலழகியதாய்' ஒரு நடன மந்திரம் நிற்கிறது அதற்குக் கூரை இல்லை. இங்கே அழகிய நடனச் சிற்பங்கள் பல இருக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோயிலுக்குச் சற்று ஒதுக்குப்புறமாக சாயா தேவி யின் அழகிய சிறு கோவில் இருக்கிறது. முற்றத்தில் கோயிலின் இரு புறத்திலும் போர் யானையின் சிலை ஒன்றும், போர்க் குதிரையின் சிலை ஒன்றும் நிற்கின்றன. பின்னது, இந்தியத் தபால் பிலையில் இடம் பெற் றிருந்தது. எல்லாவற்றையும் சுற்றி, 857 அடி நீளமும், 540 அடி அகலமும் கொண்ட ஒரு மதில் எழுப்பப் பெற்றிருக்கிறது.

இந்தக் கலை அற்புதத்தைக் காண்பது மறக்க முடியாத அனுபவம்.

"கலையின் நுட்பங்களை அறிந்தவர்களும் எளிதில் திருப்தி அடையாதவர்களுங்கூட இதைக் காணும் பொழுது வியப்பிலும் திகைப்பிலும ஆழ்கிருர்கள" என்று, கி. பி. 16-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த அக்பர் பாதுஷாவின் அமைச்சர் அபுல் பஸல் கூறுகிருர். விஷ்ணு மகாராணுவும்—ஆம், அதுதான் இந்தப் பெரும் கோயிலை எழுப்பிய மகாசிற்பியின் பெயர்—அவரது சக சிற்பி களும் ஊனுடல் படைத்த மனித உருவங்களைக் கொண்டு, இந்தச் சிற்பங்களைச் சமைக்கவில்லை; தெய்விக உருவங் களையே தம் மனக்கண் முன் கண்டு கல்லில் உருக் கொடுத்திருக்க வேண்டும். பல்லாயிரக் கணக்கான சிற் பங்கள் சேர்ந்திருந்த போதிலும், கோயிலின் முழு அழகு சற்றும் கெடவில்லை. ஒவ்வொன்றும் அந்தந்த இடத்தில் பொருத்தமாக அமைந்து, முழுத் தோற்றத்தின் அழகை உயர்த்துகிறது.

பல நூற்ருண்டுகளுக்கு முன்பு அந்த இடத்தில் மங்கல வாத்திய முழக்கமும், நடனப் பெண்களின் சிலம்பொலியும், குரலிசையும், வேத கோஷமும், மக்கள் கூட்டத்தின் குதூகல சப்தமும் ஒன்றையொன்று முந்திக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டு ஒலித்திருக்க வேண்டும். ஆனால் இன்று அங்கு மௌனம் குடிகொண்டிருக்கிறது. எனினும், இன்றும் ஆண்டுக்கு ஒரு முறை, தை மாதப் பௌர்ணமியன்று, அங்கு மக்கள் திரளாகக் கூடுகிறார்கள். வழி வழி வந்த ஏதோ ஒரு சக்தியினால் உந்தப்பட்டு, அந்தப் பாழடைந்த கோயிலிலே அவர்கள் வழிபடுகிறார்கள். வெறும் நாட்களில் கூட நாம் சற்று மனக்கண்ணைத் திறந்தால் அண்மையில் இருக்கும் கடலின் கம்பீரமான வேத கீதம் நம் காதில் விழும்.

— கலைமகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரிதினும் பெரிது கேள்

வெ. பத்மநாபன்

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து" என்பது குறள்.

உயர்ந்தவற்றை எண்ண வேண்டும். அது கைகூடா விட்டாலும் அதனையே எண்ண வேண்டும். ஏனென்றால் எண்ணுகின்ற எண்ணம் உயர்ந்ததாய் இருந்தால் செய்கின்ற செயலும் உயர்ந்ததாய் இருக்கும். அதனால்தான் உயர்ந்த பொருள்களைப் பார்க்கும்போது ஒரு பிரமிப்பு உண்டாகிறது. ஏடு பயின்று நாடு காக்கின்ற நல்லவர்களை ஏன் போற்றுகிறோம்? அவர்களிடம் இருக்கின்ற உயர்வான பண்பிலே அவர்கள் ஈடுபட்டதன் விளைவால்தானே!

'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்ற தொடரும் இதனையே விளக்குகிறது. உயர்வு மக்கள் பண்பிலே வளர வேண்டும். அப்படி வளர வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தினை உள்ளத்திலே கொண்டு வள்ளுவரிடம் சென்று விளக்கம் கேட்டால் 'பெரிதினும் பெரிது கேள்' என்பார்.

பெரியது எது? மலை பெரியது. கடல் பெரியது. இவ்வுலகம் பெரியது. இவற்றையெல்லாம் ஆட்டிப் படைக்கின்ற இறைவன் பெரியவன். இவற்றைப் போன்று பெரியவற்றை வள்ளுவர் விண்டுரைக்கிறார்.

'நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது.'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வைவிடப் பெரியதாகும்.

அடக்கமுடைமை என்ற அதிகாரத்தில் உள்ள குறள் இது. அடக்கம் ஒருவனை அமரத் தன்மைக்கு உயர்த்தி விடும். ஐம்பொறிகளை அடக்கி ஆள வேண்டும். தேவர் நிலைக்கு உயர்த்திவிடுகின்ற இப்பண்பு மலையினைவிடப் பெரியதுதான்.

கடல் பெரியது, கரை காண இயலாதது. ஆழம் கண்டு அறிய இயலாதது. அதனால்தான் மிகப் படித்த பண்டிதர்களைக் கடலுக்கு உவமை காட்டிச் சொல்லுகிறார்கள். ஆனால் கடலினைவிடப் பெரியதை வள்ளுவர் கூறுகிறார்.

'பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது'

இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவன் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதுதானே!

கடலைவிடப் பெரியது ஞாலம். ஞாலத்தைவிட உயர்வுடையது எது?

செந்நாப் போதர் செம்மாந்த உள்ளத்தோடு கூறுகிறார்.

'காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது'

உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறிதளவுடையதாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் உலகத்தைவிட அது மிகப் பெரியதாகும்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மலை, கடல், ஞாலம் இவை உயர்ந்தவைகளே. அடக்கம், செய்ந்நன்றி அறிதல், காலத்தினால் செய்யும் உதவி போன்ற மனிதப் பண்புகள் இவற்றினை விஞ்சி நிற்கின்றன. பண்புடையார் பட்டுண்டு உலகத்தைப் படைக்க இப் பண்புகள் அவனுக்கு உதவுகின்றன.

'பெரிதினும் பெரிது கேள்' என்ற தொடர் மனிதனின் உயர்ந்த எண்ணத்தினை வளர்க்கும். பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது. தொண்டரின் பெருமையை எல்லாவற்றுக்கும் உயர்வாகக் கூறும் பாடல் இது

'பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைத்தல்
நான்முகனோ திருமாலிற் தோனறியோன்
திருமாலோ அலைகடலில் துயின்றோன்
அலைகடலோ குறுமுனி கையில் அடக்கம்
குறுமுனியோ கும்பத்தில் தோன்றியோன்
கும்பமோ புவியில் ஒருபிடி மண்
புவியோ ஆதிசேஷன் ஒரு தலைப்பாரம்
ஆதிசேஷனோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையவளோ ருத்ரரின் ஒருபாதி
ருத்ரரோ தொண்டர்தம் அடக்கம்
தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் அரிதே'

தொண்டர்தம் அடக்கம் அவனுடைய உயர்பண்பாக பெரிதினும் பெரிய பண்பாக அமைகிறது. இப்பண்புகள் இவ்வுலக சமுதாயத்தை வாழ்விக்கும்.

—அருள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பூமியின் கதை

மு. ராமசுவாமி

விஞ்ஞானம் மனித வர்க்கத்துக்கு நன்மை பயக்கிறதா? அன்றி தீங்கிழைக்கிறதா? என்ற சந்தேகம் இன்று ஒவ்வொருவர் உள்ளத்தும் எழுகிறது. விஞ்ஞானத்தைப் பற்றிய அறிவு இதுவரை இல்லாதவர்களும்கூட திடீரென அணுகுண்டு ஹைட்ரஜன் குண்டு என்று பேசுகிறார்கள். அவர்களில் அநேகர் விஞ்ஞானத்தைப் பழிக்கவும் செய்கிறார்கள். உண்மையில் விஞ்ஞானம் நல்லதுமல்ல, கெட்டதுமல்ல. அந்த அறிவை உபயோகிக்கும் மனிதன் நல்லவனோ, கெட்டவனோ— அவனுடைய அக்குணங்களுக்குத் தக்கபடியே விஞ்ஞான சக்தி உபயோகிக்கப்படுகிறது.

விஞ்ஞானத்தின் ஒரு கவர்ச்சி மிகுந்த பகுதி வான நூல். வான நூல் மனிதனின் விஞ்ஞானப் பாதையில் முதல் அடி. எந்த முதலிரவிலே பண்டைய மனிதன் தன் தலைதூக்கி வானில் மின்னும் தாரகைகளைக் கண்டானோ, அன்றிலிருந்து அத்தாரகைகள் பல்லாயிரக் கணக்கான மக்களை வசீகரித்துக் கொண்டும், பிரபஞ்சத்தின் அமைப்பு, சரித்திரம், இவற்றைப் பற்றிச் சிந்தனை செய்யும்படி அவர்களைத் தூண்டிக் கொண்டும் இருக்கின்றன.

சிற்சில சமயங்களில் நம்மில் யாவரும் நாம் வசிக்கும் பூமி, வாழ்க்கை (Life) இவைகளைப் புற்றியும் யோசித்திருக்கிறோம். இவ் வினாக்களுக்கு விடை காண எண்ணித் தங்கள் வாழ்நாட்கள் முழுதும் அர்ப்பணம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்த பெரிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்த சில விஷயங்களைக் கூறுகிறேன்.

பூமி பிறந்தது எவ்வாறு? இதற்கு முன்னதாக மற்றொரு கேள்வியும் எழுகிறது. பிரபஞ்சம் பிறந்தது எவ்வாறு? ஆண்டவன் படைத்தான்—ஆம், அதை மறுக்க முடியாது. விஞ்ஞானத்தின் ஆரம்பத்தில் காத்துக் கொண்டிருக்கும் கேள்விக்கு அதுவே பதில். ஆனால் இன்று நாம் காணும் விதமாக ஆண்டவன் உலகைப் படைத்துவிட்டானா? அவன் ஏதோ சிற்சில குணங்களுடன் பிரபஞ்சத்தைப் படைத்தான். பின் அக்குணங்கள் காரணமாக நாம் இன்று காணும் நிலையைப் பிரபஞ்சம் அடைந்திருக்கிறது. இம்மாறுதலை நாம் விஞ்ஞான மூலமாக அறிய மார்க்கம் இருக்கிறது.

ஜெர்மானிய அறிஞர் காண்ட் (Kant) என்பவரால் கொடுக்கப்பட்ட பதில் 19-ம் நூற்றாண்டில் லா பிளாஸ் (La Place) என்னும் பிரெஞ்சு அறிஞரால் விளக்கப்பட்டது கணித ரூபமாக. நெப்டியூன் (Neptune) என்ற கிரகத்தின் மார்க்கத்தினுள் (Orbit) சூரியன் வரை பொருள் மிகக் குறைந்த வாயுப்பொருளாக ஒரு புகை போன்று இட்டிலி வடிவத்துடன் இருந்தது. அது சுழன்று கொண்டேயிருந்தது. அதன் விளிம்பிலிருந்து ஒரு வளையம் தனியாகியது. பின் இதிலுள்ள பொருளெல்லாம் ஆகர்ஷணத்தால் ஒன்றாகி ஒரு கிரஹம் ஆகிடது. எஞ்சிய புகையிலிருந்து மற்றொரு வளையம்—அதிலிருந்து மற்றொரு கிரஹம்.

இவ்வாறே நாம் காணும் ஒன்பது கிரஹங்களுடன் கூடிய சூரிய மண்டலம் உண்டாயிற்று. இதுவே அவர் பதில்.

ஆனால் கணித நிபுணர்கள் இதில் தவறு கண்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டார்கள். சுழலும் புகைத்தட்டிலிருந்து வளையங்கள் உண்டாகா. கணக்குப்படி ஒரு கோள வடிவமான புகை முதலில் தட்டையாக ஆகும். பின் ஏற்ற—வற்றம் (Tides) காரணமாக பற்பல நெருங்கிய வஸ்துக்கள் உண்டாகி அப்புகையும் ஒரு சுழற்வடிவை அடையும் என்பதே. இக்கணக்கர்களின் வாதத்தை மெய்ப்பிக்க வந்தது லா பிளாஸின் மரணத்திற்குப் பிறகு லார்ட் ரோஸே (Lord Rosse) கண்டுபிடித்த சுழற் புகையும் அதன் பின் கண்டுபிடிக்கப்பட்ட அநேக சுழற் புகைகளுமாகும். (Spiral Nebulae)

சுழற் புகைகள் என்றால் என்ன? வானத்திலே நட்சத்திரக் கூட்டங்களைப் பார்க்கிறோம். இந்த நட்சத்திரக் கூட்டங்களினிடையே ஆகாய கங்கை (Milky Way) என்று சொல்லப்படும் ஒரு ஒளிப்பரப்பு இருக்கிறது. இது புனர்பூச நட்சத்திரக் கூட்டத்தின் ஊடேயும் திருவோணத்தின் ஊடேயும் வடக்கிலிருந்து தெற்கு வரை ஆகாயத்துக்கு ஒரு ஒட்டியாணம்போல் அமைந்திருக்கிறது.

இந்த ஆகாய கங்கையை ஒரு வண்டிச் சக்கரத்துக்கு ஒப்பிடலாம். நாமிருப்பது இதனுட்பரப்பில் கம்பிகள் இருக்கும் பிரதேசத்தின் அருகிலே. கம்பிகளின் நீட்டுப் போக்குத் திசையிலே நோக்கினால் மரக்கட்டை சுற்றிலும், ஆகாய கங்கையைப்போலத் தோன்றும். கம்பிகளுக்கு நேர்கோணத் திக்கில் ஒளிப்பரப்பு கிடையாது. ஆனால் மற்றத் தாரகைகள் உண்டு.

சந்திரன் பூமியைச் சுற்றுகிறது. பூமியும், சந்திரனும் இதர கிரகங்களும் சூரியனைச் சுற்றுகின்றன. இச் சூரிய மண்டலம் ஆகாய கங்கையின் மையப் புள்ளிக்குச் சிறிது தூரத்தில் ஒரு புள்ளியை மையமாகக் கொண்டு சுற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறது. சூரிய மண்டலம், நாம் ஆகாயத்தில் காணும் நட்சத்திரங்கள், ஆகாய கங்கை இவையும் சேர்ந்து ஒரு சுழற்புகை.

இம்மாதிரி லட்சக் கணக்கான சுழற்புகைகள் ஓடி விளையாடும் இடம் இப்பிரபஞ்சம். இச்சுழற் புகைகளில் அணுக்களின் நெருக்கம் (Density) பிரபஞ்சத்தின் ஆதி நெருக்கத்தைவிட அதிகம். இச் சுழற் புகைகளில் இன்னும் நெருக்கம் கொண்ட திட்டுகள் தோன்றின. இவைகள் நட்சத்திரங்கள். இப்படி ஆகாய கங்கை என்ற சுழற் புகையில் பிறந்தது சூரியன் என்ற நட்சத்திரம். சூரியனும் மற்ற தாரகைகளும் தாங்கள் பிறந்த சுழற் புகைக்குப் புறம்பே செல்லாமல் அதனுள்ளே ஓடி அலைந்து வந்தன. இந்நிலையடைவதற்குள் பிரபஞ்சம் பல்லாயிரக் கோடிக்கணக்கான வயதடைந்து விட்டது.

இவ்வாறு கண்ட சுழற்புகைகள் அளவில் மிகப் பெரியன. ஆனல் பூமியும் இவ்வாறே பிறந்ததாகக் கருத, நமக்கு இது வரை சிறிய அளவில் இந்தக் காரியம் நடந்ததாக வானில் அறிகுறி எதுவும் கிடைக்கவில்லை.

ரைட் (Wright), காண்ட் (Kant) லா பிளேஸ் (La Place) இவர்களின் அறிவின் பயனாக வந்த இப் பதிலின் அடிப்படை பிரபஞ்சமும் அவ்வாறே பூமியும் வாயு பதார்த்தமான புகையிலிருந்து உண்டானது என்பது. இதற்கு எதிரிடையாகப் பூமி உண்டான விதம் கன பதார்த்தமான எரி நட்சத்திரங்களின் சேர்க்கையால் என்பது நார்மன் லாக்கியர் என்பவரது சித்தாந்தம் (Norman Lockyer's Meteoritic Theory). இதற்கும் வானத்தில் காணும் காட்சியிலிருந்து சான்று கிடைக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எரி நட்சத்திரம் (Meteor) நாம் யாவரும் கண்டிருப்போம். பிரபஞ்ச வெளியில் சுற்றியலையும் சிறு கற்கள் இவை. பூமியின் ஆகர்ஷணத்தால் சிற்சில சமயம் இவை விழ்ந்து, பூமியைச் சுற்றி இருக்கும் காற்றுடன் உரைந்து எரிகின்றன. லாக்கியரின் சித்தாந்தப் ஏதோ ஒரு காலத்தில் இரு நட்சத்திரங்கள் முட்டிக்கொண்டு சிதறுண்டு பொடிப் பொடிக் கற்களாகி ஒரு புகை உண்டாயிற்று. அது பின் சுழற் புகையாகி, பின் புகை நடுவிற் ஒரு பெரிய பாகமும் (Sun), அதைச் சுற்றியலையும் சிறு கற்கள் ஏதாவது ஒரு பெரிய கல்லுடன் சேர்ந்து கிரகங்களாகவும் ஆயின. இச் சித்தாந்தத்தின் சான்றுகள் நிறமாலை காட்டி (Spectroscope) யினுல் பார்த்தால் சுழற் புகைகள் வாயு கன பதார்த்தங்களாலானவை என்று காண்பது ஒன்று—சனியைச் சுற்றிச் சுழலும் வளையங்கள் இரண்டு; இவை சேர்ந்து சனியின் ஓர் உபக்கிரஹமாக மாருமல் இருப்பதற்குக் காரணம் அநேகமாக இச்சிறு கற்களை ஆகர்ஷித்து, சனியின் ஆகர்ஷணத்தைவிடப் பலமாகச் சேர்த்துப்பிடிக்க வேண்டிய பெரிய அளவு கொண்ட கல் இல்லாததேயாம்.

மூன்றுவதாக இருக்கும் சித்தாந்தம் மோல்டன், சேம்பர்லேன் (Moulton and Chamberlain) என்ற இருவரின் கூற்று. அதன்படி சூரியன் அருகே முன்னெரு காலத்தில் மற்ருெரு நட்சத்திரம் வர நேர்ந்தது. அதன் காரணமாக எழுந்த பொருள் அலையாலது ஒரு சுருட்டு வடிவமாக இருந்தது. பின் அது சுருங்கிப் பல கிரங்களாயின.

பூமிக்குக் கொள்ளுத் தாத்தா பிரபஞ்சம்: தாத்தா ஆகாய கங்கை என்ற சுழற் புகை; அப்பா சூரியன், ஆடிப ஓடும் இந்த நட்சத்திரக் கூட்டத்தினிடையே மிக அருமையானதொரு சந்திப்பு ஏற்பட்டது. சூரியனுக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்த மற்றொரு தாரகைக்கும் பிறந்த குழந்தைகள் ஒன்பது—புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரானஸ், நெப்டியூன், ப்ளூடோ.

இனி இக்குழந்தைகள் பிறந்த விதத்தைக் கவனிப்போம். சுழலும் அக்கினிக் குழம்பான சூரியன்—இதன் அருகே ஓடி வருகிறது மற்றொரு தாரகை,

பௌர்ணமி இரவு சமுத்திரத்தில் ஏற்ற—வற்ற அலை (Tidal wave) போல் சூரியனின் வெளிப் பரப்பில் ஒரு அலை எழுந்து, லக்ஷக் கணக்கான மைல்கள் உயர்ந்து அடி சுருங்கிற்று. இந்த அலையினால் குலோப்ஜான் உருவுள்ள ஒரு குழந்தையை உண்டாக்கிவிட்டு ஓடிவிட்டது அந்தத் தாரகை. சூரியனின் சுழற்சி காரணமாக இக்குழந்தை அப்பாவைச் சுற்றி வந்துகொண்டிருந்தது. அக்கினிக் குழம்பான குழந்தை குளிர்ந்து சுருங்கி ஒன்பது திட்டுக்களாக தனிக் குழந்தைகளாகப் பரிணமித்தது.

ஒரு முக்கியமான விஷயம். குலோப்ஜான் உருவான குழந்தை ஒன்பது குழந்தைகளாக, அவற்றின் பருமன் சூரியனுக்கருகே சிறியதாகவும் நடுவில் பெரியதாகவும், தூரத்தில் மறுபடி சிறியதாகவும் இருக்க வேண்டும். அப்படியே உண்மையில் இருக்கவும் செய்கிறது. புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன் என்று பருமன் அதிகரிக்கிறது. வியாழன், சனி, நெப்டியூன், ப்ளூடோ எனப் பின்னர் குறைகிறது.

சூரிய மண்டலத்தை நாம் சற்றுக் கூர்ந்து நோக்குவோம். எல்லா கிரஹங்களும் ஒரு திசையாகச் சூரியனைச் சுற்றி வருகின்றன. உப கிரஹங்கள் அவ்வாறே கிரஹங்களைச் சுற்றி வருகின்றன. (ஒன்று அல்லது இரண்டு தவிர) மிகச் சிறிய உபக் கிரஹத்திலிருந்து மிகப் பெரிய உப கிரஹம் வரை ... எல்லா அளவுகளும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருக்கின்றன. சூரிய மண்டலம் ஒரே காரணத்தால் உண்டானலன்றி இம்மாதிரிக் குணம் அதன் பல பொருள்களுக்கும் இருப்பது அசாத்தியம்.

ஆனால் இந்த விஷயங்களைக் கொண்டு மேற்கூறிய மூன்று சித்தாந்தங்களில் எது மிக நல்லது என்று முடிவு கூற இயலாது. மூன்றும் மூன்று பதில்கள். இவைகள் உண்மை என்று நிரூபிக்கப்படவில்லை. ஆனால் இதுவரை மனிதனுக்குத் தெரிந்த வான சாத்திரம் முழுவதையும் கொண்டு மனிதன் கண்ட மிகச் சிறந்த விடைகள் இவை.

பூமியும் மற்ற கிரகங்களும் சூரியனிலிருந்து எவ்வாறு உண்டாயின என்று கண்டோம். இக்கிரகங்கள் உண்டான சமயத்தில் இவைகள் சூரியனைப் போலவே வாயு பதார்த்தங்களால் ஆகியவையாக இருந்தன. அந்நிலையிலிருந்து இப்பொழுது இருக்கும் கன பதார்த்த நிலையை பூமி எவ்வாறு அடைந்தது? பூமிக்கு ஒரு குழந்தை (சந்திரன்) எவ்வாறு பிறந்தது? மற்ற கிரகங்களுக்கும் சந்திரனைப் போல் உபகிரகங்கள் இருக்கின்றனவா?—என்ற சில கேள்விகளுக்கு விடையளிக்க இப்பொழுது முயற்சிக்கிறேன்.

சூரியனிடமிருந்து மிக அதிகமான ஒளியும்சூடும் இடைவிடாமல் வெளியாகிக் கொண்டேயிருக்கிறது. ஆனால் அது குளிர்ந்துவிடக் காணோம். இதற்குக் காரணம் அதன் உள்ளே நடைபெறும் அணு மாறுதல்களால் உண்டாகும் ஒளியும் சூடுமே. ஆனால் இம் மாறுதல்கள் பூமியிலும் மற்ற கிரகங்களிலும் நடைபெறவில்லை. ஆகவே இக்கிரகங்கள் தங்கள் சூட்டையும் ஒளியையும் கொஞ்சம் கொஞ்சம் இழந்து வந்தன. வாயுப் பொருள் திரவப் பதார்த்தமாகிப் பின் கனப் பொருள் ஆயிற்று.

பூமியும் மற்ற கிரகங்களும் இப்பொழுது சூரியனைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுற்றிச் செல்லும் பாதைகள் அநேகமாக வட்ட வடிவமானவை ஆனால் அவை உண்டான வேளை அப்பாதைகள் மிக நீண்ட சாய்வளையங்களாக இருந்தன. ஆகவே வாயுப் பொருளால் ஆன கிரகங்கள் சில சமயங்களில் சூரியனின் மிக அருகே வர நேர்ந்தன. அச் சமயத்தில் சூரியனின் ஆகர்ஷணத்தால் இக்கிரகங்களின் உடம்பிலிருந்து ஏற்ற—வற்ற அலைகள் (Tidal waves) உண்டாகி, (பூமியும் கிரகங்களும் உண்டான மாதிரியே) தனிப்பட்டு பின் உப கிரகங்களாக மாறின. கணித நிபுணர்கள் கணக்கிட்டுப் பார்த்ததில் இந்த முறையில் உண்டாகும் கிரகங்களோ உப கிரகங்களோ அதனதன் தாயின் நிறையில் ஒரு மிகச் சிறிய நிறையைக் கொண்டதாகவே இருக்க வேண்டும் என்று கண்டார்கள். இது கிரகங்களின் விஷயத்திலும் சந்திரனைத் தவிர மற்ற உப கிரகங்களின் விஷயத்திலும் சரியாக இருக்கிறது.

$\left(\frac{\text{உபக்கிரகம்}}{\text{கிரகம்}} \right.$ நிறை விகிதம் $\frac{1}{4000}$ யிலிருந்து $\frac{1}{16,000\,000}$ வரை பரந்திருக்கிறது. $\frac{\text{கிரகம்}}{\text{சூரியன}}$ நிறை விகிதம் வியாழனுக்கு $\frac{1}{1000}$ யிலிருந்து புதனுக்கு $\frac{1}{8,00.000}$ வரை பரந்தது. $\left. \right)$

ஆனால் சந்திரன் பூமியின் நிறையில் 81-ல் 1 பங்கு $\left(\frac{\text{சந்திரன்}}{\text{பூமி}} \text{ நிறை விகிதம்} = \frac{1}{81} \right)$ ஆகவே சந்திரன் பூமியிலிருந்து உண்டானது. மற்ற உப கிரகங்களைப் போல் அல்ல என்ற ஒரு முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. இது நிற்க.

பூமிக்கு உபக்கிரகம் சந்திரன் என்பது நாம் எல்லோரும் அறிந்தது. ஆனால் மற்ற கிரகங்களுக்கும் உபக்கிரகங்கள் உண்டென்பது அநேகருக்குத் தெரியாது. அதற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முக்கியமான காரணம் இந்த உபக்கிரகங்கள் நம் கண்களுக்குத் தென்பட மாட்டா. தொலைநோக்கியின் உதவி கொண்டே இவைகளை நாம் காண முடியும். சில கிரகங்களுக்கு ஒன்றும், மற்றும் சிலவற்றிற்கு அகற்கு மேற்பட்ட உப கிரகங்களும் உண்டு. பூமிக்கு 1ம், செவ்வாய்க்கு 2ம், வியாழனுக்கு 9ம், சனிக்கு 9ம், யுரானஸுக்கு 4ம் நெப்டியூனுக்கு ஒன்றுமாக உப கிரகங்கள் இருக்கின்றன.

இவை தவிர சனியைச் சுற்றி சில வளையங்கள் இருக்கின்றன. இவ்வளையங்களினால் சனியின் ஒளி மிக அதிகரித்துத் தோன்றுகிறது இவ்வளையங்கள் வேகமாக இடைவிடாமல் சுழலும் அநேக பொருள் துணுக்குகளால் ஆனவை. இந்த மாதிரியான அதிசய வளையங்கள் எவ்வாறு உண்டாயின என்று கவனித்ததில் அதற்கு ஒரு காரணம் கண்டிருக்கிறார்கள் விஞ்ஞானிகள். கிரகங்களோ உப கிரகங்களோ கனப் பொருளான பின் மிகப் பெரிய மற்றொரு பொருளின் ஆகர்ஷணத்தினால் உடைக்கப்பட்டுச் சிதறி உண்டான துண்டுகளே இவை என்பது அந்தச் சித்தாந்தம். இக்கணக்குப்படி பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் பின் சந்திரனும் பூமியின் அருகே மெல்ல மெல்ல வந்து சேருமென்றும், அப்பொழுது இதே மாதிரி சந்திரன் உடைந்து சிதறி பூமியைச் சுற்றி சில வளையங்களாக பரிணமிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உபகிரகங்களைப் போலவே கிரகங்களும் சிதறி வளையங்கள் ஏற்படக் கூடுமென்றும் அப்படி ஒரு வேளை ஒரு கிரகம் சிதறிப் போய் உண்டான வளையம் ஒன்று இருக்கிறது என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கிரகங்கள் சூரியனிலிருந்து இருக்கும் தூரங்களைச் சொல்லும் ஒரு கணித விதி இருக்கிறது. இதற்கு Bode's Law என்று பெயர். இதன்படி செவ்வாய்க்கும் வியாழ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

னுக்கும் இடையே ஒரு கிரகம் இருக்க வேண்டும். ஆனால் வான சாஸ்திரிகள் அவ்விடத்தை உற்றுக் கவனித்ததில் அங்கே ஒரு கிரகத்திற்குப் பதிலாக அநேக சிறிய சிறிய பொருள்களை சூரியனைச் சுற்றி வளையமாக செவ்வாய்க்கும் வியாழனுக்கும் நடுவே கண்டார்கள். இவைகளுக்கு Asteroids என்று பெயரிட்டார்கள். இவைகள் ஒளியற்று ஓடிக்கொண்டு இருக்கும் பெரிய பாறைகளும் மலைகளுமே. இவ்வாறு 2000 பாறைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. முதல் முதலாவதாக Ceresor என்னும் பாறை 1801ல் Piazzi என்னும் இத்தாலிய வான சாஸ்திரியால் கண்டுபிடிக்கப்பட்டது. இப்பாறைகளில் ஒன்றாகிய Eros என்னும் பாறை பூமிக்கருகே (சுமார் $1\frac{1}{2}$ கோடி மைல்) வந்த பொழுது அநேக கணக்குகள் எடுத்து அதன் பயனாகவே பூமிக்கும் சூரியனுக்கும் இடையேஉள்ள தூரம் 93,000,000 மைல் என்று கண்டார்கள்.

உப கிரகங்கள் உண்டாவது எவ்வாறென்றும் அவை உடைந்து வளையங்கள் எவ்வாறு உண்டாகலாம் என்றும் கண்டோம். ஆனால் முன்னே சொன்னபடி சந்திரன் பிறந்தது இவ்வாறல்ல.

பூமி வாயுப் பதார்த்தமாக இருந்தபொழுது சந்திரன் உண்டாகவில்லை. அது குளிர்ந்து திரவ பதார்த்தம் ஆன பின்னே பூமியிலிருந்து ஒரு பெரிய திரவத் துளி தெறித்து எழுந்தது. அதுவே சந்திரன் இதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. முதலாவதாக, ஒரு பொருள் வாயு அல்லது திரவ நிலையில் இருக்கும்பொழுது கனமான அணுக்கள் அடியே செல்லும். லேசான அணுக்கள் மேலே எழும். பூமியிலும் இவ்வாறே நடந்தது. பல காலம் ஆராய்ச்சியிலிருந்து கண்டது என்னவென்றால் பூமியின் நடுவில் இருப்பது உருகிய இருப்புக்குழம்பு (கராதர திடத்வம் Density10) அதற்கு மேல் Plastic. எரிமலை பாறைக் குழம்பு (Basalt),

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதன்மேல் கனப்பொருளான கருங்கல்(Granite) கருங்கல் சுமார் 40 மைல் ஆழம் வரை செல்லுகிறது. மகா சமுத்திரங்களின் அடியில் இருப்பது எரிமலைப் பாறை. அதன் மேல் கருங்கல் கிடையாது.

பூமி குளிர்ந்து திரவப் பொருளான பின் இவ்வாறே மேலே கருங்கல், பிறகு கீழே படிப்படியாக உருகிய எரிமலைப் பாறையும் இரும்புக் குழம்பும் இருந்தன. மேலாக உள்ளது முதலில் குளிரும். அவ்வாறே கருங்கல் கனப் பொருளாக மாறிக் கொண்டிருந்த வேளை, சந்திரன் பிறந்தது. திரவ ரூபமான பூமியின் மேல் சூரியனின் ஆகர்ஷணத்தால் ஏற்ற-வற்ற அலைகள் (Tidal waves) உண்டாகிக் கொண்டிருந்தன. பூமிக்கும் தனக்காகவே ஒரு ஆட்டம் (Vibration) இருந்தது. இவ்விரண்டு சக்திகளும் ஒரே முகமாக நேர்ப்பட்ட சமயம் பூமியானது உடைந்தது. ஒரு துளியானது வெளியே தெறித்தது. பூமியின் மேல் பரப்பிலிருந்து உண்டான இத்துளியானது அநேகமாக உருகிய கருங்கல்லையே கொண்டது. கருங்கல்லின் தராகர திடத்வம் (Specific gravity or Density) 2.7 சந்திரனின் Density 3.3. ஆகவே சந்திரன் உண்டான விதம் நாம் மேற்சொன்னதுபோல இருக்கலாம் என்ற தைரியம் பிறக்கிறது.

பூமியின் மேல் பரப்பு முழுவதும் கருங்கல் உறைந்து வந்த வேளையில் சந்திரன் பிறந்தது என்றோம். ஆகவே இவ்வாறு உறைந்த கல்லில் ஒரு பாகம் சந்திரனுடன் போய் விட்டது. அவ்வாறு போன இடம் எங்கே? அதுவே பசிபிக் மகாசமுத்திரப் பரப்பு.

சந்திரன் பிறந்த பின், அதன் கூட சென்றது தவிர மிஞ்சிய கனப் பொருளான கருங்கல் பல துண்டுகளாகப் பிளந்து அடியே இருக்கும் உருகிய திரவரூபமான எரிமலைப் பாறையின் மேல் மிதந்துகொண்டிருந்தது. இவைகளே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பொழுது நாம் வசிக்கும் கண்டங்கள் (Continents) இவ்வாறு மிதக்கும் கண்டங்கள் பூமி சுழலும் வேகத்தால் உந்தப்பட்டு பூமத்திய ரேகையின் அருகாமையை அடைய முயலும்.

ஆனால் நாம் இன்று காணும் அமைப்பு வேறு. இதன் காரணம் திரவமான எரிமலைப்பாறை இறுகி கனப் பொருளாகி அதன் மேல் மிதந்து கொண்டிருந்த கண்டங்களை அந்தந்த இடங்களில் பதித்துக் கொண்டது தான்.

பூமி எரியும் வாயுப்பொருளாக இருந்து, பின் திரவ ரூபமாகி, மேல் பரப்பு மட்டும் இறுகி கனப்பொருளாகி யிருக்கிறது. இவ்வாறு சூரியனிலிருந்து உண்டான வேளை அதன் (Temperature) ஐக் கொண்ட பூமி இப் பொழுது மேல் பரப்பில் மனிதர் வாழக்கூடிய நிலையை அடைந்திருக்கிறது. ஆனால் பூமியின் மத்திய பாகத்தில் இன்றும் பழைய நிலைதான்.

பூமியின் (radius) சுமார் 4000 மைல். அதில் மேல் பரப்பிலிருந்து சுமார் 30 மைல் தூரம் உள்ள வரை தான் கனப்பொருள் அதனடியில் முழுதும் உருகிய பொருள். பூமி குளிர்ந்து கொண்டே செல்லும்பொழுது பொருளானது சுருங்குகிறது. அதன் காரணமாக மிதந்து கொண்டிருக்கும் கனப்பொருளான கண்டங்கள் நெருக் கப்பட்டு பின் உடைந்து பல மலைத்தொடர்கள் உண்டாகின்றன.

மழைகாலத்தில் வெள்ளத்துடன் வரும் வண்டலை நாம் யாவரும் பார்த்திருக்கின்றோம் ஆனால் வண்டலைக்கொண்டு வரும் இம்மழையின் முழு சக்தியையும் நாம் அறிவதில்லை. வண்டல் சிறு மண். கல் துணுக்குகளால் ஆனது. இவை உண்டாவது மலையிலிருந்து. ஆகவே மழை மலையை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறிது சிறிதாகக் கரைத்து வந்து சமவெளிப் பிரதேசங்களில் பரப்புகிறது. பல பத்தாயிரக் கணக்கான வருஷங்களில் இதன் பயனாக மலைகள் மறைந்து விடுகின்றன. இது போலவே பனி நதிகளும் (Glaciers) மலைகளைக் கரைத்து பூமியை சமநிலமாக்கி வருகின்றன. சமநிலமாக பூமி பல ஆயிர வருஷங்கள் இருந்தபின் மறுபடி சுருங்கிக் கொண்டேயிருக்கும். பூமி நெளிந்து கொடுக்கிறது. அதன் உடலில் உள்ள பிடிப்புகளை அகற்ற, முன் போல பல மலைத்தொடர்கள் எழுகின்றன. மறுபடியும் அதே கதை. இதுதான் பூமியின் பழங்கதை. இவ்வாறு பூமி நெளிந்து கொடுத்தது குறைந்தது ஐந்து தடவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

இவ்வாறு கடைசியாக நடந்தது சுமார் (4,000,000) 4 கோடி வருஷங்களுக்கு முன்.* அதன் பயனாக உயர்ந்த மலைத்தொடர்களில் ஒன்றே இமயத் தொடர்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் கழிந்த 4 கோடி வருஷங்களைப் பற்றிய கதை கொஞ்சம் நன்றாக ஆராயப்பட்டிருக்கிறது. இக்காரியத்தில் மிக உதவியவை Geology யும் Paleontology யும் தான். முதலாவது பாறைகளைப் பற்றியும் அவற்றின் அமைப்பு முதலியவற்றைப் பற்றியும் படிக்கும் விஷயம். இரண்டாவது முக்கியமாக பாறைகளில் தோன்றும் பழங்காலத்து மிருகங்களுடையவும், செடிகள் உடையவும் தடங்களைப் (Fossil) பற்றியது.

— ஜோதி, கல்கத்தா

---

* இந்நிகழ்ச்சிக்குப் பெயர் (Cainozoic Revolution)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாலாண்டில் தமிழ் நூல்கள்
(ஒரு கண்ணோட்டம்)

பி. ந. வெங்கடாச்சாரி

கடந்த நான்கு ஆண்டுகளில் 1958-1962 வெளியாகியுள்ள தமிழ் நூல்களைப் பற்றியும் அதன் மூலம் இலக்கிய வளர்ச்சியின் போக்கைப் பற்றியும் பொதுப்படையாகவும், சுருக்கமாகவும் விமர்சிப்பதே இக்கட்டுரையின் நோக்கம். மேலைநாடுகளில், குறிப்பாக இங்கிலாந்தில் ஆண்டுதோறும் ஆங்கில மொழியில் வெளியாகும் நூல்களைப் பற்றி பல்வேறு துறைகளில் அனுபவம் முதிர்ந்தவர்கள் பொதுப்படையான கருத்துக்களை தெரிவிக்கும் உயர்தர நூலொன்று ("Years work in English Studies) என்ற தலைப்புடன் வெளியாகி வருகிறது. இதன் மூலம் வாசகர்களுக்கு ஆங்கில இலக்கியத்தின் போக்கும், எந்தத் துறையில் எத்தகைய அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது, எங்கு தேக்கம் என்றெல்லாம் அறிய முடிகிறது. இலக்கிய வளத்திற்கும், அதன் எழிலில் திளைத்திருப்பவர்களுக்கு அதன் போக்கை அறிவது அவசியமல்லவா? வனத்தின் அரசனாகிய சிங்கம் வனத்தினூடே விரைந்து செல்கையில் அவ்வப்பொழுது தான் வந்த பாதையை திரும்பிப் பார்த்து செல்வதாக இயற்கை நூல் வல்லுனர்கள் கூறுகின்றனர். அது போன்றே வாசகர்களும், எழுத்தாளர்களும், அவ்வப்பொழுது தாம் சஞ்சரிக்கும் எழுத்து உலகினைப் பற்றிய பொது அறிவையும் பெறுதல் அவசியமாகும்.

அபிவிருத்தி நிலை

எண்ணிக்கையினையும் தரத்தினையும் மனதிற்கொண்டு நோக்கினால் நூல் வெளியீட்டில் ஓர் ஆண்டினை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விட பிறிதொரு ஆண்டில் அதிக அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்று கூற முடியாத நிலை உள்ளது குறு நூல்களையும், துண்டுப் பிரசுரங்களையும் தள்ளி விட்டுப் பார்த்தால், ஏறக்குறைய 2,200 நூல்களே தேறுகின்றன. சராசரி, ஆண்டு வெளியீடாகிய 550 என்பது நமது மொழியின் உயர்வினையும், பேசும் மக்கட் தொகையினையும் எண்ணிப் பார்த்தால் எவ்வளவு குறைவு என்பது புலனாகும். இந்தியாவில் வெளியாகும் நூல்களில் ஆங்கிலம் முதலிடமும், இந்தி இரண்டாவதும், வங்க மொழி மூன்றாவது இடமும் வகிக்கின்றன. கடந்த ஆண்டுகளில் சராசரி, ஆண்டொன்றுக்கு 20,000 நூல்கள் இந்தியாவில் வெளியிடப்பட்டுள்ளன. 43 கோடி மக்கள் சமுதாயத்திற்கு இந்தப் புத்தக உற்பத்தி மிகக் குறைவானது என்பதை இங்கிலாந்தின் ஆண்டொன்றுக்கு வெளியாகும் நூல் தொகையாகிய 16,000-த்துடன் ஒப்பிட்டால் நன்கு தெரிய வருகிறது பத்து லட்சம் மக்கட் தொகைக்கு 48 நூல்கள் என்ற அளவில் அமைந்துள்ளது நமது பிரசுர நிலை. அதே பத்து லட்சம் மக்கட் தொகைக்கு 20-க்குக் குறைவான தமிழ் நூல்கள் என்ற அளவில் இருப்பது தமிழ் பிரசுர நிலை. இந்நான்கு ஆண்டுகளின் நூல்களில் ஏறக்குறைய 45 சதவிகிதம் கவிதை, நாடகம் நாவல், கட்டுரை ஆகிய இலக்கியத் துறையினைப் பற்றியவையாகும். ஏனைய தென்னிந்திய மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழில் இலக்கியத்தைப் பற்றிய நூல்கள் மற்றவைகளை விடக் குறைவானது என்று அறிந்து வியப்புறுகிறோம் மலையாளத்தில் ஏறக்குறைய 70 சதவிகிதம் இலக்கியத்தைப் பற்றியவையாகும். தெலுங்கில் 60 சதவிகிதத்திற்கு மேற்பட்டும், கன்னடத்தில் 65 சதவிகிதத்திற்கு மேற்பட்டும் இலக்கியத்தைச் சார்ந்த நூல்கள் வெளிவருகின்றன. விஞ்ஞானம், தொழில் நுணுக்கம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயன்படு விஞ்ஞானம் ஆகியவைகளைப் பற்றிய நூல்கள் தமிழில் 12 சதவிகிதமும் மலையாளத்தில் 5 சதவிகிதமும், தெலுங்கிலும், கன்னடத்திலும் 4 சதவிகிதமுமாகும். சமயம், தத்துவம், ஆகிய துறைகளில் கடந்த நான்கு ஆண்டுகளில் வெளிவந்த நூல்கள் மொத்த நூல்களில் 8 சதவிகிதமேயாகும் என்று அறியும் பொழுது அது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. சரித்திரம், வாழ்க்கை வரலாறு, பிரயாணம் ஆகியவை மொத்த நூல்களில் கிட்டத்தட்ட 10 சதவிகிதமாகும்.

மொழிபெயர்ப்பு நூல்கள்

கடந்த ஆண்டுகளில் வெளியாகியுள்ள நூல்களுள் சராசரி 10 சதவிகிதத்திற்கும் சற்றுக்குறைவான அளவு நூல்கள் மொழிபெயர்ப்பு நூல்களாகும். மொழிபெயர்ப்பு நூல்களின் மூல மொழிகளின்படி பார்த்தால் வங்க மொழி, ரஷ்யன், சமஸ்கிருதம், பிரெஞ்சு, இந்தி ஆகியவைகள் அவ்வரிசைப்படி அமைவதைப் பார்க்கிறோம். அண்டை திராவிட மொழிகளிலிருந்து மொழிபெயர்ப்புகள் மிகக் குறைவானவை என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது. மலையாளத்திலிருந்து உருப்படியாக நான்கு நூல்களும், கன்னடம், தெலுங்கு, ஆகிய மொழிகளிலிருந்து ஒவ்வொன்றும் வெளியாகியுள்ளன. இதைத் தவிர, தென்னிந்திய புத்தக டிரஸ்டின் ஆதரவில் திராவிட மொழிகளின் கதைத் தொகுப்பும் மரபுச் சொற்களும் ஓரங்க நாடகத் தொகுப்பும் வெளிவந்துள்ளன. ஏனைய திராவிட மொழிகளுக்கும் தமிழுக்கும் உள்ள மொழி உறவின் காரணமாக இத் துறையில் மொழிபெயர்ப்பது மிக எளிதான காரியமாகும். ஆனால் இதில் நாம் பின் தங்கியிருக்கிறோம். வட இந்திய மொழிகளில் வங்கம், இந்தி ஆகியவைகளிலிருந்து பல மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன. மற்ற இந்திய மொழி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களில் குஜராத்தியிலிருந்தும் ஒரியாவிலிருந்தும் மட்டும் மொழிபெயர்ப்புகள் இவ்வாண்டுகளில் வெளிவந்துள்ளன. ஆங்கிலம், ரஷ்யன், பிரெஞ்சு ஆகிய மொழிகளை விட்டு விட்டுப் பார்ப்போமானால் கிரேக்கம், நார்வீஜியன், சீனம் ஸ்வீடிஷ் ருமேனியம், பாரசீகம் ஆகிய மொழிகளிலிருந்து மொழிபெயர்ப்புகள் கிட்டியுள்ளன. பெரும்பாலான மொழிபெயர்ப்புகள் நாவலே அன்றி சிறு கதைகளாம். இந்திய மொழி நூல்களைத் தவிர்த்து மற்ற மொழி நூல்களின் ஆங்கில ஆக்கமே தமிழாக்கத்திற்குக் கையாளப்படுகிறது என்பதை நாம் நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும்.

மேற் கண்டவை புள்ளி விவரங்களின் துணை கொண்டு நிறுவப்பட்ட பொதுப்படையான கருத்துக்கள். இனி தமிழ் நூல்களின் மையமாகிய தமிழ் இலக்கிய நூல்களைப்பற்றிக்கூறி, ஏனைய துறைகளைப் பற்றியும் கூற வேண்டும்.

பழம்பெரும் நூல்கள்

ஆண்டுதோறும் பழம்பெரும் இலக்கிய நூல்களை வெளியிடுவதில் பல பதிப்பகங்கள் சளைப்பதில்லை. குறிப்பாக பல பதிப்பகத்தினர் திருக்குறளைப் பலவித உருவங்களில் வெளியிட்டுள்ளனர். இதைத் தவிர, திறனாய்வு நூல்களில் பலதரப்பட்டவைகளையும் காண்கிறோம். நீண்ட விரிவுரைகளும், மிகச் சுருங்கிய கருத்துரையும் மேனாட்டு திறனாய்வாளரது கருத்துக்களைப் பொதுப்படையாக எடுத்து எழுதுவதுமான முறை பல நூல்களில் காணப்படுகின்றன. அதே சமயத்தில் சிறந்த திறனாய்வு நூல்களும் வெளிவரக் காண்கிறோம்.

பழம்பெரும் தமிழ் இலக்கியங்களை எல்லோராலும் படித்துச் சுவைப்பது என்பது சாதாரணமாக முடியாது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரியமாகும். சுருங்கிய காலத்தில் விரிந்த வாழ்வு வாழ வேண்டி இருத்தலால், இக்காலக் கல்வி முறைப்படி பற்பல கற்று பெரும் பங்கு மறந்து சிறு பகுதி மட்டும் நினைவில் நிற்க, அவற்றைக் கொண்டு இலக்கியத்தைச் சுவைக்க வேண்டியுள்ளது. இத்தகைய நிலையினை டாக்டர் மு. வரதராசனர் அவர்கள் "போகிற போக்கில் கடைத் தெருவில் சில வினடிகள் நின்று ஒரு குவளையில் கருப்பஞ் சாற்றை வாங்கிக் குடித்து அப்பால் செல்வது போன்றது" என்று கூறுவது மிகப் பொருத்தமானதாம். கரும்புத் தோட்டத்தை நாடிச் சென்று கரும்பை சுவைப்பவர்கள், அருகிலிருப்பது போன்று காவியங்களை முழுவதும் படித்து உணர்ந்திருப்பவர்கள் குறைவு. இந்நிலையில் திறனாய்வு நூல்கள் குவளைக் கருப்பஞ் சாற்றினைப் போன்றதாகும்.

திறனாய்வு நூல்கள்

திறனாய்வு நூல்களில் அதிகமானவை திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் ஆகியவைகளைப் பற்றியவைகளே. திருக்குறள் திறனாய்வு நூல்களில் குறிப்பிடத் தகுந்தவை அ. ச. ஞானசம்பந்தன் எழுதிய "குறள் கண்ட வாழ்வு", டி. எஸ். ஸ்ரீபால் அவர்களின் "திருவள்ளுவர் வாழ்த்தும் ஆதிபகவன்", வள்ளுவர் இன வெறுப்பையோ அன்றி மொழி வெறுப்பையோ கொண்டவர் அல்லர் என்பதை விளக்க எழுந்த சுவாமி சிதம்பரனாரின் "திருக்குறள் காட்டிய வைதீகம்", மு. அண்ணாமலையின் "வள்ளுவர் தனித் தன்மை", தண்டபாணி தேசிகரது "அழகும் அமைப்பும்" என்றவைகளாகும். இந்நூல்கள் குறளின் பலவித அம்சங்களை திறனாய்வு செய்வதாயினும், குறளைப் புதுவித கோணங்களில் பார்க்கும் மு. வ. அவர்களது "திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம்" போன்ற சகாப்தத்தை உண்டாக்கும் நூல் இல்லையென்று எண்ணுகிறேன். குறளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ... நூல்களை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நான் இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. ஒன்று குறட்பாக்களை பல்லவியாகக் கொண்டு, அதே பொருளை அனுபல்லவியிலும், சரணத்திலும் பாடல்களின் மூலம் அறிவிப்பதாக அமையும் தஞ்சை ராமதாஸ் அவர்களின் "திருக்குறள் இசையமுதம்" என்பது இன்னொன்று குறளின் அதிகாரத்திற்கொரு குறட்பாவைத் தேர்ந்து, அதன் பொருள் அமைதிக்கேற்ப காந்தியடிகளின் பண்பு, செயல், ஆகிய கூறுகளில் தக்கவற்றை எடுத்துக்காட்டி குறட்பாவை வெண்பாவாக விரித்து எழுதியுள்ள "குறள் வழிக் காந்தி" என்னும் நூல் என்பது எஸ். நடராசன் என்பவர் எழுதியது. சுவாமி சிதம்பரனாரின் "புதுக்குறள்" என்பது இக் காலத்திற்கேற்ற பொருளுடன் குறட்பாக்களில் அமைந்துள்ளது. வேதாசலம் என்பவர் எழுதிய "வாழ்வொளி" என்பது குறட்பாக்களில் ஆக்கப்பட்ட பெரியதொரு நீதி நூலாகும். திருக்குறளின் ஆங்கில ஆக்கமொன்று 1962-ம் ஆண்டில் வெளிவந்துள்ளது. திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் என்பவரால் ஆக்கப்பட்ட அந்நூலின் முக்கியச் சிறப்பு ஆங்கிலத்திலேயே குறிப்புகளும், விரிவுரைகளுமாகும். டாக்டர் சுனித்குமார் சட்டர்ஜீ என்ற அறிஞர் இதைப் படித்துவிட்டு. "This Translation certainly is an important event in the history of Tamil Studies at the present day" என்று கூறியிருக்கிறார்.

சிலப்பதிகாரத்தைப் பற்றிய திறனாய்வு நூல்களுள் புதுக்கோணத்தில் ஆராய்ச்சி செய்யும் சிறந்த நூல் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் எழுதிய "கானல் வரி" என்பதாகும். கானல் வரியே சிலப்பதிகாரத்தின் மையம் என திறம்பட வாதிப்பது இந் நூல். இவ்வாசிரியரின் "குடிமக்கள் காப்பியம்" என்ற பிறிதொரு நூல் சிலப்பதிகாரம் எவ்விதம் யாவராலும் விரும்பி நுகரக் கூடிய இலக்கிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதை விளக்குவதாகும். சிலப்பதிகாரத்தின் சுவையான பகுதிகளைப் பற்றி நமக்கு அறிவிக்கும் மற்றொரு நூல் ந. சஞ்சீவி எழுதிய 'சிலம்புத்தேன்' என்பதாகும். இதைத் தவிர, தி. மாணிக்கவாசகம் எழுதிய "செந்தமிழ்ப் பாவை" என்ற நூலும் படிக்கத் தருந்தது. காவியநாயகனாகிய கோவலனை நுணுகி ஆராயும் கோவலன் என்ற தலைப்பினைக் கொண்ட நூல் கு. திருமேனி என்பவரால் எழுதப்பட்டது மேல்நாட்டுத் திறனாய்வு முறைப்படி திறனாய்வு செய்து காட்டும் நூல்களுள் குறிப்பாக மார்க்கபந்து சர்மாவின் "சிலம்பின் பாயிரம்" என்பதும் சிலப்பதிகாரத்தை மணிமேகலையுடன் ஒப்பிட்டு பரிசீலனை செய்யும் "சிலம்பும் மேகலையும்" என்பதுவ திறம்பட விமர்சிக்கும் நூல்களில் சிலவாகும்.

"மணிமேகலையின் காலம்" என்ற ஆராய்ச்சி நூல் சி. என். கந்தசுவாமி எனபவரால் எழுதப்பட்டுள்ளது சங்க இலக்கியங்களைப் பற்றிய பொதுப்படையான நூல்களுள் சுவாமி சிதம்பரனாரின் "இலக்கியச் சோலை" முக்கியமானது. கபிலன் போன்றவர்கள் எளிய நடையில் பல சங்க நூல்களுக்கு உரை தந்து வெளியிட்டுள்ளனர்.

கம்பனைப் பற்றிய நூல்கள் நாம் எதிர்பார்க்குமளவிற்கு இல்லையென்பது அறிந்து ஆச்சரியப்படுகிறோம். கம்பனது அரசியல் கொள்கைகளைப் பற்றிய சிறந்த நூல் "கம்பன் கண்ட அரசியல" என்ற எஸ். ராமகிருஷ்ணனது நூலாகும். கம்பனது பல பாத்திரங்களைப் பற்றிக் கூறும் ஒரு நூலும், கம்பராமாயணத்தில் இயற்கை வர்ணனையைப் பற்றிய புலவர் செந்துறை முத்துவின் நூல்களும், கி. வா ஜகந்நாதனது "அழியா அழகு" முக்கியமானவை

கவிதைகள்

தற்காலத்துக் கவிதைகள் பெருமளவிற்குப் புத்தக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரூபத்தில் வெளிவராது போயினும் பல பத்திரிகைகள் கவிதைகளைத் தாங்கிய வண்ணம் வெளிவருகின்றன. பெரும்பாலான இக்கவிதைகள் வெறும் சொற்கோவைகளாக அமைந்து பொருளாழமற்று இருப்பினும், அவ்வப்போது உண்மைக் கவிதைகளை நாம் பார்க்க முடிகிறது. தற்காலக் கவிகளில் குறிப்பிடத் தகுந்தவர்கள் மிகச் சிலரே. பாரதிதாசன், கண்ணதாசன், சரண பாஸ்கரன், திருலோக சீதாராம், சுரபி, ச. து. ச. யோகி, முத்து முதலானவர்களைத்தான் நாம் நினைக்க முடிகிறது. இக்கவிகளெல்லாம் இலக்கணமரபினை ஒட்டி கவிதைகள் புனைவதில் வல்லவர்கள். கவிதை நூலுக்கு வாணிதாசனின் 'தீர்த்த யாத்திரை'யையும் ஒருவரது வாழ்க்கையினை கவிதை உருவத்தில் காண வே. அருணாசலம் அவர்களின் 'வினோபா காப்பியம்' என்பதையுமே குறிப்பிட முடியும். அழ. வள்ளியப்பாவின் ஏற்கெனவே வெளியான "மலரும் உள்ளம்" என்பதிலிருந்து பொறுக்கியெடுத்த பாடல்கள் "கதைப் பாடல்கள்" என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது. வளர்ந்து வரும் குழந்தை கவிஞர்களுக்குள் அழகனார் என்ற புனைப்பெயர் பூண்ட ஒருவர் எழுதிய 'கொக்கரக்கோ" என்ற நூல் மனத்தைக் கவர்ந்துள்ளது. உண்மை கவித்துவம் இவரது பாடல்களில் பொதிந்துள்ளது. பூனைக் குட்டியின் உடலை ஒரு குழந்தை தொட்டுத் தடவிப் பார்க்கிறது. மென்மையான மயிரும் வெண்மையான நிறமும் அக்குழந்தையை இப்படிப் பாடச் செய்கிறதாம்...

"பட்டுத் துணியில் ஆனதுவோ—மேனி
பாலாடைத் தின்றதன் மென்மையிதோ."

நாக முத்தையா என்ற குழந்தைக் கவிஞரது பாடல்கள் ஆற்றொழுக்குப் போன்றதும் எளியதுமான சப்தங்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"குறுவென்ன இருவிழி காட்டி
குறுநடை கொள்ளும் இளையோனே
பெருகிடும் அன்பு வழிந்து வாழ்வில்
பிறர்நலம் தன்னை மதிப்பாயே
ஒருமகன் நீயே உயர்மகன் நீயே
எனும் பெயர் கொள்ள முனைவாயே
இருசெவி உன்றன் பெருமையைக் கேட்டே
இனித்திட வேண்டும் சரிதானே."

"பட்டிப் பறவைகள்" என்ற தலைப்பில் பெரியசாமித் தூரன் ரவீந்திரநாத் தாகூரின் சில வசன கவிதைகளைத் தழுவி எழுதியுள்ளார். உதாரணத்திற்கு ஒன்று கூறலாம்.

புது ரகக் கவிதை

"கவிதையே! உன்னை நான் தானே எழுதினேன்" என்று கூறி எழுத்தாணி பெருமை கொள்கிறது. தாமரை மலரைப் பார்த்துக் காகிதப் பூ சொல்லுகிறது நீ நாளைக்கு வாடி விடுவாயே. இனி கடந்த சில ஆண்டுகளாக "எழுத்து" என்ற பத்திரிகையின் மூலம் வெகுவாகப் பரப் பப்பட்டு வரும் புது ரகக் கவிதைகளைப் பற்றி சொல்ல வேண்டும். இப் புதுரகக் கவிதைகள் இலக்கண மரபிற்கு அப்பாற்பட்டதாயும், புதுவித உத்திகளைக் கொண்டதா யும் உள்ளன. அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் 1910-க்கு மேல் கிளம்பிய இப் புதுக் கவியின் முயற்சி ஓரளவிற்கு பாரதியின் வசன கவிதைகளிலும், பாஞ்சாலி சபதத்தின் சூரிய அஸ்தமன வர்ணனைகளிலும் பிரயோகிக் கப்பட்டுள்ளன. கு ப. ராஜகோபாலன், வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன் ஆகியோரால் 1930—40-ல் வளர்க்கப் பட்ட இக் கவிதை முயற்சி தற்பொழுது கடந்த நான்கு ஆண்டுகளாக ந. பிச்சமூர்த்தியின் தலைமையில் இப் பொழுது பலரால் கையாளப்பட்டு வருகிறது. இம் முயற்சி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாதையில்லாக் காட்டில் பயணம் செய்யும் முயற்சி. இம்மாதிரிக் கவிதைகளின் அமைப்பு முறையில் அனுபவத்தால் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டே போகும். இக் கவிதைகளைக் கண்ணுல் கண்டு உள்ளத்தால் உணர்ந்து சுவைக்கும் பழக்கம் ஏற்பட்டு, கவிதை ஓசைநயம் பற்றி அதிக அக்கறை காட்டாதிருப்பின், இவற்றை ரசிக்க முடியும். ஒரு சில கவிதைகளை உதாரணமாகப் பார்க்கலாம். 'முதுமை' என்ற தலைப்பின் கீழ் நான்கு வரிகள் கொண்ட சிறு கவிதை இயற்றியவர் இ. எஸ். கந்தசுவாமி என்பார்.

''வந்த வழிக்கே
நினைவின் இழுப்பில்
பதியும் சுவடும்
மனதில் மேய்ச்சல்''

வெனிடிக்ட் என்ற இளங்கவிஞர் இயற்றிய ஒரு கவிதை 'எது' என்ற தலைப்பிட்டு வந்துள்ளது.

''வருகையின் நினைவில்
நிகழ்வைக் கழித்து
கழிவது கனவாய்
வருவது நினைவாய்
நினைவும் சுவடாய்
முடிவை அடைதல்
கனவின் முடிவா?
வாழ்வின் கனவா?''

வல்லிக்கண்ணனது 'விதி' என்ற தலைப்பின் கீழ் புனையப் பட்ட சிறு கவிதை இது.

நடந்தே கழியணும் வழி
கொடுத்தே தீரணும் கடன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்தே அழியணும் வேலை
அழுதே ஒழியணும் துக்கம்
வாழ்ந்தே முடியணும் வாழ்வு
இதுவே உலகின் நியதி!

சுந்தர ராமசுவாமி என்பவர் எழுதிய "என் எழுத்து" என்ற தலைப்பிட்ட கவிதை படித்து உணரத் தக்கது.

'காற்றைத் திரித்து, நகத்தைக் கிழித்து விளக்கேற்றி
ஊனைக் கரைத்து, உயிரை பிழிந்து எழுத்தாக்கி
நெஞ்சைக் குத்தி, விரலைத் தோய்த்துப் படைத்தேன்
திரியை எரித்தது காற்று
விரலையும் கரைத்தது குருதி
எனினும்
எனனை அழிக்க யாருண்டு?
எழுத்தில் வாழ்பவன் அன்றோ யான்!

நாவல்கள்

தமிழில் நாவல்களுக்கும், கதைகளுக்கும் பஞ்சமில்லை. வெளிவரும் பத்திரிகைகளில் பெரும்பாலான இடத்தை நிரப்பிக்கொண்டு வருவன நாவல்களும் சிறு கதைகளும். இவ்வாண்டுகளில் வெளிவந்த பெயர்பெற்ற ஆசிரியர்கள் நாவல்கள் சிறந்தனவாக அகிலனின் "பாவை விளக்கு" ஆர்வி யின் "திரைக்குப்பின்" 'தீபம்' ஆசிரியர் நா. பார்த்தசாரதி யின் "குறிஞ்சமலர்" க. நா. சுப்பிரமணியத்தின் 'நளினி', கோவி. மணிசேகரனின் "செம்பியன் செல்வி' பொன் வேய்ந்த பெருமாள், ஜெகசிற்பியனின் "ஆலவாய் அழகன்" ஆகும். இவற்றில் அகிலன், ஆர்வி, ஜானகிராமன், பார்த்த சாரதி ஆகியவர்கள் சமுதாயத்தின் பல்வேறு அம் சங்களை நெஞ்சைததொடும் வகையில் 'நாவல்' எழுதி யுள்ளவர்கள். சரித்திர சம்பவத்தை ஆதாரமாகக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டு நாவல் எழுதுபவர்களில் சாண்டில்யனும், ஜெகசிற்பியனும், கோவி. மணிசேகரனும் சிறந்து விளங்குகின்றனர். தி. ஜானகிராமனது நடை நா. பார்த்தசாரதியின் இலக்கிய மணம் கமழும் தமிழ் நடையினைப் போலன்றி, அகிலனது அழகிய நடையினைப் போலன்றி, நேரில் கேட்பதுபோன்று சம்பாஷணைகளின் மீது எழுப்பப்பட்டதாக உள்ளது. அவரது கொச்சை நடை வார்த்தைகளுக்கு ஜீவனளிக்கிறது. பேச்சு வாக்கியங்களை அதிக நீளத்திற்கு எழுதுவதில்லை. மிக நீண்ட கருத்தைச் சொல்லும் அவசியம் ஏற்பட்டாலும் கூட, அதைச் சிறு சிறு வாக்கியங்களாக அமைத்து, பேச்சு அமைதியில், கொச்சையாக எழுதிவிடுவது அவரது பாணி. கொச்சையும். பாத்திரங்களின் தரத்திற்கேற்ப மாறுபடுகிறது. தாராசங்கர பானர்ஜியும், பிரபல மலையாள நாவலாசிரியராகிய தகழி சிவசங்கர பிள்ளையின் 'செம்மீன்'' போன்று ஒரு குறிப்பிட்ட இடத்தின் மக்களது உயர்வு, நம்பிக்கைகள் சுருங்கச்சொல்லப் போனால், வட்டார மணம், அவக்கேடுகள் முதலியவற்றை சித்தரிக்கவல்லது ஜானகிராமனின் எழுத்துக்கள். ஆனால் ஒரே வித்தியாசம். தகழியின் 'செம்மீன்' சிறப்புற மொழி பெயர்க்கப்பட்டுள்ளதைப் போன்று ஜானகிராமனின் எழுத்துக்கள் மொழி பெயர்க்கக் கூடியவையா என்பதில் பலருக்கு சந்தேகமுண்டு. 'ஆர்வி' யின் திரைக்குப் பின் என்ற நாவல் பலவகை உணர்ச்சிகளைத் தொட்டுத் தூண்டும் வகையில் புதிய சில சமூகப் பிரச்னைகளைக் கிளப்பி அதற்கு ஒரு விடை காணும் வகையில் அமைந்துள்ளது.

சிறு கதைகள்

இனி சிறுகதை பற்றி ஆராய்வோம். எதையும் விரைந்து, படித்து முடித்துவிட வேண்டும், பொழுது போக்கிற்கு ஏதாவது வேண்டும் என்ற எண்ணம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பலரிடத்தில் பரவியுள்ள இக்காலத்தில் அவ்வெண்ணத்தை நிறைவேற்றும் வகையில் பல சிறு கதைகள் பல பத்திரிகைகள் மூலம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. வெளிவரும் சிறு கதைகளில், பல பொருளற்றதாகவும், மந்த நிலையிலுள்ளவைகளாகவும் இருக்கின்றன, சிறுகதை இலக்கணத்திற்கு ஒத்து அமைதவையாகக் கருதப்படும் சிறுகதைகள் தமிழில் இவ்வளவு என்று எளிதில் கூறமுடியும். சிறுகதை இலக்கண விதிகளை மனதிற்கொண்டு பார்த்தோமானால் 'அகிலன்', கு. அழகிரிசாமி, க. நா. சுப்பிரமணியன் முதலான ஏற்கெனவே பிரபலமடைந்திருப்பவர்களைத் தவிர விரைவில் முன்னணிக்கு வந்து கொண்டிருப்பவர்களுக்குள் ஜெகசிற்பியன் ஒருவர். வழக்கமான கதைகளையே படித்துப் படித்து சலித்த தமிழ் வாசகர்களுக்குப் புதுமையான சிறு கதைகளை அளிப்பவர் ஜெயகாந்தன். வாழ்க்கையின் சுகபோகம் எதையும் அனுபவிக்க முடியாமல் நீர்க்கதியாக வாழும் ஏழை மக்களின் வாழ்வின் அன்றாட நிகழ்ச்சிகளை தம்முடைய கதைகளுக்கு கருப்பொருளாக வைத்துக் கொண்டு அவரவர்களுடைய ஆசாபாசங்களையும், வேதனைகளையும், தத்ரூபமாக சித்தரிக்க வல்லவர் இவர். இவரது இனிப்பும், கரிப்பும், 'யாருக்காக அழுதான்' என்ற நூல்கள் மிக உயர்தரமானவை. ஆர். சூடாமணி எழுதிய சிறு கதைகள், ஆனந்தவிகடனில் வெளிவந்தவை. மனித மனங்களின் நெளிவு சுளிவுகளை நன்கு அறிந்து சுவையான முறையில் நல்ல நடையில் எழுதப்பட்டுள்ளன. மௌனியின் 'அழியாச்சுடர்' சிறு கதை இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளன. லா. சா. ராமாமிருதத்தின் கதைகள் பெரும் தத்துவக் கருத்துக்களை எடுத்துக் கூறுவன

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியத்தின் மற்ற அம்சங்களைப் பற்றிக் கூற விரும்பு கிறேன்.

∴ ∴ ∴

இலக்கியத் துறையில் நாடகம், மிகவும் பின்தங்கி யுள்ள நிலையினைப் பார்க்கிறோம். கடந்த வருடங்களில் 30-க்கு மேற்படாத நூல்களே வெளியாகியுள்ளன. அவற் றுள் தரமானவை யென்று சொல்லப்படுபவைகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். இக்காரணம் பற்றித்தான் ஆனந்த விகடனில் சமீப காலத்தில் நாடகப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. ராஜவேலுவின் "அணை கடந்த வெள்ளம்" மாணிக்கவாசகத்தின் "மன்னர் மன்னன்" பரதன், பரமசிவத்தின் "பாசம்" என்று இரு சரித்திர நாடகத் தொகுப்பு ஜாவர் சீதாராமனது "காசே கடவுள்" வேலவனது "கவிதா ராஜ்யம்" என்ற சரித்திர நாடகம், ஜெகசிற்பியனது 'அருள்மொழி நங்கை" சிதம்பர சுப்பிர மணியனது "ஊர்வசி" தணிகை உலகநாதனது "வள நாடும் இளங்கன்றும்" ஐந்தாண்டுத் திட்டங்களை சித்திரித் துக் காட்டும் சில நாடகங்கள் ஆனந்த விகடனில் வெளி யாகிய முதல் மூன்று நாடகங்கள். இவற்றையே முக்கிய சிருஷ்டிகள் என்று கூறலாம். ஓரங்க நாடகங்களில் நமக் குக் கிட்டியுள்ள ஒரே நூல் கு. பரமசிவன் எழுதிய "ஐந்து ஓரங்க நாடகங்கள்" என்பது. இந்நாடகங்கள் பலமுறை நடிக்கப்பட்டன. ஹாஸ்யச் சுவை ததும்ப இருப்பது 'ஊமையின் கணவர்' என்ற ஓரங்க நாடகம். வானொலி யில் அவ்வப்பொழுது நல்ல நாடகங்கள் ஒலிபரப்பப்படு கின்றன. இவைகளைத் திரட்டி புத்தக உருக்கொடுத்து வெளியிட்டால் நாடகத்திற்கும் பெரும் சேவை செய்த தாகும்.

கட்டுரைகள்

தமிழில் கட்டுரைகளைத் தாங்கிவரும் நூல்களில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரும்பாலானவை பழம்தமிழ் இலக்கிய நூல்களைப்பற்றி யவையாகும். தற்கால இலக்கியப்போக்கு, எழுத்தாளர்கள் பற்றிய கட்டுரைகள் அதிகமில்லை என்பதை நான் குறிப் பிடவேண்டும். தமிழ் இலக்கிய ஆராய்ச்சி வரலாற்றினைப் பற்றிய சில நூல்கள் நம்மால் படிக்கப்படவேண்டியவை. ஏ. வி. சுப்பிரமணிய அய்யர் எழுதிய 'தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி', 'தமிழ் இலக்கிய வரலாறு', மு. ராமகிருஷ்ண னின் பிரதிபேத ஆராய்ச்சி (பாடவேறுபாடுகளின் தோற் றம், அமைப்பு, வருமுறை ஆகியவைகளை விளக்குவன.) தெ. பொ. மீனாட்சிசுந்தரரது "சமண தமிழ் இலக்கிய வர லாறு', பி. ராமன் எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு', கு. பாலசுப்பிரமணியனது 'தமிழ் இலக்கியம்' என்பவை கள். இவை தவிர சதாசிவ பண்டாரத்தாரது 'இலக் கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுகளும் என்பதும், மயிலை சீனி வெங்கடசுவாமியின் "சாசனச் செய்யுள் மஞ்சரியும், கல் வெட்டுகள்மூலம் இலக்கிய வரலாற்றை சமைப்பது பற்றிக் கூறும் சிறந்த நூல்களாகும். 'இலக்கியத்தில் கடிதம்' "இலக்கியத்தில் விஞ்ஞானம்" 'குமரிநாட்டு தமிழ்' ஆகிய புதிய நோக்குடன் புலவர் செந்துறைமுத்து எழுதியுள்ளார். சமயம், தத்துவம் ஆகிய துறைகளில் மக்களது ஆர்வம் குறைந்திருக்கும் இந்நாட்களில்கூட சமயத்தை ஒட்டிய நூல்கள் பல வெளிவந்து கொண்டிருக்கின்றன. வேதம், உபநிஷத்துக்கள், புராணங்கள், பூஜை விதிகளடங்கிய மந்திர நூல்கள் இந்து, கிறிஸ்துவ தோத்திரப் பாடல்கள், குரான், பைபிள் ஆகியவைகளைப் பற்றிய நூல்கள் ஆண்டு தோறும் வெளியாகின்றன. மனு தர்மத்தின் நல்லதொரு மொழிபெயர்ப்பு (மொழிபெயர்ப்பென்றே தெரியவில்லை) திருலோக சீதாராமினால் செய்யப்பட்டது நமக்குக் கிடைத் துள்ளது. போர் அறம் என்ற அதிகாரத்திலிருந்து ஒரு வாக்கியத்தைப் பாருங்கள். 'ஓடு நீரில் உறுமீன் வருமள வும் வாடியிருக்கும் கொக்கை'ப் போன்று பகை செய்யும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வழியை நாடிநிற்கவேண்டும். யானையைத் தன் பாய்ச்சலால் கொல்லும் அரிமாவைப் போல, வலிமையுள்ள பகையைப் பாய்ந்து சாடவேண்டும். இடையர் இடையை செந்நாய் காப்பது போன்று கோட்டைக்குள் தற்காத்து நிற்கும் பகைவரைக் கொல்ல வேண்டும். கோட்டையில் வளைக்கப்பட்ட முயல் குதித்தெழும்படி செய்வது போன்று முற்றுகையை உடைத்து வேறிடம் சென்றுவிடவும் கற்றிருக்க வேண்டும்!

அரசியல், பொருளாதார நீதி நூல்கள்

அரசியல், பொருளாதாரம், கல்வி, சட்டவியல் ஆகிய துறைகளில் வெளிவந்துள்ள நூலின் தொகை மிகக் குறைவே. புத்தக உருவில் வந்துள்ள காமராஜரின் பேச்சுக்கள், மத்திய அரசாங்க அமைச்சர் சி. சுப்பிரமணியத்தின் பேச்சுக்கள் (சிந்தனைக்குரிய சாதனைகள், தேசிய ஒருமைப்பாடு, தம்மால் முடியும்) வெளிவந்துள்ளன. திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றைப் பெரும் அளவிற்கு எழுதியிருக்கும் டி. எம். பார்த்தசாரதியின் நூலும், க. சந்தானத்தின் 'செல்வமும் சுதந்திரமும்' 'பொதுமக்களும் பொருளாதாரமும்', வி. ஜி. ராமகிருஷ்ண அய்யரது 'பொருளாதார நூலும்' நெய்வேலியின் பொருளாதார விளைவுகளை நன்கு விளக்கும் சோம லெ.யின் 'நெய்வேலி'யும், சித்பவானந்தரது 'கல்வி', வேலாயுதத்தின் 'பணவியலும், பாங்கியலும்', பழனிசுவாமியின் 'சர்வதேச சட்டம்' ஆகியவைகளே முக்கியமான நூல்களாக நாம் கருத முடிகிறது.

விஞ்ஞானம்

விஞ்ஞானத்தைப் பொறுத்தமட்டில் நமக்குக் கிடைத்திருக்கும் நூல்களில் பெரும்பாலானவை, பாடப்புத்தகங்களாகும். எஞ்சியவைகளில் சிறுவர்க்காக எழுதப்பட்டுள்ள நூல்கள் அதிகம். ச. ய. சுப்பிரமணியனது 'கத்தரிக்காய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குடும்பம்', 'அவரைக்காய் குடும்பம்', வெள்ளரிக்காய் குடும்பம்' முதலியவைகளும், வீரபாகு பிள்ளையின் 'எறும்பின் கதை'யும் அனுத்தமாவின் 'பறவையினங்கள் வரிசை'யும் வேலனின் 'மின்சாரத்தின் கதை'யும், பெ. நா. அப்புசுவாமியின் 'ரயிலின் கதை'யும் சிறுவர்களுக்கான சிறந்த விஞ்ஞான நூல்கள். ரஷிய மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சில நூல்கள் மிக உயரிய நூல்களாகும். 'பூமியின் தோற்றமும், கிரகங்களின் தோற்றமும்' 'விண்யுகம்' 'அணு நமது நண்பன்' முதலியவைகளே அவை. ஓரிரண்டு சுயமான விஞ்ஞான நூல்களுள் 'வாழ்வில் விஞ்ஞானம்' என்ற தலைப்பில், திருநெல்வேலி எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை என்ற புத்தக வெளியீட்டாரது தொகுப்பு (Symposiam) மிக நல்லதொரு முயற்சியாகும். 'கரியும் நாயும்', 'அணுவும் நம்முடைய வாழ்வும்', 'புதுவகை இன விருத்தி', 'உலகத் தோற்றங்களின் வரலாறு' ஆகிய நான்கு கட்டுரைகளைத் தாங்கியது. தி. ச. கருப்பண்ணன் எழுதிய 'இயற்கையின் திருவிளையாடல்' என்ற நூலில் நில அதிர்ச்சி, எரிமலை, சூறாவளி, மழை முதலியவையைப் பற்றி விஞ்ஞானச் செய்திகள் திறம்படத் தரப்பட்டுள்ளன. நடுவரசினது பரிசைப் பெற்ற ப. குணசேகரது 'திங்களோ திங்கள்' என்பது சந்திரனைப்பற்றிய உயர்ந்த நூலாகும். இலக்கியத்தில் சந்திரனைப் பற்றிய குறிப்புக்கள் என்ற அதிகாரமும் இதில் சேர்க்கப்பட்டுள்ளது விஞ்ஞான சம்பந்தமான கட்டுரைகளை தாங்கிவரும் 'கலைக் கதிர்' விஞ்ஞானத்திற்குப் பெரும் பணியை ஆற்றிவருகிறது.

பலவித தொழில் நுணுக்க நூல்கள்

பொறிஇயல், மருத்துவம், விவசாயம், பலதர தொழில் நுணுக்கங்கள் ஆகியவைகளைப் பற்றிய நூல்கள் அதிக அளவிற்கு வெளிவராது போயினும் வெளியாக்கப்பட்ட நூல்களில் பல தமிழிற்குத் தொண்டு செய்யும் முறையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நன்கு எழுதப்பட்டிருக்கின்றன. லித்தோ கிராபி, பிளாஸ்டிக்ஸ், அச்சுக்கலை, தையற்கலை, கோழி வளர்ப்பு, வான வெளிப் பயணம், ரேடியோ பழுது பார்த்தல், பண்ணை நிர்வாகம், ஹோமியோபதி, டிரான்சிஸ்டர், செயற்கைச் சந்திரன், டேப் ரிகார்டர் ஆகிய பொருள்களில் வந்துள்ள நூல்களைக் காணும்பொழுது நம் மொழியின் எதிர்காலத்தில் நம்பிக்கை பிறக்கிறது.

தமிழ் நாட்டின் பெருமைக்கு முக்கிய காரணமாயிருக்கும் தமிழகக் கலைகளான இசை, சிற்பம் முதலியவைகளைப் பற்றியும், தமிழகத்தின் கட்டிடக் கலைக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் கோயில்களைப் பற்றியும் ஒருங்கே அறிவிக்கும் நூல்கள் சிலவற்றுள் இவ்வாண்டுகளில் வெளிவந்த தனிப் பெருமை வாய்ந்ததாக உள்ள நூல், பாஸ்கரத் தொண்டைமானின் ‘வேங்கடம் முதல் குமரி வரை’, ‘கல்லும் சொல்லாதோ கவி’ ஆகியவைகளே, கல்கியில் தொடர்ந்துவந்த ‘வட வேங்கடத்துக்கப்பால்’ ஆயிரக்கணக்கான வாசகர்களால் விரும்பிப் படிக்கப்படுகிறது. இவரது நூல்களைப் பற்றி ஒரு திறனாய்வாளர் கூறுவதாவது: “உண்மை, நன்மை, அழகு என்பனவற்றை உள்ளவாறு அனுபவத்தில் உணர்வது மக்களின் குறிக்கோள் என்பது மேலைநாட்டவர் கொள்கை. இவற்றை நடைமுறையில் திருக்கோயில்களின் மூலம் நடத்திக் காட்டி வருகின்றனர் நம்மவர்கள். உண்மையை அடிப்படையாகக் கொண்டது கலை. இம்மூன்றும் இணைந்து விளங்கும் எழில் நிலையங்களே நம் நாட்டுத் திருக்கோயில்கள். அப்படிப்பட்ட கோயில்களில் கண்டறிந்த தத்துவ உண்மையும், அறநெறி நன்மைகளையும் கூறுவது இவரது நூல்.”

இசையினைப் பற்றிய நூல்களுள் குறிப்பிடத்தக்கவை கோ. தண்டபாணி எழுதிய ‘பழந்தமிழ் இசை’ என்பதாகும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டியத்தைப் பற்றிய உயரிய நூல் பாலசரஸ்வதியும் டாக்டர் ராகவனும் எழுதிய 'பரத நாட்டியம்' என்பதாகும். சி. ஆர். கண்ணன் எழுதிய 'நாட்டியக் கலை'யில் படங்களுடன் முத்திரையின் விளக்கத்தைப் பார்க்கிறோம்.

வாழ்க்கை வரலாறுகள்

இனி வாழ்க்கை வரலாற்றினைப் பற்றிய துறையில் உள்ள நூல்களைப் பற்றி ஓரிரண்டு வார்த்தைகள். பல துறைகளில் புகழ் பெற்ற பெரியோர்களது வாழ்க்கை நூல்கள் நமக்குக் கிடைத்துள்ளன. சைதன்யர், சதாசிவ பிரும்மேந்திரர், போப்பாண்டவர், ஆல்பர்ட் ஸ்விட்ஸர், சுந்தரமூர்த்தி நாயனார், ஸ்ரீ ரமணர், விவேகானந்தர், ஆண்டாள், காரைக்காலம்மையார், நம்மாழ்வார் ஆகிய சமயத் தலைவர்களைப் பற்றிய வரலாற்று நூல்களும், காந்தி, ஜான்ஸி ராணி, கட்டபொம்மன், குலோத்துங்க சோழன், ஆசாத் போன்ற தலைவர்களைப் பற்றியும், இலக்கியத் துறையில் பெரியோர்களாகிய ரவீந்திரர், பாரதி ஆகியோரைப் பற்றிய நூல்களும், விஞ்ஞானிகளாகிய லூயி பாஸ்டியூர், தாமஸ் ஆல்வா எடிஸன், கரும்பு ஆராய்ச்சியாளர் காலஞ்சென்ற சர். டி. எஸ். வெங்கட்ராமன், ஆல்பர்ட் ஈன்ஸ்டீன் ஆகியோரைப் பற்றிய நூல்களும் பிரசுரமாயின. அந்நூல்களுள் பெரும்பாலும் வயது வந்தவர்களுக்கு எழுதப்பட்ட முறையில் அமையாதது குறிப்பிடத் தக்கது. ஒருவரது வாழ்க்கை வரலாற்றை சிறந்த முறையில் மிகைப்படக் கூறாத, உள்ளது உள்ளபடி கூறும் நூல்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

நம்மவர்களுக்கு உள்ள இயல்பான தன்மையாலோ என்னவோ சுயசரிதை நூல்கள் இவ்வாண்டுகளில், இல்லையென்ற அளவுக்கு சுருங்கியுள்ளது. அப்படிக் கிடைத்திருக்கும் ஓரிரண்டு நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவும் வெளிநாட்டவர்களைப் பற்றியதாகவும் உள்ளன. மேலை நாட்டவர்களுக்கு டயரி வைத்துக் கொள்ளும் பழக்கம் இருப்பதால், அவர்களது வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய நூல்கள் மலிந்து காணப்படுகின்றன.

சரித்திர நூல்களுள் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டிருக்கும் தென்னிந்திய சரித்திரமும் (3 பாகங்கள்), அ. கி. பரந்தாமனாரது 'நாயக்கர் ஆட்சி'யும் குறிப்பிடத் தகுந்தவை. சோமலெயின் மாவட்ட வரிசை தமிழ் நாட்டு மாவட்டங்களைப் பற்றிக் கூறும் சுவைமிக்க "கெஜட்டியர்" போன்ற நூல்களெனக் கூறலாம்

குழந்தை நூல்கள்

குழந்தை நூல்களின் தரம் மிகஉயர்ந்துள்ளது என்று கூற வேண்டும். ஒரு காலத்தில் அரையணா புத்தகம் வெளியிட்டு வந்த தமிழ் நாட்டில் இன்று ஐந்து ரூபாய் நூலை வெளியிடும் நிலைமை வந்துள்ளது. குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் முயற்சியினால் பல பதிப்பகத்தினர் ஆண்டொன்றிற்கு நான்கு, ஐந்து புத்தகங்களேனும் வெளியிடுகின்றனர். 'பெரியவர்களுக்கு எழுதுவது கஷ்டம். குழந்தைகளுக்கு எழுதுவது சுலபம்' என்று நினைக்கலாம். ஏனென்றால் குழந்தைகள் பிழைகளைக் கண்டுபிடிக்க மாட்டார்கள் என்ற அபிப்பிராயமோ என்னமோ! ஆனால் குழந்தைகளுக்கு எழுதுவது கஷ்டம் என்று ராஜாஜி கூறியிருப்பது மிக உண்மை என்பது குழந்தை நூல் எழுதுபவர்கள் ஒத்துக் கொள்ளக் கூடியதாகும். குழந்தைகளுக்கான பத்திரிகைகளாகிய கண்ணன், கல்கண்டு ஆகியவைகளின் பணி போற்றத் தகுந்தது.

மேற்கோள் நூல்கள்

சாதாரணமாக தினசரி வாழ்க்கையில் நாம் உபயோகிப்பவை அகராதிகளாகும். இதைத் தவிர அவ்வப்பொழுது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேவைப்படும் விஷயங்கள் உடனுக்குடன் அறிவதற்கு வேண்டிய நூல்களையே மேற்கோள் நூல்களெனக் கூற லாம். ஆங்கிலத்தில் இருப்பதைப் போன்று பலதரப்பட்ட மேற்கோள் நூல்கள் நம் தமிழில் வருவதற்கு இன்னும் பல்லாண்டுகள் பிடிக்கும். பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகளில் விஷய அட்டவணை மிகத் தேவைப்படுகின் றது. ஒவ்வொருவருக்கும் பல பத்திரிகைகளை வாங்கிப் படிக்கும் வாய்ப்பு ஏற்படுவதில்லை. அப்படி வசதி ஏற்பட் டிருப்பினும் சிலவற்றை ஊன்றிப் படிப்பதும் மற்றவற்றை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பதாகவுமிருக்கும். நம் நிலையில் பத்திரிகைகளில் வெளிவரும் பல முக்கியமான விஷயங்களை நூல்களில் காணமுடியாத சமீபகாலக் குறிப்புகளை நாம் பார்த்து மறந்து விடுகிறோம். தேவையாயிருக்கும்பொழுது அதைப்பற்றி குறிப்பு எடுக்காதிருப்பது பற்றி வருந்து கிறோம். ஆங்கிலப் பத்திரிகைகளின் விஷயத்தை "Index to periodical literature" என்ற நூல் மூலம் பெறுகிறோம். அப்படி தமிழில் சில பத்திரிகைகளின் விஷயத்திற்கு அட்ட வணை தேவைப்படுகிறது. சமீப ஆண்டுகளில் வெளியாகிய முக்கிய மேற்கோள் நூல்களில் சிறந்தவை எனக் கருதும் சில நூல்களைப் பற்றிக் கூற வேண்டும்.

தமிழில் 'என்ஸைகளோபிடியா' இல்லையென்ற குறை தமிழ் வளர்ச்சி கழகத்தாரின் கலைக்களஞ்சியத்தின் ஒன்பது வால்யூம்கள் மூலம் தீர்ந்துவிட்டது. இது ஒரு மிகப் பெரிய சாதனை. மேற்கோள் நூல்களில் மிகச் சிறந்ததும் அவசிய மானதுமாகும். பைபிள், திவ்வியப் பிரபந்தம், தேவாரம், ஆகிய நூல்களுக்கு சொல் அகராதிகள், Concordance வெளி வந்திருப்பதை அறியும்பொழுது சங்க இலக்கியங்களுக்கெல் லாம் சொல் அகராதிகள் தேவை என்ற குறை நம்முன் நிற் கின்றது. தமிழ்ப் புலவர் அகர வரிசை என்ற 25 நூல் களில் வெளிவந்துள்ள சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் முயற்சி பாராட்டத்தக்கது. இதிலுள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு குறைபாடு ஆசிரியர்களது கால அளவு சரிவர காட்டப்படாததாகும். குறிப்பேடு என்ற நல்லதொரு பொது அறிவு நூல் கன்னிமாரா பொது நூலக அதிகாரியாகிய, தில்லை நாயகம் அவர்கள் எழுதியது, சமீபத்தில் வெளியாகியுள்ளது. இது ஒவ்வொரு ஆண்டும் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் நூல்களைப் பற்றிய நூல் விவரப் பட்டியலின் அவசியத்தைப் பற்றி உணர்ந்து சென்னை ஆவணக் களரியில் உள்ள நூல்களைத் தொகுத்து 1861 லிருந்து 1900 வரை வெளிவந்துள்ளவை, விஷயவாரியாக அமைக்கப்பட்ட 'தமிழ் நூல் விவரப் பட்டியல்' என்பது சமீப காலத்தில் வெளியிடப்பட்ட மிகச் சிறந்த நூல். இதைத் தவிர ஆண்டுதோறும் கல்கத்தா தேசிய நூலகத்தினரால் தொகுக்கப்படும் இந்திய தேசிய நூல் விவரப்பட்டியலின் தமிழ்ப் பகுதி தமிழக அரசாங்கத்தாரால் அச்சிடப்பெற்று தமிழ் நாட்டு நூலகங்களுக்கெல்லாம் இலவசமாக வழங்கப்படுகிறது.

பதிப்பகங்கள்

சென்னை பகல்லைக் கழகத்தில் Ph.D., M.Litt. பட்டம் பெறுவதற்கு எழுதப்பட்டுள்ள சில நூல்கள் (thesis) மேற்கோள் நூல்களாகும். எஸ். கனகசௌந்தரியின் 'சிலப்பதிகார சொல் ஆராய்ச்சி' வி. ராஜத்தின் 'தமிழின் வினைச் சொற்களின் மூலம், ஆர். சதாசிவத்தின் ஐங்குறு நூறின் விஷய அட்டவணை' ஆகியவைகளே அவைகள். கடைசியாக பதிப்பகங்களைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். மிகத்திறம் பட செயலாற்றி புதுப்புது துறைகளில் நூல்களை ஆண்டு தோறும் வெளியாக்கும் பதிப்பகங்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. ஒரு குறிப்பிட்ட துறையில் மட்டும் வெளிப்படும் நூல்களையே வெளியிட்டு வரினும் இப்பொழுது மற்றத் துறைகளிலும் நூல்களை வெளியிட்டு வருகின்றனர். இதைத் தவிர பல பதிப்பகங்கள் தோன்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யும் சீக்கிரத்தில் மறைந்து வருவதையும் நாம் பார்க்கிறோம். ஆங்கிலத்தின் தழுவலாகிய பல மர்மக் கதைகளை ஆபாசமான மேலட்டைகளுடன் அலங்கரித்த நூல்களை ஆண்டு தோறும் வெளியிட்டு ஒருவகை வாசகர்களை அதிகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன சில பதிப்பகங்கள். பழம் இலக்கிய நூல்களையே புதுப்போர்வையில் அச்சிட்டு, உரை என்கிற பெயருடன் சிறிது விளக்கம் கொடுத்து நூலை வெளியிடும் பதிப்பகங்களும் உள்ளன. உயர்தர நூல்களையே வெளியிடுவதென்ற குறிக்கோள் கொண்ட பதிப்பகங்களும் உள்ளன. தமிழ்ப் புத்தகத்தின் கட்டுக்கோப்பை நோக்கும்போது வங்க புத்தகக் கலைக்கு மிகவும் பிற்பட்டேயிருக்கிறோம் என்பது தெளிவாகிறது. வர்ணங்களுடன் கூடிய சித்திரங்களைக் கொண்ட விலைமாறி நூலின் அட்டைச் சித்திரமும் வங்க நூல்களைப் போன்றே கலை நிரம்பியதாக அமைய வேண்டும். தென் இந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட் என்னும் நிறுவனம் கடந்த எட்டு ஆண்டுகளாகப் பணி செய்து வருகிறது. பிரசித்தி பெற்ற நூலை மற்ற 3 மொழிகளில் மொழி பெயர்த்து பல பதிப்பகங்கள் மூலம் வெளியிடச் செய்வது இதன் முக்கியப் பணியாகும்.

வீட்டுக்கு ஒரு நூலகம்

வீட்டிற்கொரு புத்தகசாலை வேண்டுமென்ற கருத்துக் கொண்டு சலுகைகள் கொடுத்து நூல்களை வாங்கச் செய்வதில் இந்த டிரஸ்ட் பெரிதும் வெற்றி பெற்றிருக்கிறது. புத்தக விலையைக் குறைப்பதற்கும் அதிக அளவில் விற்பனை ஆகவேண்டுமென்ற கருத்துக்கொண்டும் நூலின் முதல் பதிப்பில் ஐந்தில் இரண்டு பங்கைவாங்கிக் கொள்கிறது. இக்காரணத்தால்தான் இதன் ஆதரவில் வெளியிடப்படும் நூல்கள் 5000 படிகள்வரை அச்சடிக்கப்படுகின்றன. இப்பணியைத் தவிர சமீபத்தில் டிரஸ்ட்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்களிடையே நூல் படிக்கும் பழக்கத்தைப் பற்றி ஒரு தணிக்கை நடத்தியது. அதன் முடிவு ருசிகரமானது.

(1) பெரும்பாலான பெண்கள் இளமைப் பருவத்தில் படிக்கும் வழக்கத்தை துவக்கி இருபதிற்குமேல் அதிகமாகப் படிப்பதில் ஈடுபட்டு முப்பதுக்கு மேல் சற்று குறைந்து நாற்பதுக்கு மேல் சற்று அதிகரித்து இறுதியில் ஐம்பதுக்கு மேல் மிகவும் குறைந்து விடுகிறது.

(2) பெண்களில் இருபத்து மூன்று சதவிகிதத்தினர் புத்தகத்தின் தோற்ற அழகினால் வாங்கும்படி தூண்டப்படுகின்றனர்.

(3) பெண்களில் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்டவர் ஆசிரியர் பெயரைக் கொண்டு புத்தகத்தை வாங்குகின்றனர்.

(4) ஒரு பெண் சாதாரணமாக ஒரு நாளைக்கு 2 மணிநேர வீதம் படித்து ஒரு புத்தகத்தை ஒரு வாரத்தில் முடிக்கிறாள்.

(5) சாதாரண சிறுவர் தடித்த அட்டைப் புத்தகத்தை விரும்புகின்றனர்.

(6) சிறு குழந்தைகள் சுமார் 32 பக்கத்திற்குக் குறைவான சிறிய நூல்களை விரும்புகின்றனர். பெரிய எழுத்துகளில் அச்சிட்டதையே விரும்புகின்றனர்.

பதிப்பகங்களைப் பற்றி கூறுகையில் கேரளத்தில் மிக வெற்றியுடன் இயங்கி வரும் சாகித்திய பிரவர்த்தக சங்கம் என்ற நிறுவனத்தைப் போன்று தமிழகத்தில் இல்லாதது பெருங்குறையே என்று கூற வேண்டும். பெயர்பெற்ற நூலாசிரியர்களது கூட்டுறவு சங்கம் இந்தியாவில் இது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒன்று தான் என்று கூறப்படுகிறது. இக்கூட்டுறவு சங்கத்தின் மூலம் நூலாசிரியர்களுக்கு தங்கள் நூலின் விற்பனையில் 'ராயல்டி' 30 சதவிகிதத்திற்கு அதிகம் பெற முடிகிறது. இவ்வளவு அதிக 'ராயல்டி' இந்தியாவில் எழுத்தாளர் பெறுவதில்லை.

தமிழ்நாடு எங்கும் நூலகங்கள் பெருகி வரும் இந்நாட்களில் புத்தகங்கள் விற்பனையாவது எளிது. தவிர படித்தவர் தொகை பெருகி வருவதாலும் தமிழ் ஆட்சிமொழியாயிருப்பதாலும் எதிர்காலம் தமிழ் நூல்கள் பிரசுரத்தைப் பொறுத்த மட்டில் சிறப்பாக விளங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆஷ் கொலை வழக்கு

(சுதேசி)

சில நாட்களுக்கு முன்னால் தேசபக்தர், தியாகி வாஞ்சி அய்யரின் மனைவி சென்னை அரசாங்கம் அளிக்க இருந்த உபகாரச் சம்பளத்தின் முதல் தவணையைக் கூடப் பெறுமல் திடீரெனக் காலமான செய்தி வெளிவந்தது. தியாகத்திற்கு விலையா என்று கேட்பது போல அமைந்த அந்த சோகச் செய்தி ஆஷ் கொலையை மீண்டும் என் நினைவுக்குக் கொண்டு வந்தது.

செப்டம்பர் 11, 1911. சென்னை உயர்நீதிமன்றம். அன்று முக்கியமான சதி வழக்கொன்று விசாரணைக்கு வருகிறது என்று வக்கீல்களிடையேயும், பொது மக்களிடையேயும் ஒரே பரபரப்பு. இந்த விசாரணைக்காக பிரதம நீதிபதி சர். ஆர்னல்ட் ஒயிட், ஜஸ்டிஸ் சங்கர நாயர், ஜஸ்டிஸ் ஐலிங் மூவரும் கொண்ட ஸ்பெஷல் பெஞ்ச் அமைக்கப்பட்டு, அன்றுதான் முதல்நாள். கைதிகளின் தரப்பில் அந்தக் காலத்தில் பிரசித்திபெற்ற வக்கீல்கள் வாதாட முன்வந்தனர். முன்னாள் சென்னைப் பிரதமர் ஆந்திர கேசரி டி. பிரகாசம்காரு, டி. எம். கிருஷ்ணசாமி அய்யர், ஜே. ஸி, ஆடம் துரை முதலியோர்.

இவ்வளவு பெரிதாக நடக்கின்ற வழக்கில் கைதிக் கூண்டைப் பார்த்தால், நமக்குச் சற்று வியப்புத் தோன்றுகிறது. குற்றம் சாட்டப்பட்டு நிற்கும் பதினன்கு பேர்களில் இருவரைத் தவிர எல்லோரும் இளைஞர்கள்: முப்பது வயதுக்குட்பட்டவர்கள். இவர்கள் மேல் சாற்றப்பட்ட குற்றமோ ராஜத் துரோகம், கொலை முதலியன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதல் குற்றவாளி நீலகண்ட பிரமச்சாரி இருபத்தொரு வயதுப் பத்திரிகையாளர். சங்கர கிருஷ்ண அய்யர் 22 வயதுக்காரரர். நில உடமைக்காரர். மடத்துக்கடி சிதம்பரம் பிள்ளை 24 வயது மளிகைக்கடை உரிமையாளர். முத்துக்குமாரசுவாமி பிள்ளை 45 வயது — குயவர். சுப்பையாப் பிள்ளை வயது 43, வக்கீல் குமாஸ்தா. 25 வயதான ஜகந்நாத அய்யங்காரும், பிச்சுமணி ஐயரும். 23 வயது தாண்டாத வேம்பு அய்யருப் சமையல்காரர்கள், ஹரிஹர அய்யர் 21 வயது, வியாபாரம் முப்பது வயதான தேசிகாச்சாரியும் வியாபாரி. பதினெட்டே வயதான அழகப்ப பிள்ளை, 20 வயது சாவடி அருணாசலம் பிள்ளை, 24 வயதான பாபுப் பிள்ளை இவர்கள் விவசாயிகள். வந்தேமாதரம் சுப்பிரமணிய அய்யர் 26 வயதான பள்ளிக்கூட ஆசிரியர்.

இவர்களில் நீலகண்டன், சங்கர கிருஷ்ணய்யர், ஹரிஹரய்யர், தேசிகாச்சாரி, வேம்பு அய்யர், சாவடி அருணாசலம் பிள்ளை, அழகப்ப பிள்ளை, வந்தேமாதரம் சுப்பிரமணிய அய்யர் இவர்களுக்கு மட்டுமே ஆங்கிலக் கல்வி உண்டு. மற்றும் இதில் அறுவர் வேளாளர், எட்டுப் பேர் பிராமணர். இப்படி பலதரப்பட்ட தொழிலிருக்கும், பெரும்பாலும் முப்பது வயது தாண்டாத இந்த இளைஞர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை வீழ்த்த சதி செய்தார்கள் என்றும், ஆஷ் துரை கொலையுண்டது இச்சதியின் விளைவே என்றும் இந்த இளைஞர் பேரில் வழக்கு.

இப்படி ஸர்வ வல்லமை பொருந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே கவிழ்க்க முற்பட்ட இந்த வழக்கை புரிந்துகொள்ள நாம் திருநெல்வேலிக்குப் போக வேண்டும்.

ஆஷ் கொலை செய்யப்பட்டான்

திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடி போகும் ரயில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாதை மணியாச்சி ஜங்ஷன் வழியாகப் போகிறது. அங்கு தான் தூத்துக்குடிப் பிரயாணிகள் வண்டி மாற்ற வேண்டும்.

1911 ஜுன் 17ந் தேதி காலையில் தூத்துக்குடி திருநெல்வேலி வண்டியில் முதல் வகுப்பு ஒன்றில் ஜில்லா கலெக்டர் ஆஷ் துரை, ஐ. ஸி. எஸ். அமர்ந்திருந்தான்.

திடீரென வாசற்படியில் நிழல் தட்டியது. ஆஷ் நிமிர்ந்து பார்த்தான். அதற்குள்ளாக வாயிற்படியில் நின்றிருந்தவன் கையிலிருந்த பிரௌனிங் துப்பாக்கி இரு முறை வெடித்து அதிர்ந்தது. ஆஷ் ரத்த வெள்ளத்தில் விழுந்து பிணமானான். டவாலிச் சேவகன் திகைப்போடு ஓடி வந்தான். "ஐயோ, கொலை" என்று ஓலமிட்டான். சுட்டவன் கையில் பிடித்த துப்பாக்கியோடு ஓடினான். ஒரு சிலர்தான் அவனைப் பிடிக்க ஓடினார்கள். பெரும்பாலோர்க்கு துப்பாக்கி பிடித்திருந்த அவனைத் தொடர்ந்து செல்ல பயம். கண்மூடித் திறப்பதற்குள் அங்குள்ள கக்கூஸ் ஒன்றில் நுழைந்து உட்புறம் தாளிட்டுக் கொண்டான் அவன். அதற்குள் சில போலீஸ்காரர்களும் வந்து சேர்ந்தனர். கதவை உடைத்து கொலையாளியைப் பிடிப்பது என்ற தீர்மானத்தோடு வந்த அவர்களது காதுகளில் மீண்டும் 'டுமில்' என்ற வெடிச் சப்தம் கேட்டு ஓய்ந்தது.

வாஞ்சி தற்கொலை

கதவைத் திறந்து உள்ளே நுழைந்த அவர்களது கண்களில் இன்னும் புகை கக்கிக் கொண்டிருந்த துப்பாக்கியை மார்பிலே அழுத்திக்கொண்டு மாய்ந்து கிடந்த ஓர் இளைஞன் தென்பட்டான். சிறிதாவது அச்சமற்ற அந்த முகத்தில் ஒரு புன்சிரிப்பும், தன் கடமையைச் செய்து முடித்த ஒரு பெருமிதமும், சாந்தியும்தான் பொலிந்தன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவனது பையிலிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அதன்படி, கொலையாளி செங்கோட்டையைச் சேர்ந்த வாஞ்சி ஐயர் என்று தெரிந்தது. மேலும் அக் கடிதத்தில் கண்டது பின்வருமாறு:—

''வெள்ளை எதிரிகள் நம் தேசத்தை அபகரித்தது மட்டுமின்றி, நமது சநாதன தர்மத்தையும் காலடியில் போட்டு நசுக்கி அழிக்கிறார்கள். இன்று ஒவ்வொரு இந்தியனும், நமது எதிரியான ஆங்கிலேயனை இங்கிருந்து துரத்தி, தர்மத்தையும், சுதந்திரத்தையும் நிலைநாட்ட முற்பட்டிருக்கிறான். ராமனும், கிருஷ்ணனும், அர்ஜுனனும், சிவாஜியும், குரு கோவிந்தசிம்மனும் வாழ்ந்து ஆண்ட இந்த நாட்டிலே பசுவை உண்ணும் ஒரு வெள்ளை மிலேச்சனான ஐந்தாம் ஜார்ஜுக்குப் பட்டம் கட்ட ஆடம்பரமான ஏற்பாடுகள் நடக்கின்றன. இந்த நாட்டில் அவன் காலடி வைத்ததும், அந்த ஜார்ஜைக் கொல்வதாக நாங்கள் மதராஸிகள் மூவாயிரவர் சபதம் கொண்டுள்ளோம். அவர்கள் அனைவரிலும் எளியேனான நான் அதைத் தெரிவிக்கும் வகையில் இன்று இச்செயலைச் செய்தேன். இதுதான் இன்று ஹிந்துஸ்தானிலுள்ள ஒவ்வொருவனுடைய கடமையாகும்.''

தகவல்கள் சேகரிப்பு

உடனே செங்கோட்டை போலீஸார் வாஞ்சியைப் பற்றிய தகவல்களைச் சேகரிக்கத் தொடங்கினர். அதன் விளைவாக 19-ந் தேதி இரண்டு போலீஸ் படைகள் தூத்துக்குடிக்குப், ஒட்டப்பிடாரத்துக்கும் அனுப்பப் பட்டன.

அன்றிரவு 10 மணிக்கு தூத்துக்குடி கே.வி. ஆறுமுகம் பிள்ளை வீட்டில் சோதனை நடந்தது. ஆறுமுகம் பிள்ளை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுதந்திர இயக்கத்தில் ஈடுபாடு இருந்தும், உள்ளத்தால் கோழை. எனவே வாஞ்சியைப் பற்றித் தனக்குத் தெரிந்த பல விஷயங்களையும் போலீசுக்குத் தெரிவித்ததோடு நில்லாமல், மேலும் ஒரு புரட்சி—சதிக்கூட்டம் ஒன்று இயங்கி வருவதாகவும் வாக்குமூலம் கொடுத்தான். மறுநாள் திருநெல்வேலியில் ஜில்லா போலீஸ் அதிகாரி முன்னிலையிலும் அதே வாக்குமூலம் கொடுத்தான். பின்னால் ஜில்லா மாஜிஸ்டிரேட்டால் மன்னிப்பு வழங்கப்பட்டு, பிறகு நடந்த சதி வழக்கில் 'அப்ரூவர்' என்ற இழிநிலைக்கு இறங்கினான்.

இதே மாதிரி ஓட்டப்பிடாரம் போலீஸ் சோதனைகளின் விளைவாக தூத்துக்குடி சோமசுந்தரம் என்பவனது வீடும் சோதனைக்குள்ளாகியது. அவனும் ஆறுமுகத்துக்கு அண்ணாவாகத் தனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லி, ஜில்லா மாஜிஸ்டிரேட்டிடம் மன்னிப்புப் பெற்று அப்ரூவராக மாறினான்.

அவர்கள் கொடுத்த வாக்குமூலத்தின் சாராம்சம் இது. இருவரும் தூத்துக்குடிக்காரர்கள். 1908-ம் ஆண்டு திருநெல்வேலி கலகங்களுக்கு முன்னால் வ. உ. சி., சிவா இருவருடைய ஆவேசமான சொற்பொழிவுகளையும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதனால் இருவரும் புதுச்சேரியிலிருந்து வந்து கொண்டிருந்த புரட்சிப் பத்திரிகைகளுக்கு சந்தாக் கட்டி அவற்றைப் படித்து அதன் மூலம் ஓரளவு தேச விடுதலை விஷயங்களில் மனமாறுதல் அடைந்தனர். 1910-ம் ஆண்டு இரண்டாவது குற்றவாளியான சங்கர கிருஷ்ணய்யர் தூத்துக்குடி வந்து, இருவரிடமும் புதுச்சேரியிலிருந்து நீலகண்ட பிரமச்சாரி தென்காசிக்கு வந்திருப்பதாகவும், அவர் கூட்டப்போகும் ஒரு கூட்டத்திற்கு இருவரும் வரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். ஆறுமுகம் பிள்ளை மட்டும் தென்காசிக்குச் சென்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மடத்துக்கடை சிதம்பரம் பிள்ளை வீட்டில் மூன்று புது முகங்களோடு ஆறுமுகம் பிள்ளைக்கு அறிமுகம் கிட்டியது. முதல்வர் நீலகண்ட பிரமச்சாரி. பின்னவர் சிதம்பரம் பிள்ளையும், "வந்தே மாதரம்" சுப்பிரமணிய அய்யரும். நீலகண்டன் ஆறுமுகத்தைத் தனியே அழைத்துச் சென்று தான் பாரதியின் "சூர்யோதயம்" பத்திரிகையின் கட்டுரையாளரென்று கூறி, அன்று தான் கூட்டும் கூட்டத்தின் நோக்கத்தை விவரித்தார்.

புரட்சி இயக்கம்

"வ. உ. சி.யும், சிவாவும் நாட்டுக்கு நல்லது செய்ய முற்பட்டும், அவர்களை அரசாங்கம் கடுமையாகத் தண்டித்து விட்டது. வெடிகுண்டுகள் தயாரித்தும், மிட்னப்பூர் அலிப்பூர் வழக்குகளில் சர்க்கார் கையாண்ட அடக்கு முறையால், வங்காளிகளும், அதைக் கைவிட்டார்கள். நாஸிக் கலெக்டரையும், அஸுடோஷ் பிஸ்வாஸையும் கொன்றவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு விட்டது. ஆங்கிலேயர்களைக் கொல்வது சுவராஜ்யத்திற்காக. அவர்களை எப்படியும் விரட்டுவது நமது கடமை. ஆனால் அதற்கு நாடெங்கிலும் புரட்சி இயக்கத்தைத் தோற்றுவிக்க வேண்டும். அதற்கான ஆயுதங்கள் நான் தருவேன். நான் சரியென்றதும், சிப்பாய்க் கலகத்தைப் போல ஒரு குறிப்பிட்ட நாளில் நாடெங்கும் புரட்சிமூண்டு, அன்றே அத்தனை வெள்ளையர்களையும் கொன்று தீர்த்து விட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு இயக்கத்தின் கிளை தான் இன்று துவங்கவிருக்கிறது."

இரத்தப் பிரமாணம்

இப்படிச் சொல்லிவிட்டுப் பின் அவர்களை ஒரு சபதம் எடுத்துக்கொள்ளச் சொன்னான் நீலகண்டன். ஆறுமுகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வார்த்தைகளில் சபதம் எடுத்துக்கொண்டது பின் வருமாறு :—

"அங்கே காளியின் படம் ஒன்று இருந்தது. விபூதியும், குங்குமமும், புஷ்பங்களும் எதிரில் இருந்தன. நாங்கள் ஐவரும் ஒரு வரிசையில் உட்கார்ந்தோம். நீலகண்டன் சற்றுத் தொலைவில் அமர்ந்து கடிதத்தில் ஏதோ எழுதினன். அங்கிருந்த குங்குமத்தை நீரில் கரைத்து, ஆளுக்கொரு வாய் குடித்தோம். இது வெள்ளையனின் இரத்தம் என்று சொல்லிக்கொண்டே, அந்தக் கடிதத்தின் தலைப்பில் வந்தேமாதரம் என்று குறிப்பிடப்பட்டு, அதனடியில் "வெள்ளைக்காரர்களையெல்லாம் நாம் கொல்ல வேண்டும், இச் சங்கத்தின் நடவடிக்கைகள் ரகசியமாக இருக்க வேண்டும், இதைச் சேர்ந்த ஒவ்வொருவரும், தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்ய சித்தமாக இருக்க வேண்டும். சங்கத்தின் நடவடிக்கைகளை வெளியிடுபவர் வங்கத்தில் கோஸெய்னைப் போல் கொல்லப்பட்டு, நகரத்திற்குப் போவார்கள். இப்போது குங்கும நீரைக் குடிப்பது போல், நாளைக்கு வெள்ளையர் இரத்தம் குடிப்போம்" என்றும் காணப்பட்டது.

பிறருக்குத் தெரியாமல் தங்களுக்குள்ளேயே கடிதம் எழுதிக் கொள்ளவேண்டி, ஒவ்வொருவருக்கும் புனைப் பெயர்கள் கொடுக்கப்பட்டு, அனைவரும் அப் பெயர்களில் கடிதத்தில் கையொப்பமிட்டு, தங்கள் பெருவிரலைக் கீறி, அந்த இரத்த விரலடையாளமும் பதித்தனர்.

இது ஆறுமுகம் சொன்ன கதை. பிறகு ஆறுமுகம் தூத்துக்குடிக்குச் சென்று, புது ஆட்கள் திரட்ட வேண்டுமென்றும் பேலும் புதுச்சேரிப் பத்திரிகை 'தர்ம'த்தைப் பலரிடம் விநியோகிக்க வேண்டும். இந்தத் தீர்மானங்களோடு ஆறுமுகப் பிள்ளை தூத்துக்குடி திரும்பினன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐந்தாறு மாதங்களுக்குப் பிறகு சங்கர கிருஷ்ணய்யரின் துணையோடு, மற்றோர் ரகசியக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, நீலகண்ட பிரமச்சாரியும் வந்து சேர்ந்தார். அன்று நீலகண்டப், சங்கர கிருஷ்ணன், முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை, மாடசாமிப் பிள்ளை, ஆறுமுகம் பிள்ளை, சோமசுந்தரம் ஆகியோர் இரத்தப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

சோமசுந்தரம், ஆறுமுகம் இருவருடைய வாக்குமூலத்தைத் தவிர, சுந்தரபாண்டியபுரம் ராமசாமி அய்யரும் மூன்றாவது 'அப்ரூவர்' ஆகக் கிடைத்தார். ஆஷ் கொலை நடந்த ஐந்தாம் நாள் தென்காசி போலீஸ் அவரது வீட்டை சோதனையிட்டனர். ஆனால் அவர் கிட்டவில்லை. ஏறக்குறைய ஒரு மாதத்துக்குப் பின்னரே போலீசார் அவரைக் கண்டு, அவரிடமிருந்து ஒரு வாக்கு மூலமும் பெற்றனர், அதிலிருந்து கிடைத்த செய்தி :—

நீலகண்ட பிரம்மசாரியின் புரட்சிக்குழு செங்கோட்டையிலும், புனலூரிலும் 1910-ம் ஆண்டு ஆகஸ்டில் நன்கு பரவியது ராமசாமி அய்யருக்கு வாஞ்சியும், ஹரிஹரய்யரும் ஏற்கெனவே அறிமுகமானவர்கள். ஒரு முறை ஹரிஹரய்யரும் அவருமாகக் கொல்லத்துக்கு வந்து பாபு பிள்ளையை சந்தித்தனர். பாபுப் பிள்ளை தாங்கள் நடத்தி வந்த ஒரு சங்கத்தின் உபயோகத்திற்காக அவர் கிராமபோனை விலைக்கு தரும்படி கேட்டார். புனலூரில் மீண்டும் சந்திக்கும்போது கிராமபோனைத் தருவதாக ஏற்பாடாயிற்று. இருவரும் புனலூருக்குச் சென்றார்கள். அங்கே பாபுப் பிள்ளை வீட்டில் வாஞ்சி, நீலகண்டன், மாடசாமி, சங்கரகிருஷ்ணன், ஜகந்நாத அய்யங்கார் ஆகியோரைச் சந்தித்தனர். பின் ஆவணி அவிட்டத்திற்கு ஊருக்குப் போய். மீண்டும் அனைவரும் புனலூரிலே கூடினர். இந்தக் கூட்டத்தில் மேலும் இருவர் செங்கோட்டை பிச்சுமணி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அய்யரும், தர்மராஜ அய்யரும் கலந்து கொண்டனர். (இந்த தர்மராஜ அய்யர் பின்னால் கைது செய்யப்பட்டு காவலில் இருந்தபோது தற்கொலை செய்து கொண்டார்.)

பாபுப் பிள்ளையின் வீட்டில் அவர்கள் தங்கியிருந்த சில நாட்களில் நீலகண்ட பிரமச்சாரி, அரவிந்த கோஷ் சுப்ரமணிய பாரதி, விபின் சந்திர பால் திலகர் இவர்களைப் பற்றித் தீவிரமாகப் பிரசங்கங்கள் செய்து, எல்லா இந்தியர்களும் அவர்களைப்போல் வாழ்ந்தால் விரைவில் சுயராஜ்யம் கிட்டுமென்றும் குறிப்பிட்டனர். மேலும் அவர்களுடைய கூட்டத்தைப் போன்றக் புரட்சி கூட்டங்கள் பம்பாய் பரோடா, புதுச்சேரி மற்றும் பல இடங்களில் இருப்பதாகவும் புதுச்சேரியில் வெள்ளையர்களை விரட்டுவதற்கு வேண்டிய குண்டுகளும், துப்பாக்கிகளும் இருப்பதாகவும் குறிப்பிட்டான். பின்னர் தென்காசியிலும், தூத்துக்குடியிலும் நடந்தது போல் இரத்தப் பிரமாணம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இது ராமசாமி அய்யரின் வாக்குமூலத்தில் கண்ட செய்திகள்.

பத்திரிகைகளுக்கு தடை

இவற்றைத் தவிர சர்க்கார் தரப்பில் சாட்சியாக வந்த செங்கோட்டை வெங்கட்ராமய்யர் ஒரு தகவலை வெளியிட்டார் அதாவது நீலகண்ட பிரம்மசாரி வருகைக்கு முன்னேயே செங்கோட்டையில் பாரத மாதா சங்கம் என்ற ஒரு சங்கம் இயங்கி வந்ததாகவும், அதில் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட பலரும் உறுப்பினர்களாக இருந்ததாகவும், அதன் முக்கிய அலுவல் புதுச்சேரி பத்திரிகைகளான 'இந்தியா', 'விஜயா', 'சூர்யோதயா' (பாரதியார் நடத்தியவை) முதலியவற்றைத் தருவித்து படித்து, சுதேசி, சுய ராஜ்யம் போன்ற விஷயங்களை விவாதிப்பதாகும். ஆனால் 1910.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மார்ச், ஏட்ரல் மாதங்களில் இந்தப் பத்திரிகைகளுக்கு சர்க்கார் தடையுத்திரவு விதித்ததும், இந்த சங்கம் அலுவலில்லாமல் தானே மூடியது.

ஆனால் வெங்கட்டராமய்யர் வாக்குமூலத்தின்படி 1910 பிப்ரவரி 12-லிருந்து மார்ச் மாதத்துக்குள் இச் சங்கத்தின் கூட்டமொன்று கூடியதாகவும், அதில் அவரது கண்களைக் கட்டி, தர்மராஜய்யர் அடியிற்கண்ட பிரமாணத்தைச் சொல்லச் சொன்னதாகவும் தெரிகிறது:—

''நான் இந்த சங்கத்தில் சேருகிறேன். சங்கத்தின் பிற உறுப்பினர்களை எனது நண்பர்களாகவும் சகோதரர்களாகவும் கருதுவேன். அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வேன். இந்த சங்கத்தின் நடவடிக்கைகளை நான் பிறருக்கு வெளியிட மாட்டேன். அப்படி வெளியிட்டால் ரிஷிகளையும், காராம் பசுக்களையும் கொன்ற பாவத்துக்காளாவேன் ''

இந்த மூன்று அப்ரூவர்களின் சாட்சியங்களை தவிர போலீஸ் கேசுக்கு உதவியது நீலகண்டத்தின் வாக்குமூலம். நீலகண்டன் ஜூலை 12, 14 தேதிகளில் கொடுத்த வாக்குமூலத்தில் தென்காசி தூத்துக்குடி கூட்டங்களில் தான் பங்கெடுத்துக் கொண்டதாக ஒப்புக் கொண்டான். பின்னால் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, 12-ந் தேதி வாக்குமூலம் தானாகக் கொடுத்தது என்றும், 14-ந் தேதி வாக்குமூலம் போலீஸ் மிரட்டலுக்குப் பயந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றே கோழைத்தனத்தால் தான் கொடுத்ததென்றும் கூறினான்.

வழக்கு

இந்தச் சாட்சியங்களை கொண்டும், மேலும் குற்றம் சாட்டப்பட்ட பதினான்கு கைதிகளிடமிருந்தும், ஆறுமுகம், சோமசுந்தரம், ராமசாமி ஐயர் மற்றும் சம்பந்தப்பட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பலரிடமிருந்தும் கிடைத்த கடிதங்களைக் கொண்டும், அவர்கள் மேல் சாற்றப்பட்ட குற்றச்சாட்டு என்னவெனில், 1910 ஏப்ரல் மாதத்திலிருந்து 1911 ஜூன் மாதத்திற்குள்ளாக செங்கோட்டை, தென்காசி, தூத்துக்குடி, புனலூர், ஒட்டப்பிடாரம் முதலிய பல இடங்களிலும் சதிக் கூடடங்கள் அமைத்து, ஒரு குறிப்பிட்ட நாளில் பிரிட்டிஷ் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டி நாட்டிலுள்ள வெள்ளையர்களனைவரையும் கொல்லச் சதி செய்ததாகவும், அந்தச் சதியின் விளைவே கலெக்டர் ஆஷ் துரையின் கொலை என்பதேயாகும்.

இந்த வழக்கு 1911 செப்டம்பர் 11-ந் தேதி விசாரணைக்கு வந்தது. பின்னர் 79 நாட்கள் நடந்து, 1912 பிப்ரவரி 2-ந் தேதியோடு முடிவடைந்தது. இரு தரப்பிலுமாக நூற்றுக்கணக்கான சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். ஏராளமான கடிதங்கள், பத்திரிகைத் துணுக்குகள் முதலியன சாட்சியங்களாகத் தரப்பட்டன. பின்னர் பிப்ரவரி 15-ந் தேதி மூன்று நீதிபதிகளின் தீர்ப்புக்களும் வெளிவந்தன.

குற்றப்பத்திரிகைகள் வாசிக்கப்பட்டதும், அத்தனை குற்றம் சாட்டப் பெற்ற எதிரிகளும் தாங்கள் குற்றவாளிகளல்ல என்று வாதாடினர்,

நீலகண்ட பிரம்மச்சாரி வாக்குமூலம்

நீலகண்ட பிரம்மச்சாரி தனக்கும் புதுச்சேரிக்கும் சம்பந்தம் உண்டானாலும் புதுச்சேரிப் பத்திரிகைகளுக்குத் தான் எழுதியனவெல்லாம் வேதாந்த மத விஷயங்களைப் பற்றியேதான் என்றும், தான் திருநெல்வேலிக்கும் திருவிதாங்கூருக்கும் வந்து போனதெல்லாம் தான் வெளியிட நினைத்த நூலுக்காக நன்கொடை திரட்டவும்தான் என்றும் கூறினர். மேலும் ராஜத் துரோகிகள் எவரையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனக்குத் தெரியாதென்றும், அப்படி சம்பந்தப்பட்டிருந்தால் அது தெரியாமலேயே அவர்களோடு பழகியிருப்பதாகவும், பாரத மாதா சங்கம் பிரஸ்தாபப்பட்ட சதிக் கூட்டம் தொடங்கியதாகச் சொல்லப்படும் தேதிக்கு முன்பாகவே இயங்கி வருவது எல்லோரும் அறிந்த உண்மையென்றும் வாதாடினார். மேலும் பேசுகையில் தென்காசி, புனலூரில் கூட்டம் நடந்ததாகச் சொல்லப்பட்ட தேதிகளில் தான் அங்கு இல்லையென்றும் தூத்துக்குடி கூட்டத்தின் போது தான் அங்கு இருந்த போதிலும், ஒரு மத போதகர் என்ற நிலையிலேயே இருந்ததாகவும் குறிப்பிட்டார். நான் நூல் வெளியிடவென்று அவர்களிடமிருந்து பெற்ற தொகையை செலவிட்டபடியால் அப்ருவர்களுக்குத் தன் மேல் பகை என்றும் நீலகண்டம் குறிப்பிட்டா

சங்கர கிருஷ்ண அய்யர் வாக்குமூலம்

சங்கர கிருஷ்ணய்யரோ, முதல் எதிரியான நீலகண்டத்தைத் தனக்கு விசேஷமாகத் தெரியாதென்றும், தற்செயலாக 1908-ல் சென்னையிலும், 1910-ல் மலையாளத்திலும் சந்தித்ததாகவும் கூறினர். மேலும் ஆஷ் கொல்லப்பட்ட தினத்தன்று தான் வாஞ்சி அய்யருடன் இருக்கவில்லை என்பதற்கு சாட்சிகளையும் கொண்டு வந்தார்.

ஏனைய எதிரிகளும் இப்படியே தாங்கள் ஏதுமறியாதவர்களென்றும், போலீசார், விரோதிகள் இவர்களுடைய தூண்டுதலாலும்தான் இந்தக் குற்றச் சாட்டுக்களில் மாட்டிக் கொண்டதாகவும் குறிப்பிட்ட தேதிகளில் தாங்கள் அந்த இடங்களில் இல்லை என்பதற்கு சாட்சிகள் இருப்பதாகவும் கூறினர்.

தீர்ப்பு

மூன்று நீதிபதிகளும் வழக்கைப் பல கோணங்களிலிருந்தும் ஆராய்ந்து நீண்ட தீர்ப்பு வழங்கினர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால் பிரதம நீதிபதி ஒயிட், அயிலிங் இருவரும் கொடுத்த தீர்ப்பினின்றும் ஜஸ்டிஸ் சங்கர நாயரின் தீர்ப்பு சில விஷயங்களில் வேறு பட்டிருந்தது. முக்கியமாக அப்ரூவர் சாட்சியத்தை வேறு தனியான சாட்சியத்தின் பலமில்லாமல், ஒப்புக் கொள்ளக்கூடாது என்பதாகும். இந்த விஷயத்தில் பிரதம நீதிபதியும் அயிலிங் துரையும் அப்படிப் பட்ட சாட்சியத்தை ஒப்புக் கொள்ளலாமென்றும் ஜஸ்டிஸ் சங்கர நாயர் அதை ஒப்புக் கொள்ளக்கூடாது என்றும் கருதினர்.

ஜஸ்டிஸ் சங்கர நாயரின் தீர்ப்பு மிகத் தெளிவாகவும்; விரிவாகவும் அமைந்தது. இந்த சதித் திட்டம் உண்மையில் நாட்டில் ஏற்பட்டுள்ள தேசிய விழிப்பின் எதிரொலி என்று அவர் குறிப்பிட்டார். சுதேசி, ஒத்துழையாமை இவற்றை விளக்கியதோடு, வ. உ. சி., சுப்ரமணிய சிவா, பாரதி இவர்களைப் பற்றியும் தமது தீர்ப்பில் குறிப்பிட்டார். சரித்திர ரீதியில் வழக்கை ஆராயும்போது 1906-ம் ஆண்டு அக்டோபரில் வ. உ. சி. சுதேசிக் கப்பல் தொடங்கி, பின்னர் அது மூடப்பட்டதைக் குறிப்பிட்டு, திருநெல்வேலி கலகத்தின் எதிரொலியாகத் தூத்துக்குடியில் ஆஷ் கூட்டத்தில் சுட உத்தரவு கொடுத்ததையும் குறிப்பிட்டார். அந்தச் சம்பவங்கள் தமிழ் நாட்டில் எழுப்பிய தேசிய அலைகளை அவர் குறிப்பிட்டு, "ஆங்கிலேயனும் சிதம்பரம் பிள்ளையும்" பாடலைப்பாடி மக்களைத் தட்டி எழுப்பியதையும் குறிப்பிட்டு, இப்படிப்பட்ட வெள்ளையர் துவேஷம் தான் ஆஷ் கொலையாக முடிவடைந்தது என்றும் சுட்டிக் காட்டினார்.

அவரது தீர்ப்பின் சாரம் பின் வருமாறு:

தூத்துக்குடி சுதேசி இயக்கத்தில், முக்கிய பங்கு பெற்ற ஊர், அங்குள்ள சுதேசி, அந்நிய நாட்டு பகிஷ்காரப் பிரசாரகர்களுக்கும், அங்குள்ள வெள்ளை சர்க்கார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதிகாரிகள், தனிப்பட்ட வெள்ளையர்கள் இவர்களுக்கு மிடையே அதனால் பகைமை மூண்டது. அங்குள்ள வெள்ளை அதிகாரியான ஆஷ் துரை தன் அதிகார பலத்தினால் சுதேசித் தொழில்களை ஒழித்தான் என்பது சுதேசி பக்தர்களின் கருத்து; சுதேசிக் கப்பல் கம்பெனியைக் கவிழ்த்ததும், ஆஷ் துரையின் சதிதான் என்ற எண்ணம் தான் வாஞ்சியை இக்கொலையில் ஈடுபடச் செய்தது. ஆனால் முதல் குற்றத்திற்கும், இரண்டாம் குற்றத்திற்கும் நேரடியான சம்பந்தமில்லை என்பது மட்டுமின்றி, இரண்டாவது முதலாவதற்கு நேர் மாறானது.

மேலே குறிப்பிட்ட எண்ணம்—அதாவது அதிகார வர்த்தினரைப் பற்றிய எண்ணத்தின் விளைவுதான் சுதேசி, அந்நியப் பொருள் பகிஷ்காரம் இவற்றை லட்சியமாகக் கொண்ட இரகசியக் கூட்டங்களின் தோற்றம்.

புதுச்சேரியில் சுதேசி, அந்நியப் பொருள் பகிஷ்காரம், ஆங்கில அரசாங்க வெறுப்பு இவற்றைப் பலர் பரப்பி வந்தார்கள். அவர்களுள் நீலகண்டனும் ஒருவன் அவன் தானாக இச்செயலில் இறங்கினானா, அல்லது பிறர் தூண்டுதலினாலா என்பது தெளிவாகவில்லை, ஆனால் மதப் பிரசாரகர் என்ற போர்வையில் நீலகண்ட பிரமச்சாரி பல ஊர்களுக்குச் சென்று அங்கங்கே சுதேசி, அந்நிய நாட்டுப் பொருள் பகிஷ்காரம், ஆங்கில ஆட்சியால் நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்பட்ட கேடுகள் இவை பற்றிப் பிரசங்கங்கள் செய்திருக்கிறான். அங்கங்கே பலரைத் தன் கருத்துக்கு இணங்க வைத்திருக்கிறான். அநேகமாக ஏற்கனவே இருந்த ரகசியச் சங்கங்களுடன் தொடர்பு கொண்டே இதைச் செய்திருக்க வேண்டும். மேலும் ஆங்கில ஆட்சியை வெளியேற்ற பலரையும் பிரமாணம் எடுத்துக் கொள்ள வைத்திருக்கிறான். அப்படிப்பட்ட சபதத்தின் விளைவுகள் நீலகண்டனிடம் சிக்கிய எல்லா நபர்களும் முற்றிலும் புரிந்து கொண்டார்களா என்பது சந்தேகம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளிப்படையான எந்தச் செயலும் செய்யப்பட வில்லை. புரட்சிக்கான முயற்சிகள் எதுவுமில்லை. முக்கிய எதிரியான நீலகண்ட பிரம்மச்சாரி ஒரு நூல் வெளியிட வேண்டுமென்று பிறருடைய பணத்தை வசூல் செய்து பிறகு அதை துஷ்பிரயோகம் செய்துவிட்டு, வட இந்தியா வுக்கு ஓடி விட்டார். எனவே நிந்திக்கத் தகுந்த இந்த சதி, கடைசியில் ஓரளவு நடிப்பாகவும் ஆகிவிட்டது.

இரண்டாவது குற்றச் சாட்டில் எல்லோரையும் விடுதலை செய்கிறேன்.

முதல் குற்றச்சாட்டில் முதல் இரண்டாவது, ஆறுவது, பதினைாவது கைதிகளைத் தண்டிக்கிறேன். பிறர் விடுதலை அடைகிறார்கள்.

இதற்கு மாறாக பிரதம நீதிபதி ஒயிட், ஜஸ்டிஸ் அயிலிங் இருவரும் 'முதல் எட்டு கைதிகளும், 14-வது கைதியும் தண்டனைக்குரியவர்கள்'' என்றும் தீர்ப்பளித் தார்கள்.

கோர்ட்டின் தீர்ப்பு அந்தக் காலத்தில் தேசபக்தர்கள் விஷயத்தில் நடந்தது போல் மிகக் கடுமையாகவே அமைந்தது.

நீலகண்ட பிரம்மச்சாரிக்கு ஏழாண்டு கடுங்காவல். அவருக்கு உறுதுணையாக நின்று பல வகைகளிலும் உதவிய சங்கர கிருஷ்ணய்யருக்கு நாலு ஆண்டு கடுங்காவல். ஹரி ஹர அய்யருக்கு மூன்றாண்டுகள், தென்காசி மடத்துக்கடி சிதம்பரம் பிள்ளைக்கு இரண்டாண்டும், ஏனையோருக்குத் தலா ஓராண்டும் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆஷ் கொலை வழக்கைப் படிக்கும் போது ஒரு சில எண்ணங்கள் நமக்குத் தோன்றாமல் போகா. முதலாவது ஒரு பெரும் சாம்ராஜ்யத்தை நிறுவிய வெள்ளை அரசாங் கத்தை ஓட்ட, இப்படி யாதிரி தீர்க்கதரிசனமில்லாத, வெற்றி காண முடியாத பலாத்கார முறைகளில் அக்காலத்து தேச பக்தர்கள் ஏன் இறங்கினார்கள்? இரண்டாவது பெரிய திட்டங்கள் வகுத்த நீலகண்டத்தைப் போன்றவர்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விசாரணையின் போது, ஆணித்தரமாகப் பேசாமல் சாட்சியங்களைக் கொண்டு தாங்கள் சுதந்திர இயக்கத்தில் ஈடுபடவில்லை என்று ஏன் சொல்ல வேண்டும்?

இரண்டு கேள்விகளுக்கும் ஏறக்குறைய ஒரே விடை தான். மகாத்மா காந்தி நமது அரசியல் வானில் தோன்றுவதற்கு முன்னால் கூட, நம் நாட்டுத் தீவிர தேசபக்தர்களில் ஒரு சிலரைத் தவிர, யாருக்குமே பயங்கர இயக்கத்தையும், குண்டு, துப்பாக்கியையும் தவிர, சுயராஜ்யம் பெற வேறு வழி இருப்பதாகத் தோன்றவில்லை.

தாய்த் திரு நாட்டின் மேல் கொண்ட பெருங்காதலால் தங்கள் முயற்சி வெல்லுமா என்று ஆழ்ந்து சிந்தனை செய்யாமல், வங்கத்திலும், மகா ராஷ்டிரத்திலும் வேறு சில இடங்களிலும் இந்த பயங்கர இயக்கத்தையும் வெடி குண்டுகளையும் நம்பினார்கள் தேசபக்தர்கள்—அதிலும் குறிப்பாக நீலகண்டனையும், வாஞ்சியையும் போன்ற வாலிபர்கள்.

இரண்டாவதாக இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஆங்கில ஆட்சியின் அடக்கு முறைகள் மிகக் கடுமையானவை. அன்று சிறைவாசமென்றால் உடலையும், உள்ளத்தையும் வாட்டி விடும். வ.உ. சிக்கும், சிவாவுக்கும் ஏற்பட்ட சிறைவாசத்தைப் பற்றி அனைவரும் அறிவோம். அதனால் தான் வீறு கொண்ட உள்ளமுடைய பாரதியைக் கூட, புதுச்சேரிக்கு ஓட வைத்தனர் அன்பர்கள். அது மட்டுமல்ல. அன்றைய சமூகச் சூழ் நிலையில் ஒரு குடும்பத்தில் ஒருவன் சிறை சென்றால், அக் குடும்பமே பிரஷ்டம் செய்யப்பட்டு, சொல்லொணாத துன்பத்துக்கு ஆளாகி விடும். அதனால் தான் இந்த வழக்கில் காவலில் இருந்த தர்மராஜய்யர் தற்கொலை செய்து கொண்டார். ஏனையோரும வீரவாசகங்களேதும் பேசாமல் சிறை தண்டனையிலிருந்து தப்ப முயன்றார்கள்.

நடுநிலைமை மனத்தோடு இந்த உண்மைகளை ஆராய்பவர்களுக்கு, அவர்களது செய்கை இயல்பானதாகவே படும். எப்படியும் ஒன்று மட்டும் திண்ணம் வாஞ்சியைப் போன்ற தியாகசீலர்களின் தேசபக்தியை எவரும் சந்தேகிக்க முடியாது அணையா நெருப்பாக அந்த சுதந்திரத் தீ நமமெல்லோருடைய உள்ளங்களிலும் ஓங்கி வளர வேண்டும். ★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Gurukul Kangri Library
Access on
Class on
Cat. on
Tag etc
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar